உ

திருவாவடுதுறை ஆதீனம்

ஆறுவது

திருமந்திர மாநாட்டு மலர்

திருமந்திரக்கட்டுரை

— பாயிரப்பகுதி —

விளம்பி - மார்கழி

1959

1/6



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 124.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருமந்திரக்கட்டுரை

பாயிரப்பகுதி

இஃது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரியசுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
வெளியிடப்பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம்
1959

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
— திருவாவடுதுறை. —

உ
சிவமயம்

பொருளடக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழில்திருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.



ஸ்ரீ பஞ்சாக்கரதேசிகசுவாமிகள்

உ
சிவமயம்

நன்றியுரை

தரைசெய் சிறந்த நல்வினையால் தகுசீ கண்டர் முதலாக
உரைசெய் குருசந் தானங்கொள் ளுயர்நல் துறைசை வருகுருவாய்
வரைசெய் பரமன் வளர்பெயரே வழங்கி முழங்க வதிந்தருளும்
மரைசெய் பதத்தர் மருவியுறை வாழ்வே என்றும் மதித்திடுவாம்.

— தே. ஆ. ஸ்ரீ.

திருமந்திரம் பழமையானதொரு ஞானநூல். இது உலகினர் யாவர்க்கும் உரியதாம் பொதுநூலாம். தமிழால் திருமூலர் செய்தளித்தது. இது ஞானநூலாதலால், அடிக்கடி மக்கள் பயிலாமை காரணமாக மறைந்து மறைந்து வெளிப் பட்டுவந்துள்ளது. அங்ஙனம் இது மறைந்திருந்த நிலையைத் திருஞானசம்பந்த சுவாமிகள் தெரிவித்து வெளிப்படவைத் தனர். அதன்பின்னரும் பயில்வோர் குறைவுபட்டமையால் மங்கலுற்றது. இதற்குக்காரணம், இந்நூல் பொருளோடு – உரையோடு – இல்லாமைதான் என, தற்போது துறைசைத் திருமடத்தே குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கின்ற **ஸ்ரீ – ல – ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்** திருவுள்ளத்தே கருதலுற்றார்கள். எப்படியும் இந்த நூலை உலகறியச்செய்யவேண்டுமென்ற பரமகருணையால், திருமந்திர மாநாடு நடத்தியும், மாநாட்டுமலர்கள் வெளியிட்டும், பகுதி பகுதியாகப் பஞ்சாக்ஷரதீப உரை என்பதொன்றை வெளி யிட்டும் உதவிவருகின்றார்கள். அதனோடு, இந்நூல் முழுதும் வசன வடிவாக இருப்பது நல்லதெனத் திருவுள்ளங்கொண்டு, ஒன்றுக்கும் பற்றாத அடியேனை அதுசெய்யப் பணித்தருளி யுள்ளார்கள். அவ்வண்ணம் திருவருளாணையால் **திருமந்திரக் கட்டுரை – பாயிரப்பகுதி** இப்பொழுது ஆதீனவெளியீடாக வரலுற்றது.

இக்கட்டுரை நூலினைப் படிப்போர்க்குதவியாக இருத்தற் பொருட்டுத் திருமந்திரப் பாயிரப்பகுதிப்பாடல்கள் தனியாகத் தரப்பட்டிருக்கின்றன. இப்பரம கருணையினை அடியேன் பாக்கியமாகப் பெற்றுள்ளமைபற்றி மனமொழி மெய்களால் என்றும் வழுத்துகின்றேன்.

இந்நூலுக்கு அணிந்துரை அணிந்தும், வரைதற்கண் உடனிருந்து தூண்டியும், உசாவியும், நோக்கியும் பெருந் துணைபுரிந்த எனது பேரன்பரும், ஆதீனத்து அடியவரும் ஆகிய வித்துவான் திரு. T. S. **தியாகராஜதேசிகர் அவர்களுக்கு** எனது அன்புகலந்த நன்றி உரியதாகுக!

மேலும், இந்த நூலினைச் செவ்வனே அச்சிடும்பணியில் உதவியும், திருத்தும் பணியில் அநுகூலித்தும் நலம் புரிந்த யாவர்க்கும் எனது நிறைந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இந்த நூலினை நோக்கியருளும் அறிஞர்கள், இதனில் அடியேனது சோர்வினால் ஏற்பட்டிருக்கநேரும் பிழைகளை நீக்கி ஓதிக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

திருமந்திர நூலை ஓதி உலகம் என்றும் ஒன்றுபட்டு வாழ்வதாக!

வாழிய திருமந்திரம்.

இங்ஙனம்,

கட்டுரை ஆசிரியன்,
திருவாவடுதுறை ஆதீனப்புலவன்,
தே. ஆ. ஸ்ரீநிவாஸன்.

21-G. துக்காராம்தெரு,
கடலூர் N. T.
விளம்பி, மார்கழி.

உ
சிவமயம்

அணிந்துரை

காலினில் ஊறும் கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்இறை
காவலன் எங்கும் கலந்துநின் ருனே.

— திருமந்திரம்.

சித்தாந்த சைவசமயத்தின் உயர்நிலையை விளக்கும் சைவத் திருமுறைகள் பன்னிரண்டாம். பன்னிருகதிர்களும் கட்புலனை மறைப்பதாகிய புறவிருளை அகற்றி ஒளிதருவது போன்று பன்னிரு திருமுறைகளும் மெய்ஞ்ஞான உணர்வை மறைப்ப தாகிய அகவிருளை அகற்றி, சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்காகிய சிவத்தை விளக்குவன. இப்பன்னிரு திருமுறை களுள் பத்தாவதாகத் திகழ்வது திருமூலதேவர் அருளிய திருமந்திரம். சிவஞானபோதத்தின் பத்தாவது சூத்திரப் பொருள் சிவயோகம். அச்சிவயோகத்தில் நின்றவர் திருமூலர். அவர் அருளிய திருமந்திரமாலையும் அச்சிவயோகத்தையும் அதன் பயனுகிய பாசநீக்கத்தையும் சிவபோகத்தையும் தெளி வாக விரித்து உணர்த்துகின்றது. திருமந்திரமாலை தமிழி லுள்ள தனிப்பெருஞ் சிவாகமம் ஆகும். இதுவே தமிழில் முதலெழுந்த விரிவான சமயசாத்திரம் என்று கருத இடம் உண்டு. மூவர்தேவாரங்களுக்கும் காலத்தால்முற்பட்டது இது என்பது வரலாற்று உண்மை. இது தமிழ்ப்பாடலால் மூவா யிரம்; மந்திரத்தால் முந்நூறு; உபதேசத்தால் முப்பது என்னும் மேன்மையுடையது. இந்நூல் ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப் பட்டிருக்கின்றது. ஒவ்வொரு தந்திரமும் ஒவ்வொரு கடல்போல விளங்குகின்றது. அவற்றுள் எண்ணுதற்கு அரிய ஞானமணி கள் இலங்குகின்றன. அதனல் திருமந்திரத்தை ஞானரத்நாகரம் என்னலாம்.

பண்டு திருஞானசம்பந்தப்பெருமான் திருமந்திரத்தை உல கறியச் செய்ததுபோலத் தற்போது திருவாவடுதுறை ஆதீனம் ஞானபீடத்தில் வீற்றிருந்தருளும் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இந்த ஞானசாத்திரமாகிய திருமந்திரமாலையின் மணம்

உலகெலாம் பரவச்செய்யும் அருள்நினைவு கொண்டார்கள். நம் குருஞானவள்ளல் ஞானபீடம் ஏறியருளியபின்னரேதான், அரசமரத்தின்கீழ் சிவயோகத்தில் அமர்ந்து திருமூலதேவர் ஆண்டுக்கொன்றாக மூவாயிரம் திருமந்திரங்களையும் மூவாயிரம் ஆண்டுகளில் அருளிச்செய்த திருவாவடுதுறைப்பதியில், திருமந்திரமாநாடு நடைபெறத் தொடங்கியது. ஆண்டுதோறும் திருமந்திரவிழா பெருஞ்சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது. இத்திருமந்திரவிழா வேறு எங்கும் நடைபெறவில்லை எனக் கூறலாம்.

சிவகதிக்கு வித்தாகிய திருமந்திர நூலின் மேன்மையை உணர்ந்து மக்களனைவரும் உய்திபெறவேண்டும் என்ற பரம கருணையால் ஆண்டுதோறும் நடைபெறும் திருமந்திரமாநாட்டில் சிறந்த அறிஞர் பலரால் திருமந்திரக்கருத்தமுதம் வழங்கப் படுகிறது. பகுதி பகுதியாகத் திருமந்திரப் பாடல்களுக்குச் சம்பிரதாய உரைகளும், கட்டுரைகளும் அருட்பெருமக்களால் வரையப்பெற்று வெளியிடப்படுகின்றன. அந்த முறையிலே இவ்வாண்டு மாநாட்டு மலர்களில் ஒன்றாகக் காட்சியளிப்பது திருமந்திரக்கட்டுரை - பாயிரப்பகுதி என்ற இந்த நூலாகும்.

இத்திருமந்திரப் பாயிரக்கட்டுரை பல்வகைச் சிறப்புக்களும் பாங்குடன் அமைந்து காணப்படுகிறது. இந்தக் கட்டுரையில் அமைந்துள்ள திருமந்திர நூற்சிறப்பு, திருமூலர் வரலாறு இவ்விரண்டும் படிப்போர் அறிவுக்கு விருந்தாகும். திருமந்திர நூலின் விநாயகர்காப்புச் செய்யுட்கும் கடவுள்வாழ்த்து என்ற தலைப்பிலுள்ள திருமந்திரப்பாடல் ஒவ்வொன்றுக்கும் ஏற்ற தலைப்புக்களுடன் காணப்படும் திட்பநுட்பம் செறிந்த விளக்கவுரை கட்டுரையாசிரியரின் சித்தாந்த சாத்திரப் பேரறிவையும் நுண்ணறிவையும் புலப்படுத்துவதாகும். திருமந்திர நூலின் பாயிரப் பகுதியில் வேதாகமச் சிறப்பு, குருபாரம்பரியம், திருமூலர் வரலாறு, குருமடவரலாறு முதலிய தலைப்புக்களில் காணப்படும் பாடல்களின் நுண்பொருள்களை எல்லாம் கட்டுரையாசிரியர் மிக அழகாகவும் தெளிவாகவும் எளிய இனிய தமிழ் நடையில் விளக்கும் திறம் யாவரும் போற்றிப்புகழ்தற்கு உரியதாகும். இக்கட்டுரையாசிரியர், ஸ்ரீ - ல - ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவருளுக்கு இலக்காகி அவர்களது பரமகருணையால் மெய்கண்ட சாத்திர நூல்கள் பதினான்கனுள் பத்து

நூல்களுக்குத் தெளிவான விளக்கவுரைகண்ட ஞானவித்தகரும் இவ்வாதீன வித்துவானுமாகிய உயர்திரு. தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள் ஆவார்கள்.

ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளின் அருட்கருவூலம் திருவாவடுதுறை ஆதீனம். இது ஞானசாத்திரங்களாகிய மலர்கள் பூத்துக் குலுங்கும் அற்புத ஞானப்பூங்கா. இந்த ஞான ஆதீனம் அன்று (பதினைந்தாம் நூற்றாண்டு) முதல் இன்றுவரையில் தெய்வச்செந்தமிழையும் சித்தாந்த சைவசமயத்தையும் உயர்ந்த அனுபவ முறையில் நூல்களாலும், உரைகளாலும், யோகம் ஞானம் முதலிய சாதனங்களாலும் வளர்த்துவருகிறது. இதனை அறிஞர் உலகம் நன்கு அறியும். சிவஞானதான வள்ளலாகத் திகழுகின்ற நமது ஸ்ரீ - ல - ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இத்திருவாவடுதுறை ஆதீன ஞானபீடத்தில் எழுந்தருளிய ஏழாண்டுகளாகச் சித்தாந்தசைவ சாத்திரங்கள் அனைத்தும் அருட்பெருமக்கள் உரைகளுடன் வெளியிடப்பட்டுள்ளன. அச்சாத்திர நூல்களுக்குத் தக்கசான்றோர் வரைந்துள்ள எளிய இனிய விளக்கவுரைகளும், இலக்கண - இலக்கிய - புராண நூல்பலவும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. சித்தாந்த சைவ மாநாடுகள் பல இடங்களில் கூட்டுவித்துப் பேரறிஞர்கள் வாயிலாகச் சமயசாத்திர உண்மைகள் மக்கட்குப் போதிக்கப்படுகின்றன. தமிழ்நாடெங்கும் ஆதீனப்பிரசாரகர் பலர் நியமிக்கப்பட்டு ஆங்காங்கே சமய உணர்ச்சி சைவ நன்மக்கள்பால் எழுப்பப்பட்டுவருகிறது. இவையெல்லாம் ஸ்ரீ - ல - ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பேரருள்நிறைவின் விளைவேயாகும். இங்ஙனம் சிவப்பணி, தவப்பணி, அறப்பணி முதலியன ஆற்றிவரும், ஸ்ரீ முத்திபஞ்சாக்கரதேசிகராதீனத்து ஞானபீடத்து வீற்றிருந்தருளும் குருமகாசந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின்** பேரருள் உலகில் நாளும் ஓங்கி நலம் விளைவிப்பதாக. ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவருள் உலகை உய்விப்பதாக. சித்தாந்தசைவச் செந்நெறி நீடூழி வாழ்க.

இங்ஙனம்,
திருவாவடுதுறை ஆதீன அடியவன்
வித்துவான்,
T. S. தியாகராஜதேசிகன்.

மஞ்சக்குப்பம்,
கடலூர் N. T.
விளம்பி - மார்கழி

உ
சிவமயம்

கயிலாயத் தொருசித்தர் பொதியிற்சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருதுமூலன்
பயிலாரோ யுடன்வீயத் துயரநீடும்
பசுக்களைக்கண் டவனுடலிற் பாய்ந்துபோத
அயலாகப் பண்டையுடல் அருளால்மேவி
ஆவடுதண் டுறையாண்டுக் கொருபாவாகக்
குயிலாரும் அரசடியில் இருந்துகூறிக்
கோதிலா வடகயிலை குறுகினரே.

—ஸ்ரீ உமாபதிசிவாசாரிய சுவாமிகள்.



திருமூலதேவநாயனர்

உ
சிவமயம்

கட்டுரைப்பாயிரம்

எப்பொழு துந்திரு மந்திர நூலை இசைத்துல குய்ந்திடவே
இப்புவி யிற்றுறை சைப்பதி மூல ரியம்பு கருத்தடைவே
செப்புறு பேரவை சீருரை யாதி திகழ்ந்திட வேயருள்சூர்
ஒப்பறு தேசிக சுப்பிர மணியர்தம் உயர்பத மேதொழுவாம்.

—தே. ஆ. ஸ்ரீ.

திருமந்திரம்

நூலறிவு :

உலகம் மக்களாவாரை உயர்பிறப்பாக உடையது. இவ்வுயர்வு மக்கட்குப் பிறப்பினுல்மட்டும் அமைந்ததன்று. "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது தமிழ்மறை. ஆதலால், பிறப்பினை உயர்வுக்குரியதொன்றென மதித்திடல் பொருந்தாது. பிறப்பினும் சிறந்ததாக அவ்வுயிர்கள் அடையவேண்டுவது சிறப்பு எனப்படுவதே ஆகும். இச்சிறப்பினை எய்துவதற்கு ஏற்றவண்ணம் பற்பல சூழ்நிலைகள் அமைந்துள்ளன. பிறப்பிடம், காலம், சமயம், அறிவுநிலை, நூல்கள், ஆசாரியர் முதலியவை அத்தகைய சூழ்நிலைகளாம். பிறப்பிடத்தின் இன்றியமையாமையைக் "குமரிகண்டம் ஒன்றே வேதாகம வழக்கமும், சாதிவரம்பும், கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களும், காசி முதலிய புண்ணியத் தலங்களும் உடையதாய்ச் சிறந்தது. பாரத வருடமே கருமபூமி எனப்படும் பெருங்குணமுடையது. ஏனைய எல்லாம் பாரதவருடத்தின் ஈட்டப்படும் காமியங்கள் அநுபவித்தற்கு இடமாதலின் போகபூமி என வழங்கப்படும்" என்று நம் சிவஞானபோதத்தின் இரண்டாம் சூத்திரத்து மூன்றும் அதிகரண விரிவுரை பகர்வதனுல் அறியக்கூடும். காலத்தின் அநுகூலத்தினை, 'வினையரும் புகலிக் கிறைமணப் பந்தர்

விருந்தினுக்கு உதவிலேன் முந்திற்று' எனக் கூறப்படுதல் கொண்டு உணர்தல்கூடும். சமயநெறியின் உதவிப்பாட்டினைப் 'புறச்சமய நெறி நின்றும் அகச்சமயம் புக்கும்' என்னும் சித்தியார்ப்பாடலால் தெரியலாகும். அறிவுப்பேற்றின் அவசியம், 'சிவநில முளைத்துயர் சிறப்புணர்த்திவெம் - பவமறு மருந்தெனப் பட்டு நன்கமை - சுவையொடு முடிவுறிற் சுகமளித்தருள் - நவை அகல் இனையவிஞ் ஞானம் கொள்கவே' என்னும் பராக்கிய சூத்திரப்பொருளால் கண்டுகொள்ளல் கூடும். . நூற்கல்வியின் சிறப்பினைத் 'துணையது வாய்வரும் தூயநற் கல்வியே' என்றும், 'நூலொன்று பற்றி நுனி ஏற மாட்டாதார் ... ... மாலொன்று பற்றி மயங்குகின்றார்களே' என்றும் வரும் மந்திர வாசகங்க ளால் மாணுற அறியலாம்.

பவப்பிணி மருத்துவன் குருவே ஆதலால், கண்ணுதவி கொண்டு நல்வழிச் சேறல்போல், ஆசாரியன் துணையாம் அருள் கொண்டே இருள்தீர்ந்து இன்பம் எய்தப்படும் என்பது யாவரும் தெரிந்த உண்மையாம். இங்ஙனம் அமைவுறும் சூழ்நிலைகளுள் ஒன்றான நல்ல நூலறிவினை நாம் ஓதியும், கேட்டும் தெய்வம் என்பதோர் சித்தம் விளையப்பெற்று, அத்தெய்வப் பேற்றுக் கான சமயாசார நெறியில் நடத்தல்வேண்டியுள்ளது. இச்சமய நெறியானது நல்லொழுக்கம் முதலாகச் சிவப்பேறு இறுதியாகக் கொண்டுள்ளது. இத்தகைமையினை நமக்குத் தெரிவித்தற் பொருட்டே திருவள்ளுவனாரும் கல்வி, கல்லாமை, கேள்வி என மூன்றதிகாரங்களால் நூலறிவை வற்புறுத்தி, அவற்றின் பயனுவதே அறிவுடைமை என நான்காவதாக நாட்டித் தம் நூலுள் கூறியருளியுள்ளார் ஆவர்.

இதுகாறும் கூறியுள்ளவற்றால், நாம், நம்மை நற்கதிப் பேற்றுக்குத் தக்கவராக்கிக் கொள்ளவேண்டும் என்பதையும், அத்தகுதிப் பேற்றினை எய்துதற்கண் அடிப்படையாக நாம் கைக்கொள்ளத் தக்கது கற்கத்தக்கதாம் நூலே என்பதையும் நன்கு அறிதல்வேண்டும்.

சித்தாந்த சமயம் :

இவ்வுலகில் மக்கள் ஓதுதற்கென எழுந்த நூல்கள் பலப்பல உள. நாளும் கணக்கற்ற நூல்கள் தோன்றி வருகின்றன. இந்நூல்களில் பெரும்பாலன நம் உடலோம்பற்கு உறுதுணை

புரிவனவாகிய உலக நூல்களேயாகும். கண்ணுக்குத் தெரியும் இயற்கையும் செயற்கையுமாம் பொருள்களைப்பற்றியே இந்த நூல்கள் கரைகின்றன. ஆதலின், இவற்றை ஓதுவதனால், நாம் உலகியலறிவு ஒன்றே அடையக்கூடும். நமக்கெல்லாம், உடலின் வேறதாய், அவ்வுடலினை நடத்துவதாயுள்ள உயிர் உள்ளது. அது கட்புலனாவதன்று. மற்றும், அவ்வுயிரினைத் தான் தாங்கி யும் உண்ணின்றும் நடத்துவதாகிய பெருந்திறல்பொருளாகிய கடவுட்பொருளும் உளதென்பது அறிஞர் முடிவு. இப்பொருளை யும் நாம் கண்ணால் காண்டல் அரிது. காற்றின் உண்மையைத் தோலின் நுகர்வினால் அறிதல்போல, காண்டற்கரிதாகிய உயிர், இறை இருப்புக்களை ஆய்வின் முடிவெனப்படும் அநுபவத்தா லன்றித் தெரிதல் அரிதாம். என்றாலும், அவற்றின் இருப்பும் இயல்பும் நமக்கு ஓரளவு தெரியவந்தாலன்றி அவற்றின் உண் மையை அறிந்து அடைந்து அழுந்தும் அவா நமக்கு எழாது. இவ்வாறான நல்விருப்பினை உண்டாக்கி உதவுவனவே சமய நூல்கள் எனப்படும்.

சமயங்கள் பல. அவை தரும் நூல்களும் பலப்பல. ஆதலால், நமக்கு எந்தச் சமயத்து எந்த நூல் சீரிதென்ற ஐயம் எழக் கூடும். சமயங்களுள் சிறந்தது சித்தாந்த சைவமேயாகும். இதன் சிறப்புக்குரிய காரணங்கள் பல உள. அவற்றுள் ஒன்று, இஃது எச்சமயத்தையும் அவற்றின் கொள்கைகளையும் தன்னுட் கொண்டிருப்பதும், அவற்றின் கொள்கைகளை ஆராய்ந்து யாவகைச் சமயத்தாரும் ஏற்றுக்கொள்ள வல்லதான சுத்த அத்துவித முடிபினைத் தெளியத் தெரிவிக்கும் முடிபு பெற்றிருப் பதுமாகும். தருக்க முறையில் எல்லாச் சமயத்தின் எல்லா முடிபுகளையும் ஆராய்வராயின் முடிவில் ஒரே சித்தாந்தத்துக்கு எவரும் வந்தேதீர்வர். அந்த முடிபே சித்தாந்தம் எனப்படுவது. அதனைக் கொண்டுரைப்பதே சித்தாந்தசைவநூல் என்பர். இவ் வுண்மையினை, 'விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்து - எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்' என்று புலப்படுத்தும் திருநாவுக்கரையர் திருநேரிசையடிகளால் அறியலாகும்.

மறையாகமம் :

உலகில் உள்ள சமயங்கள் பலவும், தத்தம் கொள்கை களை வேதாகமங்கள் எனப்படும் நூல்களால், மக்களுக்கு

உணர்த்தி நிற்கின்றன. பெரும்பாலும், உலகில் உள்ள சமயங்கள் ஒவ்வொன்றும் தமக்கெனத் தனித்தனி ஒவ்வொரு திருமறையினையே கொண்டுள்ளது. விவிலியம், கொரான், பிடகம் முதலிய மறைநூல்களை இக்கூற்றுக்குச் சான்றாகக் கோடல் தகும். இவை இங்ஙனம் ஒரோரு மறைநூலையே கொண்டுள்ளமைக்கான காரணம் உய்த்துணர்வார்க்குப் புலப்படல்கூடும். வடமொழி வேதங்கள் நான்காக உள்ளன. அவற்றின் வழி நிற்கும் சமய ஆகமங்களும் பலவாக உள. இங்ஙனம் இவை பலவாக உள்ளமைக்குக் கூறப்படும் காரணங்களை நூல்களால் அறியலாம்.

இவ்வாறு, இவை பலவாக இயன்றிருத்தலால் யாவகைப் பட்டார் கொள்கைகளையும் இவற்றினுள் நாம் காண்டல் இயலும். இவ்விதம் இருத்தல் ஒருவகையில் சிறப்புடையதே யாயினும், ஒன்றோடொன்று முரண்படுமாறு காணப்படும் பலதிறக்கொள்கைகட்கு இந்நூல்கள் பலவாக நின்று இடந் தருதலால் உண்மை காண்டல் அரியதொரு செயலாகின்றது. இங்ஙனம் பன்மையுள் ஒருமைகாண்டல் ஞானிகட்கு ஒருவாறு கைவந்த செயலாகலாம். ஆனால், சாமானியர்க்கு இஃது மயக்கமே பயக்கும். இதனால், இத்தகை மயக்கத்தை தெளியச் சொல்லிச் சித்தாந்தப்படுத்துதல் இன்றியமையாச் செய்கையாயிற்று. இதனிடையே நம் நாட்டில் ஆரியம், தமிழ் எனப்படும் மொழி வேறுபாடும் மக்களுள்ளத்தே புகுந்து ஒருமை காணும் கருத்துத்திறனை முறியடித்துவிட்டது. இக்காரணங்களால் ஒரே சித்தாந்தம் கொண்டுள்ள நம்மனோர் பல் வேறு கொள்கை கொண்டவர்களாகப் பிரிவுபட்டனர். இப்பிரிவினை, எப்போதும் நம்மை உண்மைநெறி செல்லவிடாமல் போர்புரிதுறையுட் புகுத்தலுற்றது. இதன் பயனாக மதக்காழ்ப்பே மலிவுற்றது. ஆகவே, மதம் என்பது, பிறப்பறுத்துப் பெரும்பேறு அளித்தற்கண் உதவியாக நிற்பதினின்றும் தாழ்வுற்றுக் கதம்பெருக்கிப் பிறப்புகள் பலப்பல அடைவித்தற்கான வாயிலாயிற்று என்னலாம்.

ஒரே நூல் :

இந்த விதமாக மதங்களும் அவற்றின் நூல்களும், மாறுபட்டதும் கவர்பட்டதுமான பன்னெறியிலே நன்னெறி நீத்து

நடத்தலை, உண்மை நயந்தவரும் உணர்ந்தவரும் விரும்பினரிலர். எல்லா நெறியினர்க்கும் பொதுப்படவும், சித்தாந்த நெறியினர்க்குச் சிறப்பாகவும் ஒருநூல் வேதமும் ஆகமமுமாகிய யாவற்றின் சாரமும் அடங்கியதாக அமைந்தால் நல்லது என நல்லோர் நாடினர். இறைவன் திருவுள்ளக்கருத்தும் இத்தகையார் கருத்துக்கு இசைவுகொண்டதெனல் தவறாகாது. இத்தகையதொரு சந்தர்ப்பம் நம் நாட்டில் நிகழ்வுற்றகாலங்களும் பல ஆகலாம். இவ்வாறான சூழ்நிலை யொன்றே நம் திருமூலர் காலத்தும் இருந்திருக்கலாம். நன்மக்கள் தவமும், சிவத்தின் அருளும் ஒன்றுபடும்போது நிறைமொழிமாந்தரும் அவர் அருளிச்செய்யும் மறைமொழியாம் மந்திரமும் தோற்றமெடுக்கும். இவ்வாறான அவதார புருஷரே திருமூலர். அவர், இறைவன் ஆணையாற்கிளந்தருளியதே திருமந்திரம் என்னலாம். ஏனைச்சமயத்தார் கூறிக்கொள்வதுபோலவே, நாம் நம் சமயத்துக்குகந்த ஒரே வேதாகமமாகக் கூற விளங்கும் நூல் திருமந்திரம் என்னத்தடையில்லை. இவ் ஒரு நூலே நமக்கு வேதமாகவும், ஆகமமாகவும் தமிழ்மொழியால் விளங்குகிறது. இந்நூல், நமக்குமாத்திரமன்றி, உலகில் உள்ள யாவருக்கும் ஏற்புடைய திருமறை ஆகும். இந்நூலால் கொள்கைகளின் வேறுபாட்டுமயக்கம் குலைவுற்றது; உண்மை தெளிவிக்கும் உகந்தமுறை இலகுற்றது; ஒரே வேதநூல் எமக்கும் உண்டு என்று நாம் சொல்லிக்கொள்ள இந்நூல் வாயளித்தது. எடுத்த இப்பிறப்பிலேயே மறுபிறப்பில்லாதபடி மாண்புறுத்துக்கொள்ள மக்கட்கு இந்நூல் வழிகாட்டி நிற்பது. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஒரு நூல் நந்தம் செந்தமிழான் இயன்றது மொழியின் தெய்விகத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இந்நூல், திருமூலர் அறிவினால்மாத்திரம் விளைந்ததொரு பயனன்று. அவரது அநுபவத்தால் விளைந்த பேறாகும். அநுபவம், யாண்டும் பொய்யா இயல்புடையது; மாறுபடா மாண்புடையது. உலகத்து யாவர் நெஞ்சத்தும் எஞ்ஞான்றும் நின்று நலம் பயக்கவல்லதான ஒருநூல் வேண்டுமென்பார் உளராயின் அன்னவர் கைக்கொள்ளத்தக்க விழுப்பம் கொண்டது திருமூலர் அருளிய திருமந்திரம். சில்லரையாகப் பலவிதமாகச் செய்யப்பட்டுக் கிடந்த பொன் நகைகளை எல்லாம் ஒருசேர உருக்கி, மாற்றுயர்த்தி, பின் அதனில் நவமணிகளையும் ஏற்பவைத்து இழைத்து, ஒரே ஆபரணமாக ஆக்கி அளித்தால், அந்த அணிகலம் எவ்வளவு மேன்மையுடையதாக மதிக்கப்படுமோ அவ்வளவு

ஏற்றம் படைத்ததொன்ருகத் திருமந்திர நூலை நாம் மதித்தல் தக்கதாம். இதன் பழமை குறித்துப் பிறகு இசைப்போம்.

திருமூலர்

இதுகாறும் திருமந்திரம் என்னும் நூலின் பெருமை பேசப் பட்டது. இனி, இத்தகைய பொதுமறையினை நமக்கு அளித்து உபகரித்த ஆசிரியராகிய திருமூலர் வரலாறுபற்றிப் பார்ப்போம்.

ஸ்ரீ சேக்கிழார் செப்பியருளிய முறை :

திருத்தொண்டர்புராண ஆசிரியராகிய ஸ்ரீ சேக்கிழார் சுவாமி களைப்பற்றிய வரலாற்றினை யாவரும் அறிவர். இவர் சிவனடி யார்கள் வரலாறுகளைத் தாம் அறிந்தமுறையில் புராணமாகப் பாடியருளியுள்ளார். அடியார்கள் பெருமையினை அகிலம் அறியச் செய்ய வேண்டுமென்பதே இவர்தம் கருத்தாம். இவர், திருமூல தேவரையும் திருத்தொண்டர்களுள் ஒருவராக மதித்துத் தமது புராணத்தே பாடியருளியுள்ளமையால் நாம் திருமூலதேவரைச் சிறந்த சிவனடியாராகக்கொண்டு வழிபடக் கடமைப்பட்டுள் ளோம். இவரை நாம், வெறும் சித்தராகமட்டில் எண்ணிவிடக் கூடாது என்பதே ஸ்ரீ சேக்கிழார்சுவாமிகள் திருவுள்ளமாகும். இதனுல் நாம், திருமூலதேவநாயனுரைச் சிறந்த சிவனடியாராகக் கொள்ளத் தடையில்லை என்னலாம். ஸ்ரீ சேக்கிழார்சுவாமிகள், திருமூலர் வரலாற்றைத் தமது நாளில் விரிவாக ஆராய்வதற்கு இடஞ்செய்தது திருத்தொண்டர் திருவந்தாதி ஆகும். இவ்வரிய அந்தாதியினை அருளிச்செய்தவர் நம்பியாண்டார்நம்பி என்பவர். இந்த நம்பிகளாவார், திருமூலதேவர் வரலாற்றை ஒருபாடலில் சுருங்க உரைத்துள்ளார். இவர், திருமூலரை அங்கணனுகவும், சிவகுருவாகவும் மதித்துத் துதித்துள்ளார். மற்றும், திருமூல தேவர், சிவபெருமானைத் தமிழின் பரவியவர் என்றும் நம்பிகள் நவின்றுள்ளார். இதனுல், நாம், திருமூலதேவரைத் தமிழ்மொழி யால் வேதந்தந்த சிவபிரானுக மதித்தல் தகும் என்பது ஏற்படு கின்றது. மற்றும், நம் நம்பியாண்டார் அவர்கள், தாம் இவ் வரலாறுகளைத் திருநாரையூர்ப் புழைக்கைமுக மன்னராகிய விநாயகர் சொல்லியருளிய திறத்தால் கூறியதாக வரலாறு கூறுவர். இதனுல் ஸ்ரீ விநாயகமூர்த்திகள், திருமூலதேவரை எங்ஙனம் ஏற்றருளினுர் என்பதும் நமக்குப் புலனுகும்.

நிற்க, தேவார ஆசிரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள், தாம் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகைப் பதிகத்திலே திருமூலதேவரைச் சிவனடியார்களுள் ஒருவராக வைத்து "நம்பிரான் திருமூலன்" என்று பாடியுள்ளார். இவர், திருஞானசம்பந்த சுவாமிகளை "எம்பிரான்" எனக்கூறி ஏத்தி யுள்ளார். மேலும், மேற்கூறப்பட்ட நம்பிகளும் திருமூலதேவரை 'அடிமன்னவைத்த பிரான்' என்று கூறியுள்ளாராவர். நம் சேக் கிழாரடிகள், திருமூலரைத் தேவர் எனப்பரவியுள்ளார். இவற்றால் நாம் அறியக்கிடப்பது, பிரான் எனவும் தேவர் எனவும் போற்றத் தக்க சிறப்படைந்த சித்தராவார் நம் திருமூலர் என்பது தெளி வாம். தெய்வத்திருவருள் நிரம்பப்பெற்ற ஸ்ரீ சுந்தரர் முதலாம் மூவரும் நம் திருமூலரை இன்னணம் மதித்திருந்தனர் என்பத னால் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்தே திருமூலர், ஞானமாதிய நான்கும் போதித்தருளும் குருபரன் என விளங்கி யமை தெரிதரலாகும்.


இனி, செவிவழிச் செய்தியில் வழங்கும் வரலாற்றால், திரு ஞானசம்பந்த சுவாமிகள், திருமூலர் அருளிச்செய்த திருமந்திர நூலின் பெருமையை உலகறியவைத்தார் என்கின்றனர். திருவா வடுதுறைப் புராணத்துள் இவ்வரலாறு வேறு ஒருவாறு கூறப் பட்டுள்ளது என்பர். இவ்வரலாற்றினையும் நாம் உள்ளத்துக் கொள்ளின், ஆளுடைய பிள்ளையார் காலத்திலே திருமூல தேவரைப்பற்றியும், அவர்தம் நூலைப்பற்றியும் உலகினர் மறந்து பின் தெளியும் நிலையினராக இருந்தமை புலப்படும். இங்ஙனம் மறந்து பின் தெரிந்திடும் நிலைமை ஏற்பட்டமையால் திருமூலரது பழமை நன்குணரப்படல் கூடும். மிக்க பெருமைபடைத்தார் ஒருவரை, யாவரும் அறிந்திருந்து பிறகு பையப்பைய மறந்து, அப்பால் அறிவுடையாரால் விழிப்பூட்டப்பெற்றுத் திரும்பவும் தெரியப்பெறுதல் என்பது ஒரு சில ஆண்டுகளில் நேரக்கூடிய நிகழ்ச்சி அன்று. பலப்பல ஆண்டுகள் பிடித்தல் கூடுவதே ஆகும்.

இப்பால் கி-பி 13 ஆம் (பதின்மூன்றாம்) நூற்றாண்டிலே வாழ்ந்தருளியவராகிய ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள், திருமூலர் வரலாற்றினைக் "கயிலாயத்தொரு சித்தர்" எனத் தொடங்கும் பாவினுள் கூறியுள்ளார். இப்பாடல் குறிப்பது ஸ்ரீ சேக்கிழார் கூறியுள்ள வரலாறே போல்வதாக உள்ளது.

இவ்வரலாறுகள், திருமூலதேவர், திருமந்திர நூலைச் செய்தருளிய பிறகு திரும்பவும் திருக்கயிலை சேர்ந்திட்டார் எனச் செப்புகின்றன. மேலுள்ள குறிப்புகளோடு நாம் அறியத்தக்கது யாதெனில், பத்தாம் திருமுறையாகிய தமிழ்மூவாயிரம் எனப்படும் திருமந்திர நூல் கி - பி 10 ஆம் நூற்றுண்டில் சைவத் திருமுறை வரிசையில் சேர்க்கப்பெற்றது என்பதாகும். இனி மேல், ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் அருளியுள்ளபடி திருமூலருடைய வரலாற்றைப் பார்ப்போம்.

திருக்கயிலாயத்திலே நமது ஞானசாரிய பரம்பரையிலே இரண்டாமவராய் விளங்கும் நந்திஎம்பெருமானின் திருவருள் பெற்ற சிவயோகியர்கள் பலர் உளர். இவருள் ஒருவராவார் அணிமா முதலாம் சித்திகள் வல்லவர். இவர் தென்னுட்டில் பொதியத்துள்ள அகத்தியரைக் காணவேண்டித் திருக்கயிலையினின்று புறப்பட்டார். பல சிவ தலங்களையும் தரிசித்துக் கொண்டே தெற்கு நோக்கிச் செல்லலானுர். வழியில் திருவாவடுதுறையை அடையலுற்றுர். அப்போது இவர் உள்ளத்திலே ஆங்கிருந்து தவமாற்றவேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அதற்கேற்பத் திருவருள் நிகழ்ச்சியும் நேர்ந்தது.

காவிரிக்கரையிலுள்ள சாத்தனூரில் உள்ள ஓர் இடையன், அவ்வூரார் பசுக்களை மேய்க்கும்தொழில் உடையவனுக இருந்தான். அவன் பெயர் மூலன் என்பர். அவன், திருமூலர் பயணப்பட்டுத் திருவாவடுதுறையினின்றும் தென்னுடு செல்ல நேரிட்ட நாளன்று இறந்துபட்டான். பசுக்கள் இடையனுகிய மூலன் பிரிவாற்ருமையால் கதறின; கண்ணீர்வடித்தன; மூலனுடலைச் சூழ்ந்து மொய்த்துநின்றன. இதனை மேற்கூறப்பட்ட திருமூலர் ஆகும் சித்தர்கண்டார். ஆக்கள்படும் துயரை அகற்றக்கருதினுர்; கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை தெரிந்தவராதலின் இடையன் உடலில், தம் உடலைவிட்டுப் புகுந்தார். பசுக்கள் பரமானந்தம் அடைந்தன. அன்று மாலையில் புது மூலர் பசுக்களைச் சாத்தனூரில் செலுத்தி ஓரிடத்தில் தங்கினுர்; பழைய மூலன் இல்லத்துக்குப் போந்திலர். ஆனுல் மூலன் மனைவி அவரை இன்னுரென உண்மையறியாது நாயகராகக் கருதி வீட்டுக்குவருமாறு அழைத்தாள். புது மூலர், தமக்கும் அவட்கும் தொடர்பில்லை என்று கூறினுர்; சிவயோகத்தமர்ந்தார்.



நந்தி அருள்பெறு செந்தமிழ்யோகி

அடுத்த நாள், அறிஞர்கள் புது மூலரிடம் வந்து விசாரணை புரிந்தனர். அவரைச் சிவயோகியாரெனக் கண்டு மூலன் மனைவிக்கும் சுற்றத்தார்க்கும் ஆறுதல் கூறிச்சென்றனர். பின்னர், மூலர் பசுக்கள் வந்தவழியே மீண்டு தம் உடலைத் தேடினர். அதனைக் காணப்பெற்றாரிலர். இது சிவனருட்செயலாகும் என எண்ணி ஞானநோக்கினல், தாம் திருவாவடுதுறையில் இருந்து சிவாகமத்தைத் தமிழாற்செய்யவேண்டும் என்பது பெருமான் திருவுள்ளமெனக் கண்டார். அங்ஙனமே திருஆவடுதுறையிலுள்ள சிவாலயத்தே புகுந்து மேற்புறத்துள்ள அரசமரத்தடியிலமர்ந்து மூவாயிரம் ஆண்டுகளளவும் சிவயோகம் புரிந்தார். அப்போது ஆண்டுக்கொரு மந்திரமாகத் திருமந்திரப் பாடல்கள் மூவாயிரமும் அருளிச்செய்தனர். அத் திருக்குறிப்பு முற்றுப்பெற்றபின்னர், அவர் தென்னாடு செல்லாமல் திருக்கயிலையினை அடைந்திருக்கலானர். இதுவே, ஸ்ரீ சேக்கிழார்பெருமான் கூறியருளியுள்ளதன் சுருக்கமாகும். மேற்கூறப்பட்ட வரலாறுகளைக் கொண்டு நாம் தெரிவது யாதெனில் ஏறக்குறையக் கி-பி ஏழாவது நூற்றாண்டு முதல் கி-பி பதினென்றாம் நூற்றாண்டளவும் அதாவது நானூறு அல்லது ஐந்நூறாண்டுக் கால அளவு திருமந்திரம் சிறப்புற ஓதப்பட்டு வந்ததெனக் கொள்ளுதல் ஆகும். இனி, திருமூலர் பற்றிய ஆராய்ச்சியாளர் கருத்துக்களையும் ஈண்டுத் தொகுத்துக் காண்போம்.

ஆராய்ச்சியாளர் கருத்துக்கள் :

பரதகண்டத்தே பாண்டிநாடு பழமை மிக்கது. செந்தமிழ் வளம் சிறக்கப்பெற்றது. சிவனுடைய தென்னாடெனத் திகழ்வது. இத்தகைய நாட்டில் தமிழ் முனிவர்கள், சித்தர்கள், தவசிகள், ஞானியர்கள் ஆகியவர்கட்குச் சிறந்த இருப்பிடமாக விளங்குவது பொதிகைவரை ஆகும். இம் முனிவர்கள் முதலியோர் அறம் முதல் நான்கும் திறம்பட உணர்ந்த சிவயோகியர் ஆவர். இவர்களுள் மிகவும் அறிவுசான்ற பெரியோராக விளங்கியவர் **அகத்தியர்** என்பர். இவரைக் குற்றால முனிவர் எனவும், குறுமுனிவர் எனவும் சொல்வர். இக் குறுமுனிவர் பொதிகை மலையிலே இருந்து தமிழ்க்கழகம் அமைத்துத் தமிழ்மொழியையும், நூல்களையும், அறிஞர்களையும் ஓம்பிவந்தனர். இக்கழகத்தைத் திருமுனிவன் தமிழ்ச்சங்கம் என்பர் கம்பர். ஆதலால், இம் முனிவரையே தமிழ்முனிவர் என்பர். தென்தமிழ்நாட்டில்

இவரதுகாலத்தே வாழ்ந்த பற்பல அறிஞர்கள் இக்கழகத்தே பயின்று சிறப்புற்றனர். இக்கழகத்தே பயின்று, தமிழறிந்து, தவநெறி கைவரப்பெற்றவர்கள் வடபுலத்தே இமயத்தின்கண்ணும் சென்று வதிவாராயினர். இங்ஙனமாகப் பொதியமலை அகத்தியரிடம் தொடர்பு கொண்டிருந்த பாண்டிநாட்டாருள் ஒருவர் சுந்தரர் எனப்படுவர். மதுரைச் சிவபிரானுக்குச் சுந்தரர் என்பது ஒரு திருப்பெயராகும். இப்பக்கத்துத் திருமாலுக்கும் அழகர் எனத் திருப்பெயர் வழங்குவதை எவரும் அறிவர். சுந்தரன், சவுந்தரன், அழகன் என்ற இப்பெயர்கள் பாண்டி நாட்டில் சைவ, வைணவக் கடவுளர்க்கும், மக்களுக்கும் பொதுவாக இட்டு வழங்கப்படும் பெயர்களாகும். மேலே கூறப்பெற்ற சுந்தரர் என்பார் அகத்தியரோடிருந்து அல்லது அவர்பால் அடியுறையாக இருந்து உலகநூலும் அறிவுநூலும் திறம்பட உணர்ந்த மேலோர் ஆவர். இங்ஙனம் இவர் சுந்தரன் என்னும் இயற்பெயர் பெற்றிருந்தார் என்பதைச் "சுந்தரன் ஆகமச்சொல் மொழிந்தானே" என்னும் தமிழ் மூவாயிரத்துச் சிறப்புப்பாயிரச் செய்யுளடியால் அறியலாகும். இவர் சிறந்த யோகியரும் சைவ நெறியுடையாருமாதலால், இவரை, "நான் மறை யோகியருள் ஒருவர்" எனவும், "சைவநெறி மெய்யுணர்ந் தோர்" எனவும் பரவுவாராயினர் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள். இதுகாறும் கூறிவந்த செய்திகளால் நாம் திருமூலர் என்பார், பாண்டி நாட்டாருள் ஒருவர் என்பதும், பொதியமலை அகத்தியரிடம் அறிவுநூல் ஓதியவர் என்பதும், சுந்தரர் என்னும் இயற்பெயர் பூண்டவர் என்பதும், சிறந்த சிவயோகியாவார் என்பதும் தெரியலாம்.

மேற்கூறப்பட்ட சுந்தரர், தம்பால் அன்புகொண்ட அகத்தியரிடம் ஓதவேண்டுவன யாவும் ஓதியுணர்ந்தபின், அவர் கட்டளைப்படியே வடநாடு போந்து, திருக்கயிலை சேர்ந்து, ஆங்குறையும் முனிவர்களுடன் பழகித் திருநந்திதேவர் திருவருளுக்கு இலக்காயினர். இவர்காலத்தே நந்தம் தமிழ்நாடும் வடக்கே பனிமால் நெடுவரை வரையில் பரவியிருந்ததென்பர். இந்த வடக்கெல்லை தற்போதைக்குச் சுமார் 8000 ஆண்டுகட்கு முன் இருந்ததென்பர். இவ்வாறான எல்லை உள்ள காலத்தே வட இமயக் கயிலைச்சாரலில் நடைபெற்றதொரு குருகுலத்திலே இச்சுந்தரர், மற்றும் எழுவர் முனிவருடன் திருநந்திதேவர் காட்டியருளிய திருநெறியிலே பயின்று வந்தனர். இவர்கள்

பயின்றுவந்த சிவயோகச் சித்தித்திறம்பற்றி இவர்களுக்குத் திருநந்திதேவரால் நாதர்கள் என்ற சிறப்புப்பெயர் வழங்கப் பட்டது.

பிறருக்கெல்லாம் வழிகாட்டி நடத்தத்தக்க சிறப்பினை இவர்கள் எய்தப்பெற்றமையால் இவர்களை நாதர்கள் என்று வழங்கலாயினர் யாவரும். அந்த எட்டு நாதர்களையும் இன்னார் என்றும், அவர்கள் நந்திஎம்பெருமான் திருவருள் பெற்றவர்கள் என்றும், அவர்களுள் தாமும் ஒருவராவர் என்றும், "நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடில்......என்னோடு எண்மரும் ஆமே" என்ற பாடலால் திருமூலர் குறிப்பிடுவாராயினர். அந்த எட்டுப் பேர்களில் ஒரு நான்கு முனிவர்களை 'நால்வர்' என்று தொகைப் பெயரால் குறிப்பிடுகின்றார். மற்றவர்களில் மூவ ராவார் சிவயோகமாமுனி, மன்று தொழுத பதஞ்சலி முனிவர், வியாக்கிரமர் என்பார் ஆவார். எனவே, பொதியத்தே அகத்திய ரோடிருந்தபோது சுந்தரர் என்னும் பெயருடையவராக இருந்த இவ்விருந்தவர் கயிலைபோந்து தவச்சித்திபெற்ற பின்னர் நாதர் என்னும் சிறப்புப்பெயர் பூணப்பெற்றுச் சுந்தரநாதர் என வழங்கப்பட்டாராவர். இதனை, "நந்தி அருளாலே நாதனும் பேர் பெற்றோம்" என்ற பாடல் குறிக்கும். மற்றும், மந்திரம் முந்நூறு என்னும் நூலின் சிறப்புப்பாயிரத்தே, "மந்திரம் கொண்டு வழிபடுவோருக்குச் சுந்தரநாதன் சொல்லிய மந்திரம்" என்றுள்ள இடமும் இஃதுணர்த்தும் என்பர். இதுகாறும், பாண்டிச் சுந்தரர் கயிலைச் சுந்தரநாதரான வரலாறு கூறப் பட்டது.

மேற்கூறப்பட்ட வண்ணம், திருக்கயிலைத் திருக்கோயில் முதற்பெருநாயகம் பூண்ட திருநந்திதேவரால் திருநெறியுணர்த் தப்பெற்றுச் சித்தியடைந்த எண்மரையும் பொதுப்படச் சித்தர் என்று உலகினர் வழங்குவாராயினர். இவர்கள் சித்தாந்தம் கைவரப் பெற்றவராதலால் இங்ஙனம் அழைக்கப்படுவாராயினர். இதனாலே போலும் ஸ்ரீ உமாபதிசிவாச்சாரியார், திருமூலரைக் குறிப்பிடுகையில் "கயிலாயத்து ஒரு சித்தர்" எனலானார். இங் ஙனம் சித்தாந்த சித்தர்களாம் சிறப்புப்பெற்ற எண்மருள், பதஞ் சலியும், வியாக்கிரமரும், சுந்தரநாதரும் ஆகிய மூவரும் ஒரு முறை திருநந்திதேவர் திருவருள்பெற்றுத் தென்னாடு போந்து தில்லையம்பலத்தே நிகழும் எல்லையில் திருக்கூத்தினைக் கண்டு அப்பதியிலேயே வதிந்துவரலாயினர்.

இவர்களுள் முன்னைய இருவரும் எம்பிரான் நடன தரிசனத்தே ஈடுபாடுடையவராயினர். சுந்தரநாதர் என்பார், தனிக் கூத்துக் கண்டபின்னர் மீளவும் திருக்கயிலை சேர்ந்து ஆங்குறைவாராயினர். இவ்விதமாகச் சுந்தரநாதர் வடநாட்டினின்றும் முதல்முறையாகத் தென்னாட்டிலே தில்லையம்பதிவரை வந்து போயினராவர். இச்செய்தியினைத் தமிழ் மூவாயிரத்தே உள்ள செய்யுட்களில், "அருள் நந்தி தாள்பெற்றுத் தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின் ... இமையவர் ஏத்தும் பதத்தே ... என் நந்தி இணையடிக்கீழே ... இருந்தேன்" என்றுள்ள அடிகளால் அறியலாகும். முற்கூறப்பட்ட மன்று தொழுத பதஞ்சலியாரும், வியாக்கிரமரும் வடநாட்டிலே மடங்கள் நாட்டி வந்தமை போன்றே, தில்லையிலும் நாட்டி, ஆங்கிருந்து அறநெறியினை அடைந்தார்க்கெல்லாம் காட்டி, நடன தரிசனப் பேற்றிலே திளைத்திருந்து சிவத்துடன் ஒன்றினராவர். இனி, நந்திகள் நால்வர் எனப்பட்டாருள் ஒருவராகிய சனற்குமாருடைய சீடர் சத்தியஞானதரிசினிகள் ஆவாரும், அவருடைய சீடரே பரஞ்சோதி முனிவரும் ஆவர். இப்பரஞ்சோதி முனிவருடைய சீடரே ஸ்ரீ மெய்கண்டதேவர் ஆவர். இவரது வழி முறையிலே வளர்ந்துவருவதே திருவாவடுதுறைத் திருமடம் ஆகும் என நாம் இங்குத் தெரிதல் நன்றாம்.

முதல்முறையாகத் திருக்கயிலையினின்றும், திருத்தில்லைக்குப் போந்து மீண்டும் திருக்கயிலை சேர்ந்த சுந்தரநாதர் ஆங்குப் பல காலம் சிவயோகத்தமர்ந்திருந்தனர். இப்பால், ஒருநாள் திருவருட் குறிப்பின் பயனாகச் சுந்தரநாதர் தம்மோடு தொடர்பு பூண்டவராகிய பொதியமலை அகத்தியமுனிவரைக் காணும் விருப்பம் மேவிடப்பெற்றார். எனவே, இரண்டாம்முறையாகத் தென்னாடு மேவலுற்றார். இங்ஙனம், இரண்டாம் முறையாகக் கயிலையிலிருந்து பொதியத்தை நோக்கி வருங்கால் வழியிடையேயுள்ள பல தலங்களையும் தரிசித்துக்கொண்டே மகாநதிக்கரையிலுள்ள பூரி எனப்படும் இடத்தருகே வருகையில் துவரைக் கோமானாகிய கண்ணன்சரீரத்தை அவ்வூரார் வெள்ளத்தே அடித்துப் போகாமல் எடுத்து அடக்கம்செய்து கோயில் அமைப்பதைக் கண்டார் என்ப. இதற்குத் திருமந்திரப் பாடலில் "இருக்குருவாகிய......கருக்கு உருவாகிய கண்ணனும் ஆமே" என்றதை ஆதாரம் காட்டுவர். இதில் கண்ணன் செய்தி கூறப்படுவதாகக்கொள்ளின், திருமூலராகும் சுந்தரநாதர் இரண்டாவது

முறையாகத் தென்னாடு போதர நேரிட்டகாலம் தற்போது நடைபெறும் கலியுகத்தொடக்கத்தின் சற்று முந்தியதாகும். அதாவது இப்பொழுதைக்கு 5060 ஆண்டுகட்கு முன்பு என்னலாம். இப்பிரயாணத்தின்போதுதான் ஸ்ரீ சேக்கிழார்சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்தே கூறியுள்ளபடிச் சாத்தனூரில் சுந்தரநாதர், மூலன் என்னும் ஆயன் உடம்புள்புகுந்து திருமூலர் என்ற திருப்பெயரை எய்தப்பெற்றாராவர். இந்த வரலாறுகளை, "புகலிடத்தெம் மெய்யைப் போக விட்டானை", "சேர்ந்திருந்தேன் சிவன் ஆவடுதண் துறை - சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலில்", "நந்தி அருளாலே மூலனை நாடிப்பின் - நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்" என்னும் மந்திரமாலிகைப்பாடல்களால் அறியலாகும். பூரி நிகழ்ச்சி பற்றிய பாடற்கு வேறுபொருள் கொள்ளுதலும் உண்டு.

பின்னர், சுந்தரநாதர், திருமூலராகத் தாம் ஆக்கப்பெற்றமையை நாடிச் சிவயோகத்திலே மூவாயிரம் ஆண்டுகாலம் சிவபோதியின் நீழலில் இருந்துகொண்டே ஆண்டுக்கொரு பாடலாகத் திருமந்திரம் மூவாயிரம் பாடல்களையும் அருளிச்செய்தார் என்பர். தமிழிலே இங்ஙனம் தாம் செய்யநேரிட்டமை இறைவனருளாலேதான் என "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் - தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்றிவர்கூறும் அடிகளால் அறியலாம். எல்லாவிதமான வேதாகம சாரங்களையும் முரணின்றி மக்கள் உணர்ந்து நன்னெறியில் நடந்து சிவப்பேறெய்தவேண்டும் என்பதே திருமூலரின் விருப்பம் எனவும் அவர் கூறும் பாவடிகளால் நாம் காண்டல் கூடும். இவ்விதமாகச் சித்தாந்தச் செந்நெறியினை உலகோர் நன்குணர்தற்பொருட்டு ஆக்கியருளிய தவராசயோகியாராகிய திருமூலர், தாம் இயற்றிய இந்நூல் வழிமுறையாக உலகில் வழங்கிவருதல்வேண்டி இரண்டு தடவைகளில் மூவர்க்கும், நால்வர்க்குமாக ஏழு சீடர்கட்குப் போதித்தருளினவராவர். அந்த ஏழு சீடர்களாவார் சோமன், பிரமன், உருத்திரன், இந்திரன், மாலாங்கன், கந்துரு, கஞ்சமலைச் சித்தர் என்போர் ஆவர். இச்செய்தியை, "மந்திரம் பெற்ற வழி முறை" என்னும் பாடலால் அறியலாம். பின்னர், அவ் ஏழு சீடர்களும் ஏழு திருமடங்களைத் திருமூலர் பெயரால் நிறுவித் தத்தம் சீடராவார்க்கு உபதேசஞ்செய்து வந்தனர் எனத் தெரிகின்றது. இவ்வகையான ஏழு மடங்களையும் சன்மார்க்கம் எனப்படும் ஞானமார்க்க மடங்கள் என்ப. இவற்றுள் திருமூலர்

திருமடம் முந்தியதாகும். பிற ஆறுமடங்களின் தலைவர்கள் காலாங்கர், அகோரர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர் ஆவர். இவர்களுள், நலந்தரு மாளிகைத்தேவர் இருப்பினைத் தன்பால் கொண்டிருப்பது திருவாவடுதுறைத் திருமடம் ஆகும்.

திருமூலர் காலம்பற்றிய கருத்துக்கள் :

திருஞானசம்பந்தர், திருவாவடுதுறைக் கோயில் பலிபீடத் திடத்தே, திருமந்திர நூல் சேமிப்புண்டு கிடத்தலைக் கண்டுரைத் தார் என்பதொரு வரலாற்றால் திருமூலர் திருஞானசம்பந்தர் கால மாகிய கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்னத் தடையில்லை. இவ்வரலாற்றில் ஐயங்கொண்டவர்களும் திருத் தொண்டத்தொகை அருளிச்செய்த ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலமாகிய கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முந்தியவர் திருமூலர் எனக் கொள்வதில் தடைகூறார்.

திருமூலர் 3000 ஆண்டுகள் திரு ஆவடுதுறையிலே வீற்றி ருந்து ஆண்டுக்கொரு செய்யுளாக அருளிச்செய்தார் எனக் கொள்ளின் கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்குமுன் 3000 ஆண்டுகள் பின் தள்ளிக்கொள்ள வேண்டும். அப்படியாயின் இப்போ தைக்கு 4300 ஆண்டுகட்கு முன்னர் அவர் திருவாவடுதுறையினை அடைந்தாராதல் வேண்டும். அவர், திருவாவடுதுறைக்குத் திருக்கயிலையிலிருந்து புறப்பட்டு வந்தவர். பல தலங்களையும் தரிசித்து வந்தவர். கயிலையில் சிலகாலம் இருந்து அருந்தவம் ஆற்றிப் பின்னர் வந்தவர் ஆவர். இவர் ஒரு சித்தர். காயத் தினைப் பிஞ்சாக்கும் வித்தை வல்லவர். இவையெல்லாம் கருத் துட்கொண்டு நோக்கின் ஏறக்குறைய 5000 ஆண்டுகட்கு முன்னே வாழ்ந்தவராதல் வேண்டும். ஆகவே இப்போது நடை பெறும் கலியுகத்தின் தொடக்கக் காலம் திருமூலர் காலம் ஆகலாம் என்பர்.

ஆராய்ச்சியாளர் கருத்தின்வண்ணம் திருமூலர், முதற்கண் சுந்தரராக இருந்து, பிறகு சுந்தரநாதராக ஆகி, ஒரு முறை தில்லையம்பதி வரையில் பதஞ்சலி வியாக்கிரமருடன் வந்து, நடனக்காட்சி கண்டு, சின்னாளளவும் சிதம்பரத்தே வதிந்து, அப்பால் திருக்கயிலை மீண்டு, மீண்டும் இரண்டாமுறை பிரயா ணப்பட்டுத் திருவாவடுதுறை வந்து வதிந்திருந்து, பின்னர் திருக்கயிலை மேவினர் எனக் கொள்ளின் திருமூலர் காலம்

இற்றைக்கு 8000 ஆண்டுகள் முன்னர் ஆகும். அப்படியாஞல் திருமூலர் துவாபரயுகத்தின் இறுதிக்காலத்தவர் ஆவர்.

திருமூலர் தமது நூலில், சேய்ஞ்ஞலூர்ச் சண்டேசுவர நாயஞரை "உறுவதறிதண்டி" என்ற பாடலில் கூறியுள்ளார். வேறு நாயன்மார்களைப்பற்றி இவர் கூறிலர். ஆதலால், சண்டேசுவரநாயஞர்மட்டில், திருமூலர் காலத்துக்கு முன்பு இருந்தவராவர். எனவே, திருமூலர் ஏனைய நாயன்மார்களுக்கு முற்பட்டவராதல் பெறப்படும்.

திருமூலருடன் தென்ஞடு போந்த பதஞ்சலியார், வியாக்கிரமர் காலம் திருமூலரின்காலம் ஆகலாம். தசரதர் குமாரரான இராமருடைய குலகுரு வசிட்டர் ஆவர். இவருடைய தங்கையை மணந்தவர் வியாக்கிரமர். இவருடைய மகஞர் உபமன்னியு ஆவர். இந்த உபமன்னியு பொருட்டே கூத்தப்பிரான் பாற்கடலை வரவழைத்தளித்தார் என்று கோயிற்புராணம் கூறும். தசரதராமர் காலம் கி. மு. 6000 என்பர். அப்போது பாண்டிநாட்டுக் கபாடபுரம் தலைநகராக இருந்தது. இதஞலும் திருமூலர்காலம் வசிட்டர், பதஞ்சலி, வியாக்கிரமர், உபமன்னியு முதலிய முனிவர்கள் காலமாகும் என்பர். அவ்வாருயின் இற்றைக்கு 8000 ஆண்டுகட்கு முன் இருந்தவர் திருமூலர் ஆவர்.

மற்றும் திருமூலர் காலத்திலே தமிழ் மொழியானது ஐந்து மண்டலங்களிலே வழங்கி வந்ததென அவர் பாடியுள்ள 'தமிழ் மண்டலம் ஐந்தும்' என்னும் பாடலால் அறிகிருேம். இம் மண்டலங்கள் எவை என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் உலவி வருகின்றன. எனினும், இராமாயண காலத்தில் வடநாட்டிலும் தமிழ்மொழி வழங்கியது என்பதில் தடையில்லை என்பர். அக்காலத்திலேதான் தமிழ் எழுத்துக்கள் உயிரும் மெய்யும் ஐம்பத்தொன்ருக இருந்தன என்பர். இங்ஙனம் தமிழ் எழுத்துக்களில் உயிரும் மெய்யும் ஐம்பத்தொன்ருக இருந்தமை தமிழ் மொழியின் வட்டெழுத்துக்காலம் என்பர். இந்த வட்டெழுத்துக்காலம், கோலெழுத்துக் காலத்துக்குப் பிற்பட்டதொன்ரும். வட்டெழுத்துக் காலத்திலேதான் தமிழினின்று தெலுங்கு முதலிய மொழிகள் தோன்றின என்பர். இது கி. மு 6000 என்பர். இதன் பிறகே தமிழுக்குத் தற்போதுள்ள சதுர எழுத்துக் காலம் தொடங்கலுற்றது. அது ஏறக்குறையப் பாரத காலம் ஆகும் என்பர். அக்காலம் கி. மு. 3100 என்பர்.

திருமூலர் கண்ணன் உடலினைக் கண்ட செய்தி முன்னரே வந்துள்ளது. இந்தப் பாரதகாலத்திற்குப் பின்னரே தமிழில் உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும், ஆய்தம் ஒன்றுமாக முப்பத்தொரு எழுத்துக்கள் அமையும் சீர்திருத்தம் தோன்றியது என்பர். தொல்காப்பியரும் இவ் எழுத்துச் சீர்திருத்த வரையறையைத் தமது நூலில் குறிப்பாராயினர். திருமூலர் 51 எழுத்துக் கணக்கே தமது நூலில் கூறியிருத்தலால், தமிழின் வட்டெழுத்துக் காலமாகிய கி. மு. 6000 எனப்படும் இராமாயண காலத்தவர் ஆகலாம். இதனாலும் திருமூலர் இற்றைக்கு 8000 ஆண்டுகளின் முன் இருந்திருக்கலாம் என்பர். இவ்வாறான பற்பல ஆராய்ச்சிகளால் திருமூலர் கி. மு. 6000 முதல் கி. மு. 100 வரை இருந்திருக்கக்கூடும் என்பர். அதாவது, சுந்தரர், சுந்தரநாதர், திருமூலர் ஆகிய இம்மூவராகிய ஒருவர் ஏறக்குறைய 5900 ஆண்டுகளளவும் உயிருடன் வாழ்ந்திருந்தவர் ஆதல் வேண்டும். மக்கள் நீடுவாழ்வதற்கான வழிகளைத் திருமூலர் தமது திருமந்திரத்தே கூறிக்காட்டுகின்றார். பழுத்த காயத்தினைப் பிஞ்சாக்கலாம் என்றும், நரை திரை மாறிப் பாலனாகலாம் என்றும், அழிவில்லா ஆக்கை பெறலாம் என்றும், கூற்றை உதைக்கும் வன்மை அடையலாம் என்றும், நீராயிரமும் நிலமாயிரத் தாண்டும் பேராது காயம் கொண்டிருக்கலாம் என்றும் பிரான் நந்திமேல் ஆணையிட்டுத் தம் நூலில் கூறும் திருமூலர், தாம் அவ்வாறு நெடிது வாழ்ந்திருந்தவரே ஆவர் என நாம் நம்புதல் கூடும். ஆகவே கி. மு. 100 என்பது திருமூலர், சிவப் பேறெய்திய காலமாகலாம்; அல்லது கயிலைக்கு மீண்ட காலமாகலாம் என்பர். இந்தக் காலத்திலெல்லாம் திருமந்திர நூல் மிகவும் போற்றி ஓதப்பட்டு வந்திருக்கவேண்டும். கி. மு. 100-க்குப் பிறகுதான் தமிழ்மறை இயற்றிய திருவள்ளுவர் தோன்றியிருக்கக்கூடும். திருவள்ளுவர், திருமூலர் திருமந்திர நூலினை நன்கு அறிந்தவராக இருத்தல் கூடும். இச்செய்தி இவ்விருவர் நூல்களையும் ஒப்புநோக்கி அறியத்தக்கதாகும்.

எனவே, உலகத்து மக்கட்கு (யாவர்க்கும்) கடவுள் ஒருவரே என்று திடம்படக்கூறி, அவரை அடைய முயலும் வழி கூறும் எல்லாச் சமயங்கட்கும் பொதுவாகவும், சிறந்ததாகவும் உள்ளது சித்தாந்தசைவ சமயம் ஒன்றே என எடுத்துத் தம் அநுபவத்தால் உரைத்துக் காட்டி, ஒரே நூலாகத் திருமந்திரத்தை ஆக்கி அளித்த பரம உபகாரி திருமூலர் என்னலாம்.

இந்த நெறியையே பின்பற்றி எல்லா மதங்களையும் பகை நீக்கி ஒன்றுபடுத்தி உயர்கதிக்கு உய்த்தற்குரிய உபாயமாகத் திருவள்ளுவர் திருக்குறள் நூலை யாத்துப்போயினர் என்னலாம். இம்மை, அம்மை என்ற இருவழியினும் இன்புற்று வாழ்தற்கு உலகமக்கள் விழைவராயின் அவர்கள் இவ்விரு நூல்களையும் ஓதி உணர்ந்து ஒழுகுதலே அமையும் என அறுதியிட்டுரைக்கலாம் அன்றே! தலைமைசான்ற சமய நூல் திருமந்திரம் எனவும், அங்ஙனமாய அறநூல் திருக்குறள் எனவும் உலகம் உண்மையிற் கொண்டுவக்கும் நாள் எந்நாளோ! அந்நாள் சிறந்ததொரு நன்னாளேயாகும்! "மிக்கதிரு மூலனருள் மேவுநாள் எந்நாளோ!" தக்கதிருத் தேவர்வழி சார்ந்திடுநாள் எந்நாளோ! எனக்கூறி அமைவாம்.

திருமந்திர நூல் :

மக்கள் உய்தி அடைவதற்கான மந்திரங்களை உடைய நூல் மந்திர நூல் எனப்படும். இம்மந்திரங்கள் பலதிறப்படுவன. குறிப்பிட்ட ஓரொருபயன் கருதுவார் ஓரொருதிறத்து மந்திரம் ஓதுவர். எவ்வகைப்பயன்களினும் மக்களாவார்க்கு மாண்புமிக்க பயனுவது வீட்டின்பமே ஆகும். வீட்டின்பத்தினைத் திரு என்னும் சொல்லால் குறிப்பது மரபு. எனவே, வீட்டின்பத்தைப் பயனுகத் தரவல்லதொருமந்திரமே திருமந்திரம் எனப்படும். இதனைச் சைவாகமங்கள் பஞ்சாக்கரமந்திரம் என்றியம்பும். வேதாந்த நூல்கள் இதனையே பிரணவமந்திரம் என்னும். ஆகவே, ஓரெழுத்தாகவும், மூன்றெழுத்தாகவும், ஐந்தெழுத்தாகவும் விரிந்து வீட்டின்பத்தை விளக்கவல்லதே திருமந்திரம் ஆகும். இதனை முந்நூறு வகையால் திருமூலர் ஓதி, மூவாயிரம் பாடல்களால் விளக்கியுள்ளார் என்பர். ஆகலின், இம்மையில் பெரும் பேறும், மறுமையில் வீடும் மக்களாவார் தட்டின்றி அடைதற்கென ஓதப்பட்டுள்ள நூலே திருமந்திரம் ஆகும் என்க!

மேற்கூறப்பட்ட விழுமிய இன்பத்தினை இம்மையிலேயே அநுபவிக்கப்பெற்ற அநுபூதியாளர் திருமூலர் ஆவர். ஆகையால், தாம்பெற்ற இந்த இவ்வின்பத்தினை வையகமுழுவதும் பெற்றுத் துய்க்கவேண்டும் என்று தமது திருவுள்ளத்தெழுந்த கருணையினுல் இத்திருமந்திர நூலை இவ்வாசிரியர் இறையருள்வழி நின்று இயற்றினுராவர்.

நூற்பொருள் :

பேரின்பம் எனப்படும் சிவப்பேற்றினை நாமனைவரும் எய்தப் பெறுவதற்குத் துணைபுரியும் நூல்கள் பன்னிரு திருமுறைப் பனுவல்களும், பதினன்கு மெய்கண்ட சாத்திரப் பனுவல்களும், பதினன்கு பண்டார சாத்திரப் பனுவல்களும் ஆம். இவற்றுள், பன்னிரு திருமுறைப் பகுப்புள் (திருவிசைப்பாப் பனுவல்கள் இருபத்தெட்டினையும் ஒரு தொகுப்பாகக் கொள்ளின்) மொத்தம் ஐம்பத்து மூன்று நூல்கள் உள்ளன. இவற்றோடு மேற்குறிப்பிட்ட சாத்திரப் பனுவல்களாகிய இருபத்தெட்டினையும் சேர்த்தால் மொத்தம் நூல்கள் எண்பத்தொன்றுகின்றன. இவற்றை ஓதுவதனுல் நாம் முப்பொருள்பற்றிய உண்மைகளை ஒருவாறு உணர்தல் கூடும். இந்த எண்பத்தொரு நூல் வரிசைகளுள் திருமந்திரம் என்பது பன்னிரண்டாவது நூலாக உள்ளது. திருமுறை வரிசையுள் திருமந்திரம் என்பது பத்தாம் திருமுறை ஆகும். மேற் கூறப்பட்ட எல்லா நூல்களையும் ஓத இயலா விடின் இத் திருமந்திர நூலொன்றையேனும் ஓதி உணரப் பெறுவரேல் கற்றதனுலாய பயன் கைவரப்பெறுவர். ஆகவே, திருமந்திர நூற்பொருளை நன்குணர்த்தும் தகையவாக உள்ளன ஏனைய எல்லா நூல்களும் என்னலாம். எனவே, திருமந்திர நூற்பொருளை உள்ளவாறு காண விரும்புவோர், ஏனைய சாத்திரங்களும் தோத்திரங்களுமாகிய எண்பது பனுவல்களையும் ஐயமற அறிதல் வேண்டியுள்ளது என்னலாம். இதனுல், திருமந்திர நூலின் பொருட்சிறப்பு ஒருவாறு புலப்படுத்தப்பட்டது.

திருமந்திரத்தைச் சாத்திர நூல் எனவும், யோகநூல் எனவும், தமிழாகமநூல் எனவும் பலவாறு சிறப்பித்துக் கூறுவர் பெரியோர். "தோத்திரத்தில் சிறந்தது திருவாசகம்; சாத்திரத்தில் சிறந்தது திருமந்திரம்" என்னும் பழந்தமிழ் வாக்கு ஒன்றும் வழங்கி வருகின்றது. மற்றும் இந்நூலைச் சிவராஜ யோகநூல் என்பர். மேலும், இந்நூலை வேதாகம முடிபு நூல் எனவும் கோடல்கூடும். இதனை,

> "It is primarily an Agama, and it gives out the philosophy of Saiva Siddhanta, and deals with mantras, inner meaning of religious symbols, mystic experiences of yogis and siddhas and allied topics"

என்று கூறியும் சிறப்பிக்கின்றனர். இந்த நூலுக்கு மந்திர மாலிகை எனவும், மந்திரமாலை எனவும், சுந்தரனுகமம் எனவும், தமிழ் மூவாயிரம் எனவும் வேறு பெயர்கள் வழங்குகின்றன. திருமந்திரம் என்பதே சிறப்பாக வழங்கும் பெயராம்.

மந்திரம் என்னும் சொல்லுக்கு, 'யாவற்றையும் அறியுந் தன்மையும், சம்சாரம் என்னும் பெருங்கடலிலிருந்து கரையேற்றிக் காப்பாற்றுந்தன்மையும் கொண்டது' எனப்பொருள்கூறுவர் வடமொழியறிஞர் "நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப" என்பது தொல்காப்பியம். இதனுள் தானே என்ற சொல் தமிழ்மந்திரம் குறிப்பது என்பர் பேராசிரியர். திருக்குறளில் "நிறைமொழி மாந்தர் ...... மறை மொழி" என்ற இடத்தே "அவராணையாகச் சொல்லிய மந்திரங்கள்" என்று உரைகாட்டியுள்ளார் பரிமேலழகர். மந்திரமின்றிக் கிரியை இல்லையாதலால், கிரியைக்குக் காரணமாவது மந்திரம் என்பதும் கூறப்படும். மந்திரம், பரம்பொருளுக்குத் தூலத் திருமேனியாகும் என்பது சாத்திரம். மாந்தராவார்க்குரிய நூல் மந்திரம் எனப்படும் என்று கூறுவாரும் உளர். சுருங்கக்கூறின் வேதாகமசாரமாகிய திருமந்திரார்த்தத்தை விளக்கி நிற்பது இந்நூல் என்னலாம்.

திருமந்திர நூல், தன்னுள் ஒன்பது தந்திரங்களை உடையது. தத்துவமந்திரப் பொருள்களை விளக்கிக் கூறுவதே தந்திரம் எனப்படும். "தன்னை அடைந்தோரை (செயலிற் கொள்வோரை)க் காப்பாற்றுவது" என்பது தந்த்ரம் என்னும் சொற்குப் பொருளாம். எதனையும், செயல்முறையிற் கொண்டாலல்லது மெய்ப் பயன் எய்துதல் இயலாது. ஆதலால், இந்நூலுள் மாந்தராவார் பக்குவ நிலைகளுக்கு ஏற்பச் செயல்முறைகள் ஒன்பது பிரிவாகக் கூறப்பட்டுள்ளன என்னலாம். எனவே, திருமந்திர நூலின் உட்பிரிவு ஒன்பது தந்திரங்கள் ஆகும்.

இந்த நூல் நூற்றுத்தொண்ணூற்றைந்து சிறு பிரிவுகள் கொண்டது. செய்யுள்தொகை மூவாயிரம் என்பதே மரபு. எனினும், இந்நூலின் பல் வேறு பதிப்புகளில் 3047 செய்யுட்களும், 3081 செய்யுட்களுமாகக் காணப்படுகின்றன. எத்துணைப் பாக்கள் இருப்பினும் மூவாயிரம் செய்யுட்களே முக்கியமானவை என்பது தெளிவாம்.

இனி, இந்நூல் கொண்டுள்ள ஒன்பது தந்திரங்களும் சர்வா கமங்களின் சாரமாகும் என்பர். இதனுல் சைவாகமங்கள் யாவற்றின் செய்திகளேயும் ஒன்பது வகைப்படுத்தித் திருமூலர், தமிழ் ஆகமவியாசராகிக் கூறியுள்ளார் ஆவர். "ஆகமப் பொரு ளேத் தமிழ் வகுப்ப" என்பது ஸ்ரீ சேக்கிழாரடிகள் வாக்காகும். "சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே" என்பது திரு மூலரே கூறுவதாகும். இங்ஙனமன்றி, "சிவமாம் பரத்தினில்" என்ற தொடக்கத்துத் திருமந்திரப் பாடலைக்கொண்டு, சிவபரம் பொருளினிடமிருந்து வழிவழியாக நந்திபெம்பெருமானுக்குக் கிடைத்த ஆகமங்கள் காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாது ளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம் என்னும் ஒன்பது ஆகமங்களாகும் என்றும், இவையே மூலமானவை என்றும், இந்த ஒன்பது ஆகமங்களேயே திருநந்திதேவர் குரு குலத்தில் போதித்தனர் என்றும், இந்த ஒன்பது திவ்யாகமங் களேயே ஒன்பது தந்திரங்களாகத் தாம் அக்குருகுலத்திற் கேட்ட வாறே திருமூலர் கூறலுற்றுர் என்றும் கூறுவார்கள். மற்றும், முதல் நான்கு தந்திரங்கள் நால்வேதங்களின் கருத்துரைப்பன எனவும், எஞ்சிய ஐந்தும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் விரிவு ஆகும் எனவும் இசைப்பார் உளர். சுருக்கமாக இவ்வொன்பது தந்திரச் செய்திகளேயும் கூறப்புகின், மாந்தராவாரை நல்லொழுக்க நெறிக் கண் நிற்கச்செய்து, சிவப்பொருளே முதற்பொருளென அவர் கட்கு அறிவித்து, அவர்களுக்கு இப்பிறப்பிலே சிவப்பேறடை தற்கு ஏற்புடையவராதற்கான யோகநெறிகளே எடுத்துக்காட்டி, அதனில் உறைப்பூறுதற்குரிய உபாசனே முறையினே விளக்கி, அப்பால், சைவநெறி இன்னதென அறியக்கூறி, அதன் பின்னர் சிவ குருவின் அருள் பெறுமாறு காட்டி, அப்பால் அவ்வருள் வழியதான சம்பிரதாயப் புறத்தொழுக்கத்தினேச் சிறக்கத் தெரி வித்து, அதற்குப் பிறகு அகத்தே நிகழவல்ல அவத்தைகளே வித்தரித்து, முடிவாகச் சிவப்பேறடைந்து வாழுமாற்றை விளக்கி இந்த நூற்போக்குச் செல்லுகின்றது என்று கோடல்கூடும். ஆதலால், நாம் அனேவரும் பிறப்பினுலாய சிறப்புப்பயனே எய்து தற்கு இவ்வொருநூலின் சார்புகோடலே அமையும் என்றல் பொருந்துவதாம்.

மற்றும், இறையுண்மை உணர்தற்கான முக்கியமுள்ள காட்சி, அநுமானம், உரை எனப்படும் மூன்றளவைகளுள் திரு மந்திரம் உரையளவையின்பாற்படும் என்பர். இவ்வுரையளவை

ஏனைய உரையளவைகளைப் போன்றே கர்மம், உபாசனை, ஞானம் எனப்படும் மூன்று பிரிவுகளைப்பெறும். இப்பிரிவுகள் ஒவ்வொன்றும் செயல், கருத்து, அறிவு எனப்படும் மூன்றன் பாலதாகிய தந்திரம், மந்திரம், உபதேசம் என்ற முப்பிரிவுபடும். அங்ஙனம் கொள்ளின் மொத்தம் ஒன்பது பிரிவுபடும். எனவே, திருமந்திரத்தின் முதல் மூன்று தந்திரங்கள் கன்மபாகம் பற்றிய முப்பகுப்பினவாகும்; அடுத்த நான்கு, ஐந்து, ஆறு தந்திரங்கள் உபாசனுபாகம்பற்றிய முப்பகுப்பின ஆகும்; அதன் பின்னர் உள்ளனவாகிய ஏழு, எட்டு, ஒன்பது எனப்படும் தந்திரங்கள் ஞானபாகம்பற்றிய முப்பகுப்பினவாம். இங்ஙனமாக ஒன்பது தந்திரங்கள் இந்நூலுள் அமைந்து அநுட்டானத்தையும், மன அடக்கத்தையும், இறையில் அறிவடங்கப்பெறுதலையும் விவரிக்கின்றன என்பர். ஞானநெறியில் கேட்டலும், சிந்தித்தலும் கன்மபாகத்தனவாம். தெளிதல் ஒன்றும் உபாசனையின்பாற்படும். நிட்டைகூடல் ஞானபாகத்தது ஆகும். எனவே, கன்மபாக உணர்ச்சியால் பாசஞானத்தை ஒழித்து, உபாசனுபாக உணர்வினுல் பசுஞானத்தைப்போக்கி, ஞானபாக உணர்வினுல் பதிஞானம் எய்தப்பெற்று இறையுளழுந்துதல் ஆன்மா முறையே அடையப்பெறும் என்பது கருத்தாகக் கொள்ளப்படும். இவ்வாருகத் திருமந்திர நூலின் உட்பகுப்புக்களான ஒன்பது தந்திரங்களும் அமைந்துள்ளன என்பதும் ஒரு முறையாகும்.

அன்றியும், ஞானசாத்திர நூலாக விளங்குவது ஸ்ரீ மெய்கண்டதேவர் அருளிச்செய்த சிவஞானபோதம் ஆகும். இந்நூல், மக்களாவாரைப் பிரமாணங்காட்டித்திருப்பி, இலக்கணம் கூறி இசைவித்து, சாதனம் சொல்லி நடப்பித்து, பயன்கூறி முத்தியின்புறுத்துகின்றது. இந்த நெறியில் இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களை உடையது. இவற்றுள் முதல் மூன்று சூத்திரங்கள் பிரமாணங்காட்டுவன. இச்சூத்திரங்களால் பதியும் பசுவும் பாசமும் எனப் பொருள்கள் மூன்றுள என மக்கள் உணர்வுறுத்தப் பெறுவர். அப்பாலுள்ள இலக்கணம், சாதனம், பயன் என்ற பகுப்புகள் ஒவ்வொன்றும் மும்மூன்று சூத்திரங்களை உடையன. எனவே, பிரமாண இயலின் பின் உள்ளன ஒன்பது சூத்திரங்களாகும். அளவையால் தெளிந்தார்க்கு இவ்வொன்பது சூத்திரங்களே அமைவன. ஆகவே, நான்காம் சூத்திரம் முதல் பன்னிரண்டாம் சூத்திரம் முடிய உள்ள ஒன்பது சூத்திரச் செய்திகளும் திருமந்திரநூலில் முதலாம்தந்திரம் முதலாக ஒன்பதாம்

தந்திரம் இறுதியாக உள்ள ஒன்பது தந்திரங்களாலும் விரிவாக உணரப்படும்.

திருமந்திர நூலின் பாயிரப்பகுப்பில் உள்ள தலைப்புகள் பொதுவகையாகப்பார்ப்பின் சிவஞானபோத நூலகத்தே உள்ள பிரமாண இயலின் விஷயத்தை ஒருவாறு அறிவிப்பனவாகும். இறைவனுண்மையும், பாச உண்மையும், உயிருண்மையும் பிரமாணவியல் கூறிச்செல்லும். 'அண்டத்து வித்தை', 'கடந்து நின்றான்', 'முடிவும் பிறப்பையும்', 'விதி பல செய்து', 'இருந்தேன் இக்காயத்தே', 'ஈசன் இருக்கும் இருவினைக் கப்புறம்', 'தனித்தெய்வம் மற்றில்லை' என்ற இச்சொற்றொடர்களும் இவை போல்வனவும் வந்துள்ள திருமந்திரப் பாயிரப்பாடல்கள் மேற்கூறிய செய்தியை விளக்குவன ஆகும்.

இனி, நான்காம் சூத்திரம் மாயையாலாகிய உடம்பினுள் உள்ள உயிரென்பது கரணங்களின் வேறாக உள்ளதும் அறியாமை உடையதுமாகும் என இலக்கணவகையால் அறிவுறுத்துகின்றது. அங்ஙனமே, திருமந்திர நூலின் முதல்தந்திரம் யாக்கை நிலையாமை, அன்புடைமை முதலான அதிகாரவழிகளால் மேல் உள்ள கருத்தினை உணர்த்துதல் நாம் காணலாகும். அடுத்து உரைப்பின் ஐந்தாம்சூத்திரம் உயிர்கள் திருவருட்சத்தியை உணரமாட்டாமை உடையன என்பதைக் கூறிச்செல்கின்றதாகும். அவ்வாறே திருமந்திர நூலின் இரண்டாம் தந்திரம் புராணவரலாறுகள், திரோபவம், மூவகைச் சீவவர்க்கம் என்பனபோன்ற அதிகாரங்களின்வழியால் மேலதைக் கூறிச்செல்லல் காணலாகும். இங்ஙனமே மேல்வரும் ஒவ்வொரு சூத்திரச் செய்தியினை ஒவ்வொரு தந்திரமும் கூறிச்செல்லுதல் கூர்ந்து காணில் புலப்படவல்லதாம். இறுதியதான பன்னிரண்டாம் சூத்திரம் சீவன்முத்தரது உலகநிலை கூறுதல்போலவே, திருமந்திரத்தின் இறுதியதாகும் ஒன்பதாம் தந்திரம் கடவுளும் நானும் ஒன்றானேன் என்றுரைக்கும் அணைந்தோர் தன்மை கூறிடுதல் காணலாகும். "மானே தொழுகை வலி" எனப் போதநூல் முடித்துக்கூறுதற்கிணக்கமுடையதே "வாழ்க மலமறுத்தான் பதம்" என்னும் திருமந்திர இறுதிப்பாடல். இதுகாறும் கூறிய அதனால் சிவஞானபோத நூலின் பிந்திய ஒன்பது சூத்திரச் செய்திகட்கும் வித்தும் பயமரனும் போலத் திருமந்திரத்து ஒன்பது தந்திரங்களும் உள்ளன என்னலாம்.

பின்னும், தொன்றுதொட்ட மரபாகக் காணப்புகின், ஒன்றை ஒன்பதாக்கி உரைத்தல் என்ற வழக்கம் பண்டை நூலாசிரியர்கள்பால் உள்ளமை புலப்படும். தொல்காப்பியத்தே அதனாசிரியர் பழங்காலத்து முறைப்படியே ஒவ்வோர் அதிகாரத்தையும் ஒன்பது பிரிவுபடுத்தி உணர்த்திப்போதல் காணலாம். திருமூலரும் பழங்காலத்தவராதலின் அம்முறையேபற்றிச் சர்வாகமசாரங்களையும் ஒன்பது பிரிவுக்குட்படுத்திக் கூறியுள்ளார் என்று கோடலும் தக்கதே. ஒற்றைத்தானத்து எண் வரிசையில் ஒன்பதே உயர்ந்த எண்ணுதல் யாவரும் அறிவர். நவகண்டம், நவவியாகரணம், நவமணி, நவசத்தி முதலாம் பிரிவுகள் ஈண்டைக்கு எண்ணிக்கோடல் தக்கது.

இப்பால், திருமந்திர நூலகத்தே உள்ள பாடல்கள் யாவும் ஒரு கட்டளைக்குட்பட்டே ஒழுகுதலும் நாம் காணலாம். ஒவ்வொரு வரியிலும் உள்ள எழுத்துக்கள் மெய் எழுத்து நீக்கிப் பன்னிரண்டே ஆதல் காணலாம். அடிகள் நான்கே. அவையும் அளவு ஒப்பனவாம். சீர்கள் வெண்டளை பிறழாத் தகையன. இங்ஙனம் சுருங்கிய எழுத்துக்களால் அரும்பெரும் செய்திகளை ஒழுகிய இனிய ஓசையுடைப்பாக்கள் மூலம் திருமூலர் உணர்த்தியுள்ளமையும் இந்நூலின் காலப் பழமை காட்டவல்லதாகும். இதுகாறும் திருமந்திரப் பாக்களின் அமைப்பியல்பு பகரப்பட்டது. உண்மையாக நோக்குவார்க்கு நந்தியருளே திருமந்திரமாக வடிவெடுத்ததெனல் தோன்றும். இந்நூலினைக் காலையில் எழுந்து கருத்தறிந்து ஓதவேண்டும் என்பது கட்டளையாகக் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய விழுப்பேறளிக்கும் நூலினை உலகம் அறியாதே வறிதுநாள் போக்குவதைக் கண்டது திருவாவடுதுறை ஆதீனம். இனி, வாளா இருத்தல் ஆகாதெனத் தற்போது எழுந்தருளியிருக்கும் 21-வது குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளத்துக் கொண்டருளினார்கள். அதனால் ஆண்டுதோறும் திருமந்திர மாநாடு கூட்டி உதவியருளுகின்றார்கள். அறிஞர் பலரால் திருமந்திரக் கருத்தமுதம் சமைப்பித்து வழங்கி வருகின்றார்கள். இந்நூற்குரியவாக அமையும்படிச் சம்பிரதாய உரைகளும் கட்டுரைகளும் வெளியாமாறு கட்டளையிட்டருளி உதவிவருகின்றார்கள். அற்றை நாளில் திருவாவடுதுறையிலே எழுந்தருளித் திருஞானசம்பந்தசுவாமிகள் திருமந்திர நூலிருப்பை

வெளியாக்கி அருளினூர்கள். அவ்வாறே இற்றைஞான்றும் துறைசைப் பதியிலே எழுந்தருளிக் குருமகாசந்நிதானம் அவர்கள் அந்நூற் பொருளை வெளியாக்கி அருளிவருகின்றூர்கள். இவர்கள் பொற்ருமரையடி போற்றி உய்வோமாக.

இதுவரையில், திருமந்திர நூலில் உள்ள பாயிரப் பகுதிக்கான எளிய கட்டுரை எழுதுதற்குரியதொரு முகவுரை கூறப்பட்டது. இனி இந்நூலின் பாயிரப் பகுதியினைப் பற்றிய கட்டுரை எழுவதாகும். பிழை பொறுத்தலே பெரியோர் இயல்பாம்!

உ
சிவமயம்

நூல்

திருமந்திரக்கட்டுரை

பாயிரப்பகுதி

" திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம் — அருமந்த
புந்திக்கு ளேகினைந்து போற்றுமடி யார்தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்."

விநாயகர்காப்பு

முன்னுரை :

திருமுறைகள் பன்னிரண்டு என்பர். அவற்றுள் பத்தாவது திருமுறையாகும் திருமந்திரம் எனப்படும் நூல். சிறப்புற நோக்கின் இந்நூல், சிவஞானபோதத்தின் பத்தாம் சூத்திரம் பகரும் பாசக்ஷயம் பண்ணுமாற்றினையே பயனாகக் கொண்டதாகும். அதாவது, திருவருட் பேற்றினை உணர்த்துவதே இந்நூலின் சிறந்ததொரு நோக்கமாகும். நூலாசிரியராகிய திருமூலதேவர், திருவருட்குறிப்பின்வழி நின்றே இதனை ஆக்கியளித்தாராவர். இச்செய்தி, 'சீருடையாள் சிவனாவடு தண்துறை - சீருடையாள் பதம் சேர்ந்திருந்தேனே' என ஆசிரியரே கூறுதலால் நாம் தெரியலாகும். இதனால், திருமூலதேவர், யான் எனது என்னும் செருக்கினை அறுத்து, அஞ்ஞான கன்மம் பிரவேசியாதவராகி, அவனருளாலே இவ்வொப்புயர்வற்ற நூலை ஆக்கினார் என நாம் கொள்ளுதல் வேண்டும். இதனை, 'அந்தி மதிபுனை அரனடி நாள்தொறும் - சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே' என ஆசிரியர் அருளிச்செய்தலால் அறியலாம். இதுகாறும் சொல்லியவைகொண்டு, திருமந்திரம் என்னும் இந்த நூல், சிவபெருமான் திருநந்திதேவர் மூலமாகத் திருமூலதேவரால் நம் செந்தமிழ் மொழியில் ஆக்கித்தந்த ஆகமநூல் என்று நாம் ஐயமறத் தெரிதல் தக்கதாம்.

நூற்பகுப்பு :

மேற்கூறப்பட்டுள்ளவாறு சிறப்புப் பெற்றதான திருமந்திர நூலானது, முதற்பிரிவாகப் பாயிரம் என்னும் பகுப்பினையும், அப்பால் தந்திரம் என்னும் பெயருடையவையான ஒன்பது தந்திரங்கள் எனப்படும் பகுப்புக்களையும் பெற்றுள்ளது. எனவே, இந்நூல் மொத்தம் பத்துப் பகுப்புக்களைக் கொண்டுள்ளது என்னலாம், இவற்றுள் பாயிரப்பகுதி என்பது, இத் திருமந்திர நூலுக்குரிய ஒரு முகவுரையாக அமைந்துள்ளதாகும். இப்பகுதியில், முதற்கண் விநாயகர் காப்புச்செய்யுள் உள்ளது. இதன் பின்னர், கடவுள் வாழ்த்து - வேதச் சிறப்பு - ஆகமச் சிறப்பு - குருபாரம்பரியம் - திருமூலர் வரலாறு - அவையடக்கம் திருமந்திரத் தொகைச் சிறப்பு - குருமட வரலாறு - திரிமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறைமை எனப்படும் ஒன்பது உட்பிரிவுகள் அமைந்துள்ளன. விநாயகர் காப்புச் செய்யுள் நீங்கலாக இப்பகுப்புக்களின் மொத்தச் செய்யுள் நூற்றுப்பன்னிரண்டு எனப்படும். ஆகவே, இந்நூலின் ஆரம்பச் செய்யுள் கடவுள் வாழ்த்து என்னும் தலைப்பின் கீழ் "ஒன்றவன்தானே" என்று தொடங்குகின்றது. திருமூலதேவ நாயனாரின் திருச்சரிதையினைக் கூறுமிடத்தே நம் பெரியபுராண ஆசிரியராகிய சேக்கிழாரடிகள் இந்தச் செய்யுளை முதலாகக் கொண்டுதான் திருமூலர் தமது திருமந்திர நூலினைத் தொடங்கியதாக அருளியுள்ளார்.

ஆண்டுக்கு ஒரு செய்யுள் வீதம் மூவாயிரம் ஆண்டளவும் வீற்றிருந்தருளித் திருமூலதேவர் மூவாயிரம் பாடல்களே பாடியருளியதாகப் பெரியபுராணம் பேசுகின்றது. இந்த நூலுள் சிற்சில பாடல்கள் யாதொரு மாறுபாடும் பெருமே வேறு வேறு இடங்களில் காணப்படுகின்றன. ஒருசில, சிற்சில சொற்றொடர் மாறுபாட்டுடன் அங்ஙனம் இரட்டித்துக் காணப்படுகின்றன. ஒருசில பாடல்கள், திருமூலரைப்பற்றிப் பிறர் கூறும் பாக்களாகவும் உள. சில பாடல்கள், திருமூலர் சொல்லியருளியவையாக வேற்ருேர் கூற்றில் அமைந்துள. இவையெல்லாம் கூர்ந்து ஒழுங்குசெய்து காணின் மூவாயிரம் பாடல்களே இந்நூல் கொண்டுள்ளதெனக் கொள்ளவரும் என்னலாம். இனி, இம் முதலாவதாகும் கட்டுரைநூல், திருமந்திர நூலிலுள்ள பாயிரப் பகுதியினைப்பற்றி வரையப்படுவது ஆகும். முதற்கண், பாயிரம் எனப்படுவதன் இலக்கணம் குறித்துக் கொஞ்சம் காணலாம்.

பாயிர இலக்கணம் :

பாயிரம் என்பது ஒரு நூலின் முகவுரை ஆகும். இதற்குப் பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந் துரை, முன்னுரை என்கிற வேறு பெயர்களும் உண்டு. பாயிரம் கூறப்படாத நூல், படிப்போர்க்குத் தன் போக்கினையும் கருத் தினையும் திருத்தமாகத் தெரிவிக்கும் இயல்புடையதாகாது. எந் நூலாயினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க என்பது மரபாகும். பாயிரமானது இன்றியமையாத சிறப்புடையது; அலங்காரமாகும் சிறப்பும் உடையது; படிப்போர்க்கு இடர் போக்கும் இயல்பும் கொண்டது. அறிஞர்களால் தரப்பட்டுள்ள பாயிரம் ஒன்றைப் படிப்பதனாலேயே நூலின் செய்திகளையெல் லாம் நுணுக்கமாக நாம் அறிதல் கூடும். இத்தகையதாகிய பாயிரம் என்பது இரண்டு வகைப்படும். அவை பொதுவும், சிறப்பும் ஆம். இவற்றுள் பொதுப்பாயிரம் என்பது நூலின் இலக்கணம் முதலாக ஐந்துவகையாகக் கூறப்படும். இவ்வைந் தும் பொதுப்பட எந்த நூலுக்கும் பொருந்தும் தன்மையது ஆதலால் பொதுப்பாயிரம் எனப்பட்டது. தொல்காப்பியம், நூலியல்பை மரபியலுட்படுத்து, "ஈவோன் தன்மை ஈதல் இயற்கை - கொள்வோன் தன்மை கோடல் மரபு" என நான்கு வகையுடையது பொதுப்பாயிரம் என்னும். பொதுவாக, நூல் என்று கூறப்படுவது அறமும், பொருளும், இன்பமும், வீடடை தல் நெறியும் புலப்படுத்துதலைப் பயனாகக்கொண்டு நடப்பதா கும். மாந்தராவாருடைய மனக்கோட்டம் தீர்ப்பதே நூலின் பொதுப்பட்ட மாண்பாகும் என்ப.

இனிச் சிறப்புப் பாயிரம் எனப்படுவது பதினொருவகை இலக் கணம் உடையதாகும். அவை, ஆக்கியோன்பெயர் முதலாகக் காரணம் ஈறாக உள்ளனவாம். இத்தகைய பகுப்பினைக் கொண்ட தான சிறப்புப்பாயிரம் எனப்படுவது அந்த அந்த நூலுக்கே சிறப்பாக உரியதாகும். இப்படிப்பட்டதான சிறப்புப் பாயி ரத்தை, நூலியற்றும் ஆசிரியனுடைய குருவும், உடன் பயின் றோரும், மாணாக்கரும், நூலுக்கு உரை கூறுவோரும் ஆகிய இந்த நான்கு வகையானவர்களே இயற்றுவர். உரைகாரனை நீக்கி, மூவகையினரே சிறப்புப்பாயிரம் செப்புதற்குரியர் என்றும் கூறுவர். எவ்வாறாயினும், ஒரு நூலின் சிறப்புப்பாயிரத்தைப் பெரும்பாலும் நூலாசிரியன் செப்பமாட்டானெனவும், பிறரே

செப்புவர் எனவும் நாம் தெரியலாம். இவ்விலக்கணங்களையெல்லாம் மனத்துட் கொண்டு திருமந்திர நூலின் பாயிரப்பகுதியினை ஆய்தலும் நன்றாம்.

சிறப்புப்பாயிர இலக்கண அமைவுடைமை :

"மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்" என்பது திருமந்திர [1] நூலின் ஆசிரியரை அறிவிப்பதாகும். "ஞாலம் அறியவே நந்தி அருளது" என்ற இடம் இந்த [2] நூலின்வழியினை நமக்கு உணர்த்துவதாகும். இவ்வரியுள் "ஞாலம் அறியவே" என்ற சொற்றொடரால் [3] எல்லை உணரப்படும். இந்த நூல் உலகம் முழுதுக்கும் ஒன்றுவதாம் பெருமை படைத்ததே; எனினும் தமிழ்ஞாலம் முழுதுக்கும் சிறப்பாக உரியதாம். பழங்காலத்தில் தமிழுலகமானது, "வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும் - தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும் - குணாஅது கரை பொரு தொடுகடல் குணக்கும் - குடாஅது தொன்றுமுதிர் பவ்வத்தின் குடக்கும்" எல்லையாகக் கொண்டிருந்தது எனப் புறநானூறு புகலும். திருமூலர்காலத்து இவ்வெல்லை தமிழகத்துக்கு இருந்திருத்தல் கூடும் என்பர். "மூவாயிரம் தமிழ்" என்பதனால், இந்த நூல் தமிழ்மூவாயிரம் என்ற [4] நூற்பெயர் உடையது என்னலாம். "சுந்தர ஆகமச்சொல் மொழிந்தானே" என்ற இடம், இந்நூல் சுந்தரஆகமம் என்ற பெயரும் உடையது எனத் தெரியலாம். "மந்திரமாலை உறைப்பொடும் கூடிநின்று ஓதலும் ஆமே" என்பதனால் இந்தநூல் மந்திரமாலை என்னும் பெயரும் உடைத்து என்னலாம். "மந்திரம்பெற்ற வழிமுறை" என்ற வரியினால் இந்நூல் திருமந்திரம் என்ற பெயருங்கொண்டதெனத் தெரியலாம். ஸ்ரீ சேக்கிழாரடிகள் திருமந்திரமாலை என இந்நூற்பெயரைக் கூறியருளுகின்றார். மற்றும், தாயுமானப் பெருந்தகையார் திருமூலர்மரபில் வந்தருளிய மவுனகுருவின் சீடரென்பர். அத்தாயுமானார், "மந்த்ரமாலிகை சொல்லும் இயம நியமாதியாம் மார்க்கத்தில்" எனக் குறிப்பிடுதலால், மந்திர மாலிகை என்னும் பெயரொன்றும் இந்நூலுக்குப் பரம்பரையாகக் குறிக்கப்பெற்ற பெயராம் எனக்கொள்ளல் கூடும்.

இந்நூல், ஆண்டவன் திருவருளைநயந்து பொய்யொழுக்கம் ஒழியப்பெற்றுப் பண்டிதராகி, அறமறியுங் கருத்துப்பெற்றபின் கேட்கத்தக்கது என்பர். "உறைப்பொடுங்கூடிநின்று ஓதலும் ஆமே", "முடிகண்டேன் என்றயன் பொய்ம்மொழிந்தானே",

"அண்ணல் இவன் என்று அறியகிலார்களே", "அந்தமில் ஈசன் அருள் நமக்கே என்று ...... வணங்கப்படும் அவர் புந்தியின் உள்ளே புகுந்து நின்றுனே" முதலிய இன்னோரன்ன இடங்கள் [5] யாப்பு எனப்படும் இயைபு உரைப்பன ஆகும். இந்த நூல் [6] நுதலும்பொருள் இறைமுதலாம் முப்பொருள் உண்மையும், இறையருள் பெறுமாறும் ஆம். "மெய்ப்பொருள் காட்டவே", "தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ் இரண்டும் – உணர்த் தும் அவனை உணரலும் ஆமே", "ஞாலத்தலைவனை நண்ணுவ ரன்றே", "கூற்றுதைத்தான் கழல் கூடலும் ஆமே" முதலாம் இடங்கள் இச்செய்தி சாற்றும் இயல்பின என்னலாம். ஆவதறி யும் நீதியுணர்வுடையோர் [7] இந்நூல்கேட்டற்கு உரியவராவர். "பேதித்துலகம் பிணங்குகின்றுர்களே", "ஆவதறிகிலர் ஆதர் கள்" என்பன போலும் இடங்கள் நூல்கேட்டற்கு உரியாரை உணர்த்தும் பெற்றியன ஆம். இதனை அடுத்து நிற்பது [8] பயன் ஆகும். திருமந்திர நூலினை ஓதுவோர் சிவனருளுக்கிலக்காகி மறுமைக்கண் சிவப்பேறு எய்துதல் உறுதியாகும் என்பர். இதனை, "பயன் அறிந்தவ்வழி ... ... நந்தி தமராம் வயனம் பெறுவீர்", "காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின் – ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே", "அவனை உணரலும் ஆமே", "மந்திரம் தான்பற்றப் பற்றத் தலைப்படும் (இன்பம்) தானே" என்பன போன்ற சொற்றொடர்கள் இச்செய்தியை இசைப்பன ஆகும்.

இனிச் சிறப்புப்பாயிரப்படி இந்நூல் தோன்றிய [9] காலம் பற்றிக் காண்போமாயின், முன்பே கட்டுரைப்பாயிரத்தில் கூறி யிருக்கும் வண்ணம் பழமையானதொரு காலமாகலாம். "நந்தி நகர்புக்கு - ஊனமில் ஒன்பதுகோடி யுகந்தனுள் - ஞானப் பாலாட்டி", "எண்ணிலிகோடியுகம் இருந்தேனே" என வரும் இடங்கள் இக்கருத்தினுக்கு அரண் செய்வனவாம். இப்பால், இந்த நூல் இவ்வாசிரியரால் திருவாவடுதண்துறைப்பதியில் சிவபோதி நீழலில் பாடப்பட்டதாகும். இப்பதியே திருமூலர் பிறப்பறுத்தாண்ட இடனுகும். இதனை, "சிவன் ஆவடுதண் துறை சீருடையாள்பதம் சேர்ந்திருந்தேனே", "சேர்ந்திருந்தேன் சிவன் ஆவடுதண்டுறை - சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலில்", "நானும் இருந்தேன் நற்போதியின் கீழே", "நாடும் பெருந்துறை நான் கண்டுகொண்டபின்" இம்மேற்கோள் களால் இவ்வாசிரியர் திருமந்திர நூலினை இயற்றியருளிய (இடம்)

[10] களன் புலனுகலாம். இனி, [11] காரணம் எனப்படுவதுபற்றிக் காண்போம்.

இந்த நூலினை இவ்வாசிரியர், இறைவனது ஆணையால் (திருவருளால்) மக்களாவார் இன்பநெறி தெரிந்து உய்தற் பொருட்டும் வடமொழி வேதாகமப் பொருளைத் தமிழில் செப்பும் பொருட்டும் இயற்றியருளினுராதல் தெரிகிறது. இச்செய்தியை, "என்னை நன்ருக இறைவன் படைத்தனன் - தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறே", "நீலாங்க மேனியன் நேரிழை யாளொடு - மூலாங்கமாக மொழிந்த திருக் கூத்தின் - சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே", "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்", "அரனடி சிந்தைசெய்து ஆகமம் செப்பலுற் றேனே" என்னும் கூற்றுக்களால் அறியலாகும். இங்ஙனம், இலக்கண நூல் வகுக்கும் சிறப்புப்பாயிர முறைப்படி இந்நூல் பொருந்தியுள்ளமை காணலாம். இவை யாவும், இந்நூலின் பாயிரப்பகுதியிலேயே கூறப்பட்டுள்ளனவாம்.

இதுகாறும் பாயிரமுறைமைகூறப்பட்டது. இனி, திருமந்திர நூலின்கண் பாயிரப்பகுதியில் காணப்படும் ஒன்பது பிரிவுகளைப் பற்றியும் கட்டுரை முறையில் நாம் சொல்லிச் செல்லலாகும். இப்பாயிரப் பகுதியில் மேலே கூறப்பட்ட வண்ணம் தொகுப் புண்ட ஒன்பது பிரிவுகளேயன்றி வேறு முறையாகவும் அடுக்கிக் காட்டுவர். அம்முறையில் இங்குக் கூறிச்செல்லாமல், தொன்று தொட்டே அமைக்கப்பட்டுள்ள ஒன்பது பிரிவுகளின் வழியே இக்கட்டுரை நூல் கூறுகின்றதாகும். இவ்வொன்பது பிரிவுகளை யும் கட்டுரைக்குரிய முறையில் அடுக்கலாமெனினும், அங்ஙனம் செய்தல் நூலிற் காணப்படும் வரிசைக்கு முரண்படக் காட்டு மாதலால், நூலொடு ஒப்புக்காண்டற்கேற்ற முறையே இக் கட்டுரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூலினைக் கற்போர், ஏற்கு முறையில் வரிசைப்படுத்திக்கொள்ளுதல் கூடுவதாம்.

விநாயகர் காப்பு :

திருமந்திர நூலில் முதலில் காணப்படும் பாடல் "ஐந்து கரத்தனை" என்று தொடங்கும் விநாயகர் காப்புச் செய்யு ளாகும். இச்செய்யுளில், ஐந்து திருக்கைகளை உடையவரும், யானை முகத்தை உடையவரும், இளம்பிறைச் சந்திரன் போன்ற ஒற்றைத் தந்தத்தை உடையவரும், நந்தி என்றழைக்கப்படும்

பரசிவமூர்த்தியினுடைய மூத்த திருக்குமாரரும், ஞானத்தின் கொழுந்தாக விளங்குபவரும் ஆகிய விநாயகருடைய திருவடிகளைச் சிந்தையுள் வைத்துப் போற்றுகின்றேன் என்று கூறப்பட்டுள்ளது. இச்செய்யுள், இந்நூற்கு முதற்பாட்டாகாது என்பர். அதாவது, திருமூலர் பாடியருளியதன்று என்பர். சேக்கிழாரடிகள், இப்பாடலை எடுத்துரைக்காமை இதற்குரிய காரணமாகக் காட்டுவர். மற்றும், விநாயகர் வணக்கம் தொன்றிருந்த மரபன்று என்றும் கூறுவர். சைவசம்பிரதாயமுறையில் உரைக்கப்படும் நூல்களிலெல்லாம் முதற்கண் விநாயகர் வழிபாடு கூறப்படுதலைப் பிற்கால நூல்களிலெல்லாம் நாம் காண்கிறோம். சிவபெருமானும், திரிபுரதகன காரியம் குறித்துத் தேரேறிப் போந்தருளுகையில் முதற்கண் விநாயகரைப் போற்றிக்கொள்ளாமையால் அவர் ஊர்ந்துவந்த தேரின் அச்சு முறிந்திட்டது என்பது புராணவரலாறு. "மலைமகள் ஈன்றருள் யானைக்கன்றை வந்தனை செய்கிலார் முயல்தரும் கருமம் பொன்றும் என்பது காட்டிடக் கூவமாபுரத்தில் அன்றவன் கழல் கனிமுதல் கொண்டருச்சித்தான்" என்றுள்ள புராணப்பாடல் இஃதுணர்த்தும். இதனால் சிவபிரான், செய்து காட்டிய ஞான்றுதொட்டு உலகம் செய்தல் தொடங்கிற்று என்பது புலப்படும். இருக்கு வேதமாம் பழமையான மறையகத்தும் விநாயகரைப்பற்றிய குறிப்புண்டு என்பர். மற்றும், விநாயகர்பற்றிய செய்திகள் யாவற்றையும் இவ்வாதீனத்து 100 ஆவது வெளியீட்டினை நோக்குதலால் அறியலாகும்.

பதிகரணமுற்று விளங்கும் பெரியோர்கள் யாவரும் உலகினுக்கு உணர்த்தும்பொருட்டாக விநாயகர் காப்புரைத்தே நூலினைக்கூறுவர். ஸ்ரீ மெய்கண்டதேவரும் இங்ஙனம் கூறியுள்ளமை "கல்லால்" என்னும் சொல்லால் தொடங்கும் பாடல்கொண்டறியலாம். மற்றும், திருமந்திரம் சிறந்ததொரு யோகநூலாதலின் அடிப்படையாகிய ஆதாரயோக மூலாதார முதல்வராகிய விநாயகரை, முதலில் உலகினை வரம்பின்வழி நிறுவுதற்பொருட்டு வழிபட்டுத் திருமூலர் தம் நூலினைத் தொடங்கியிருத்தலும் கூடுவதே. இதனால், நூலின் தொடக்கச்செய்யுள் "ஒன்றவன் தானே" என்னும் கொள்கைக்கு ஒருவித மாறுபாடும் இல்லை. நிற்க. மக்கட் பிறப்பினர் தம்மை உயர்வுடையவராக மதிப்பதெல்லாம், தாம் ஏனைப்பிறப்பினும் அறிவு மிகப் பெற்றிருத்தல் பற்றியே ஆகும். ஆதலால், மக்களுலகம், மற்றயாவற்றினும்

அறிவைப் பெரிதென மதித்த காலம் ஒன்று பழமையாகவே உண்டென உணரலாம். இதனால், எந்தச்செயலைச் செய்யக்கருதினும், எந்தப்பேச்சினைப் பேச நினைப்பினும், எந்த எண்ணத்தை எண்ணுதல் செய்யினும் அவற்றிற்கெல்லாம் அடிப்படையாக வேண்டுவது அறிவின் உற்ற துணையொன்றே என்பது தெளிவாம். ஆகவே, அறிவின் உதவியின்றி ஏதும் நடவாது என நாம் அறியலாம். அறிவின் உயர்ந்த நிலையினை ஞானம் என்றழைப்பர். இந்த அடிப்படையான ஆதாரஞானம் மக்கள்பால் எங்ஙனம் பொருந்தியது என்னும் வினவிற்கு இறைவன் தனதருள் கொண்டு விளைத்ததே என்ற விடையே தக்கதாக அமையும். இவ்விளைவே குண்டலியின்கண் உள்ளதான விநாயகர் என உருவகத்தால் உரைக்கப்படும். ஞானத்தின் மேம்பட்டதொரு சாதனம் இல்லாமையை, விநாயகர் எனப்படும் தனக்கு மேற்பட்டதொரு நாயகமில்லாதவர் எனப் பொருள்தரும் சொல் குறிப்பதாகும். நாயகர் என்னும் சொல், நடத்துபவர் எனப் பொருள் தரும் பதமாம். அறிவெனப்படுவது திரிகரணங்களையும் நடத்தும் தன்மை உடையதேயாம். உடல்வலிமையே செயலாற்றற்கு இறுதியானதாக எவர்க்கும் உள்ள துணையாகும். உடல்வலிமையினால் சிறந்ததொரு பிராணியாக மக்கள் பண்டு தொட்டே கண்டுவைத்தது யானையே ஆம். பழங்காலப்படைகள் நான்கினும் யானைப்படையே சிறந்ததெனக் கொள்ளப்பட்டுக் கிடந்ததை நாம் அறிவோம். ஆகையால் ஞானத்து வலிமையையும் ஊனத்து வலிமையையும் ஒன்றுபடுத்து உருவகிக்கப்புகின் அதற்கு ஒரே குறியீடாக உள்ளது களிற்றியானை உருவே ஆகுமெனல் தெரியலாம். எனவே, எவரும், எவ்வொருதொழிலையும் தம் ஞான வலிமையையும் ஊன வலிமையையும் முதற்கண் சாதனமாகக்கொண்ட பின்னரே ஏனைய துணைவலிமைகளை நாடி முடிக்க முயலுவர். "தன்வலியும்" என்னும் திருக்குறட்பாவும் இஃதுணர்த்தும். எனவே, ஆதாரமான ஞான ஊன சாதனங்களின் உருவச்சின்னமாக நாம் விநாயகரைக்கோடல் தவறின்றாம். இதனால், விநாயகரை முதலில், எத்தொழிலில் வெற்றிபெற விரும்புவோரும் கருதியே தீருவர் எனக் கொள்ளுதல் கூடும்.

உலகியல்தொழிலுக்கே இவ்வுண்மை பொருந்துவதாயின் ஞான இயல் தொழிலுக்கும் இஃது எவ்வாற்றானும் பொருந்துவதாகும். ஆகவே, சரீரத்தை ஒப்புக்கொடுத்தல், இந்திரியங்களை ஒப்புக் கொடுத்தல், அந்தக்கரணங்களை ஒப்புக் கொடுத்தல்,

ஆன்மாவினை ஒப்புக்கொடுத்தல் எனப்படும் ஞானமார்க்கத்தில் வெற்றிகாண்டற்கண்ணும் விநாயகர் வழிபாடு எனக்கூறப்படும் ஞானவழிபாடு இன்றியமையா இயல்புடையது என்னலாம். "போற்றுகின்றேனே" என்ற இறுதிச் சொற்கிடக்கையினுல் திருமூலரும் இங்ஙனமாய முக்கியத்துவம் உடைய விநாயகர் வழிபாட்டினைக் கூறிப் பின்னர் நூலைத் தொடங்கி இருத்தலும் கூடும். இவ்வாறு கொள்ளாவிடில், இந்நூலினை ஒழுங்குபடுத்திய திருமூலருடைய மாணவரேனும், அன்றி வேறு எவரேனும் இங்ஙனம் விநாயகர் காப்புச் செய்யுளைத் தம் அடுக்குமுறை முட்டின்றி முடிதற்பொருட்டு அமைத்திருத்தல் கூடும் என்றேனும் கருத இடனுண்டென்க. இதுகாறும், சுருக்கமான முறையில், விநாயகர் காப்புச்செய்யுள் அமைவு குறித்து ஆய்வு நிகழ்த்தப்பட்டது. இனி, அச்செய்யுட்கண் அமைவுண்டிருக்கும் சில செய்திகளைப் பார்ப்போம்.

ஐந்துகரத்தன் :

சிவபிரானது ஐந்தொழில் நிகழ்வுதான் நம் ஈடேற்றத்துக்கு இன்றியமையாதது. படைத்தல் முதலாகிய ஐந்தொழிலாற்றலே நமக்கும் இறைவற்கும் மறைப்பினும் அருளினும் நீக்கமில்லாத் தொடர்பிருத்தலை நிலைநாட்டுகின்றது. இறைவற்கும் அவரது அசைவு நிலைக்கண் இத்தொழில்களே விளையாட்டெனப் பகரப் படுகின்றன. கைகள் தொழில்புரியும் உறுப்பு ஆகும். ஐந்தொழிலும் ஐங்கரங்கள் எனப்படும். பாசக்கரம், அங்குசக்கரம், கலசக் கரம், மருப்புக்கரம், பண்ணியக்கரம் இவை ஐந்தும் ஆணவமுதலாம் பஞ்சமலங்களையும் களையும்தொழில் புரிவன எனப்படும். அன்றியும் படைத்தல், அழித்தல், காத்தல், மறைத்தல், அருளல் எனப்படும் தொழிலாற்றுவன என்பதூஉம் ஆம்.

யானைமுகத்தன் :

எல்லா நூலறிவும் நாதத்தாற் கிளர்த்தப்படுவதே. மூலநாதம் பிரணவ ஒலியுடையதே. எனவே, பிரணவத்தினின்று எல்லா வேதாகமநூல்களும் தோன்றுவனவாம். பிரணவநாதமும் பிளிற்றொலியும் நிகர்ப்பன எனப்படும். பிளிற்றொலி களிற்றுக்குரியதே. ஆகையால், ஞானுதாரராம் கணபதிக்குக் களிற்றுருவம் கூறப்பட்டுள்ளது. யானை நாதத்தில் தோன்றியது என்பர்.

ஆதலால், பரநாத தோற்றத்தினராகிய விநாயகருக்கு யானைமுகம் என உருவகிக்கப்படும் பிரணவவடிவம் கூறப்பட்டதாயிற்று. பிரணவமே வேதசிரசு எனப்படும். இதற்கேற்ப விநாயகருக்கு முகம் பிரணவ அமைப்புச் சின்னமாகிய யானையினதாகக் கூறப் பட்டுள்ளது.

இந்து இளம்பிறை போலும் எயிற்றன் :

விநாயகரது தந்தங்கள் இரண்டாம். அவற்றுள் ஒன்று ஒடி பட்ட குறைபாடுடையது. மற்றொன்று அக்குறைபாடில்லாதது. இரண்டும் வெண்மைநிறத்தன. களங்கம் நீங்கிய பிறைபோலும் வளைவும் நிறனும் உடையன. மாந்தர்கள் வீடுபேறு எய்துதற்கு அவர்களிடமே விளையவேண்டும் ஞானங்கள் இரண்டாம். ஒன்று நூலறிவு; மற்றொன்று குருவருளால் உளதாகும் அநுபூதி யறிவு. இவற்றுள் நூலறிவு ஆராய்ச்சியறிவாகுமேயன்றி அநுபவ அறிவாகாது. வேதமுதலன ஓதுதல் இவ்வகை ஞானமாகும். இது மக்களாவார்க்கு, இராக்காலத்தில் பூனையின்கண் பிரகாசிப் பதுபோல உதவுவதாகும். இதனால், பதி பசு பாசங்களை விளங்க அறியலாகும். ஆனால் இதுவே சிவத்தைப் பிரகாசிப்பிப்பதன்று. ஓதலுக்கு உரிய சாதனமாதலின் இந்த அபரஞானமும் கைக் கொள்ளத்தக்கதாகும். இதனை ஒடிந்துள்ள எயிறு விநாயகரால் கைக்கொள்ளப்பட்டிருத்தல் காட்டுவதாம். ஒடிபடாததாய் ஓங்கார முகத்தினிடமாகவே அமைந்துள்ளதான கொம்பானது பரஞானத்தைக் குறிப்பிப்பதாகும். இந்த ஞானம் சிவனருளால் (குருவினால்) ஆன்மாவினிடத்தே விளைக்கப்படுவதாகும். களி றென்னும் பெருமையினை இந்த ஒடிபடாத கொம்பே உணர்த்த வல்லது. அவ்வாறே ஆன்மாவுக்குள்ள சுத்தமான சிவாநுபவப் பெருநிலையினைப் பரஞானம் விளக்குவதாகும்.

இவ்விருவகை ஞானங்களும் ஆன்மா மலம் நீங்குதற்கண் பயன்படுவனவாதலால், களங்கமகன்றதாயுள்ள இளம்பிறைச் சந்திரனை நிகர்ப்பன எனப்பட்டது. ஒடித்துக் கைப்பற்றப் பட்டதொரு கொம்பே எழுதுகருவியாகிப் பாரதம், சவுந்தரிய லகரியாம் நூல்களை எழுதின என்கிற புராணஉரைகொண்டும் மேற்சொன்ன செய்தியினை அறியலாம். வேதாகமங்கள் குடிலை யினின்றும் தோன்றின என்னும் கருத்தையும் இங்குப் பொருத் திக்காண்டல் தக்கதாம். "வித்தக மருப்புடைய பெருமாளே" என்பது திருப்புகழ்.

நந்திமகன் :

நந்தி என்பது சிவபிரானைக் குறிக்கும் சொல்லாகும். எனவே சிவபிரானே விநாயகராகச் சகளீகரித்தருளினுன் என்பர். தந்தையே மைந்தனுகிருன் என்பது சுருதியுரையாகும். புராண முறையில் சிவனுடைய மூத்தபிள்ளையாராக விநாயகர் கூறப் படுகின்ருராவர். தந்தையின் உரிமை யாவும் மைந்தனுக்கும் உரிமையாம். தந்தையாகிய சிவத்தினது உரிமையாவது ஆன் மாக்கட்கான ஐந்தொழிலே. அங்ஙனமே பிரமன் தொழிலான படைத்தலை விநாயகரது எழுத்தாணியாம் கொம்பு (விதி எழுது கருவி) தெரிவிக்கும். மோதகம் என்னும் உணுட்பொருளானது விஷ்ணுவின் காரியமான காத்தலைக் குறிப்பதாகும். அங்குசம் உருத்திரன் தொழிலாகும் சங்காரத்தினைக் காட்டும். பாசம் என்பது மகேசுவரன் கிருத்தியமாகிய மறைத்தலை உணர்த்துவ தாம். பரிசம், நாற்றம் எனப்படும் இரண்டையும் ஒன்ருகக் கொண்டுள்ள விசேடமுடைய உறுப்பான துதிக்கையானது அருளல் எனப்படுவதான சதாசிவத்தின் காரியத்தைக் குறிப்ப தாகும். இங்ஙனமாய உரிமையுண்மையின் நந்திமகன் எனப் பட்டது.

ஞானக்கொழுந்து :

சிவம், ஞானமே வடிவாக உள்ளது. அவரது மகனுதலின், விநாயகர் ஞானக்கொழுந்து எனப்பட்டார். தாவர நூலறிவு கொண்டு நோக்கினுல், கொழுந்தானது மரத்தின் நன்னிலையை யும் காட்டுவது எனவும், அந்த நன்னிலையுடைய மரத்தைக் கொண்டு இலை, பூ, காய், கனிகளையும் மக்கட்கு உதவத் துணை புரிவதெனவும் அறியலாம். அங்ஙனமே, சிவத்தினிடம் அருளை உசுப்பி, ஆன்மாக்களிடம் சரியை, கிரியை, யோக காரியங்களைத் தூண்டி, முடிவில் ஞானம் எனப்படும் பயனை அளிப்பிக்கின்ருர் விநாயகர் என்னலாம். இங்ஙனம், ஆன்மாக்கட்கும், சிவத்துக் கும் தொடர்புசெய்யும் நடுவராக விநாயகர் இருத்தல்கருதியே அவரை முதற்கண் ஆசிரயிக்குமாறு ஞான நூல்கள் ஓதலுற்றன என்ப. ஆகவே, ஞானபூரணத்தை எய்துதற்கு விநாயகர் வாயி லாக உள்ளார் என நாம் தெரிதல்வேண்டி ஞானக்கொழுந்து எனப்பட்டார். விநாயகர் திருவுருவே விலங்கறிவு, மக்களறிவு, அமரரறிவு, வேதாகம அபரஞானம் இவற்றை உணர்த்தி நின்று, இவற்றின் மேலானதான சிவஞானச் சொருபமாக விளங்குதலைக் காட்டுகின்றதென்க.

புந்தியில்வைத்தல் :

ஒன்றை உடம்பிற் பூணுதலினும் இந்திரிய உணர்வில் பூணுதல் சிறப்புடையதாகும். அதனினும் சிறப்புடையது உள் ளத்தில் பூணுதல். மேற்கூறப்பட்ட யாவற்றினும் மேலானது அறிவின்கண் பூணுதலாம். அறிவின்கண் அமைத்தல் எனினும் ஆன்மாவின்கண் அமைத்தல் எனினும் ஒன்றே. உடம்பை நிறுத்துவதினும், பஞ்சேந்திரியங்களை நிறுத்துதல் கடினமும் மேன்மையும் கொண்டது. சிந்தையையடக்குதல் அவற்றினும் சீரிது. இத்தகைய பாவனை நிலையைக் கடந்ததொன்ருகிய அறிவை அடிப்படுத்தல் யாவற்றினும் பெறற்கரும் பேரும். இஃது, அதனை உடையாரை அருள்வழிப்படுத்தும் தகைகமை யுடையது. ஆதலின், அத்தகைய திருவருளைப்பெறுதற்கு நாம் அனைவரும், விநாயகரைப் புந்திக்கண் பொருத்துதல் வேண்டு மெனப்பட்டது. அப்போதுதான் ஆன்மபோதம் தன் வலி கெட்டுச் சிவபோத வயப்படும் என்க.

அடிபோற்றுதல் :

அடியே, ஒருவர்க்கு உபகரிக்கச் செல்வோனுக்கு முதற் கண் தொழிற்படும் உறுப்பாம். வெள்ளத்தைக் கடத்தற்குத் தெப்பம் போன்று அடி பயன்படுவதாகும். "இறைவனடி சேராது யார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர்? நீந்தார்" என்ருர் வள்ளுவனுரும். திருவடியே கரை எனச் செப்பப்படுதலும் உண்டு. "திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே" என்பர் பட்டினத்தார். எனவே, விநாயகர் இரு திருவடிகளும் வணங்கு வாரைத் திருவருளுக்கு இலக்காக்கி ஞான பூரணத்தை எய்து வித்தற்கு உதவுவனவாம். "வேண்டாமை வேண்ட வருவது" பிறவாப் பெரும்பேருதலின், பயனென்றையும் குறியாது வாளா 'போற்றுகின்றேன்' என்று முடிகிறது பாட்டு. இது நிஷ்காமிய வினை காட்டிநிற்கும் முறைமையாகும். "நல்லார் தொழுவரே" என்றனர் ஸ்ரீ மெய்கண்டதேவரும்.

இதுகாறும், கூறியவாற்ருல், திருமூலநாயனுர் தமிழ்வேத மாகிய திருமந்திரத்தைத் தொடங்கற்கண் ஓங்காரம் கூறிக் கொண்டாராயினுர் என்னலாம். "ஓங்காரம் சீவபர சிவரூபமே" என்பது மந்திரமொழி. வேத ஆரம்பமும், வேத முடிவும் ஓம் என்பர் பெரியோர். சிவமும் சத்தியும் குடிலையில் திருக்கண்

சாத்துவதாலாயதே பிரணவம் என்பர். அச்சொரூபமே விநாயக ராகக் கூறப்படுவதாகும். இவ்வாழ்த்தானது வணக்கத்தையும், செய்யப்படும் நூல் வேதமேயாகும் என்னும் நூல் நுவல் பொருளேயும் குறிப்பதாகலாம் அன்றே!

இதனுல், நாம், ஐந்தொழிலாற்றலும், பிரணவ ரூபமும், அபர பரஞானங்களின் தோற்றரவும், சிவசகளீகாரமும், ஞான சொரூபமும் கொண்டுள்ள தெய்வத்தை அதன் திருவருளுக்கு இலக்காகி ஞானப்பிராப்தி எய்துதற்பொருட்டு நாளும் போற்று வோம் என்பது கருத்தாகக் கொள்வோம். இந்தப் பாடல் எத்துணேயோ அரியபொருள்களேப் பயக்கவல்லதாயினும், ஒரு சிலவே கூறநேரிட்டமைபற்றிப் பெரியோர் பொறுத்தருளி விரித்துக் கொள்வாராக! இனி, இதன்மேல் இத் திருமந்திர நூற் பாயிரத்து முதற்பாடல் தொடங்கி இயன்றளவு கட்டுரை காண்போம்.

I. கடவுள்வாழ்த்து

[பாடல் 1 முதல் 50 வரை]

இறைப்பொருள் இயல்பு

விநாயகர் காப்புச்செய்யுள் பற்றிய விஷயங்கள் ஒருசில இதுகாறும் பேசப்பட்டன. இனித் திருமந்திரத்தின் பாயிரப் பிரிவில் அடங்கியிருக்கின்ற ஒன்பது செய்திகளுள் முதலாவ தாக நிற்கின்ற கடவுள்வாழ்த்துப்பகுதிச் செய்யுட்கள் செப்பிச் செல்வனபற்றிக் கூறுவோம். இக்கடவுள்வாழ்த்துப் பகுதியில் ஐம்பது பாடல்கள் உள. இவ்வைம்பது பாடல்களும் கடவுள் என்னும் பொருள்பற்றி நாம் யாவரும் அறியவேண்டிய எல்லா விஷயங்களையும் எடுத்துரைப்பனவாம். வேதங்களும், உபநிடதங் களும், ஆகமங்களும், சமயசாத்திரங்களும், புராணங்களும், கலைகளும் ஆகிய எல்லா நூல்களும் கடவுட்பொருளைப்பற்றி உரைக்கின்றன. எனினும், இவை கூறும் செய்திகளையெல்லாம் ஒருவன் படித்தறிதல் எளிதன்று; அன்றிப் படித்தறியப் புகினும் ஒன்றன் கூற்றைப் பிறிதொன்று மறுப்பதுபோலக் காணப் பெற்று மருள் எய்தும்; தெளிவு பிறவாது அலமரும். மேற் கூறப்பட்ட நூல்களெல்லாம் கன்மத்தால் வேறுபாடுடைய மக்கள் பலராவார்க்கும் அவ்வவர் நிலைகளுக்கு ஏற்பக் கூறிப் போதலினுல் படிப்போர்க்கு ஐயமும் திரிபும் அடிக்கடி நிகழ்த லுறும். கசடறுத்துத் தெளிதற்கு நம் அறிவு போதாது. இறை யருள் உணர்த்தினுல் உணரலாம். அல்லது இறையருளால் உணர்த்தப்பெற்றுர்வாயிலாக உணரல்கூடும். இவர்கள் இறை வயப்பட்டோராதலால் இவர்தம் பேச்சு இறைவன் பேச்சே யாகும். ஆதலால், இன்னவர்தம் உபதேசமொழிகளில் மயக்கம் விளைதற்கு ஏது ஏதும் இராது.

திருமூலர், இறைவன் திருவருளுக்கு முற்றும் இலக்கானவர். இறைவன் அருட்குப் பாத்திரராகி இறையாணையால் இறை நிலையில் நின்று இந்நூலைச் செய்தவராவர். "நந்தி அருள்பெற்ற நாதர் ...... என்னேடு எண்மர்", "நந்தி வழிகாட்ட நான் இருந்தேன்", "நந்தி இணையடி ... ... சிந்தைசெய்து ஆகமம் செப்பலுற்றேனே", "இருள் நீங்கி நின்றேனே", "உள்நின்ற

உற்பத்தி அத்தன் எனக்கு இங்கு அருளால் அளித்ததே'' என்றெல்லாம் திருமூலர் கூறியிருக்கும் வாக்குக்கள், அவர் இறை வயப்பட்டே இந்நூலை வெளியிடலுற்றுர் எனத் தெரிவிப்பன வாம். ஆதலால், இவர்தம் கூற்று, தெளிந்த கூற்ருயிற்றென்ன லாம். எனவே, 'கடவுள்வாழ்த்து'பற்றி இவர் எடுத்துரைக்கும் கருத்துக்கள் யாவர்க்கும் ஒப்பன ஆகும். மயக்கம் தராதன வாகும்; தெளிவுற்ற முடிவும் ஆகும் என்க! இப்பகுதியினை உணரப்பெற்ருர் சர்வவேத, சர்வாகம, சர்வசமய சாத்திர சாரமானவற்றை மயர்வறத் தெரியப்பெற்ருராவர்.

நாம், உலகில் வாழ்கிருேம். எனவே, நாம் ஒரு பொருளும், உலகு ஒரு பொருளும் உள எனத் தெரியலாம். உலகம் உயிரற்றது; ஆதலின் அறிவில்லது. நாம் உயிர்ப்பொருட்கள்; ஆதலின் அறிவுடையோம். அறிவிற்குப் பயன் இன்பநுகர்ச்சியே. துன்பக் கலப்பற்றதே இன்பமாம். இவ்வகையான இன்பத்தை நாம் அடைந்து நுகர்ந்துகொண்டே உலகில் அழிவற்று வாழக் காண் கிலேம். வாழவேண்டுமென்ற விருப்பமிருக்கிறது; ஆனால், வாழ முடியவில்லை. இதனால், நம் விருப்பப்படி எதுவும் நடக்கவில்லை எனத் தெரிகிறது.

உயிரற்ற இவ்வுலகும் நம் விருப்புக்கிணங்க ஒத்துழைக்கக் காண்கிலேம். வாழ்க்கை என்னவோ ஆற்றுவெள்ளம்போல் நடந்துகொண்டே இருக்கிறது. இதனை நிறுத்திப்போடவும் நமக்கு ஆற்றலில்லை. ஆதலால், நம் விருப்பப்படி நடவாமலும், நமக்குக் கட்டுப்பட்டு நடவாமலும் - ஆனால் நடைபெறுதல் ஒழிவில்லாத இந்தக்காரியம் எதனால் நடைபெறுகிறது என்ற வினு அறிஞராவார் யாவருள்ளத்தும் தோன்றுவது இயல்பே. அங்ஙனம் தோன்றப்பெற்ற உள்ளமுடையார் ஆய்ந்து ஆய்ந்து, இனி ஆய்வு செல்லமாட்டாததான ஒருமுடிவுக்கு வரலாயினர். அம்முடிவு, நம் மனம் வாக்குக்காயங்கட்கு அப்பாற்பட்ட இயல் புடையது. இதனையே கடவுள் என்பர். இதுதான் சித்தாந்தம். சித்தாந்தம் செப்புவதும் இதுவே. சிவயோகசித்தர்கள் கொண்ட முடிபு ஈதேயாம். இதனால், உண்மையை ஆராய்ந்து கண்டு பிடிக்கவேண்டிய அரிய பெரியதொரு பொறுப்பு நமக்கு இல்லை யாயிற்று. பின், வேண்டுவது யாதெனில், நம்மினும் எல்லாவகை யானும் ஏற்றமுடைய ஞானியர் தெளிந்துரைத்துப்போன இம் முடிபை - கடவுளுண்மையை நம்பி ஒழுகுதலொன்றேயாகும்.

இதனாலேயே, இன்றியமையாததாகிய கடவுளுண்மையைப்பற்றி நம் நாயனார் முதலிற் கூறிப் போதலுற்றார். திருவள்ளுவரும் தம் நூலில் இங்ஙனமே கடவுளைப் பற்றிக் கூறித் தொடங்குதல் காணலாம். கடவுள் என்னும் பொருள் நம்காட்சிக்கு அப்பாற் பட்டதாயினும், இப்பொருள் நம்மைக் கடந்தும், நமக்கு உள்ளும் உள்ள பொருளேயாம். இதனாலே, கட எனவும் உள் எனவும் உள்ள இருதாதுக்களை இணைத்து ஒரு சொல்லாக்கிப் பரம்பொருட்பெயராக நம் ஞானியர் அளித்துள்ளனர் ஆவர். இன்னமும் சுருக்கமாக இச்சொற்பகுப்பைச் சொல்லக்கருதியே சி எனவும் வ எனவும் வைத்துச் சிவ எனலுற்றனர் ஆவர். இதனால், கடவுள் எனினும் சிவம் எனினும் ஒன்றே என நாம் தெரியலாம். குறிப்பிட்ட ஒருசமயத்தார்க்குரிய மந்திரச்சொல் ஆகும் இஃது என மருளுதல் ஒல்லாது. சிவசப்தத்திற்குரிய பல்வகைப் பொருள்களில் இதுவும் ஒன்றாம். சாத்திரநூல், சிவம் எனப்படுமது பதிஞானத்தால் அறியப்படுவது என்னும். "சிவ என்னும் சொல்லில் சிகரம் எவற்றையும் தன்னுள் அடக்கிக் கடந்து நிற்றலையும், வகரம் எவற்றுடனும் கலந்து நிற்றலையும் குறிக்கும். ஆகவே, இங்ஙனம் நிற்பதே உண்மையான வியாபகம் ஆகும்" எனவும் சாத்திரங்கள் சாற்றும். இவற்றாலெல்லாம் நாம் தெளியவேண்டுவது கடவுள் என்னும் பொருளின் இன்றியமையாமையும், அப்பொருளின் பொதுவும் சிறப்புமாகிய இலக்கணங்களுமாம். இவ்வுண்மையுணர்வின்றிப் பிறப்பறுக்க முயல்வார் இடர்ப்படுவராதலால், கடவுள்வாழ்த்து என்னும் மிகவும் முக்கியமானதொரு தலைப்பை முதல்முதல் அமைத்துரைக்கலுற்றார் திருமூலர் என்க! இதுகாறும் கூறியவற்றால், நாம் கடவுள் என்கிற பொருள் ஒன்று உண்டு எனத் தெளிந்து, அதன் இயல்புகளை உணர்ந்து ஒழுகவேண்டுமென்பது போதரும். இதன்மேல் இம் முதற்பிரிவின்கீழுள்ள ஐம்பான் செய்யுட் செய்திகளையும் ஓதுவோமாக!

1. பொருளியல்பு

ஒன்றவன்தானே :

கடவுளுண்மையில் நினைப்பு நிலைக்கப்பெற்றவர்கட்கு இத்தகையதொரு பொருள் ஒன்றா? பலவா? என்ற ஐயம் முதலில் எழும். சமயவாதிகள் கூறுவனவற்றையெல்லாம் கேட்கையில்

இந்த மயக்கம் நமக்கு எழாமல் இராது. வேதம் முதலன ஓத லுறுகையிலும் இத்தகையதொரு மருட்சி விளைந்தே தீரும். யாக்ஞவால்கியம் 3306 கடவுளர்களைக் குறிக்கின்றதென்பர். அப்படிக் குறித்தபோதிலும் கடைசியில் யாவரையும் ஒருவரே என்று கூறும். அதனைப் பிரமம் என்ற பெயரால் குறிக்கும். கேன உபநிடதமும், இந்திரன் இங்ஙனம் ஒன்றென அறியப் பெற்றுன் என்னும். ரிக்வேதம் இப்பொருளை ஏகம்சத் (the only reality) என்னும். உபநிடதங்கள் ஏகம் ஏவ அத்விதீயம் என்று உரைப்பதும் இதனையே ஆகும். One only without a second என்பதே இதன் பொருளாம். பிரமம் என்னும் சொல் சர்வ ஆதாரமானது (the ground of the universe) என்று பொருள் படுவதாம் என்பர். இவையெல்லாம் நோக்கினுல் வேத உப நிடதங்கள் பலகடவுளர்களை அவ்வவர் தகுதிக்கேற்பக் கூறிப் போயினும் முடிவில் ஒன்றே என்றே கூறுதல் தெரியவரும். இதுபற்றியே,

"The hymns of the Upanishads try to reduce the multiplicity of Gods to one principle."

என்று கூறுவர் அறிஞர். இவ்வாறு பரமகுஹ்யமாக உள்ள இச்செய்தியை நம் திருமூலர் வெட்டவெளிச்சமாக ஒன்றவன் தானே என ஓதிக்காட்டி உள்ளாராவர். இதனுல், நாம் கடவுள் ஒருவனே என்று துணிதல்வேண்டும். "தெய்வம் ஒருவனே என்று உணரவல்லீரேல் அருவினைகள் ஐந்தும் அறும்" என்பது நீதிநூல். பல கடவுளர்களைக் கூறுகின்ற யாக்ஞவால்கியமும் கொஞ்சம் கொஞ்சமாக முப்பத்துமூன்று எனவும், ஆறு எனவும், மூன்று எனவும், இரண்டு எனவும், ஒன்றரை எனவும் கூறிவந்து முடிவில் ஒன்றே என்றது என்பர். இதனுல் கடவுள் அல்லது பரசிவம் என்பது ஒரேபொருள் என்று உணர்தல் நம் கடமையாகும். எண்ணில்லாச் சமயங்களின் எல்லாக் கடவுள ரும் இவ்வொருபொருளே ஆகும். இதுவே 'உயர்வற உயர்நலம்' உடைய பொருளாம். இப்பொருள் திணைப்பகுப்புக்கு அப்பாற் பட்டதாதலின் ஒன்று என்னும் அஃறிணைச்சொற்கொண்டும், அவன் என்னும் உயர்திணைச்சொற்கொண்டும், தான் என்னும் பொதுச்சொற்கொண்டும் திருமூலர் கூறியுள்ளாராவர். வேதத் துள் ஏகம் என்றுள்ள சொல்லைப் பலவாறு கொண்டு மயங்க லாகாதென்றற்கே இங்ஙனம் கூறப்பட்டுள்ளது. "ஒன்றென் றது ஒன்றே காண்" என்னும் சிவஞானபோத வெண்பாவுரை

ஈண்டைக்கு நோக்கியறிதல் தக்கதாம். 'ஏகம் ஏவ' என்பதன் கண் உள்ள ஏவ என்றதன் பொருளேயே தானே என்ற சொல் தெரிப்பதாகும். இதனுல் பிரமப்பொருள் இரண்டன்று ஒன்றே ஆம் என்பது துணிபாம். "ஒருவனே தேவனும்" என இவர் பின்னும் கூறிக்காட்டுவர். இதுவரை மொழிந்தவைகொண்டு, மக்கட் பகுப்பினராகிய நாம் அனைவரும் தெய்வம் ஒன்றே எனவும், அஃது திணைப்பகுப்புக்கு உட்படாப்பொருள் எனவும், பிரமமாம் பொருள் ஒன்றன்றி இரண்டில்லை எனவும் அறிதல் தக்கதாம். "தொல்லைமுதல்தான் ஒன்று" என்பது திருப்புகழ் நூல்வாக்கு.

இரண்டவன் இன்னருள்:

உயர்திணையும் அஃறிணையுமாகிய எல்லாப்பொருள்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு எல்லை அறியப்படாத ஒரேபொருளாக உள்ளது கடவுட்பொருள் என்பது இதுகாறும் கூறப்பட்டது. இதனை அதீதப்பொருள் எனவும், சுகசொருப நிட்களப் பொருள் எனவும் இயம்புவர். இத்தகையதொரு பொருள் இருத்தலால் ஏதேனும் பயனுண்டா என்பதே அடுத்து எழும் வினவாகும். யாதொரு பயனும் இல்லையாயின், அப்பொருள் இருப்பினுல் காரியமொன்றுமிலதாய்விடும். இதனுல், அத்தகையதொரு பொருளின் தேவை இன்றெனப்பட்டுத் தெய்வம் என்பதொரு பொருள் இல்லை எனக் கொள்ளப்படும். அங்ஙனம், உலகம் தடுமாற்றம் அடையாமைப்பொருட்டே 'ஒன்றவன் தானே' என்றவர், அப்பொருளால் உயிர்கட்குள்ள நலத்தை அடுத்து அறிவிக்கலுற்ருர். பஞ்சபூத பரிணுமமான பிண்டப் பிரமாண்டங்களும், இவற்றிற்குக் காரணமான தத்துவங்களும், இவற்றிற்குட்பட்ட ஆன்மகோடிகளும் தன்னுட்கொண்ட பூரணப் பொருளாயிருக்குமவன், உயிருள்ள நித்தியப் பொருளாகிய ஆன்மகோடிகள் ஆனந்தமுறவேண்டுமென்றும், அவை இயல்பின் எய்தியுழலும் துக்கத்தினின்று அறவேண்டுமென்றும் நினைக்கவேண்டியிருக்கின்ருன். அங்ஙனம் அவன் நினையாக்கால், அவனுல் நமக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லையாம். இங்ஙனம், அவன் நினைப்பது, பிறர் அவனை வேண்டிக் கொள்வதனுலன்று; இயல்பாகவே அவன்பால் பிரிவின்றியுள்ளதான திருவருளால் நிகழ்வதாகும். இந்த நினைப்பு அவ்வெல்லையில்பொருளினுள்ளே உதிப்பதாகும். இந்நிலையில் அப்பொருள் சிருட்டியுன்முகசிவம்

எனப்படும். இஃது இயல்பாகவே அவற்கு உயிர்களிடம் ஏற்பட்டுள்ள பெருங்கருணையின் விளைவாம். இப்பெருங்கருணைத் திறத்தினை அருள் என்பர்.

இயல்பாகவே, பிறர்க்கு நலம் செய்தற்பொருட்டு எழும் பேரிரக்க நினைவே அருள் எனப்படும். இது பிறர் வேண்ட அதன் காரணமாக விளைவதன்று; தனக்கு நன்மை செய்து கொள்ள எழுவதன்று; ஓரளவுக்குட்பட்டுத் தோன்றுவதன்று; நினைப்பின்றி எழுவதுமன்று. இங்ஙனம் எழுவதான இவ்வருள், பூரணமான ஆற்றலுடையதாகும். நாம் ஒன்றை நினைக்கலாம். ஆனால், நினைத்ததைச் செயலாக்குவதற்குரிய திறன் அந்நினைப்பின் பால் அமையப் பெற்றிலோம். இந்த மாதிரியான பலவீனம் உடையதன்று இறையருள் எனப்படுவது. அது நினைப்பும் ஆற்றலும் ஒருங்கமைந்த தன்மையது. நினைப்பின்றிய ஆற்றலும், ஆற்றலின்றிய நினைப்பும் ஒருபோதும் பயனளியா. இறையருள் என்பது நினைப்பொன்றிய ஆற்றலும், ஆற்றலொன்றிய நினைப்பும் ஆகும். இத்தகைமையினைச் சத்தி என்றும் அழைப்பர். சிவம் சத்தன் எனப்படுவன். அவனது இத்தகைமை சத்தி எனப்படும். இவ்விரண்டும் மரமும் அதன் காழ்ப்பும் போலவும், மணியும் அதன் ஒளியும்போலவும் ஒன்றுபட நிற்கும். சிவம், குணி எனப்பட்டால், சத்தி குணம் எனப்படுவதாகும். இதனைத் தாதான்மியத் தொடர்பு என்றிசைப்பர். நீக்கமின்றி நிற்கும் தன்மையாகும் இது. எனவே, சத்தி எனப்படுவது அருட் குணம் எனவும், இஃது இறைவற்கு இயற்கைக்குணமாகும் எனவும், இக்குணம் சிவத்தைவிட்டு நீங்குதலில்லை எனவும் நாம் தெரிதல்வேண்டும். இந்த அருட்குணம், உயிர்களுக்கு இனிமை செய்யுமதே இயல்பாக உடைமையால் இதனை இன்னருள் என்பர். அதாவது, தனக்கு ஆகக்கடவதாகிய யாதொரு பயனுமின்றி உதவும் பண்பாம்.

இருளை ஓட்டுவதனால் சூரியனுக்கு ஏதும் பயனில்லை. சூரியனுக்கு இருளை ஓட்டுதல் இயற்கைத் தன்மையாம். சூரியன், தன் கிரணம்கொண்டு இங்ஙனம் இருளை ஓட்டி நலம் புரிகின்றான். அங்ஙனமே இறைவனும் நமக்கு நலம் தருதற்பொருட்டுச் சத்தியாகிய ஒன்றினைவிட்டு நீங்காமல் நின்று, கிரணத்தின் நீங்காத கதிரோன் போன்று உதவுகின்றான். "அருளது சத்தியாகும் அரன் தனக்கு அருளை இன்றித் தெருள் சிவமில்லை அந்தச்சிவமின்றிச் சத்தி இல்லை.........இரவியைப்போல ஈசன்" என்பது

சித்தியார்ப்பாடல். இதனுல், இரண்டாவது பொருளாக நாம் கருதற்பாலது இன்னருள் எனத்தெரிதல் தக்கதாம். "அருளுரு உயிருக்கென்றே ஆக்குவன் அமலன் தானே" என்பதும் இங்குக் கருதிப்பார்த்தல் நன்றும்.

மேலும், சூரியன் நம் கண்ணுக்கு விஷயங்களையும் விளக்கி உதவுகிறுன்; தன்னையும் விளக்கிக்காட்டியுதவுகிறுன். எனவே சூரியனெளி, விஷயங்களை விளக்குவதும் சூரியனை விளக்குவது மாகிய இரண்டு உதவிகளைப் புரிகின்றது. அங்ஙனமே, திருவரு ளும் நமக்கு இருதிற உதவிகளை ஆற்றுகின்றதாகும். இரண்டு என்னும் சொல்லாற்றலால் இச்செய்தியினையும் நாமறிதல்கூடும்.

மற்றும், நாம் மனத்தால் நினைத்ததைச் செய்கையால் ஆற் றும் போது உடம்பு எனப்படும் கருவிகரணங்களைக் கொண்டு நிகழ்த்துகிறேம். இறைவனுக்கும் அவனது நினைப்புச் செயற் படுதற்கண் சித்தெனப்படுவதான அருளே உடம்பாக நின்றுதவு கின்றதாம். இவ்வருளுடம்பு, நம்மனேர் உடம்புபோல்வதன்று. இது தூயவுடம்பு எனப்படும். இதனில் ஏழியல்புகள் உள. ஏழு தாதுக்கள் நம் உடம்பில் இருப்பதைப் போல்வதாகும் இது. சத்துத்தன்மையதாம் சிவம், சித்துத் தன்மையதாயிருக்கும் நிலை கொண்டு இன்பம் அளிக்கின்றுகுதலின் இரண்டவன் இன்னருள் என்றுர் ஆசிரியர் என்னலாம். அருள், ஞானம் எனவும் பேசப் படும். இதனுல், இறைவன் சிறப்பியல்பெனப்படுவதாகிய சத்தா யும், சித்தாயும் உள்ள இருவகைகள் கூறப்பட்டமை காணலாம். "செறிசிவம்......சித்தொடு சத்தாய் நிற்கும்" என அறிந்து அழுந் தும் முறைபற்றி இரண்டாகச் சித்தியார்ச் செய்யுள் செப்பிக் காட்டுதலும் ஈண்டைக்கு நோக்கற்பாலதாம். "மெல்லி இரு பேதங்கள்" என்பது திருப்புகழ்வாக்கு. கடவுள் தன் அருளோடு கூடியிருக்கும் நிலையில் இரண்டு பொருள்களாகக் கருதப்படு வான் என்று இச் செய்தியை இசைப்பர். சிவம் ஒருவனே அம்மை அப்பரென இரண்டாக விளங்குகின்றுர் என்பதும் இக் கருத்தை உணர்த்துவதாகும். "அம்மையப்பர் எல்லா உலகுக்கும் அப்புறத்தார்" என்பது திருக்களிற்றுப்படியார் நூல்.

இங்ஙனம், "இரண்டவன் இன்னருள்" என்னும் இடத்தைச் சிவமும் சத்தியுமாகிய இருபொருள்கள் எனக்கொள்ளாமல், சிற்சத்தி எனப்படும் பொருள், பராசத்தி எனவும், திரோதான சத்தி எனவும் இரு பொருள்களாக விளங்குவதாகும் என்று

இசைப்பாரும் உளர். உயிர்கட்கு நலம் செய்தற்கண் இருவரும் ஒருவரேயாவராதலால் இருவேறு பொருள்களாகக்கொள்ளுதல் இயைபுடைத்தன்று என்பர். பயன் ஒன்றேயாகலின், அதனை விளக்கும் பொருளும் ஒன்றாகக் கொள்ளப்படுதலே தக்கதாம். ஆதலின் சத்தி ஒன்றையே இரண்டு பொருள்களாகக் கொள்ளுவதைவிடச் சிவமும் சத்தியுமாகிய ஒன்றே இருபொருள்களாம் எனக்கோடல் நேரிதாம் என்று இவ்வாதீனத்து வெளியீடாக உள்ள திருமந்திரம் பஞ்சாக்கரதீப உரையகத்தே கூறப்பட்டிருத்தல் காண்க.

இதுகாறும் கூறியவாற்றால் உயிர், ஆணும் பெண்ணுமாக இருவேறுபடக் காண்பது போன்று சிவம், சத்தனாகவும் சத்தியாகவும் இருவேறு பொருள்களாகக் காணப்படுவன் எனத் தெரியலாம். இதனால், இரண்டு அவன் இன்னருள் என்ற இடம் இயன்றளவு விளக்கப்பட்டது.

மூன்றினுள் நின்றனன் :

இறைவன் உயிர்களுக்கு அநுக்கிரகித்தலையே இயல்பாக உடையவன் என்பது இதுகாறும் கூறப்பட்டது. உயிர்கள், ஆணவம் எனப்படும் குற்றம் உடையன. அதாவது, உயிர்களின் அறிவு ஆணவத்தால் சமவியாபகமாக இருந்து மறைக்கப்பட்டுள்ளது என்பதாம். இந்தக் குற்றம் அகன்றாலல்லது உயிர்கள் இன்புறமாட்டா. அறியாநிலையிலுள்ள உயிர், அறிவு எய்தப் பெறுதற்கு ஒரு சாதனத்தை அடைந்தாகவேண்டும். அச்சாதனத்தை அறிந்தாக்கிக்கொள்ளும் அறிவும் ஆற்றலும் உயிர்களிடமில்லை. ஆதலால், இறைவனே, தனதருளால் உயிர்க்குதவ வேண்டியுள்ளது. எனவே, எவ்வுயிரிடமும் ஒத்த இரக்கமுடையானாகிய இறைவன் உயிர்கட்கு ஒரேவகையான நுண்ணுடலை அளித்தருளுகின்றான். இச்சூக்கும உடம்புகள் எல்லா உயிர்கட்கும் வேறுபாடின்றி ஒரு நிகரனவாகவே உதவப்படுகின்றன. ஒரு நிகரவாம் நுண்ணுடலை உயிர்கள் பெற்றாலும், உயிர்களின் அறிவின் தரத்தில் வேறுபாடுகளிருத்தலால், இந்த நுண்ணுடம்புகளைக்கொண்டே அவ்வுயிர்களிடமுள்ள மூலகன்ம வேறுபாடு கட்கு ஏற்பப் பிறப்புத்தோறும் தூல உடம்புகளை ஆக்கியளிக்க வேண்டியுள்ளது. நோய்களின் வேறுபாடுகளுக்கு ஏற்ப மருந்துகளும் பலவகைகளாக இருத்தல் போல்வதாகும் இந்தத் தூல உடம்புகளின் வேறுபாடுகள் என்னலாம்.

இந்த வேறுபாடுகள் உடைய பருவுடலங்களை ஆக்கும் தொழில் அல்லது அதிகாரம் பிரமன் என்னும் அதிகாரதெய்வத் திடம் தரப்படுகின்றது. இப்பிரமன், இறைவன் ஆணைவழிநின்று உயிர்களின் கன்மவேறுபாடுகட்கேற்ப உடலங்களைப் பிறப்புத் தோறும் ஆக்கியளிப்பவனுவன். இங்ஙனம் பிரமன் புரிதற்குப் பிரமனிடமாகச் சிவம் நின்று அநுக்கிரகிக்கவேண்டியுள்ளது. இவ்வாறு செய்யாக்கால் பிரமனுல் படைப்புத்தொழில் நிகழாமற் போம். படைப்பு எனப்படும் சிருட்டித்தொழில் நிகழாவிடில் ஆணவமலம் பரிபாகப்படாது. ஆணவம் பரிபாகப்படுவதென் பது உயிர்களின் அறிவு இச்சை செயல்கள் தொழிற்படத் தொடங்குதல் ஆகும். எனவே, இறைவன் தனது அருள்தன்மை யின் ஒருகூறுகும் அதிகாரசத்தியைப் பிரமனுள் நிறுத்தி உயிர் களின் ஆணவமலத்தைப் பிறப்புக்களால் பரிபாகப்படுத்துகின் றுன் என நாம் தெரிதல்வேண்டும். கூர்ந்துநோக்கின், படைத்தல் தொழிலைப் பிரமன் செய்கின்றுன் என்பது, பிரமனுல் இறைவன் செய்விக்கின்றுன் என்றே புலப்படும். இதுபற்றியே, "பிரமன் முதலியோரைக் காரணம் எனக் கூறிய வாக்கியங்களெல்லாம் ஆகுபெயரால் சங்காரகாரணனுகிய முதற்கடவுளையே உணர்த்தி நிற்கும்" என்பர். அதிகாரிகளுக்கு அரசனை இன்றிச் செயல் இல் லாமை போலவே, பிரமன் முதலியோருக்கும் சங்காரக்கடவுளை யின்றிச் செயலில்லை ஆம். எனவே, சங்காரகருத்தாவாகிய முழு முதற்கடவுளே இயற்றுதற்கருத்தாவாய்நின்று செய்தும், ஏவுதற் கருத்தாவாய்நின்று செய்வித்தும் எல்லாத்தொழிற்கும் வினைமுத லாக உள்ளான் என்பது பெறப்படும். இதனைத் "தெரியின் வேதி யன் தொகையொடு....கொட்கப் பெயர்க்கும் குழகன்" எனவும், "முழுவதும் படைப்போற் படைக்கும் பழையோன்" எனவும் உள்ள திருவண்டப்பகுதி வரிகள் உணர்த்துதலாலும் அறியலாம்.

இனிப் பிறப்படைந்த உயிர்கள், தாமாகவே தம்மைக் காத் துக்கொள்ளும் இயல்புடையனவாகா. அவைகள், இவ்வுலகில் நிலைத்திருந்து மாயா மலபரிபாகம் அடையவேண்டி உள்ளன. மாயை என்பது மயக்கத்தை - விபரீத உணர்ச்சியை விளைப்ப தாகும். இதனுல் உயிர்கள், அநித்தியத்தை நித்தியம் என உணரும். இத்தகைய மருட்சி கெடுவதே மாயா மலபரிபாகம் எனப்படும். இந்த உறுதி உயிர்களுக்கு உண்டாக வேண்டு மாயின், அவை உலகத்தே நிலைத்து இருந்து பழகவேண்டி யுள்ளன. அங்ஙனம், நிலைத்திருக்கின்ற காலமளவும், அவை

நிலைகொண்டுள்ள உடல்களையும் காத்துநடத்தவேண்டியுள்ளது. இக்காத்தல் தொழிலைப் புரிபவனே திருமால் எனப்படுவன். இந்தத் திதித் தொழிலைத் திருமால் புரிவதற்குச் சிவம், தனது அதிகார சத்தியை அவற்கு அளிக்கின்றுனுவன். மேலே பிரமற்குக் கூறப்பட்ட முறைமையை ஈண்டும் நாம் கொள்ளல் வேண்டும். இந்தமுறையில், "படைத்தவை காப்போற் காக்கும் கடவுள்" எனப்படும் மூலகாரணன், சிவமே என நாம் தெரியலாகும். வாயுமண்டலத்தின் ஒருகூறு, உயிர்கள் மூச்சுவிடுவதற்குப் பிராணனுகிக் காத்தல்போல இத்தொழில் நிகழ்கின்றதென நாம் உவமித்துக்கூறலாம். இதனுல், "உலகுகள் நிலைபெறும்வகை நினைவொடு அலைகடல் நடு அறிதுயில் அமர் அரி உரு இயல் பரன்" முழுமுதற்கடவுளே என நாம் அறிதல் தக்கதாம்.

உயிர்களின் பிறப்புக்கு மூலகன்மம் வழிசெய்கின்றது. அக்கன்மம், பிறப்புத்தோறும் பல்கி வளர்கின்றது. இந்த நல்வினை தீவினைகள் தம் காரியமாகப் பிறப்புக்களிலே இன்ப துன்பங்களில் உயிர்களை உழலவைக்கின்றது. இந்த இன்ப துன்ப அனுபவங்களே உயிர்களுக்குக் கைப்புணர்வினை வருவிப்பனவாகும். கைப்புணர்வு அடையும்போதுதான் உயிர்களுக்குச் சமபுத்தி எனப்படுகின்ற கன்மமலபரிபாகம் ஏற்படும். ஆகவே, இன்ப துன்ப அனுபவங்களுக்குக் காரணமாகிற இருவினைகள் பலனுக்கு வருங்காலத்து அந்த அனுபவத்துக்கு ஏற்றபடி உயிர்களுக்கு உடலங்களை மாற்றிக் கொடுக்கவேண்டியுள்ளது. இந்தக் கடமையைச் செய்பவனை உருத்திரன் - அழித்தற்கடவுள் என்கிறேம். இந்தக் குணி உருத்திரன் தனது அழித்தல் கடமையை ஆற்றுதற்பொருட்டாக முழுமுதற்பொருள் தனது அழிப்பாற்றலை அவனிடம் வைத்துச் செலுத்துகின்றது. இங்ஙனம் செலுத்தாவிடில், உயிர்கட்குக் கன்மானுபவம் ஏற்பட்டுக் கன்மக்கழிவு நிகழாமற்போம். இதனுல், உயிர்கள் உய்தி எய்த வழியற்றுவிடும். ஆதலால், உருத்திரன் என்னும் மூர்த்தியாகவும் இருப்பவன் சிவனே என்பர். ஊழி, பேரூழி, மாப்பேரூழிபற்றிய கருத்துக்களையும் இங்கு நாம் சிந்தத்தல் தகும். ஆகவே, ஒடுக்கம் என்பது கன்மமல பரிபாகத்துக்காக இறைவனுல் உயிர்கட்கு இளைப்பாறுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளதொரு தொழிலாம் எனவும், இத்தொழிலதிகாரம் பெற்றவன் உருத்திரன் எனவும் நாம் தெளிதல்கூடும். இவ்வுருத்திரன் இயல்பு முதற்பொருளின்

இயல்போடு ஒத்திருப்பதாகும். இதுபற்றியே, "அழிவகை நினைவொடு முதலுரு இயல் பரன்" என்பர் பெரியோர். மேற் குறித்த மூன்று தொழில்களும் உயிர்களின் உடலம்பற்றியவை ஆகும். இங்ஙனம் முதல்வன் மூவராய் நில்லாவிடில் உயிர்களின் ஆணவ, மாயா, கன்மமலங்கள் பரிபாகப்பட வழியில்லாமற் போம். ஆகையால், ஒன்ருய் உள்ள அவன்தானே உயிர்களின் உய்திபற்றி முத்தொழில்களும் செய்விப்பவனுனன் என்பதை நின்றனன் மூன்றினுள் என்ற தொடரினுல் நாம் கொள்ளல்தகும்.

மற்றும், இறைவன் உயிர்களோடு கலந்துநிற்றலால் உடலின் உயிர்போல அவ்வுயிர்களே ஆகியும், பொருள் தன்மையால் கண்ணின் அருக்கன்போல் அவற்றின் வேறு ஆகியும், உயிர்க்கு உயிராதல் தன்மையால் கண்ஒளியும் ஆன்ம அறிவும் போன்று உடனுகியும் நிற்பன் எனவும் நாம் கருதுதல்கூடும். இதனுல் உயிர்கட்கு நிலேத்தலும், அறிதலும், செல்லுதலும் இயல்வன வாம். "ஆணையின் நீக்கமின்றி நிற்கும்" என்ற இடம் இங்கு ஒப்புநோக்குதல் தக்கது என்னலாம்.

இப்படி இறைவன் மூவராய் நிற்பதனுல் அம்மூவர்க்குரிய குணங்கள் இறைவனைப் பொருந்திவிடமாட்டா. சூரியன் அரும்பு களை முகிழ்க்கவும், மலரவும், அழியவும் செய்வதனுல் விகாரப் படுதல் இலன். அரும்பும் இயல்பும், மலர்ந்து அழகடையும் தன்மையும், அழிந்து உதிரும் குணமும் அரும்புகளுடையவை. இவ்வாறே பிரமனுடைய இராசதகுணமும், திருமாலின் சத்துவ குணமும், உருத்திரனின் தாமதகுணமும் முதல்வனை அடைந்து அவனை விகாரியாக்கமாட்டா. ஒருசிலர், பிரமன் முதலிய மூவருக் குள்ள முக்குணங்கள் சிவத்தைச் சேர்ந்தமையின் 'நின்றனன் மூன்றினுள்' எனத் திருமூலர் கூறினர் என்பர். சிவம், கலப்பால் பந்தமடைதல் இல்லை. ஆதலால், இம்முக்குணக்கூற்று பொருந் தாது. இதனை, "மூவராலும் அறியொணு முதலாய ஆனந்தமூர்த்தி யான்" என்று மணிவாசகர் அருளிச்செய்வதால் அறியலாம்.

மற்றும், இந்த "மூன்றினுள் நின்றனன்" என்பதற்கு அன்பு, அறிவு, ஆற்றல் எனப்படும் இச்சை ஞானக் கிரியைகளை இறைவன் உடையன் என உரைப்பவரும் உளர். அன்றியும், அவன், அவள், அது என மூன்றினுள் நின்றனன் என்றும் கூறுவர். மேலும், இறைவன் அருவம், அருவுருவம், உருவம்

என்ற மூன்று நிலைகளும் உடையன் எனவும், இலய - போக - அதிகார இயல்பினை உடையவன் எனவும் கூறுவர். இவைகளை யெல்லாம் சிந்தனைக்கு உணவாக்கிக் கோடல் கூடும் என்க! நாம் ஈங்குத் "தோற்றுவித் தளித்தளித்து" என்னும் சித்தியார்ப்பாடல் உரைபார்த்தல் நன்றாம். இதுகாறும் கூறியவாற்றால் முத்தொழி லும் செய்தற்கான சுதந்திரமுடையான் முழுமுதலோன் ஒரு வனே எனவும், பிரமன் முதலியோர் புண்ணியப்பேற்றின்பயனால் அவ்வதிகார சத்தியைப் பெறுவர் எனவும், அவர்கள் இந்தத் தொழில்கட்குச் சுதந்திரரல்லர் எனவும் நாம் தெளியலாம். "நல் வினைக்கண் வாணுளின் மாலாய் அயனாகி" என்பது போற்றிப் பஃறொடை.

நான்குணர்ந்தான் :

கடவுட்பொருள் நமது உணர்வுக்குள் அகப்பட்டதன்று. ஆனால் அவனருளே கண்ணாகக்கண்டோர் உணர்த்தப்பெறுவர். என்றாலும், கடவுள்நிலை எத்தகையதென்பதை நாம் உணரப் பெற்றாலன்றி அவனை அடையவேண்டுமென்ற எண்ணம் உதிக் காது. கடவுள் ஒருவன் உளன் என்னும் எண்ணமும், அவனது ஆற்றலும், அவன் நமக்கு வேண்டுவனவாகிய படைப்பு முத லாம் முத்தொழில் செய்விக்கின்றான் என்ற உண்மையும் இது காறும் நமக்கு உணர்த்தப்பட்டன. இனி, அவனை அவனே அருளிய வேதங்கள் எங்ஙனம் உணர்த்துகின்றன என்பதை நமக்கு நான்குணர்ந்தான் என்னும் சொற்றொடரால் தெரிவிக் கின்றார் திருமூலர்.

வேதங்கள், இறைவனை அசிந்திதன் என்றுரைக்கும். இதனால், உலகத்தவர்கள் கூறுங்கடவுளர்களில் ஒருவன் அல்லன் சிவன் என்பது தெரியற்பாலதாகும். ஆகவே, இறைவனை உருவத் திருமேனி உடையவன் என்றுரைப்பாராயினும், நாம் அவனது உண்மைநிலையினை நான்கு வேதங்களும் கூறிக்காட்டும் முறை கொண்டு உணர்தல்கூடும். இறைவன், அருளுரு உடையவன். அவ்வருளுருவே உலகுயிர்கட்கு ஆதாரமாகி நின்று உய்தியளிக் கின்றதாகும். எனவே, அருளியல்பால் இறைவன் உணரப்படு பவன் என்பதாகும். வாயு மண்டிலம், தான் பரந்து நின்றே அசையா நிலையினதாகவும், வீசும் நிலையினதாகவும், மந்தமாருத மாகவும், சூறவளியாகவும் தொழிலாற்றுகின்றது. இங்ஙனம்

நான்கு கூறுகித் தொழிற்படும் வாயுமண்டிலம் ஒன்றேயாயிருக்கும் இயல்பினதே. இங்ஙனமே, இறைவன் அங்கம், பிரத்தியங்கம், சாங்கம், உபாங்கம் என்னும் பகுப்புடையானுகிக் கூறப்படினும் நுண்ணியனே ஆவான். இதனையே சுருதிகள் வலியுறுத்துகின்றன.

இறைவன் வடிவம் உலகினைக் கடந்து நிற்பது; ஆதலால் **உலகாதீதன்** எனப்படுவன். இவ்விதமான இறைவனகத்தே உலகாதிய தோன்றி ஒடுங்கும்: ஆதலால் **உலககாரணன்** எனப்படுவன். உலகிற்கு உட்பொருளாம் உயிராய் நிற்கின்றுன் இறைவன்; ஆதலின், **உலகிற்கு அந்தர்யாமி** எனப்படுவன். உலகமேயாகி நிற்பதும் அவனேயாதலால் **உலகரூபி** எனப் படுவன். இவ்வாறு நான்கு சுருதிகளும் தனித்தனி அறையும். உணரக்கடவார் உணர்திறனுக்கேற்ப மறைகள் நான்கும் நான்கு விதமாக நமக்கு உணர்த்தலுறுகின்றன. உயிர்களின் இயல்பினை உணர்ந்தோனுகிய இறைவன் இங்ஙனம் நால்வகையாகத் தன்னை வேதங்கள் மூலமாக உணர்த்தாவிடின் உயிர்கள் ஏதொன்றும் உணரமாட்டாமல் அலமரும். எனவே, நமக்கு உணர்வூட்டும் பொருட்டே இங்ஙனம் இறைவன் உணர்த்தலாயினன். இதனுலும், இறைவற்கு ஏதும் பயனில்லை. அறம், பொருள், இன்பமும் வீடுமாகிய நாற்பயனுக்கும் உரியார் உயிர்களேயாவர். உயிர்களின் தரநிலைகளை உணர்ந்து நான்கு வகையாக இறைவன் உணர்த்துதலின் நான்கு உணர்ந்தான் என்றுர் ஆசிரியர்.

வேதங்களை, அறிஞர்களே அருளிச்செய்தார்கள் என்பாரும் உளர். அங்ஙனம் கொள்ளினும், அவ்வறிஞர்களின் உள்ளத்தில் இங்ஙனம் உணர்த்தலுற்றுன் இறைவனேயாதலின் இழுக்கு ஏதுமிலது. ஆகவே, மேற்கூறப்பட்ட நான்குமாய் உணரப்படுபவன் இறைவனுவான் எனக்கொள்ளல் தகுவதாம். மேற்கூறப்பட்டுள்ள நான்கினுள் எவர் எவ்வியல்பில் உணரப்புகுவரோ அவர் அவ்வியல்பு ஒன்றுனே இறைவனை உணரப்பெறுவர். நான்கு நிலையிலுமாக ஒருவரே உணர்தலியலாதாகும். ஆதலாலே **நான்குணர்ந்தான்** என இறைவன்மேலேற்றிக் கூறினர் ஆசிரியர் என்னலாம். தொகுத்துக் கூறினுல், இறைவன் நிமித்த காரணனேயல்லாமல், ஒருசிலர் கூறுவதுபோன்று முதற்காரணனல்லன் என்று நாம் கொள்ளலாம். ",உலகினை இறந்து நின்றது" என்று தொடங்கும் சித்தியார்ப்பாடல் ஈண்டுக் காண்டல்

இயைபுடையதாகும். இவற்றால், சிவம், நாம் செல்லற்கு உரியதே யல்லால், சொல்லற்கு அரியதாம் என உணர்தற்பாற்றும். அறிவே சொரூபமாக ஆன்மாக்களுள் விளங்குபவன் இறைவன் ஆதலால் உணர்ந்தான் என்றார் ஆசிரியர். இதனால், "கருதாக் கருத்துடைக் கடவுள்" சிவம் என்பது தெரியலாம்.

இவ்வாறன்றி, வாசகத்துக்கு எட்டாத வாச்சியப் பொரு ளாகிய தொல்லோனை, வேதங்கள் நான்கையும் உணர்ந்தவன் என்றோ, வேதங்கள் நான்கினாலும் உணரப்படுபவன் என்றோ கருதுதல் சிறப்புடைத்தாகாது. அனுபவித்து உணரப்படுபவன் கடவுள். இந்த அனுபவ உணர்வுக்கு நூலுணர்வு கருவியே யாகும். அன்றியும் நூலுணர்வுமாத்திரம் உடையார் உணர்த்த உணரப்படுபவனும் அல்லன் இறைவன் என்பதும் இதனால் தெரிதல் நன்றாம். இதுவரை கூறப்பட்டவற்றால், "ஒருவன் என்னும் ஒருவனே விரிபொழில் முழுதாய் விரிந்தோன்" என்பது கண்டுகொள்ளத்தகும். பத்திவலையுட்படுவோனாவான் இறைவனேயல்லால் நூல்வலையுட்படுவோன் அல்லன் என்க.

இவ்வாறன்றி, ஆகமமாகி அண்ணித்து நின்று இறைவன் உயிர்கட்கு உய்தி முறையாகச் சரியை, கிரியை, யோகமும் ஞானமும் உணர்த்தினான் என்பர். "துய்ய சதுர்வேதங்கள் ...... என மேவும் ஆனந்த பௌவம்" என்பது திருப்புகழ்.

ஐந்துவென்றனன் :

உலகங்களையெல்லாம் தன்னுள் தங்கச் செய்து, நிமித்த காரணனாகி நின்று, அந்தரியாமியாகவும் இருந்து, உலகமெல்லாம் தன்னுருவாகி உதவுபவன் இறைவன் என்பதை இதுகாறும் கண்டோம். இப்பொருள், உயிர்கட்குதவுவதே தன் நோக்க மாக உடையது. பொதுவாகப் பிறர்க்குதவியாக இருப்பவர்கள், தமக்கென்ற ஆசையறப் பெற்றிருக்கவேண்டும். தமக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் பிறர்க்கு முழு உதவியாளராக இருத்தல் இயலாது. எவ்வளவுக்கு ஒருவ னுள்ளத்தே ஆசையும் தேவையும் உள்ளனவோ அவ்வளவுக்கு அவன் அயலாருக்கு உதவிசெய்தல் குறைவுபடும். இறைவன், தனக்கென எந்தத் தேவையும் இல்லாதவன் ஆவன். எதிலும் அவனுக்குக் குறைவு இல்லை. எல்லாம் நிறையப்பெற்றவனே இறைவன் ஆவன்.

உயிர்கட்கு ஆசை என்பது மனத்தினிடமாக உண்டாவது. மனம், அகத்துறுப்பேயாதலால், அது புறத்தே உலக முகமாக ஓடுவதற்கு முயலும். அப்போது அது ஐவகை அவாக்களாகி வெளிப்படும். இந்த ஐந்துவகை அவாக்களும் ஐம்புலன்களால் உண்டாவன. ஐம்புலன்களும் ஐவகை உணர்வுகளேயாதலால் அவை வெளிப்போந்து பற்றுதற்கு ஐந்து வழிகளை நம் உடம்பு பெற்றுள்ளது. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி எனப் படும் வாயில்களாம். இவற்றை ஐம்பொறிகள் என்பர். எனவே, மனம் என்பதாகிய ஒன்று, ஐந்துவகைப் புலன்களாகக் கவர்த்து ஐம்பொறிகளின் வழியே உலகிடைப் பொருள்களை ஐவகை களால் பற்றுகின்றது. இப்பற்றுனது பல்வகைப் பிறப்புக்களை நமக்கு உண்டாக்கிக்கொண்டே வருகின்றது. ஆகவே, பொறி வாயில்கள் அடைபட்டுவிட்டால், பிறப்புக்கு ஏதுவாகிய ஆசை அற்றுவிடுகின்றதென்னலாம். இதுவே, உயிர்களின் ஆசைத் தன்மை. இத்தன்மை இருத்தலாலேதான், உயிர்களாகிய நாம், ஒருவர்க்கொருவர் உதவி செய்துகொள்ள மனமற்றுள்ளோம்.

இத்தகைய உயிர்களின் மனத்தைப் பதப்படுத்தி ஆசை யறச் செய்வதற்கு ஆசையற்றவன்துணையே வேண்டியுள்ளது. முற்றிலும், உயிர்கட்கருளுவதே தன்னியல்பாகக்கொண்டு நிலவு பவன் இறைவனே ஆதலால், அவன் தனக்கென ஏதொரு விழைவுமற்றவனுகவுள்ளான். அதாவது, இறைவனுடைய திரு வுள்ளம், உயிர்களை உய்திபெறுவிப்பதொன்றே கருதுவதன்றி மற்றென்றும் வேண்டாத்தகையது என்னலாம். இப்பெற்றி உடைமையினுல்தான் இறைவனுவான், உயிர்க்கே உறுதி பயக் கும் ஆற்றலுடையவனுகின்றுன். ஆகவே, இறைவற்கு, ஐவாய வேட்கையவாச் சிறிதுமில்லையாயிற்று. மற்றும், கடவுட்கு நம் போன்று கருமவழிப்பட்ட உடம்பு கிடையாது. இதனுலும் இறைவன் அவாவற்றவன் ஆவன். இங்ஙனம், இயல்பாகவே பாசங்களின் நீங்கி இருக்கும் தன்மை இருத்தலின் ஐந்து வென்றுன் என்றனர் ஆசிரியர்.

இருளை, நாம் ஒளியின் துணைகொண்டுதான் போக்கமுடி யும். ஆனுல், சூரியன் தன்னியல்புகொண்டே பிறிது துணை வேண்டாமலே இருளைப்போக்குகிறது. இவ்வாறே, இறைவன் சேட்டித்து ஐம்புலன்களை வெல்லவேண்டுவதில்லை. தன்னியல் பிலேயே அவற்றை வெல்லுகின்றுன். அதாவது, புலன்கள்

தமது சேட்டையை இறைவன்பால் நிகழ்த்துவதே இல்லை; நிகழ்த்துவதும் இயலாது என்பதாம். இவ்வாறான சிறப்பியல்பு இறைவனிடம் இருத்தலால்தான், அவனால், நமக்கு முழுத்துணை புரியமுடிகின்ற தென்னலாம். "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்று இச்சிறப்பினைப் பொய்யாமொழிநூல் புகலுகின்றதைக் காணலாம். "வென்றானைப் புலனைந்தும் என் தீவினைகொன்றானை" என்ற திருநாவுக்கரசர் உள்ளத்திருக்குறுந்தொகைப்பதிகத்து அடியும் இதனை உணர்த்தும். இங்ஙனம், இறைவனுவான் இயல் பாகவே பாசங்களின் நீங்கி நிற்கும் நிலையினைத் தக்ஷிணாமூர்த்த நிலையினாலும் நாம் தெளியலாம்.

இனி, இதனை ஐந்து அவத்தைகளையும் வென்றவன் இறை வன் ஆதலின் இங்ஙனம் ஆசிரியர் கூறினார் என்பாரும் உளர். மற்றும், உயிர்களின் சார்பாக நின்று அவற்றின் மலப்பகை யினைத் தான் புரிவிக்கும் ஐந்தொழில்களால் வென்றனன் இறை வன் என்பதும் உண்டு எனத்தெரிகின்றது. எவ்வாறாயினும், உயிர்கட்குத் திருவருள்புரியும் வெற்றிப்பாடுடையன் இறைவன் என்பது கருத்தாம் என்க.

ஆறுவிரிந்தனன் :

மேற்குறித்தவண்ணம் உயிர்களுக்குப் புலன்கள் ஐந்தை யும் வெல்லுதற்கண் துணையாகி நிற்பதோடு, அவ்வுயிர்கள் தம் மனத்தை விஷயங்களில் செல்லவிடாமல் திருப்பியதோடு அமையாமல் அதனை அகமுகப்படுத்தித் தன்னை அடையும் நெறிக் கண்ணும் படிப்படியாக ஆறுதார தேவதைகளாக விரிந்தும் உதவி செய்கின்றான் இறைவன். இங்ஙனம் அவன் புரியாவிடில் ஞானமாகிய சன்மார்க்கத்தினை உயிர்கள் மேற்கொண்டொழுகி உய்திபெற இயலாமற்போம். ஆறுதாரம் எனப்படுவன மூலா தாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்பனவாம். சுருங்கக்கூறின் இவை மனத்தை உயர்த்துமுறைக்கண் உயிர்கட்கு வேண்டும் பயிற்சிப்படிகளா கும். புலனொடுக்கும் முறை என இது கூறப்படும். அசபாசத்தி சிவசொருபமாய் நிற்றலை உணர்வதே இப்பயிற்சியின் பயனும், மற்றும், இவ்வாதாரங்கட்குரிய தேவதைகள், அக்கரங்கள் ஆதியவற்றை விரியக்கூறும் நூல்களால் அறியலாம். இம்மந்திர நூலிலும் பின்னர் இவற்றை ஆசிரியர் விரித்துக் கூறுவர். விநாயகர் முதலாம் பல தேவதைகளாக விரிந்து உயிர்களின்

ஞானநெறிக்கு இறைவன் உதவி புரிதலின் ஆறு விரிந்தனன் என்ருர் ஆசிரியர்.

இவ்வாறன்றி, அறுவகைச்சமயங்களாக விரிந்து நின்ருன் எனவும், அறுவகை அறிவுயிர்களுக்கும் அறிவிப்பனுயினுன் எனவும், பதம், எழுத்து, மந்திரம், கலே, தத்துவம், புவனம் எனப்படும் ஆறு அத்துவாக்களாகிப் பரந்தனன் எனவும் பல் வேறு திறம்பட இவ்விடத்தினே விளக்குவாரும் உளர்.

ஏழும்பர்ச்சென்றனன் :

மேலானநிலே ஞானநிலே எனப்படும். அந்த ஞானநிலேயினே உயிர்கள் அடையப்பெற்ருல் சிவசாயுச்சியப்பேற்றினே எய்தும். இந்தப்பேறு, ஆதார தேவதைகளே அதுவதுவாய் நின்றுகாணும் முறைக்கு மேற்பட்டதாகும். இஃது இறைவனேப் புறத்தாலும், அகத்தாலும் வழிபடுவதன்றி அறிவால் வழிபடும் நிலேயினேக் குறிப்பதாகும். அறிவால் அகண்டாகாரமாக இறைவனேக்கண்டு நின்றிடும்நிலேயே ஏழாம்நிலே எனப்படும். இதனேத் துவாதசாந்தப் பெருவெளிநிலே என்பர். இந்த நிலேயில் காண்பவன் முதலாம் மூன்றும் ஒன்றுபட்டு நிற்கும் பேறு எய்துவதாகும். நிராதார யோகமாகிய இந்த நிலேக்கண்ணும் உயிர்களேப் புகுவித்து அவ் வுயிரறிவோடு ஒருங்கிச்சென்று ஞானுகாயப் பெருவெளியில் உயிரறிவை வேறுபட உணரவொண்ணுதபடி ஆக்கி அடக்கிக் கொள்ளும் பேராற்றல் இறைவற்கே உளதாதல்பற்றி ஏழும்பர்ச் சென்றனன் என்றுள்ளார் ஆசிரியர். தோற்றம்கொண்ட காலம் தொட்டுச் சாயுச்சியம் எய்துங்காலமளவும் உடன்சென்று உயிர்க்குதவுதல்பற்றிச் சென்றனன் என்ருர் ஆசிரியர். இங்ஙன மன்றி ஏழுலகுக்கும் அப்பாற்பட்டவன் இறைவன் என்பாரும் உளர், அப்பாற்பட்டு நிற்றலினும் உடன்சென்று உறுதிபயத்தல் சிறப்புடைச் செய்கையாதலின் இங்ஙனம் கூறியுள்ளார் ஆசிரியர் எனக்கொள்ளுதல் பொருந்தும்.

இனிச் சிவபேதம் ஏழனேயும் இது குறிக்கக்கூடும் என் பாரும் உளர். அது பிரமன் முதல் சிவம் ஈருகிய ஏழுமாம். இவ்வேழற்கும் உரிய சத்திபேதமும் ஏழாம். இச் சத்திபேதம் ஏழற்கும் அப்பாற்பட்டவன் ஆதலின் இவ்வாறுரைக்கலுற்ருர் என்பர். மற்றும் ஏழ்வகைப் பிறப்புகட்கும் அப்பாற்பட்டவன் பிறவாயாக்கைப் பெரியோனுகிய இறைவன் என்றும் சொல்வர்.

பின்னும், ஞாயிறு முதலாம் ஏழண்டங்கட்கும் அப்பாலானவன் என்றும் இங்குப் பொருள் கூறுதலும் உளது. உயிர்கட்கெல்லாம் இருப்பிடமாக உள்ள மாயைகள் அடங்கி நின்ற நிலையினின்றும் வெளிப்படும் முறையில் ஏழு நிலையாகச் சென்றியக்குதலின் ஏழ் என்றும், சிற்சத்தியோடு பிரிப்பின்றி நிற்கும் நிலையினன் சிவமாதலின் உம்பர்ச்சென்றனன் என்றும் கூறியுள்ளார் ஆசிரியர் என்பர். எவ்வாருயினும் உலகுயிர்களைத் தோற்றமெடுக்கச் செய்து, உயிர்களை மலநீங்குவித்து உய்தி செய்தற்கண் இறைவன் - சுத்தசிவம் சத்தி முதலாகிய சத்திபேதம் ஏழினையும் வாயிலாகக்கொண்டு நடத்துதல்செய்யும் என்பது துணிபாம்.

தான் இருந்தான் உணர்ந்து எட்டே :

இறைவன் உயிர்க்குயிராயிருந்தும், அவ்வுயிர்கள் தோன்றி இருந்து செல்லுதற்பொருட்டு நிலம் முதலியவற்றின் சொரூபமாக இருந்தும் உதவுகின்றமை யாவராலும் உணரப்படுவதாகும். கடவுளைப்பற்றிய எண்ணமொன்றும் இல்லாதாரும் தாங்கள் வாழும் நிலம், தங்கட்கு வேண்டும் நீர், நெருப்பு, காற்று, வான வெளி, அவ்வெளிக்கண் நின்றுதவும் சூரியன், சந்திரன் என்னும் ஏழு பொருள்களையும் உணரப்பெறுவர். இவையெல்லாம் ஜடமேயாதலால் இவற்றிற்கு ஒருமுதல் வேண்டும் எனச் சிறிது சிந்திப்பினும் உணரப்பெறுவர். அங்ஙனம் சிந்திக்குங்கால், கண்ணுக்கு ஆன்மா உணர்த்துமாறு உயிருக்கு உயிராய் நின்று அம் முதற்பொருளே உணர்த்துவித்தலையும் தெரியப்பெறுவர். இங்ஙனமாக, எட்டு நிலையினனுக இருந்து நமக்கு இறைவன் உணர்த்தி ஞானத்தை விளையச்செய்து உதவுதலினுல் தான் மண் முதலாம் எட்டினுள்ளும் இருந்தான் உணர்ந்து என்றனர் ஆசிரியர். இதனையே அட்டமூர்த்திச் சொரூபம் என்பர். "நிலம் நீர்" என்னும் திருவாசகப்பாடலும் இஃதுணர்த்தும். இவையே இறைவற்குரிய எட்டுவிதமான பொது வடிவங்களாம்.

மற்றும், சிவஞானநெறி நிற்கும் உயிர்களிடம் சிவபெருமானின் எட்டுக் குணங்களும் பதியப்பெறும். அங்ஙனம் பதியச் செய்துணர்த்துபவன் சிவமே ஆதலால் இவ்வாறு உரைத்தார் என்பர். தான் எண்குணங்களையும் உடையனுகி யாவும் உணர்தலின் இங்ஙனம் கூறினுர் என்பதும் உண்டு. "எண்குணத்தான்" என்பது திருக்குறள் கூற்று. மேலும் எட்டு என்பதை அகரம்

எனக்கொண்டு அகரமாக உணரப்பெற்றிருந்தவன் என்றும் கூறுவர். எனவே, அகரம்போல ஒன்ருய் வேருய் உடனுய் நின்றுணர்பவன் இறைவன் ஆவன். "ஆரும் அறிவார் அகரம் அவன் என்று", "அகர உயிர்போல் அறிவாகி" என்பன இச்செய்திகூறும் இடங்களாம்.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளால், இறைவனுவான் ஒருவன் உண்டு; அவன் ஒருவனே; அவன் பேரருளுடையவன்; அவன் மும்மூர்த்திகளினிடமும் உள்ளவன்; நால்வேதங்களின் கருத்துக்களின் வண்ணம் நால்வகையினனுகவும் இருப்பவன்; இயல்பாகவே பாசங்களின் தாக்குதலற்றவன்; ஆருதாரதேவதை களின் இடமாகவும் விரியும் இயல்பினன்; அகண்டாகாரமான வன்; அட்டமூர்த்தியாகவும் உள்ளவன் என இங்ஙனம் தொகுப் பாகக் கோடல்கூடும். எனவே, ஆத்திகராவார், நாத்திகராவார் ஆகிய யாவர்க்கும் ஆதாரமாக இருப்பவன் இறைவன் எனல் தெளியலாம். இதனுல் ஞானிகள், பக்தர்கள், யோகியர், பல் வேறு கொள்கையர், நாத்திகர் ஆகியர் யாவரும் இறைவனே இன்றியமையாப்பொருளாக உடையவரேயாவர் என்னலாம்.

இச்செய்யுள் ஒன்றுமுதல் எட்டுவரை கூறுவதால் எண் அலங்காரம்பட நிற்பதாகும். இதுவே திருமந்திர நூலின் முந்தின மந்திரம் என்பதை ஸ்ரீசேக்கிழார்பெருமான் வாக்கினுல் உணர் கிருேம். ஆதலால், இந்த முதற்பாடற்கு இயன்றளவும் விரிவு கூறப்பட்டது. இனியுள்ள பாக்களுக்கும் இங்ஙனமே கூறப் புகின் நூல் பல்குமாதலின் இன்றியமையாச் செய்திகளே இணைத்துரைத்துச் செல்லப்படுகின்றன. அறிஞராவார் எவரும் விரிய உணரப்பெறுவர் என்பது துணிபாம்.

2. இறை துணைபுரிதல்

நாம் பிறப்பு, இருப்பு, இறப்பு என்னும் மூன்று தொழில் கட்கு உட்பட்டுழல்கின்ருேம். இம்மூன்றும் நமக்கு நல்லறிவு தலைப்படவும், வன்மலம் ஒழிதரவும் அனுபவமுறையில் நிகழும் பொருட்டு நடைபெறுகின்றன. இந்த நலத்தினை நாமே சுயமாக அடையப்பெறும் வன்மை உடையோம் அல்லம். நமது உயிர், இனிமைகள் பலவற்றையும் நுகர்தற்கு மூல உடல்வேண்டும். அங்ஙனம் மூல உடலோடு நம்மைப் பிறப்பின் துவக்கத்தில்

இறைவனே இசைக்கின்றுனுவன். இதனை இசைத்து என்னும் சொல் உணர்த்துவதாம். இந்த முதலுடல் பிறப்புத்தோறும் உள்ளீடாக இருப்பதாகும். சாயுச்சியப்பேறு அடையும்போது இவ்வுடலை உயிர் விடுகிறது. இந்த உடல், தானுக நம்மைவந்து அடையவில்லை. நமதுயிரும் கேவலநிலையிலுள்ளபோது, தானுகத் தக்கதொரு சரீரத்தைத் தேர்ந்துகொள்ளவும் வல்லது அன்று. ஆதலால், முதற்கண் நமக்கு உதவுபவன் முழுமுதற் பொருளே ஆவன். அங்ஙனம், உடலையும் உயிரையும் இசைப்பதோடு தனது பொறுப்பினை இறைவன் நழுவவிட்டுவிடவில்லை. மூல உடற்குள், உயிரினைப் புகுவித்தமைபோன்றே, உயிரினுள் தான் வீற்றிருந்து நடத்துகின்ருன். இந்நிலையில் உயிரினை முதன்மைப் படுத்தித் தான் பின் நிற்கின்ருன். இவ்வாறு இறைவன் உதவா விடில் நாம் இன்பநெறி அறிந்து கரையேற இயலாமற்போம். இதனை "உயிர்க்குயிராய்த் தழைத்ததெது" என்பர் தாயுமானவர்.

மலத்திலே கிடந்துழல்வது உயிரின் இயற்கையாகாது. அக் குற்றத்தின் நீங்கி இன்பினை எய்துவதே உயிரின் இயற்கையாகும். இதனை இன்னுயிர் என்ற சொல்லால் ஆசிரியர் குறிப்பிடுகின்ருர். இங்ஙனம், மலமுடைய உயிர்க்குள் இறைவன், சிறிதுகாலம் தங்கியிருந்து பின்னே விட்டுநீங்குபவன் அல்லன். எப்போதும் துணையாக - தோன்ருத் துணையாக வீற்றிருப்பவன் ஆவன். ஆதலால் மன்னும் என்கிருர் ஆசிரியர். குற்றமுடைய உயிர்க் குள் இறைவன் தங்குவதால் தானும் குற்றத்தன்மை ஏறப் பெறுவனே இறைவன் என்னும் நம் ஐயத்தினைப் புனிதனை என்னும் சொல்லால் போக்கி, இறைவனின் தூய்மையுடை மையை நமக்குத் தெரிவித்துள்ளார் ஆசிரியர்.

உயிர்கள், உலகின் எந்தத்திசையிலும் உடம்பொடு பிறத்தல் கூடும். ஆதலால். அந்தந்தத் திசையிலும் அவன் உடனிருந்து உயிர்களை நடத்தவேண்டி உள்ளான். ஒரு நாட்டுக்கோ, ஒரு திசைக்கோ இறைவன் கட்டுப்பட்டவனுகான். அவன் எந்நாட்டவர்க்குமே இறைவன் ஆவான். அங்ஙனமில்லாவிடில் குறிப்பிட்ட ஒரு திசையிற்பிறந்த உயிர்களே உய்தியடையும் தகையுடையனவாகி, ஏனைத்திசையில் பிறந்தவை உய்திபெற வழியில்லாமற்போம். அன்றியும், கடவுளும், ஒருதிசைக்குள்ளே கட்டுப்பட்டுள்ள குறைபாடுடையவனுவன். பொதுக்கடிந்து விளங்கும் தனித்தகைமை நாற்றிசைக்கும் நாதனை என்பதனுல்

உணரப்படும். ஆதலால் எவ்வுலகின் எத்திசைப் பிறப்பினும் உயிர்களுக்கு அதனால் ஏதும் குறைபாடின்மை தெரியலாகிறது. தன்னுடைய வியாபகத்துள்ளே நாற்றிசையும் உடையவனாகிய இறைவன் எத்திசையோரையும் அருள்கூர்ந்து செலுத்துபவனாதலால். நல்ல மாதுக்கு நாதனை என்றார். அருட்சத்தியாய் நிற்பினும், திரோதானமாய் நிற்பினும் உயிர்கட்கு நன்மை விளைத்தலையே பயனாகப் புரிவதுபற்றி நல்ல மாது எனலுற்றார். அருளியல்பினின்றும் எஞ்ஞான்றும் இறைவன் நீங்குதலிலனாதலால் நாதனை என்றுள்ளார். இதனால் இறைவன் எவ்வுயிர்களையும் தன் தனியருளால் காத்தல் செய்தல் கருதப்படும்.

இங்ஙனம், படைத்தும் காத்தும் தண்ணளி செய்யப்பெற்றும், உயிர்கள் தமது மலவலிமையால் வினைத்துயரங்களுக்கு ஆளாகின்றன. அத்துயரங்களை அவை துய்க்கும்போது ஏற்படும் அலுப்பினை அடிக்கடி மாற்றி இளைப்பாற்றவேண்டியுள்ளது. இவ்வகையான நிலையற்ற இளைப்பாற்றலுக்கு மரணம் என்பது பெயராம். இஃது ஒவ்வொரு நாளும் நாம் உறங்குவதை நிகர்க்கும். "உறங்குவதுபோலும் சாக்காடு" என்பது குறள். மரணத்தைச் செய்பவன் இயமன் ஆவான். அந்த இயமன், அச்சுமாறும்போதெல்லாம் இறப்பினை விளைப்பன். முத்திப்பேற்றின்போது நிகழ்வது மரணமன்று. அப்போது உயிர்கட்கு இயமவாதனை இல்லை. ஆதலால், தென்திசைக்கொரு வேந்தனும் கூற்றுதைத்தானை எனலுற்றார் ஆசிரியர். இதனால், மலநீக்கம்பெற்று இறைவழி ஏகும் உயிரினை இறைவனே ஏற்றுக்கொள்ளுகின்றானல்லால், இயமன் ஏதும் செய்யவிடுகிலன் எனத் தெளியலாகும். தான், மேலானதிசை எனப்படும் வடதிசைக்கண் சிறப்புறவிருப்பினும் இயமனை எப்போதும் எச்சரித்துக்கொண்டே இருத்தல் வேண்டித் தென்திசை நோக்கியவனாகவே எழுந்தருளியுள்ளானவன். ஆதலால், உயிர்கள் இயமவாதனைக்கு அஞ்சாமல் தன் அடி சேர்தற்கண் இறைவன் முடிவாக உதவுகின்றானவன் என்பது தெளிவாம். கூற்றுதைத்த கதை யாவரும் அறியப்பெற்ற தொன்றாம். திருக்கயிலை, திருத்தில்லை முதலான தலங்களில் இறைவன் தென்திசைநோக்கி எப்போதும் எழுந்தருளி இருத்தல் தெரிந்த செய்தியாம். (திருவரங்கத்துப் பள்ளிகொள் பெருமானும் இங்ஙனம் தென்திசையே நோக்கிக் கிடத்தல் இங்குக் கருதத்தக்கதாம்.) இவ்வாறு நமக்கு யாண்டும் துணை புரியும் பெருமானை நாம் கூறிக்கொண்டே இருத்தல் தக்கதாம்.

இதனைக் கூறுகின்றேனே என்ற சொல்லால் உணர்த்தலுற்றார் ஆசிரியர். "நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றுள்ள இடம் ஈண்டுச் சிந்திக்கத்தக்கதாகும்.

எல்லாம், மாயையுள் அடங்கிக்கிடக்க, அம்மாயை சக்தியுள் ஒடுங்க, அச்சத்தியைத் தன்னுளடக்கிப் போற்றியிருந்த பின்னர், படைப்பு முதலாம் காரியங்கட்கு இடஞ்செய்கின்றான் இறைவ னுதலால் போற்றி என இச்செய்யுளைத் தொடங்கிக் கூறுகின்றார் ஆசிரியர். மலத்தோடிருக்கையிலும் உயிர்களைப் போற்றுவோன் இறைவனேயாவன். மலநீக்கி - மரணம் நீக்கி உயிர்களைப் காப் பவனும் அவனே யாவன் என இச் செய்யுளின் ஆதியந்தச் சொற்கள் நமக்கு உணர்த்திநிற்பதைக் காணலாம். "கூற்றினைக் குமைப்பர் போலும் குறுக்கை வீரட்டனாரே" என்பது அப்பர் வாக்கு. "சிவனைத் தொழுதுலகில் இழுகுமலம் அழியும்வகை கழுவு முரை" என்ற இடமும் இங்கு ஒப்பிட்டுக் காணலாம். "பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் ...... சிவனடி" என்பதும் இக்கருத்துணர்த்திநிற்றல் காணலாம்.

இதுகாறும் கூறியவதனால், இறைவன் எந்தநிலையிலும் நம்மைப் போற்றுகிறான் எனவும், அவன் உடலளித்து உயிர்க் குயிராய் நின்று நடத்துகின்றான் எனவும், பேரருட்செயலே எஞ்ஞான்றும் புரிகின்றான் எனவும், எல்லாத் திசைகட்கும் அவனே நாதன் ஆவான் எனவும், வடதிசைக்கண் சிறப்புடன் வீற்றிருந்தருளி நல்லுயிர்கட்கு மரணபயம் தவிர்க்கின்றான் எனவும், ஆதலால் அத்தகையவனையே நாம் எப்போதும் புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கவேண்டும் எனவும் தெரிதல் தக்க தாம். "இருள் சேர் இருவினையும் சேரா" என்று தொடங்கும் திருக்குறட்கருத்து இங்குக் கருதல் நன்றாம்.

3. இறைவனின் நடுவுநிலைமை

இறைவன் திசைகள் நான்கினும் நாதனாக நிற்பதுபோலவே, எல்லா உயிர்களிடத்திலும் ஒப்பநிற்கும் தன்மையன் ஆவான். இறைவன், எல்லா உயிர்களினும் மேம்பட்டவன். உயிர்கள் அவனினும் பன்மடங்கு கீழ்ப்பட்டனவாம். அங்ஙனமிருந்தும் தன் மேம்பாட்டினைப் பாராட்டாமல் உயிர்களின் நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக்கொண்டு உயிர்க்குயிராய் ஒப்ப நிற்கின்றான். அங்ஙனம் நில்லாக்கால், உயிர்களின் எண்ணப்படியெல்லாம்

இயக்கி அவற்றை அநுபவ முறையில் மேன்மைப்படுத்த இயலாமற்போம். வெள்ளத்தில், வழுக்கி விழுந்துவிட்டவனைக் கரையில் நிற்கும் நீச்சலறிந்தவன் காப்பாற்ற வேண்டினால் தானும் வெள்ளத்துள் விழுந்து, நீந்தத்தெரியாதவனைப் பற்றிப் பிடித்துக் கரைசேர்த்துக் காப்பாற்றுகிறான். வெள்ளத்தில் சிறிது தூரம் இருவருமே உழல்கின்றனர். இங்ஙனமின்றிக் கரையில் நின்றோன், வழுக்கி விழுந்து திணறுகின்றவனைத் தாழ்ந்தவனாகக் கருதினால் விழுந்தவனுக்கு உய்வு இல்லாமற்போகும். ஆபத்தில் உயர்வு தாழ்வு வேறுபாடுகளை உயர்ந்தோர் கருத மாட்டார். அங்ஙனம் கருதாமையே உயர்ந்தோர் பண்பும் ஆம். "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்" ஆம். இறைவனின் உயர்ந்தோர் எவரும் இலர். ஆதலால், அவனின் உயர்ந்த பண்பு ஒக்கநிற்றலேயாம். இதனைக் குறித்தே ஆசிரியர் முதற்கண் ஒக்க நின்றானை என்றுள்ளார்.

மக்களினத்தே ஒருவர்க்கொருவர் உயர்ந்தோராயிருப்பினும் அங்ஙனம் கருதாமல் துணையாய் நிற்பதுண்டேனும், அவ்வாறு துணைபுரியும் உயர்வுடையோர், துணைகொண்டான் உய்திபெறுகின்ற அளவும் நீடித்திருந்து உதவிவருவர் என்ற நிச்சயம் இல்லை. கணவனை மனைவி நீத்தலும், மக்கள் பெற்றோரை நீத்தொழிதலும் ஆகிய இன்னோரன்ன செயல்களை நாம் உலகில் காண்கின்றோம். அங்ஙனமே, இறைவனும் இடையே உயிர்களை விட்டொழிவனோ என்ற ஐயம் எழாவண்ணம் உலப்பிலி (அழிவில்லாதவன்) என்று கூறிக் காட்டியுள்ளார் ஆசிரியர். ஆகலின், இறைவனுதவி இடையீடுபடாமல் நிகழ்வதொன்றாகும் என நாம் உறுதியாக நம்பலாம். "கற்றுணைப் பூட்டி ஓர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது" எனத் திருநாவுக்கரசர் இச்செய்தியைக் கூறிக்காட்டி இறைவனைத் "தோன்றாத்துணையாய் இருந்தனன்" என்று புகழ்ந்திருப்பதும் நாம் கருதலாகும். எனவே, இடையே விட்டொழியாமல் எங்கும் என்றும் நமக்கு அழிவின்றியிருந்து ஆதரவளிப்பவன் இறைவனொருவனே என்று முழுநம்பிக்கை வைத்தொழுகுதலே நல்லதொரு செயலாம் என்க. "துப்புடையாரைச் சேர்வதெல்லாம் சோர்விடத்துத் துணையாவர் என்றே" எனப் பிறரும் கூறிக்காட்டுதல் இதனை அரண்செய்வதாம்.

மும்மலமுடைய நாம் சகலர் ஆவோம். நாம் ஒருமலம், இருமலம் மட்டிலும் உடையோரினும் தாழ்வுடையராவோம்.

அன்றியும் நாம் இருவினேயும் உடைமையால் இன்பமும் துன்பமும் ஆகிய இரண்டையும் அநுபவித்து வருந்துகிருேம். புண்ணியச் செயலாற்றி அப்பயஞுகிய இன்பம் (சுகம்) ஒன்றையே சுவர்க்கத்து அனுபவிப்பவர் தேவர்கள் எனப்படுபவர் ஆவர். அவர்களும் நம்மைவிட ஒரு சிறிது மேம்பாடு உடையவரே. இங்ஙனம் மேம்பாடுடையவர்கள் யாவரும், முழு மேம்பாட்டினைத் தாம் அடையும்பொருட்டும், துன்பம் அணுகாமைப் பொருட்டும் எப்போதும் மேலோஞுகிய இறைவனே நக்கன் என்று அழைத்துப் போற்றி வழிபாடுசெய்கின்றனர். எல்லாம் நீத்தவனே நக்கன் எனப்படுவோன். தனக்கு ஏதுமொரு தத்துவக் கட்டுப்பாடு இல்லாதிருப்பவனே, தத்துவத்துள் தளேப்பட்டுக்கிடப்போரை விடுதலே செய்யவல்லவன் ஆவன். அத்தகைய வல்லவனே இன்னுன் என அறிந்து, நம்மினும் மேலோர் வழிபாடு செய்தலால், நாமும் அவர்வழியே கடைப்பிடித்து ஏத்தி உய்தி பெறுவதொன்றே ஏற்புடைச் செயலாகும். இக் கருத்தை அறிவிக்கக்கருதியே **தேவர்கள் நக்கன் என்று ஏத்திடும் நாதனே** என்று புகழ்ந்துள்ளார் ஆசிரியர். கொழுச் சென்றவழி துன்ஊசி செல்வதுபோலவே நாம் நம்மின் வல்லாராகிய தேவர்கள் செய்ந்நெறியைக் கைக்கொண்டு ஒழுகுதல் சீரிதாம் என்க!

மேற்கூறியவாறன்றி, இறைவனருகில் இருப்பவராயினும் இறைவனே வழிபடாமலும், அவனருளே நாடாமலும், அதிகாரம் முதலிய அற்பப் பேறுபற்றிக் கருவித்து நடப்பாராயின், அவர்கள் இறைவற்கு அணுக்கராயிருத்தல்பற்றியே உய்தி அடைந்துவிடமாட்டார்கள். திருக்கயிலேக்கண் இருப்புப்பெற்றும், இறைபணிப்பேற்றினேப் பெரிதென மதியாமல், வேறு பேறு பெரிதெனக்கொண்டோர், இவ்வுலகிடைப் பிறப்பெடுத்து வருந்தியதாகக் கூறும் புராணக்கதைகள் இவ்வுண்மையை நமக்கு அறிவுறுத்துவனவாகும். நட்பாங்கிழமைக்கு இலக்கணம் காட்டவந்த வள்ளுவஞரும் புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான் வேண்டுவதென்று கூறுதல்கொண்டும் இதனே நாம் தெரியலாகும். ஆதலால், அகத்தே தூய்மையன்பு இல்லாமல் புறத்தே மட்டில் பூசனேயாதி மேற்கொண்டு ஒழுகுதலாலும் பயன் இன்ரும். இவையெல்லாம் நாம் தெரியக்கருதியே **நாள்தொறும் பக்கம் நின்ருர் அறியாத பரமனே** என்று கூறியுள்ளார் ஆசிரியர். இதஞல், பக்கம் நிற்றல் பெரிதன்று; பக்தியொடு நிற்றலே

பெரிதாம் என்க. தவளை தாமரைத்தேனை அறிந்து அருந்தாமை யாகிய உவமை இங்குக் காட்டப்படும்.

அப்படியானுல், பக்தியோடு பற்றிநிற்பது எவ்வாறெனவினுவுதல்கூடும். இதற்குரிய வழியையும் ஆசிரியர் இச்செய்யுளில் இறுதியாகத் தன்செயலாகக் கூறிக் காட்டியுள்ளாராவர். நாம் எப்போதும் இறைவனைவிட்டு விலகி வேருக இல்லை. அவன் வியாபகத்துள்ளேதான் இருக்கின்றேம். இந்த நிலையினை நாம் அறியினும் அறியாவிடினும் உண்மைநிலை இதுதான். அதாவது நாம் எப்போதும் இறைவனுடைய அருளெல்லையில்தான் இருக்கிறேம் என்பதாம். பிறப்புற்றுழலினும் அன்றிச் சிறப்புற்று (முத்தியுற்று) மகிழினும் அவனருளே நமக்குத் தாரகமாக உள்ளது. இந்த உண்மையினை நாம் உள்ளத்தே இடையருமல் கொள்ளவேண்டும். இவ்வாறு, நோயாய்க்கிடந்தவன் நோய் நீங்கித் தெளிந்தாற்போலத் தெளிவுற்றுத் திடமான நம்பிக்கையில் எப்போதும் நிலைத்துநின்று, இமைப்பொழுதும் மறவாமல் இறையருளையே தியானித்து, அவனைப் புகழ்தலே நாம் செய்ய வேண்டுவதாகும். இப்படியே, தான் செய்வதாகத் திருமூலர் இங்குக் கூறிக்காட்டுகிருர். அது, புக்கு நின்று உன்னி யான் போற்றி செய்வேனே என்ற இடமாம். புகுதலாவது அருள் எல்லையிலே நாம் எப்போதும் தங்கி இருத்தலை அறிதலாம். நிற்றலாவது அவ்வெண்ணம் நெஞ்சகத்துத் துஞ்சும்போதும் நிலைத்திருத்தலாம். உன்னுதலாவது அந்நிலையையே எல்லாவித அவத்தைக்கண்ணும் உறுதியாக உள்ளம் பிடித்தலாம். போற்றுதலாவது அங்ஙனம் பற்றிக்கிடந்தாரையெல்லாம் இறைவன் போற்றியருளிய செயலைக் கூறிக்கூறிப் புகழ்ந்து வழிபடுதலாம் என்க. இஃதொன்றையே நம் செயலாக நாம் கொள்ளவேண்டும் என்பதுபற்றிச் செய்வேனே எனப்பட்டது.

தொகுத்துச் சொன்னுல், இறைவன் யாவரிடத்தும் ஒப்ப நிற்பவன் என்றும், அவன் யாண்டும் நிலவி உதவுபவன் ஆவான் என்றும், அவனை உயர்ந்த அமரர்களெல்லாருமே நாள்தொறும் போற்றுகின்றூர்கள் என்றும், சும்மா, இறைவனை உள்ளன்பு இன்றிப் பூசிப்போர் இறையருளை அடையமாட்டார் என்றும், ஆதலால், நாம் அவன் அருளிலிருப்பதை எண்ணி நம்பிப்போற்றுதலே கடமையாகக் கொள்ளவேண்டும் என்றும் ஏற்படும். இதனுல், இறைவனையன்றிச் செத்துப்பிறக்கும் சிறுதேவர்களை

நாம் மதித்து வழிபடுதலால் முத்திப்பயன் எய்த ஒண்ணது என்பது வெளிப்படை.

4. வழிபாட்டுப்பயன்

அண்டங்கள் பல. எல்லாம் மாயையுள் அடங்குவனவே. இவ்வண்டங்கள் ஒன்றின் ஒன்று அளவில் பெரியன. எவ்வளவு பெரியவையாயினும் ஊழி, பேரூழி, முழுவூழிகளில் சிறிதொழிதலும், மிகுதியும் மறைதலும், முற்றும் ஒடுங்குதலுமே இயல்பாக உடையன. நம்மை (உடம்பை) உலகம் தாங்குகிறது. இதனுல் இந்த உலகே நமக்கு ஆதாரமென்று நாம் நினைக்கிறோம். அது தவறு. இவ்வுலகும் அழிவுறுவதே ஆகும். அப்போது அதற்கு மாயை தாரகமாகிறது. மாயை எப்போதும் விரிவு நிலையில் இருப்பதன்று. அதற்கும் கால அவதியில் ஒடுக்கம் உண்டு. அங்ஙனம் ஒடுங்குகையில் அது சத்தியுள் ஒடுங்கும். அச்சத்தி இறைவனுள் ஒடுங்கும். எஞ்சிநிற்கும் ஒடுக்கமற்ற பொருள் இறை ஒருவனே ஆவான். ஏனைய உலகுகள் யாவும் தோன்றிப் பின் அகலுவனவே ஆகும். ஆதலால், இயற்கை எனப்படும் உலகமே நமக்குத்தாரகமாகும் என நாம் கொள்ளுதல் சரியன்று. ஊஞ்சலில் ஆடுபவனுக்குப் பலகை தாரகமாகாது. ஏனெனில், அது சங்கிலிகளைத் தாரகமாகக் கொண்டுள்ளது. சங்கிலியும். உத்தரத்தைத் தாரகமாகக்கொண்டு நாலுகிறது. அவ்வுத்தரமும் தன்னைத் தாங்கி நிற்கும் சுவரைத் தாரகமாகக்கொண்டு கிடக்கிறது. சுவரோ தரையையே அடிக்களமாகக்கொண்டு எழுந்து நிற்கிறது. ஆதலால், ஊஞ்சல்கயிறு அற்றவனுக்குத் தரையே முடிவான ஆதாரமாகிறது. இவ்வாறே நாம், ஒன்றுக்கொன்று உள்ளதான தாரகமுறையினை நாடிக்கொண்டேபோனுல் முடிவாக இறைவன் ஒருவனையே தாரகமாகப் பற்றவேண்டுமென்பது தெரியவரும். முன்செய்யுளில் "அருளில் புக்கு" என்றவர் இச்செய்யுளில் அங்ஙனம் புகுமிடத்தை ஆய்வுமுறையில்வைத்து இறைவன் ஆவான் என்கின்றுர். நீதிநூல்கள் 'இறைவனடி" என்றும் 'அறிவன் தாள்" என்றும் இச்செய்தியை உரைக்கும். எனவே, உலகாதிகள் ஒடுங்கவும், தனக்கு இறுதி ஒன்றும் இல்லாதிருக்கும் பொருளே மெய்ப்பொருள் எனப்படும். ஆதலால் இதனை அரியபொருள் எனவும் கூறலாம். எனவே, உலகங்கள் யாவும் ஒடுங்கிய இடத்தும் அருமைபெற்ற அழியாப் பொருளாக யாவைக்கும் யாவர்க்கும் ஆதாரமாக நிற்குமியல்பு

உடையவன் இறைவனே என்பார் **அகலிடத்து ஆர் மெய்யை** என்று கூறி நம்மை ஆராய்ச்சிமுறையில் தெருட்டுகின்றார். ஆகையால், வீணே இயற்கை, இயற்கை எனக் கூறுவதில் பயனில்லை. அவ்வியற்கையும் பேரும் (நீங்கும்) இயல்புடையதே யாதலால் ஏதொன்று நீங்காத (ஒடுங்காத) இயல்புடையதோ **அதுவே பேராஇயற்கை.** அதுவே மெய்ப்பொருள் எனலாம்.

இங்ஙனம், யாவற்றையும் யாவரையும் தன்னுள் ஒடுக்கிக் கொள்ளும் அப்பொருள் பின்பு ஒருபோதும் அவையிற்றை வெளிப்படுத்தாது கெடுக்குமோ என நாம் கருதக்கூடும். இறைவன் யாவற்றையும் ஒடுக்கிக்கொள்ளுதல் புசித்துச் சீரணித்துத் தான் வாழ்வதற்கு அன்று; புனருற்பவம் செய்யவேண்டும் அவதரத்தே எல்லாவற்றையும் திரும்ப வெளிப்படுத்தியுதவுதற் பொருட்டே இவ்வொடுக்கம் நிகழ்த்துகின்றானவன். ஒருவிதை, தன்பால் ஒடுக்கிவைத்துக்கொண்டுள்ள அங்குரமாகிய மரத்தை வெளிப்படுத்தியே உதவுகின்றது தக்கசூழ்நிலைப்போதில். அவ்வாறேதான் இறைவனும் செய்கின்றான் என்பதை உவமித்துக் காட்டும் பொருட்டே **அண்டத்துவித்தை** எனலுற்றார் ஆசிரியர்.

இவ்வாறு ஒன்றை ஒடுக்கவும் வெளியே விடுக்கவும் இறைவன் ஆற்றலுடையான் என்பதை நிதரிசனமாக நாம் அறிய விரும்புவோமாயின் அதற்குச் சான்றாகத் தம்முடைய உடம்பு மாறுபாடுகளையே இங்கு ஆசிரியர் காட்டுகின்றார். அதாவது, திருமூலர் தம் உடம்பினை ஒரு பத்திரமான இடத்தே சேமம் செய்துவைத்துப் பிறகு உயிர் நீங்கிய இடையன் உடம்பினுள் புகலுற்றுப் பசுக்களை மகிழ்வித்தார் என்பதை வரலாற்றால் நாமறிவோம். அங்ஙனம் புகலிடத்தே சேமமாகத் திருமூலர் வைத்த உடலினைத் திருமூலர் திரும்ப அடைந்தாரிலர். அவ்வுடல் சேமஞ்செய்யப்பெற்ற இடத்தினின்றும் மறைந்தது. உயிரற்ற இடையன் உடம்பு ஆயுளவதி கடந்தது. எனினும் அவ்வுடம்பு திருமூலர் ஆவிபுகுதப்பெற்ற பின்னர் சாலநாள் இருக்கலுற்றது. முன்உடலைப் போதவிட்டதும், பின்உடலை நீளவிட்டதும் ஆகிய இரண்டும் இறைசெயலே என இங்கு நமக்கு உணர்த்துகின்றார் ஆசிரியர் என நாம் கொள்ளலாம். அதுவே, **புகலிடத்து எம் மெய்யைப் போதவிட்டானை** என்ற வரியில் புலனாவதாம். ஈண்டுப் 'புகலிடம்' என்பதும், 'போத' என்பதும் இருதிறத்துடல்கட்கும் ஏற்பப் பொருள்படும் என்க.

நாம் வாழும் இவ்வுலகம், நம்புலன்களைத் தீநெறியிலே படரச்செய்து நம்மை வீடுபேறு எய்தவொண்ணுதபடி கெடுக்கும் இயல்புடையது. ஆகவே உலகெனப்படுவது நமக்குப் பகையாம் இடமே ஆகும். இவ்வுலக நெறியிலே இரவும் பகலும் நாம் துயின்றும் அயின்றும் காலந்தள்ளுவதால் நமக்கு உய்தி ஒருபோதும் கிட்டாது. ஆதலால், நாம், மேற்சொல்லப்பட்ட ஆதியந்தம் தனக்கில்லாததும், யாவற்றிற்கும் ஆதியும் அந்தமுமாய்த் தானிருப்பதுமான முழுமுதற்பொருளையே பகலிலும் இரவிலும் நமது தாழ்வை ஒப்புக்கொண்டு துதித்து நின்ருல் உய்தி உறுதியாக அடைவோம். இங்ஙனமே, தாம் செய்து ஞானவிளக்கம்பெற்ற நிகழ்ச்சியை ஆசிரியர் இங்குப் பகலிடத்தும் இரவும் பணிந்து ஏத்தி, இகல் இடத்தே இருள் நீங்கி நின்றேனே என்று கூறித் தெளிவுறுத்துகின்ருர் ஆவர். தமது உண்மைச் சீவன்முத்திநிலை நீண்டகாலம் நிலைத்திருந்த நிலையினை நின்றேனே என்றசொல்லால் ஆசிரியர் ஈண்டுக் கூறியுள்ளார் என்னலாம்.

இவற்ருல் நாம், எல்லாம் ஒடுங்குமிடமாவான் இறை ஒருவனே ஆவான் என்றும், அவனே எல்லாம் வெளித்தருபவன் ஆவான் என்றும், அவனையே நாம் அனவரதமும் பணிந்து ஏத்திக்கிடந்தால் இவ்வுலகின்கண்ணும் மலநீக்கம் பெற்றுச் சீவன்முத்தனுகி இன்பம் நீண்டகாலம் துய்க்கலாம் என்றும் தெரிந்து கொள்ளலாகும். அந்தமே ஆதியாவது என்ற கருத்து இப்பாடலில் கூறப்பட்டுள்ளமை நாம் காணலாம்.

5. சிவனியல்பு

இதற்கு முன்னுள்ள செய்யுட்களில் முழுமுதற்பொருளை அவன் என்று கூறத்தொடங்கி, நாதன், புனிதன், கூற்றுதைத்தான், பரமன், மெய், வித்து என்றெல்லாம் பலபடக் கூறி வந்தார் ஆசிரியர். இதனுல் இத்தகைய முழுமுதல் யாராயிருக்கக்கூடும் என்கிற எண்ணம் யாவர்க்கும் எழுதல் இயற்கையே. வேதங்கள் முதலிய நூல்களும் பிறவும் ஒருமுகமாகத் துணிந்துரையாமல் பலப்பல பெயர்களாலும், பண்புகளாலும், தொழில்களாலும் வெவ்வேறு பெயர்களிட்டு உரைத்தலால் அவற்றின் துணைகொண்டும் எளிதில் துணியக்கூடவில்லை. இதனுல் சமயங்கள் பலபட்டன. அறிஞர்கள் பல்வேறு கொள்கையராயினர்.

ஆதலால், இந்த மாறுபாடுகளையெல்லாம் முடித்து ஒருமுகப் படுத்தி இன்னுர் என்று துணிந்து கூறலுற்றுர் இச்செய்யு ளகத்தே ஆசிரியர். எனவே, இதுகாறும் பொதுப்படக் கூறி வந்தவர் இச்செய்யுளின் தொடக்கத்தே அம்முழுமுதற்பொருள் சிவன் என்று சிறப்புமுறையில் வெளியிட்டுக் கூறியுள்ளமை காணலாம்.

சிவன் என்ற பெயரால் முழுமுதற்பொருளை ஏன் கூற வேண்டும் என்பதற்கான காரணங்களையும் இப்பெயர் குறித் ததை அடுத்து அமைத்துரைக்கின்றுர் ஆசிரியர். "இவன் அவன் என்று எழுதிக் காட்டொணுத" பொருளைச் "சிவன் என யானும் தேறினன் காண்க" என்று பின்வந்தோரும் உரைத்துப் போதற்காம்வண்ணம் திருமூலர் சிவன் என்று அழைக்கலுற்று ராவர். பொதுவாகச் செம்மேனியான் என்று இச்சொல் பொருள் படுவதாகும். இப்பெயர், பிறபெயர்கள், பல தேவர்கட்கும் வழங்கப்படுவதுபோலப் பொதுப்பட்டு நில்லாமல் முழுமுதற் பொருளாம் ஒருவற்கே உரியதாகி நிற்கின்றதாகும். "சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மான்" என்று இத் திறம் கூறப்படுதலும் காணலாம். இச்சிவனெனும் இறைவற்கு ஒப்பு எவரும் ஆகார். "ஒப்புடையன் அல்லன்" என்பர் திருநாவுக் கரசரும். ஒப்புடைத் தெய்வம் பிறிதொன்று இருக்குமாயின் மக்களாவார் ஒருநெறிப்பட இயலாமற்போகும். அன்றியும் அவ்விருவர் முழுமுதல்களுக்குள்ளும் மாறுபாடு நேரிட்டுவிடும். எனினும், ஒருசில சமயத்தறிஞர்கள் வேதவாக்கியங்களைத் தத் தம் மதிநுட்பத்துக்கு ஏற்றவாறெல்லாம் பொருள்கண்டு முழு முதற்பொருளை வேறு வேறு பெயர்களால் அழைத்திடுவர். அவர்தம் கூற்றுக்களையெல்லாம் மேற்கொள்ளின் உண்மை உணரமாட்டாமல் மயங்கநேரும். ஆகையால், திருமூலர் இங்குத் துணிந்துரையாகச் "சிவனெடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை" என்று கூறிக்காட்டுகின்றுர். தேடினும் என்ற சொல் லால், திருமூலரும், அறிஞராவார் பலரும் பலபடக் கூறியுள்ள திறங்களையெல்லாம் ஓர்ந்து பின்தேர்ந்து கூறியுள்ளமை புலனுவ தாம். எனவே முழுமுதல், சிவனென்னும் பெயருடையவன் என்றும், அவனுக்கு எத்தேவரும் ஒப்பும் உயர்வும் உடையர் அல்லர் என்றும் நாம் தெரிதல் தக்கதாம்.

இவ்வுலகில், சிற்சில சமயத்தார்கள் தத்தம் மதிவன்மையால் சிவனை ஒக்கும் தேவர்களாகச் சிலரை எடுத்துரைத்து அந்தத்

தேவர்களுள் ஒருவராகச் சிவனையும் கூறிக்காட்டுவர். அவ்வாறு, தேவருள் ஒருவனாகச் சிவன் கருதப்படான். அன்றியும் எத் தேவரும் சிவனுக்கு ஒப்பாதல் ஒருபோதும் இல்லை; ஒருலகிலும் இல்லை. ஆதலால், அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை என்றார் திருமூலர். இதனால் சிவன் மூவரில் ஒருவனல்லன் என்பதும், மூவரினும் மேலோன் என்பதும் துணிபாம்.

முழுமுதற்பொருளைச் சிவன் என்பானேன்? வேறு பெயரால் குறிக்க ஒண்ணாதோ? என்றால் அதற்கு அவன் எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கித் தான் எவற்றையும் கடந்து நிற்பவனாதலால் சி என்றும், எல்லாப்பொருள்களுள்ளும், சிறப்பாக உயிர்களகத்தும் நீங்காதுறையும் உட்பொருளாயிருப்பவனாதலால் வ என்றும் சொல்லப்படுகிறான் என்பதைப் புவனம் கடந்தன்று எனவும் தாமரையானே எனவும் கூறிக் காட்டித் தெளிவித்தலாலறியலாம். "ஏழண்டத்து அப்பாலான் இப்பால் ......அகத்தான்" என அப்பர் அறிவித்திருத்தலும் இக்கருத்தைப் புலப்படுத்தும். புவனம் கடந்தன்று என்பதால் மாயாதீதன் என்பது புலனாம். திருவள்ளுவனாரும், கடவுள் வாழ்த்தின் கண்ணே "முதற்றே உலகு" என்பதனால் சிகாரத்தின் பொருளையும், "மலர்மிசைஏகினான்" என்பதனால் வகாரத்தின் பொருளையும் அறிவுறுத்திப் போதல் காணத்தக்கதாம். நீதிநூலும் பொதுமறையுமாதலால் சிவன் என வெளிப்பட அவர் கூறிப்போந்தாரிலர் திருக்குறளில் என்க. மற்றும் சிவஞானபோத சாத்திரத்தும், "நித்தியானந்தனாய் அளவிறந்து தோன்றுவான்" எனவும், "மண்முதல் நாளமலர்.........அச்சிவன்" எனவும் இச்செய்தி பேசப் பட்டிருத்தல் காணத்தக்கதாகும்.

இங்ஙனம், கடந்தும் கரந்தும் நிற்பானை நாம் எவ்வாறு கருதுவது என்ற ஐயம் நமக்கு எழும். அதனை அகற்றுதற் பொருட்டே ஆசிரியர் பொன் ஒளி மின்னும் தவனம் சடைமுடியான் எனவும் உருவங்காட்டுகின்றாராவர். எனவே, "பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனிபொலிந்திலங்கும்" என்பர் பின்வந்தோரும். செஞ்சடைவானவன் எனவும் கூறுவர். ஆகவே, சிவந்த சடைமுடியோடும் கூடிய பொன் ஒளிவீசும் திருமேனியனாகப் பாவிக்கத்தக்கான் என்று நமக்குப் புலப்படுத்தியுள்ளார் என்னலாம். சிறந்த யோகியராதலால் தமது யோகக் காட்சியால் கண்டு கட்டுரைக்கும் இதனை, அக்காட்சி சிறிதும்

இல்லாதேம், விழியுடையான் கூற்றினை விழியிலாதார் கொள்ளு மாப்போலே கொண்டு பூசித்தலே தக்க நெறியாகும் என்க. எனவே, உருவமும், நாமமும் இல்லாற்கு உருவமும் நாமமும் இதனுல் கற்பித்துரைத்தாராவர் ஆசிரியர் ஈங்கு என்க.

இதுகாறும் கூறியவாற்ருல், முழுமுதலாவான் சிவனே எனவும், அவன் புறத்தும் அகத்தும் நீங்காது விளங்குபவன் எனவும், ஒப்பில்லான் எனவும், உருவாகக் கருதின் பொன் ஒளி மேனியும் செம்புரிசடையும் உடையனுகக் கருதப்படத்தக்கான் எனவும் அறியலாம். அன்றிச் சூரியனை ஒப்பாவான் என்பதும் உண்டு.

6. சிவனுதவி

கடந்தும் உட்கரந்தும், இதனுல் எங்கும் நிறைந்துமுள்ளவனுகிய சிவன் யாவர்க்கும் எவ்வாறு உதவுகின்ருன் என்பது அடுத்து நிற்கும் வினு ஆகும். இந்திரன் முதலாகிய தேவர்கள் அமரரேயாயினும், சுவர்க்க இன்பமே துய்க்கும் தன்மையர் ஆயினும், அவர்கள் சிவனுதவியில்லாமல் தங்கள் இன்பத்தை அநுபவித்தல் பெருர். அத்தேவர்களையும் உள்நின்று செலுத்துபவன் சிவபெருமானேயாவன். இதனுல் எல்லாத் தேவர்களுள்ளும் அந்தர்யாமியாக இருப்பவன் சிவனே என்பது தெரியப்படும். இந்திரன் முதலான பெயர்கள் யாவும் உண்மையில் சிவபெருமானையே குறிக்கும் எனவும், அவ்வத் தேவர்கட்கு அவை பெயர்களாக வழங்கப்படுதல் உபசாரவழக்காம் எனவும் நூல்கள் கூறுதலும் காணலாம். ஆனதுபற்றியே அவனை ஒழிய அமரரும் இல்லை எனலுற்ருர் ஆசிரியர். ஆகவே, அமரர்கள் வாழ்வுக்குதவுபவன் சிவனேயாவன் என்னலாம். "உம்பர்கட்கு அரசே! ஒழிவற நிறைந்த யோகமே!" என்பதன் கருத்தும் இங்குப் பொருத்திக்காணல் நன்ரும்.

இனி, அருந்தவம் புரிகின்ற முனிவரேயாயினும், அன்றி யாகாதிகளாம் செயல்புரியும் அந்தணரேயாயினும் அவர்கள் புரியும் தவச்செயல்கட்குத் தக்க பயன்களை அளித்துதவுவோன் சிவபிரானேயாவன். நால்வர் முனிவர்கட்கு அருளிச்செய்த தவத்துறை உதவியும், தக்கன்வேள்வி தகர்த்திட்டு அருள்புரிந்தும்

துணையாகிய வரலாறுகளால் இச்செய்தி தெரியலாகும். இதனால் எத்தவமும் சிவனை முன்னிட்டே செய்யப்படல்வேண்டும் என அறியலாம்.

படைத்தல் முதலாம் முத்தொழில்புரியும் மும்மூர்த்திகளும் சிவனது ஆற்றலமிசமின்றேல் ஏதும் புரியமாட்டாதவராவர். "முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய் மூவரும் அறிகிலர்" என்ற திருவாசகப் பாடலால் இக்கருத்துணரப்படும். இவைபற்றியே அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை, அவனன்றி மூவரால் ஆவதொன்று இல்லை என்றார் ஆசிரியர்.

இங்ஙனம் தேவரும், முனிவரும், மும்மூர்த்திகளுமே சிவனருளை நாடித் தத்தம் கருமம் முடித்திடுவராயின், மக்களினத்தாராகிய நாம் அவன்திருவருளை நாடாமல் இம்மை மறுமை வீடுபேறுகளை எய்தப்பெறுதல் ஒருபோதும் இயலாதென்பது வெளிப்படை. விழிபடைத்தான் முன்னேசென்று வழிகாட்ட அவனைப்பற்றி அவன் பின்னே சென்றால்தான் விழியிலான் ஓர் ஊரை அடைய முடியும். தானாகவே தண்டூன்றிக் கோலே விழியாகக்கொண்டு குருடன் வழியறிந்துசெல்ல முயலின் இடையூறெய்தும். ஆதலால், நாமும் சிவனுதவியே நாடி நலம் பெற வேண்டும் என்க. இதுபற்றியே, அவனன்றி ஊர்புகுமாறு அறியேனே என்று தன்மேலேற்றிக் கூறிக்காட்டியுள்ளார் ஆசிரியர். நல்ல ஆயன் நடத்த எல்லாப்பசுக்களும் அவற்றுடன் கூடிச்செல்லும்; குருட்டுப் பசுவும் ஊர் செல்லும் என்றும் இச்செய்தியை உவமிப்பர். "இருள் தரு துன்பப்படலம் மறைப்ப ......அருள்தரு கைகொடுத்தேற்றும் ஐயாறன்" என்பர் அப்பர் சுவாமிகள்.

7. சிவனது பழமை

படைத்தலாதி முத்தொழில்களைப் புரிவோர் பிரமர் முதலியோராவர். பிரமர் முதலியோர் பலராவர். இப்பிரமர் முதலியோர்கட்கும் முன்னால் ஆதியில் சிவம் ஒரு பிரமனையும் ஒரு விஷ்ணுவையும் ஒருருத்திரரையும் படைப்பன். அம்மூவரும் தத்தம் தொழில்களை ஆற்றுவதில் ஒரு நிகரானவர் ஆவர். இத்தகைய ஆதிப்பிரமன் முதலியோர், யாவரினும் பழமையானவர் ஆவர். இவர்களையே பழமையானவரென நாம் கருதுதல் தவறாம். இவர்களையும் உண்டாக்கியவனே இவர்களின் பழையோன் ஆவன். "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே" என்பர்

பெரியோர். இதனல் சிவனினும் பழமையாவார் எவருமிலர் என்பது கருத்தாம். இதுபற்றியே மூவருள் ஒருவராகச் சிவனை எண்ணுதல் சரியன்றெனவும் நாம் தெரியலாம். எனவே சுத்த மாயா புவனவாசிகளும் சிவனது பழமை உடையாரல்லர் எனத் தெரியலாம். இதனை, முன்னை ஒப்பாயுள்ள மூவர்க்கும் மூத்தவன் என்றவரி உணர்த்துவதாகும்.

இங்ஙனம், மூவர்கோவாய் நிற்போன் யாவர்க்கும் பழமை யானவனக இருப்பதோடு, மூவர் தம்முள் ஒப்புடையாராதல் போன்று தனக்கு ஒப்புடையாரை உடையனே என்று ஐயம் எழாவண்ணம் தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன் என்றுள்ளார். தானே தனக்குத் தலைவன் ஆவான் என்பர் பெரியோரும். "தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடீ" என்பதும் இக்கருத்தே காட்டவல்லதாம். ஆதலின் சிவனே தம்பிரான் ஆவன் என்க. எல்லா உயிரையும் அளித்தலில் சிவன் தாய்க்கு நிகராவன். "பால்நினைந்தூட்டும் தாயினும்" என்ற பாடல் இக்கருத்துக்காட்டும். இதனல் பரிவுடைமையில் சிவன், தாயினும் தண்ணியன் என்பது பெற்றும். அவ்வாறே, உயிர்களை அறிவித்து நடத்தலில் தந்தையாகவும் இறைவன் உளன், ஞான மூட்டித் தன்பால் நண்ணுவித்தலில் சிவனினும் சிறந்த தந்தை யாரும் இலர். "ஈன்றுளும் ஆய் எனக்கு எந்தையும் ஆய்" என்பது தேவாரம். எனவே, வழிபடுவோர் பழமை மிக்க தாயாக வழிபடுவதே யல்லாமல் தன்னைத் தந்தையாக வழிபடி னும் ஏற்றருள்புரிவதே அவனியல்பாம். இதனைத் தன்னை அப்பா எனில் அப்பனுமாய் உளன் என்றுரைத்துக் காட்டுகிருர் ஆசிரியர். தாய்தந்தையர் குழந்தைகளைப்பெற்றுத் தனியே விட்டிடுவர். ஆனல் உடனுய் நின்று நடத்துவதே சிவன் செயல் ஆகும். அதாவது, ஆருயிர்களின் இதயமாகிய பொன்னை ஒப்பாம் தாமரைப் போதிலும் சிவன் தங்கிநடத்துகின்ருனவன் என்பதாம். எனவே புறம்புறம் திரிந்து உதவலேயன்றி அகத்தின்கண்ணும் நின்று நடத்தியருளும் திறமையில் உயிர்கள்போன்று பழமையானவன் என்பது தெளிவாம். இறைவன் பொன்னிறத்தன். இதய கமலமும் பொன்வண்ணத்தது. பொன்னேடு பொன் இயைதல் பொருந்தும் மரபுடையதாகும் என்னலாம். இந்தக் கருத்தே பொன்னை ஒப்பாகின்ற போதகத்தானே என்பதில் அடங்கியிருத் தல் காண்க. "என்று நீ அன்று நான்" என்ற வாக்கும் பழமை குறிப்பதேயாம்.

8. ஈசனருளியல்

ஒருவரை அன்பாலும் திருத்தி நடத்தலாம்; அதட்டியும் திருத்தி நடத்தலாம். இதனில் அதட்டி நடத்துவதன் பயனும் நன்மை பயப்பதே. அன்பால் நடத்துவதன் பயனும் அதே நன்மையே. உயிர்கள் வினைவகையால் பேதப்படும். நல்லுயிர் களை அன்பால் நடத்துவதே அமையும். தீயபண்புடைய உயிர் களைத் தண்டித்தே நடத்தவேண்டும். இதனை மறக்கருணைபுரிதல் என்பர். இருவகைக் கருணைகளும் அன்பு காரணமாகச் செலுத் தப்படுவதே ஆகும். அரிசி கடினமானது. ஆதலால் அதனைத் தீயுதவிகொண்டு வேகவைத்துப் பதமாக்க வேண்டியுள்ளது. சருக்கரை கடினமுடைய பொருளேயாயினும் கரைசலியல்பு தன்னிலே உடைமையால் வெற்றுத் தண்ணீரிலேயே அதனைக் கரைத்திடலாம். தீயின் தேவை வேண்டுவதின்ரும். அப்படித் தான், மக்களில் சிலரைச் சிவன் தீயினும் வெய்யன் ஆகி நடத்தித் திருத்துகிருன். வேறு சிலரைப் புனலினும் தண்ணியன் ஆகி நடத்தியருளுகிருன். அறமலி இதம் செய்வோருக்குத் தண்ணி யன் ஆவன். மறமலி அகிதம் செய்வோர்க்கு நிக்கிரகன் ஆவன். "நிக்கிரகங்கள் தானும்" என்னும் சித்தியார் வாக்கும் இது காட்டும். "அறத்திற்கே அன்பு" என்னும் குறட்பாவின் கருத்தும் ஈண்டுக்காண்டல் நன்ரும்.

இவ்வாறெல்லாம், தங்கள் இயல்புகட்கு ஏற்றவாறு அரசு போன்றிருந்து நடத்திவரும் சிவனுடைய இயல்பு அருளுடை மையே யாகும் என யாரும் அறிகிலர். கிரணத்தை அறியாமல் சூரியனை அறிதல் இயலாது. அவ்வாறே அருளை உணர்தரப் பெருமல் சிவத்தை அறிதரப்பெறுதல் இயலாததாகும். ஆதலால் ஆயினும் ஈசன் அருள் அறிவார் இல்லை என்ருர் ஆசிரியர். அன்போடு அழைப்பாரிடமெல்லாம் குழந்தை தாவிவந்து பற்றி மகிழ்வூட்டும், அது உள்ளத்தே கள்ளம் இல்லாதது; ஆசை அற்றது; பயக்குறைபோக்கி உதவுவது. இவ்வாறே, சிவபரம் பொருளும் அன்பால் நினைவார்க்குக் குழந்தைபோல் குழைந் தருளுவன். அன்றியும், நன்மகன் தந்தைக்குதவுவது போலவும் பயனளிப்பன். ஆதலின் சேயினும் நல்லன் என்ருர்.

சேய்மையனுகக் காணப்படினும் நல்லோர்க்கு நல்லன் என்றும் கூறுவர். சிவன், சிற்றுணர்வும் சுட்டுணர்வும் கொண்டு

அறியப்படமாட்டாதவனுக இருப்பானுயினும் அன்பு செலுத்து வோர்க்கு அருகிலேயே இருந்தருளுபவனுவன். நாம் குழந்தை யன்பொடுபரவுவோமாயின் அவன் தாயினும் நல்லருள்செய்வன். குழந்தை வாழுதற்பொருட்டு நற்ருய் மருந்துண்பள். அங்ஙனமே, அன்புகாட்டிய அமரர்கள் வாழும்பொருட்டுச் சிவன் நஞ்சுண்டு தான் தாய்போன்ற இயலுடைமையை நாட்டியுள்ளான். இது பற்றியே, அணியன் நல் அன்பர்க்குத் தாயினும் நல்லன் என்றனர் ஆசிரியர். அறக்கருணை காட்டும்போது தாய்போன்றும், மறக் கருணை காட்டும்போது தந்தைபோன்றும் சிவன் நடப்பவன் ஆதலால், அவன் தாயும் தந்தையுமாக உயிர்கட்குளன் என்பது தெரியத்தக்கதாம். இதனை அம்மையப்பராக விளங்கியருளுபவர் என்பர் சான்ருேர். இவ்வாறு சிவம் அம்மையப்பராக வீற்றிருத் தலை உருவகமாக நம்மனேர்க்கு உணர்த்தும்பொருட்டு ஆசிரியர் சிவத்தைப் பின் தாழ் சடையோனே என்றுள்ளார். பின் தாழ் என்பது பின்னித்தாழ்ந்துள்ள எனப் பொருள்பயத்தலால் தாய் ஆவது குறிக்கும். சடையோன் என்பது சடையை உடையவன் என்று பொருள்படுவதால் தந்தை ஆவது காட்டும். முதற் சிருட்டிக்கான அருளுடையவனுகச் சிவம் ஆம்போது இங்ஙனம் அப்புறத்தும் அம்மையப்பராக விளங்குவர் என்ற உண்மையை இவ்விடம் குறிப்பதாம்.

9. சிவனது தலைமை

மேற்கூறப்பட்ட பரம்பொருளாகிய இறைவன் திருவுருவும் திருப்பெயரும் அறியவேண்டின், அவன் பொன்னுல் இயன்று முறுக்குண்ட அழகிய சடை என்று சொல்லப்படுமாறு முது கிடத்தே தழைந்து விளங்க இருந்தவன்; நந்தி (குறைவற்றவன்) என்ற பெயருடையவன் ஆவன். இத்திருவுருவும், இத்திருப் பெயரும் சிவபிரானுக்கே சிறப்பாக உள்ளனவாகும். இதனுல் ஞானத்தை நமக்குத் தலைப்படச்செய்து நமக்குள்ள ஊனமாகிய மலக்குறையை அகற்றும் திறத்தன் சிவன் என்றபடியாம். இதுவே, பொன்னுல் புரிந்திட்ட பொற்சடை என்னப் பின்னுல் பிறங்க இருந்தவன்; பேர் நந்தி என்பதன் கருத்தாம். இத்தகை யவனைத் தொழுதலால் உயிர்கள், அரசனருள்பெற்ற குடிமக்க ளைப்போல நலம் எய்தலாகும். ஆதலால், அவனையே கைகூப்பித் தொழுக என்பார் என்னுல் தொழப்படும் எம் இறை என்ருர். உலகிலுள்ளார் யாவரும் அவனெருவனைத் தொழுதல் முறை எனும்பொருட்டே எம் இறை என்றுள்ளார்.

நாம் ஒரு செல்வந்தனிடம் பொருள்பெறச்சென்று வேண்டு கிறோம். அச்செல்வந்தன், தாஞெருவனிடம் சென்றிரக்க வேண் டாதவனுக இருப்பின் நமக்கு நலம் செய்வன். அங்ஙனமின்றித் தானே இன்ஞெருவனிடம் யாசிப்போனுக இருப்பின் நம் கருத்து நிறைவேருது. அவ்வாறே, சிவனை அல்லாமல் வேறு தேவர் களை நாம் வேண்டிநிற்பின், அவர்கள் அவ்வேண்டுகோளுக் கான பொருளைப் பெறும்பொருட்டுச் சிவனை வேண்டிநிற்பர். ஏனெனில் வீடுபேறு எனப்படும் சிறந்த பொருளைத் தரும் தகைமை அவர்கட்கில்லை. ஆகையால், அவர்களை நாடுவதில் நலமின்ரும். சிவனை நாம் வேண்டிநின்ருல் எதனையும் தான் உதவும் குறையற்றவனுதலால் வேண்டியன அளிக்கப்பெறு வோம். அன்றியும், நமக்கு வேண்டியதை இன்னதெனத் தானே அறிந்து உதவுதலும் செய்வன். சிவன், தனக்கு மேற்பட்டவராக எவரையும் இல்லாதவன். அவன்தன்னுல் தொழப்படுவார் இல்லை என இக்கருத்தை ஆசிரியர் கூறிக்காட்டியுள்ளமை கொண்டு உணரலாம். "தொழப்படும் தேவர் தொழப்படுவானை" என்பர் திருநாவுக்கரையரும். "சேர்ந்தறியாக் கையானை" என்பர் திருவாதவூரர்.

10. சிவனே ஆதாரமானவன்

மக்கள் இவ்வுலகில் உயிர்வாழ்ந்து, பழக்க முறையால் உறுதி பிறந்து, உய்திபெற இறையருளை நாடி நிற்கவேண்டி யுள்ளது. அதற்கு நிலம், நீர், தீ, வளி, வான், அக்னி (சூடு), ஞாயிறு, திங்கள் ஆகிய இவை எட்டும் தேவையாக உள்ளன. இந்த எட்டினையும் நாமே ஆக்கி அமைத்துக்கொள்ள இயலாது. ஆதலால், இவற்றை நம் தேவையறிந்து இறைவனே ஆக்கி, அவ்வவற்றிற்கும் உரிய இயல்புகளையும் உள்ளீடாக அமைத்து ஆதாரமாகவும் நிற்கிருன். உலகம் என்பதொன்று உண்டாதற் பொருட்டுக் கடலினின்று மலையைக் கிளப்பி நானிலத்தை உயிர் வாழ்க்கைக்கு இடமாகவும் ஆக்கியுதவுகின்ருன். இவையெல் லாம் நம் வாழ்வுக்கு இன்றியமையாதன ஆகும். இவ்வளவு பொருட்களையும் நாம் பற்பலரிடமிருந்து இரந்து பெறுமாறு கடவுள் நமக்குத் துயர்தந்திலன். யாவற்றையும் தானே தந்திட் டுள்ளான். இவை யாவும் ஒரே ஆதாரத்தால் நிலேக்கின்றன. 'இரு நிலனுய்த் தீயாகி' என்னும் தேவாரப்பாடலிலும் இக்கருத்து உள்ளமை காணலாம். பெரிது பெரிது புவனம் பெரிது என்பர்.

இப்பெரிய உலகினை நீரும், நீரினை நெருப்பும், நெருப்பினைக் காற்றும், காற்றினை ஆகாயமும் தாங்குகின்றன. அவ்வாகாயம் இறைவனால் நிலைத்துள்ளது. இங்ஙனமின்றேல் இவை யாவும் நிலைகெட்டு ஒழிந்துபோம். ஆதலால், இறைவன் இவைகட்கு ஆதாரமாக உள்ள செய்தியை ஆசிரியர், தானே இருநிலம் தாங்கி விண்ணாய் நிற்கும் என்று கூறியுள்ளார்.

பின்னர், நாள் முதலிய காலக்கணக்குகளும் உயிர்கள் பயிர்கள் வளர்ச்சியும் ஏற்படவேண்டி அங்கியும், சூரியனும், சந்திரனும் இறைவனால் அமைக்கப்பட்டுள. அங்கியில் சூடும், சூரியனில் ஒளியும், சந்திரனில் நிலவும் இறைவனால் அளிக்கப்பட்டுள. "அருக்கனில் சோதி அமைத்தோன் காண்க" முதலிய வாசகங்களும் இம்மெய்ம்மையை நமக்கு அறிவிக்கின்றனவாம். இதனைத் தானே சுடும் அங்கி ஞாயிறும் திங்களும் என்றவிடம் காட்டுகிறது. எல்லாம் இருந்தும் வானின்றி உலகம் வழங்காது. ஆகையால், மழைபொழிவதற்கும் இறைவன் ஆதாரமாகின்றானவன். மழையின் விளைவுக்கு விஞ்ஞானிகள் எக்காரணம் கூறினும், சாத்திரங்கள், இறைவன் திருவருளால் - பராசக்தியால் மழை பொழிகின்றதென்றே கூறுகின்றன. திருக்குறள் அதிகார வைப்புமுறையிலும் கடவுள்வாழ்த்தினை அடுத்து வான்சிறப்பு அதிகாரம் அமைக்கப்பட்டுள்ளதற்கு இறைவன் ஆணையையே காரணமாகக் கூறியுள்ளனர். "முன் இக்கடலைச் சுருக்கி" என்னும் திருஎம்பாவைப்பாடலும் இக்கருத்தே காட்டும். ஆகையால், மழைக்குக் காரணமாவதும் இறையருளே என்பது தேற்றமாம். இதனை மழை பொழி தையலுமாய்த் தானே நிற்கும் என்றுள்ளார் ஆசிரியர்.

மூத்த குடிமக்கட்கு இருப்புக்கூறவந்த தொல்லாசிரியர்கள் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி" என்று கூறிக்காட்டுகின்றனர். எனவே, கடலின்கண், முதலில் மலைகள் எழ, மழையும் பொழிந்து வெயிலும் காய்வதனால் அம்மலைப் பாறைகளே உடைபட்டுக் காட்டுக்கு இடனாகிக் கரைந்தும் உராய்ந்தும் மண்ணாகி நானிலமாதல் நாம் தெரியலாம். இங்ஙனம், கடலினின்றும் தடவரை வெளிப்படலும் இறையருளால் நிகழ்வதேயாம். திருமால்இடம் கடலாகவும், சிவனுறைவரை திருக்கயிலைமலையாகவும் கூறப்பட்டிருத்தலில் இவ்விரண்டிடங்களே இறையுறை இடங்களாகக் காட்டப்பட்டிருத்தல் காணலாம்.

இவற்ருல் வரையும், வாரியும் இருநிலஞகப் பரத்தற்கண் பயன் படுகின்றனவாகும். இம்முறைமை தானே தடவரைத் தண்கடல் ஆமே என்பதனுல் அறியப்பெறும். இவற்ருல் உலகுக்கு அடிப் படையான ஆதாரமாவான் சிவனே என்பது தெளியப்பட வேண்டும் என்க. இயற்கைத் தத்துவ விஞ்ஞான நூல்களும் பூதங்களின் தோற்றரவாதியவற்றை இம்முறையே கூறிச்செல் லுதலாலும் சாத்திரக் கொள்கை முரண்பாடில்லாதது என்பதை நமக்கு வலியுறுத்துகின்றது என்னலாம்.

11. காரண காரியத்தன்மை

மேற்கூறப்பட்டவண்ணம் சிவனை ஆதாரமாகக்கொண்டு ஐம்பூதங்களும், முச்சுடரும், மழையும், வரையும், கடலுமாய் நின்ற இவ்வுலகிடை உயிர்கள் அவற்றின் வினைக்கு ஏற்பத் தோன்றுகின்றன. அங்ஙனம் தோற்றம்பெற்றது அவை மென் மேலும் சிறப்படைய வேண்டியே ஆகும். இதனை வளர்ச்சி முறை என்பர். மக்களாவார், இவ்வளர்ச்சி முறையைத் தத்தம் அறிவு நுட்பங்களுக்கு ஏற்ப வகுத்துக்கொள்ளலுற்றனர். அங்ஙனம் அவரவர் காலம், தேயம், சூழ்நிலை ஆகியவைகட்குத் தக்கவாறு விதித்துக்கொண்ட கொள்கைமுறைகளின் திரட்சிக் குச் சமயம் அல்லது மதம் என்பது பெயராம். கொள்கைகள் பலவாதலின் மதங்களும் பலவாயின; என்ருலும் சிவனையே முழு முதல் என அறிந்து அவனடி அடைதலே பிறப்பின் குறிக்கோள் எனக்கொண்டு, அதற்கான நெறிமுறைகளை வகுத்துக்கொண்டு அவ்வழி ஒழுகலுற்ற சமயமே சிறந்ததாகும். அது சித்தாந்த சைவம் எனப்படும்.

இச் சமயம் மிகவும் பழமையானது. ஆதலால், இது எல்லா விதமான கொள்கைகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டு, அவற்றினும் சிறந்ததாக நின்று, நேரே பிறவாப்பெருநெறியை, எடுத்துள்ள இவ்வொரு பிறவியின்கண்ணே எய்துதற்காவன வற்றைச் சித்தாந்தப்படுத்தி உரைக்கின்றது. இது மற்ற எச்சம யத்தையும் வெறுக்காத இயல்புடையது. மற்றக் கொள்கைகள் யாவற்றையும் ஏதாவது ஒருவகையில் தனக்கு அயலதாகவும், புடையதாகவும் தழுவி நிற்பது. இவற்றையெல்லாம் அகச்சமயம் என்றும், புறச்சமயம் என்றும் பொதுவாக இரு பிரிவுகளுள் அடக்கலாம். கடவுளில்லை எனக்கொள்ளும் உலகாயதத்தையும்

நாளடைவில் தன்னுட்கொள்ளும் தகைமை இச்சித்தாந்த சைவத்திற்குளது. பல தெருக்களும் ஒன்றிலொன்ருகப் போய்ச் சேர்ந்து முடிவிலே எல்லாம் ஆலயவீதியில் போய்க் கூடுதல் போலவே, எச்சமயமும் அதனதன் திறமைக்கேற்பப் படிப்படியாக ஏறி முடிவில் சித்தாந்தப்பேரிடத்தை எய்துகிறது என்னலாம். எல்லாச் சமயங்களும் முடிவாகச் சிவத்தையே அடைவித்தற்கு வாயில்களாகப் படிமுறையில் உள்ளன என்பதே இப்பெரு நெறியின் திறப்பாடு. எல்லா நதிகளும் ஒரேகடலில் கலத்தல் இதற்கு உவமையாகக் கூறப்படும். எந்த நதியும் கடலின் பெரிதன்று. அவ்வாறே எந்தச் சமயமும் சித்தாந்த சமயத்தின் சிறந்ததாகாது. ஏனெனில் சிவத்தின் மேற்பட்ட முழுமுதல் இல்லை. ஆதலால். இதனின் மேலாம் சமயம் பிறிதில்லையாயிற்று. அவ்வச்சமயத்தாரது கடவுளர்களாக நின்று அவரவரையும் படிப்படியாகப் பக்குவப்படுத்துவோனும், தேரின் சிவனொருவனே யாவன். ஆதலின் ஆசிரியர் அயலும் புடையும் எம் ஆதியை நோக்கில், இயலும் பெருந்தெய்வம் யாதுமொன்றில்லை என்று உரைப்பாராயினர்.

இனிச் சைவநெறியின்கண்ணும் முயற்சியில் சிற்சில பேதங்கள் காணப்படலாம். இம்முயற்சி வேறுபாடுகளும் கூர்ந்து நோக்கின் முடிவாய் நிற்கும் ஞானத்துக்கே ஏதுவாம் தன்மை உடையனவாகும். சரியை முதலியவை ஞானத்திற்கொண்டு சேர்க்கும் என்று கூறப்படுவதும் இது கருதியதேயாம். இந்நெறி ஒழுகுவார்க்கெல்லாம், அவ்வந்நெறிநின்று பயனளித்து முடிவில் ஈறிலாப் பெரும்பதமாம் வீடுபேற்றை இறைவன் அளித்தருளுகின்ருனவன். ஆகையால், முயலும் முயலில் முடிவும் நந்திதானே எனலாயினர் ஆசிரியர். எந்த ஊரின் தண்ணீர் எச்சுவையும் எந்நிறமும் உடைத்தாயிருப்பினும் அந்த நீர் ஒரேவிதமான மேகந்தந்த மழைநீரே ஆகும். அவ்வாறே எவ்வெவர் மேற்கொள்ளும் தெய்வமும், நெறிகளும், சிவமும் சிவநெறியுமாகியவையே ஆகும் என்று காட்டுதற்கே ஆங்கே பெயலும் மழைமுகில் தானே என்று கூறியுள்ளார். உயிர்கள் யாவும் குறை அகன்று நிறைவு எய்துதற்கே சிவம் திருவுளம் புரிதலின் நந்தி என்றே நாமம் பூணப்பட்டுள்ளானவன். எனவே, முயற்சியும் பயனுமாவான் இறைவனொருவனே எனத்தெரிதல் தகும். ஆதலின், சிவமே பரமகாரணன் என்க. வினைப்போகத்தை அளந்தூட்டும் தகைமை அவன்கண்ணதே ஆகும்.

12. கண்ணுதலான் காதல் (கருணை)

இறைவனுக்குப் பாசமும் இல்லை; ஆசையும் இல்லை. அங்ஙனமாகவும் அவனுக்கு, உயிர்கள் யாவும் - தேவர்களும் மனிதர்களும் - தன்னடிசேர்ந்து இன்புற்றிருக்க வேண்டுமென்ற விருப்பம் ஒன்று எப்போதும் திருவுள்ளத்தே உள்ளது. இது அவனுடைய ஆசையின் விளைவன்று; இரக்கத்தின் விளைவாம். இதனால்தான் அலகிலா விளையாட்டு உடையவனாக இறைவன் நடிக்கவேண்டியவனாகின்றான். உயிர்கட்கு இறைவன் தந்தை தாயாகின்றான். இம்முறையில் மக்களும் தேவரும் அவனுக்குக் குழந்தைகளாகின்றார்கள். எவ்வளவுதான் யோகநிலையில் இருப்பினும் பெற்றோர்க்குப் பிள்ளையின்மீதுள்ள உள்ளன்பு நீங்குவதில்லை என்பது துணிபாம். கடந்த யோகரும் கடப்பரோ மக்கள் மேல் காதல் என்பர். ஆதலால் இறைவற்கு ஆருயிர்மாட்டுள்ள பரிவு, நீங்காத் தகையதாகும். அங்ஙனம் அவன் யாவர்மாட்டும் பரிவின்றி இருப்பானாயின் ஆருயிர்கள் வளர்ச்சிகுன்றிப் பாழில் உழலவேண்டியிருக்கும். இதனைத் "தென்பாலுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன், பெண்பாலுகந்தான் பெரும்பித்தன் காணேடீ, பெண்பால் உகந்திலனேல் பேதாய்! இருநிலத்தோர், விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ" என மணிவாசகப்பெருமான் கூறிக் காட்டுதலால் அறியலாகும். ஆதலால், நெற்றிக் கண்ணை உடையவனாயிருந்தும் இறைவனுக்கு ஆருயிர்களைக் கரையேற்றவேண்டும் என்ற ஒரே விருப்பம் இருந்தே தீருகின்றதாகும். காமம் செறும் கண்ணுடையவனுக்கும் இந்த ஒரு விருப்பம் இல்லாமற் போகவில்லை, இதனையே, **கண்ணுதலான் ஒரு காதலின் நிற்கவும்** என்கிறார் ஆசிரியர்.

இங்ஙனம் இறைவன் உயிர்கள்பால் பரிவு பெற்றிருத்தலைத் தான் ஞானிகளும், வேதங்களும், ஆகமங்களும், சாத்திரங்களும் பற்பல முறைகளால் கூறுகின்றன. அவ்வாறிருந்தும் சிவனுடைய அன்பார்ந்த அழைப்பினை அறியாதவர்களாய் மீட்டும் பிறப்புக்கே ஆளாகின்றவர்களாகி எவ்வளவோ உயர்ந்த நிலையடைந்த தேவர்கள் இறந்து கேடடைந்துள்ளனர். இவர்கள் இங்ஙனம் இழிநிலை எய்தி வருந்துவதைப் பலரும் புராணங்களின் வாயிலாக அறிவித்திருக்கின்றார்கள். இங்ஙனம் இம்மேதையர் புராணமூலம் அறிவித்தலும் கருணையினாலன்றி வேறில்லை. இவ்வாறு தேவர்கள், கண்ணுதலான் பரிவினை அறியாமல் தவறுபட

ஒழுகிக் கெட்டுப்போன வரலாறுகளைப் பல பெரியோர்கள் பின் வருவோர்களுக்கு எச்சரிக்கையாகச் செய்து வைத்திருந்தும், யாவரும் அண்ணல் இயல்பை அறியாதொழிகின்றனர். இதனைப் பலர், எண்ணிலி தேவர் இறந்தார் என(வும்) என்று கூறியுள்ளார். கண்ணுதலான் நிற்பதைக் கண்டுவைத்தும், தேவர்கள் இறந்தார்கள் என்பதைக் கேட்டுவைத்தும் அறியகிலார்களே எனத் திருமூலர் இரங்கிக் கூறுகின்றாராவர். ஆதலால், என என்ற சொல்லின் பின் உம் என்பதைக் கூட்டிப் பொருள் காண்பது நன்றாம், பலர் என்ற பெயரை அவ்வரியில் என என் பதற்கு எழுவாயாகக்கொள்வது பொருந்தும்.

இவ்வாறு நேர்முக ஆய்வாலும், உபதேச வழியாலும் உண்மையை அறிந்துவைத்தும், இம் மண்ணுலகத்தவர், தமக் குத் துணைபுரியவன் சிவபெருமான் என அறிந்தொழுகிப் பேரின் புக்கு ஆளாகாமல் கெடுகின்ற தொழில் இரங்கத்தக்கதாம். திருமூலர், மண்ணுலகத்தவர் கேட்டுக்கே முதன்மைதந்து பெரி தும் இரங்குகின்றார் ஆவர். இதனால் நம்மீது திருமூலர்க்குப் பெரிதும் பரிவு இருத்தல் அறியப்படும். மண்ணுலகினர், சிவ பிரானை நேரிற்காணுதாராயினும், சிவனே ஆம் குருமுகமாக உபதேசவழியாலும் தீட்சையாதிய ஒழுக்கமுறையாலும் அறிந்து வழிபட்டு உய்தல் கூடும் என்பதை ஈங்கு நினைப்பூட்டுகின்றார் ஆசிரியர் என்னலாம். மண்ணுலகத்தவரின் அறியாமைபற்றி இரங்குவதோடு திருமூலர் நின்றுவிடாமல் வானுலகத்தவர் அறியாமைபற்றியும் இரங்குகின்றார். வானுலகர் திவ்வியசரீரம் முதலிய சிறப்புகளைப் பெற்றிருந்தும் இன்பத்தை இழக்கின்றார் களே என இரங்குகிறார். "பரிவதூஉம் சான்றோர் கடன்" என்ற இடத்துக்குத் திருமூலர் சான்றாளராக நிற்றலை இங்கு நாம் காணலாகும்.

ஒரு பொருளின் இருப்பையும், அருமையையும் அறிய மாட்டாதார் அப்பொருளாலாய பயனை எய்தப்பெறார். இதனால் பயனை நாடுவோர் பொருளை முந்துற அறிதலே தக்கதென்பது தெளிவாம். ஆனதுபற்றியே, பொருளிருப்பினையும் அதனியல்பி னையும், அந்தப்பொருள் தம் அருகில் கிடப்பதையும் நாம் தெரிந்துகொள்வதும் முதற்கடமையாம். இவற்றையெல்லாம், மண் உறுவார்களும் வான் உறுவார்களும் அண்ணல் இவன் என்று அறியகிலார்களே என்ற அடிகளால் நாம் அறியலாம்.

மண்ணுறுவார், வானுறுவார் என்ற சொல்லாட்சிகளால் அவர் தம் வாழ்க்கைகளின் நிலையாமைத்தன்மையையும் ஆசிரியர் இங்கு ஞாபகப்படுத்தியுள்ள நயம் பாராட்டத் தகுவதாகும்.

13. சிவன் அளப்பரியன்

நம்முடைய மனம் பலபல எண்ணும் பான்மை உடையது. ஒன்றே எண்ணி ஒடுங்கும் இயல்புடையதன்று. இவ்வாறு மனத்தின் ஆற்றல் பலபடச் சிதைவுற்றுச் சிதறுமாயின் உயர்ந்த ஒன்றை எண்ணி அறியுந்திறத்தினை இழக்கும். தண்ணீரெல்லாம் ஓரிடத்தே தேக்கம்பெற்றால் அதன் விசை அதிகரித்துச் சிறந்த செயல்களையெல்லாம் ஆற்றும்வன்மைபெறும். அவ்வாறின்றிப் பரவலாகி ஓடிவிடுமானால் தனக்குள்ள விசைத்திறனை இழக்கும். அவ்வாறுவது நமது மனமும். எண்ணம் ஒன்றுபடுவதே திண்ணம் தரும். இவ்வாறாக இல்லாமல் தனது வன்மையை இழந்து விடுதல் நம்மிடம்மட்டில் நிகழ்வதன்று. மாலோன் முதலாகிய எல்லா அதிகாரத் தேவர்களிடமும் நிகழ்வதாகும். இவர்களும் தத்தம் அதிகாரம் முதலியவற்றால் செருக்கடைந்து தம் நிலைமையை உயர்வுடைத்தென மதித்து முழுமுதல்வனை நினையாதே அவதியுறுதல் உண்டு. ஆதலால் நாம், செல்வம் பதவி முதலிய அநுகூலங்களிருப்பின் கவலையற்றுக் கடவுளை நினைக்கலாகும் என நினைத்தல் தவறும். உலகளந்த செயலருமைபற்றிச் செருக்கடைந்தமாலும், மென்மையான இருக்கை அடைந்து செருக்கிய பிரமனும் தத்தம்மையே உயர்வுடை ஈசரென மதிமயக்கத்தால் எண்ணி ஈசனால் தாமடையக்கூடிய இன்பினை இழந்திடுவாராயினர். எனவே, செல்வமும் பதவியும் நெஞ்சத்தில் கணக்கற்ற எண்ணங்களை விளைத்து ஈசனை எண்ணுதபடி செய்துவிடும். "செல்வம் வந்துற்றகாலை தெய்வமும் சிறிது பேணார்" எனவும். "எண்பதுகோடி நினைந்தெண்ணுவன" எனவும் கூறப்பட்டுள்ள நீதிவாசகங்களும் இதனை உணர்த்துவனவாம். ஆதலால் நாம் செல்வம் பதவி முதலியவைபற்றிச் செம்மாந்து விடாமல் இருந்து, நம்முடைய தாழ்வையும் கருதின் பிறகு ஈசனை எண்ண நேரிடும். இதனை நமக்கு அறிவுறுத்தவே, மண்ணளந்தான் மலரோன் முதல் தேவர்கள் எண் அளந்து இன்னம் நினைக்கிலார் ஈசனை என்றுள்ளார் ஆசிரியர். இவர்கள் யாவரும் மாயைக்கு உட்பட்டவராதலால், மாயைக்கு அப்பாற்பட்ட ஈசனை அளந்தறியும் வல்லமை உடையர் ஆகார்.

ஆகாயம் அளப்பரும் பரப்புடையது. அதனை நாம் அளந்தறிவது அரிதாம். என்றாலும் சூரியன் அவ்வாகாயத்தை அளந்தறிந்தவனேயாவன். ஆகாயத்தையே அளந்தறிய மாட்டாத நாம், ஆகாயத்தையும் அளவிடும் சூரியனை எப்படி அறிய முடியும்? சூரியன் கிரணத்தெல்லைக்குள் இருக்கும் நாம் அவன் கிரண எல்லையின் ஒருபகுதியையே அறிகிறோம்; முற்றும் அறியமாட்டோம். அப்படி அறிய விரும்பின் நாம் சூரியனுக்கு மேற்பட்டிருந்து காணவேண்டிவரும். நம் கண்கள் சூரியனொளி உதவிகொண்டு காணுமியல்பின. ஆதலால், சூரியனின் மேலே செல்லவும், அதனுதவியின்றி அதனைக்காணவும், அளவிடவும் இயலாது. நாம், சிவனுதவிகொண்டு அறியும் இயல்புடையோம். அவ்வாறிருக்கவும் நாம் சிவனையே தனித்துக்காண விரும்பின் இயலாது. கடலுள்ளே வாழும் எத்தகைய மீனும் கடல் முழுவதையும் ஒருசேரக்காண ஒருபோதும் இயலாது. கண்ணுக்குப் பொருள்களை உயிர் உள்ளிருந்து காட்டியுதவுகிறது; என்றாலும் கண் அவ்வுயிரைக்காணாது. தூலம், சூக்குமத்தை அறிதல் இயல்வதன்று. சிவம் எல்லாருள்ளத்தும் இருந்து அறிவிப்பவன். ஆதலால் யாவர் உள்ளமும் சிவத்தை அறியும் வன்மையுடையன அல்ல. பிரகிருதி மாயைக்குட்பட்டுக் கிடக்கும் நாம், மாயை முழுதும் கடந்து நிற்பானைக் காண்டல் இயலாதாகும். இங்ஙனம் காண்டற்கரியானாகச் சிவன் இருத்தலால் அவன் இல்லாப்பொருளாகான். அவன் வானவெளிபோல் எங்கும் பரந்துள்ளான், வானம், பொருளினுள்ளே கரந்தும், புறத்தே பரந்துமிருப்பது போன்றே இறைவனும் உள்ளான். இச்செய்திகளை நாமறிந்து ஈசனை நம் சிற்றறிவாலும் சுட்டறிவாலும் அளவிடற்கரியவன் எனத்தெளிதல் வேண்டும். இச்செய்தி, **விண்ணளந்தான் தன்னை மேலளந்தாரில்லை - கண்ணளந்து எங்கும் கடந்து நின்றானே** என்பதனால் நாம் தெரிதல் கூடும்.

14. ஈசன் கடந்தநிலை

பிரமன் முதலியவர்கட்குத் தனித்தனி அண்டங்கள் கூறப்படுகின்றன. அவரவர்களும் அவரவர் அண்டமளவும் இருந்தாங்கு காணும் இயல்புடையவராவர். இவர்கள் அதிகார எல்லை அவ்வவ்வளவினதேயாகும். அதற்கு அப்பாற்பட்டதை இவர் அறியார். ஒரு சிற்றரசனுக்கு அவன்நாட்டளவும் செல்வாக்கு

உண்டு. ஆனல் பேரரசனதிகாரம் இவனுக்கு இராது. பேரரசனுக்கோ என்றல் சிற்றரசன் நாட்டினும் அதிகாரம் செலுத்தும் பெருமை உண்டு. இப்படித்தான் பிரமனுக்குப் பிரமனுலகளவும், மாலுக்கு அவனுலகளவும், உருத்திரனுக்கு அவனுலகளவும் ஆணை செலுத்தும் திறமை உண்டு. எல்லா உலகுகளையும் ஒரு சேர ஆணை செல்வித்து ஆளுந்திறமை இவர்கட்கிலது. பேரரசு போன்றன் சிவன். ஆதலால், அவன் இருந்தாங்கு யாவையும் கண்டு நிற்கும் பேரியல்பினன் ஆவான் என நாம் தெரிதல் தக்கதாம். விரிபொழில் முழுதாய் விரிந்தோன் ஆவன் சிவன். கற்பமும் இறுதியும் கண்டோன் சிவன். ஒழிவற நிறைந்து மேவிய பரமன் சிவன். ஆயினும் ஒளிக்கும் சோரன் சிவன். இஃது அவனது கடந்தநிலையியல்பாம். இதனைக் கடந்து நின்றன் ... கண்டு நின்றனே என்ற அடிகள் உணர்த்தி நிற்கின்றன ஆகும்.

15. சிவன் விரிவுநிலை

எல்லாம் ஒடுங்கி நிற்கும் நிலை மகாசங்காரம் எனப்படும். இந்த நிலையில் சிவம் ஒன்றே விளங்க, ஏனைய உயிர்கள் யாவும் உறங்கிக்கிடக்கும் நிலையில் உள்ளனவாம். இந்தப் பேரொடுக்கம் திரும்பவும் புடைபெயர்ச்சி எய்தவேண்டும். இதனை முதற்கண் எண்ணமிடுவோனும் சிவனே ஆவன். ஏனெனில், அவனொருவனே ஒடுங்கா நிலையினன். இன்னவாறன ஒருவன் இல்லான் எனில் புனர் உற்பத்தி என்பதே இல்லாமல் துன்புற நேரும். இப்படித் தனிப்பொருளாக இருப்போன் உயிர்கட்கு ஆக்கம் செய்ய எண்ணமிடுகையில் அவற்குள்ளேயே ஓரசைவு நிகழ்கின்றது. அப்போது பேரொளி ஒன்றே நிலவுவது. இதனை அரும்பெருஞ் சோதி என்பர். இதற்கு ஆதியும் அந்தமும் இல்லை. இந்த நிலை ஒளியும் அதனின் பிரியாச்சூடும் போல்வதாகும். இது சூரியனும் அதனின் பிரியாக் கிரணமும் போல்வதுமாம். இது சிற்சத்தி எனப்படும் அருட்சத்தியோடு பிரிப்பறநிற்கும் சிவத்தின் நிலையாம். இதனைப் பாடல் அருட்சோதியுமாய் என்கிறது. இதன் பிறகு புவனங்களின் புகலிடமாகியதும் தோற்றமும் ஒடுக்கமும் செய்விக்கப்படுவதாகியதுமான சுத்தமாயை எனப்படும் முதற் காரணம் தோன்றவேண்டும். அங்ஙனம் அதனைத் தோற்றுவித்தல் அறம்பற்றிய செய்கையேயாகும். அதாவது நீதித்தன்மை ஆகும். இந்த நீதித்தன்மைக்கு எப்போதும் குறைபாடு இலது.

ஆதலால், அறத்தின்நிலை எனப்படுவது இருந்தாங்கு இருக்கும் விரிவும் கூம்பலுமற்றதோர் இயல்பினதாகும். இது சிவத்தின் பேரறிவு நிலை எனப்படும். இதனைப் பாடல், சுருங்காததோர் தன்மை உள் நீதியுமாய் என்கின்றது. இந்நீதிநிலை எப்போதும் அழியா இயல்புடையது. இதனால் செயல் எனப்படுமது நிகழும். இதனைப் பாடல் நித்தமாகி நின்றானே என்கிறது. இதுகாறும் சிவத்தின் சிறப்பான இயல்பு மூன்று நிலையதாகக் கூறப்படு கின்றது. அவை சோதியும் நீதியும் நித்தமுமாம். இவை யாவும் நாம் உணரக்கூடியதான நிலைமைய அல்ல. இந்த நிலையினைச் சூக்குமமான லயநிலை என்னலாவர் அறிஞர்.

இதன்பிறகு சிவம், எண்ணம் (விழைவு) அறிவு, தொழில் களின் சூக்குமமான ஐந்தொழிற்காம் நிலையினை எய்துகின்றது. இதனையே, உயிர்களின் இச்சை ஞானக்கிரியைகளைக் கிளர்த்துவ தாகிய முதல்நிலை என்பர். இதனைப் பாடலில் ஆதியுமாய் என் றுள்ளார் ஆசிரியர், வித்து. நீரில் ஊறிப் பருமனுவது போன்று மேற்கூறப்பட்ட நுணுக்கமான இச்சையாதிகள் மூன்றும், உயிர் களின் போகாநுபவத்துக்கு ஏற்ற நிலையினை அடைகின்றன. இதனைப் போகநிலை என்றும், சதாசிவநிலை என்றும், சகள நிட் களத் திருமேனி நிலை என்றும் கூறுவர். இதன் பிறகு சுத்தப் பிரபஞ்சங்கள் தோற்றித் தொழிலுறுத்தப்படுகின்றன. இதனை அதிகாரநிலை அல்லது சகளநிலை அல்லது மகேசுரநிலை என்பர், இவைகள், ஆதியுமாய் அரனாய் உடலுள் நின்ற வேதியுமாய் எனப்பட்டுள்ளன.

இதன் பிறகு அசுத்த பிரகிருதி மாயாபுவனங்களும் அவற் றிற்கான அதிகார தேவர்களும் நிலையுறுத்தப்படுகின்றனர். இதனை விரிவுநிலை என்பர். இது அதிட்டித்து நிற்கும் நிலையாம். இதன்பிறகே தூலமான ஐந்தொழிலும் நிகழ்கின்றன. இங்ஙனம் நிகழ்தற்குப் பரசிவமுதல் பிரமன் ஈருக உள்ள தேவர்களிலும், அவர்களானியலும் பிரபஞ்சங்களிலும் முழுமுதற்பொருள் நிறைந்து தங்கி நடத்துகின்றானவன். இதனைப் பாடலிலுள்ள விரிந்து ஆர்ந்து இருந்தான் என்ற இடத்தால் அறியலாகும்.

எனவே, அருட்சோதியாய் நீதியாய் நித்தமாகிநிற்கும் முழு முதலே ஆதியாகியும், அரனாகியும், வேதியாகியும், விரிந்தும் ஆர்ந்தும் இருந்து யாவற்றையும் நடத்தியருளுகின்றான் என்பது

கருத்தாம். எப்பொருளும், எத்தேவரும், எவ்வுயிரும் உள்ளும் புறம்புமாம் முழுமுதலின் இயக்கமின்றி (விரிவின்றி) இயங்குவது இல்லை என்னலாம். ஆதலால், அனைத்திற்கும் ஆதியாகவும் அந்த மாகவும் உள்ளான் சிவனே என்க.

16. குணம்பயில் முறை

துன்பம் வந்தபோது தெய்வத்தைப் பரவுதல் என்பது யாவர்க்கும் பெருவழக்காம். தேவர்களும் இப்படித்தான் ஒழுகு கின்றார்கள். இதனால் நாம், துன்பநீக்கத்தை நாடினால், ஏனைத் தேவர்களை, திருமாலை, பிரமனை, உருத்திரனைவேண்டிப் பயனில்லை. மகாதேவனையே வேண்டி இன்புறவேண்டும். எனவே. துன் பத்தை நீக்குவதும், இன்பத்தை ஆக்குவதுமாகிய இரண்டுங் கூடச் சிவபிரானால் நிகழ்வது ஆகும் என்று நாம் தெரிதல் வேண்டும். துன்பம் அடைந்துள்ளவர்களின் துன்பத்தைக் களைய விரும்புவோர்க்கு இரண்டு குணங்கள் அவசியமாக இருக்க வேண்டும். அவை, துன்பங்கண்டு இரங்குதலும், அத்துன்பத் தைப் பரிகரிக்கும் ஆற்றல் உடைமையும் ஆம். இவ்விரண்டில் ஒன்று இல்லாவிடினும் அடைக்கலம் அடைந்தோரின் துன்பம் ஒழியாது. எனவே, துன்பம் ஒழிய விரும்புவோர், மகாதேவனின் இரக்கமுடைமையையும், வலிமையுடைமையையும் புகழ்ந்து நிற்றல் அமைவுடைச்செயலாம். தேவர்களும் இங்ஙனமேசெய்து தான் தங்கட்கு இராக்கதர்களால் விளையும் துன்பங்களை நீக்கிக் கொள்கின்றார்கள். சிவபெருமான் அருளுடைமை பெரிதாம். அருளுடையார், தம் அடைவார்பால் காணப்பட்ட குற்றங்களை ஒரு சிறிதும் பாராட்டமாட்டார். புறவிதழைக் கொன்றை மலரின் அகவிதழ் அசட்டை செய்து தள்ளிவிடுதல் இல்லை. இவ்வாறுவதே அருளாளர் பண்பாம். இதனை உள்ளுறுத்துரைப் பது கோதுகுலாவிய கொன்றை என்பது. இத்தகைய கொன்றை மலரைக் குழன்ற சடையின்கண் உடையவன் பெருமான். எனவே, பிரணவப்பொருளாக விளங்குபவன் இறைவனுவான் என்பது தெரியலாம். இதனால் இறைவன் மேன்மை புலப்படுத் தப்பட்டதென்னலாம். மற்றும் அவன் அருள்பெரிதுடையான் ஆவன். இதனை, மாது குலாவிய வாள் நுதல் பாகனை என்ற இடம் காட்டும். அம்மை இரக்கத்தின் அறிகுறியாவாள். ஆகையால், பெருமான், தன்னை வணங்குபவருடைய குற்றமும் குணமாகக்கொள்ளும் பேரருளாளன் என்பது தெளியலாம்.

சடையுடைய பாகனுகிய பெருமான் பேராற்றல் உடையவன். பாகன் என்பது செலுத்தும் ஆற்றல் படைத்தவனைக் குறிக்கும். ஆதலால், அடைந்தோர் துன்பம் எவ்வளவு பெரிதாயினும் பஞ்சுப் பொதியைத் தீப்பொறி பொசுக்கி விடுவதுபோலப் போக்கிவிடுபவன் சிவன் என்பது தெரியப்படும்.

இங்ஙனம் இறைவன் அருளும் ஆற்றலும்கொண்டு அடைந்தோர் அலக்கண் துடைப்பவன் என்பதை அமரரும் தேவரும் புரிந்த செயல்களாலும் நாம் அறியலாகும். தேவர்கள் துன்பம் அடைவதெல்லாம் இராக்கதர்களின் வளைப்புக்குட்படும் போது தான். அப்படி அரக்கர்களின் வளைப்புக்குட்பட்டுத் துன்புற்ற அமரரும் தேவரும் - புண்ணியத்தால் மிக்கவரும் அதிகாரத்தால் மிக்கவரும் ஆகிய இருதிறத்தாரும் தங்கள் குற்றங்களை விட்டவர்களாகி இறைவனைச் சரணடைந்தவர்களாகி அவனுடைய குணத்தைப் புகழ்தல் மேவுவர். இதனை, யாது (இராக்கதர்கள்) குலாவி (குலாவ) அமரரும் தேவரும் கோது குலாவிக் குணம் பயில்வாரே என்பதனுல் அறியலாகும். இதனுல் அமரரும் தேவரும் துன்பநீக்கம் பெறுதற்குப் புரியும் செய்கை உணர்த்தப்பட்டது. ஆதலால், நாமும் வினைத்துயரொழிதற்கு இறைவன் புகழையே எப்போதும் சொல்லிப் போற்றவேண்டும் என்பது கருத்தாம். "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்பது குறட்பாட்டு.

17. ஈசன் உறவு

உயிர்கட்கு, பொய் உறவும் உண்மை உறவும் என இரண்டு உறவுகள் உள்ளன. பொய் உறவு என்பது உயிர் தங்கப் பெற்றிருக்கும் அருவுடம்பும் உருவுடம்பும் ஆம். இவ்வுடம்புகளுடன் எவ்வளவுதான் ஜீவன் கலந்திருந்து எவ்வளவுகாலம் அவற்றுடன் பற்பல பிறப்புக்கள் எடுத்தெடுத்து நின்ருலும் இவற்ருல் துன்பமே பெருகுமல்லது இன்பம் விளையாது. உயிர்பெற்றுள்ள உடம்புகளைத் தொகுத்துரைப்பின் பரகாயம் அபரகாயம் என்ற இரு பிரிவுள் அடங்கும். இவற்றுள் பரகாயம் நுண்ணிது. தூமாயைத் தோற்றமுடையது. அபரகாயம் பரியது, அது தூலமாயது. இது தூவாமாயைத் தோற்றமுடையது. ஆதலால் பரிபாஷையாகச் சொல்லும்போது வெண்காயம் எனவும் பெருங்காயம் எனவும் பேசுவர். இவற்றுள் முன்னது உரிக்க உரிக்க இறுதியில் உள்ளீடின்றி மறைவது. பின்னது வாசனையாகியும் நின்று

தாக்கும் இயல்புடையது. இவ்விரண்டும் எவ்வளவுதான் கலந்து கொதிப்பினும் நறுமணம் நல்கும் திறத்தன அல்ல. ஆனால் பார்வைக்குக் கரியநிறமாகக் காணப்படினும் மான்மதமெனப் படும் கத்தூரி சிறிது தொடினும் நறுமணம் நல்கி இன்பம் பயக்கும். ஆதலால், முன்னைய இரண்டால் நறுமணம் நுகர முயல்வது வீண்முயற்சியே ஆகும். பின்னது கொதிக்கவைக்கும் முயல்வின்றியே தொட்டமாத்திரத்தானே நறுமணம் தருவதாத லால் இச்சிறு முயற்சியின் விளைவு பெரிதாம். மக்களாகிய நாம் மேலே கூறப்பட்ட இருவகை உடம்புகளோடு பற்றுற்று எவ்வளவுதான் பிறப்பெடுத்தாலும் வீடுபேற்றின்பம் விளையாது. ஆனால் கத்தூரியைச் சிறிது தொடினும் நறுமணம் பெறுதல் போல, உயிர்க்குயிராய்ச் சூக்குமமாக விளங்கும் இறையருளைச் சிறிதளவு (பற்றற்று) நாடலுறினும் அது வீடுபேற்றுக்கு வழி செய்வதாகும் என நாம் தெளிதல்வேண்டும். பற்றுவிடற்கும், இவ்வொருபற்றைப்பற்றுதலே அமைவதாகும் என்பர். ஆதலால், பற்பல நன்மைகளை நாடி அந்த நன்மைகள் இந்த இடத்தில் உள்ள இந்தத்தேவரால் கிடைக்குமென்று பற்பலரைச் சிறந்த தேவரென எண்ணி உழலுதல் நன்றன்றாம். இவர்களில் எந்தத் தேவனும், சிவம் அளிக்கவல்ல வீடுபேற்றினை அளிப்போனாகான் என்பது துணிபாம். ஆதலால் சிவமே நமக்குச் சிறந்த உறவாவர். ஏனை எத்தேவும் அங்ஙனம் ஆகார் என்க. இக்கருத்துக்களைக் **காயம் இரண்டும்** என்னும் பாடலின் முன்இருவரிகள் உபமான மாகவும் **அவ்வழி** (அதுபோல) என்பதன் பின் உள்ள இறுதி இருவரிகளும் உபமேயமாகவும் நின்று தெரிவிப்பதை நாம் ஓர்ந்து உணரலாகும். **ஈசன் உறவுக்கு எதிரில்லை** என்பதே நாம் கொள்ளவேண்டும் துணிபாம். கத்தூரிமணம் நுகரக் கருது வோர், காயங்களிரண்டைக்கலந்து கொதிக்கவைத்தல் பயனில் செயலாகும் என்பது உவமை ஆகும். அந்த அந்தத் தேசத்தினும் அவரவரால் கூறப்படுபவரைச் சிறந்த தேவன் எனவும், அவனே வீடளிப்பவன் என எதிர்பார்ப்பதும் பயனில் செயலாம் என்பது **தேசங்கலந்தொரு தேவன் என்று எண்ணினும் எதிரில்லை** என்ற அடியினால் விளங்கும்.

18. எச்செல்வமும் சிவன் தரும்

மக்களாவார் ஆசை அறுத்தல் எளிதன்று. இம்மையின்பம், மறுமை இன்பம், வீட்டின்பம் என்னும் மூவகை இன்பங்கள்

உண்டு. இவற்றுள் இம்மைக்குரியது செல்வப்பேறு. மறுமைக் கானது புண்ணியத்தளவுடைய சுகப்பேறு. வீட்டின்பமே பிற வாப் பேரின்பமாம். இவைகளுள் சிலர் செல்வப்பேற்றையே பெரிதென மதிப்பர். ஒருசிலர் புண்ணியப்பயனில் வாஞ்சை வைத்து மறுமைச் சுவர்க்க இன்பத்தை மேவுவர். மிகச் சில பக்குவர்களே வீட்டின்பினைமட்டில் விழைவர். எவர் எந்த இன்பில் விருப்பம் வைத்தாலும், அவர்க்கு அவ்வின்பினைத் தந் துதவும் பெருந்திறலோன் சிவபெருமான் ஆவன், இவைகளுள், செல்வப்பேற்றினையே பெரிது என மதிப்பினும் விரும்பினும் அதனைத் தட்டாமல் தருவன் சிவன் என்பதை இச்செய்யுளால் திருமூலர் தெரிவிக்கின்றனர். இதனால், சிவன் வேண்டுவார் வேண்டுவதே ஈவான் என்பது போதரும். செல்வப்பேறு அற்ப மானதாயிற்றே இதனைச் சிவன் நல்கியுதவுவனோ மாட்டானோ, இதனை வேறு தேவரை வேண்டிப்பெறவேண்டுமோ என்று நாம் நெஞ்சம் கவலவேண்டுவதில்லை. இதற்கு உதாரணம், குபேரன் நிலைமையாம். குபேரன் வடதிசை வேந்தன் ஆம் தேவன். இவன் தலைநகரம் அளகையம்பதி. இவன் த்வப்பயனால் சிவன் இவற்கு எல்லாவகைச் செல்வமும் குறைவற அளித்துதவியுள் ளான். ஆதலால், இவனை நிதிபதி என்பர். எனவே, அரசுச்செல்வ மும் அரும்பொருட்செல்வமும் அளகேசன் சிவபெருமானால் அடைதரப்பெற்றுள்ளான் ஆவன். ஆகையால், நாம் தாழ்வுடைத் தன்மை வாய்ந்த செல்வத்தை நயப்பினும் அதற்காக வேறு சிறு தேவரை நாடவேண்டியதில்லை. சிவனொருவனையே நாடுதல் சாலும் எனத்தெரிதல் நன்றாம். இது குறித்தே, **அதிபதி செய்து அளகை வேந்தனை நிதிபதிசெய்த நிறைதவம் நோக்கி** என்றுள் ளார் ஆசிரியர். "பொன்னும் போகமும் புணர்ப்பானை" என்பர் திருவுடையார். "ஆயிரம் பொன் கொடுப்பர்போலும் ஆவடு துறையனாரே" என்பதும் இத்தன்மை தெரிவிப்பதாம்.

இனி, செல்வப்பேறு கருதியே சிவத்தைப் பூசிப்பினும் அதனை அளித்தருளுவன் சிவன். குபேரனுக்குச் செல்வமெல்லாம் தந்தளித்திட்டமையால், இன்னும் அதனையே பின்னுங்கேட்டு வேண்டுவோர்க்கு இல்லையென்பனோ என்று ஐயம் ஒருசிறிதும் தேவையில்லை. திருமக்கள் கொழுநனாகிய திருமால், தமக்கும் அங்ஙனம் ஆக்கமருளவெண்டுமெனச் சிவபெருமானை ஆதரித் துப் பூசிக்கலானான். அப்போது, திருவேயாக விளங்கும் எம் பெருமானாகிய சிவன் அவற்கும் திருநிலையம் வழங்கியருளினான்.

எனவே, திருவுக்குத் திரு ஆவான் திருமாலும், திருமாற்குத் திருவாவான் சிவபெருமானும் என நாம் தெரியலாம். இதுஈ ய்துபதி ஆதரித்து ஆக்கமது ஆக்கென இதுபதி கொள் என்ற எம்பெருமானே என்பதால் விளங்கும். கொள் எனக் கொடுப் போனே உயர்ந்தோனுவன் என்பது தெளிவாம். ஈ என இரப் போன் இழிவுடையோன் என்பர். இதனுல், சிவன் பொன்னை வேண்டினும் நல்கும் நல்லருளாளன் என்பது கருத்தாகக் கொள்க.

19. சிவன் புகலிடமாவான்

குற்றஞ்செய்தோரும், துன்புற்ரோரும் தமது குற்றத்தை உணர்ந்து, துன்பொழிய வேண்டுவராயின் சிவன் அவர்தம் குற்றத்தையும் குணமாகக்கொண்டு மன்னித்தருளி அவர்தம் துயரத்தையும் துடைத்தருளும் பேரருளுடையான் ஆவன். ஆதலால், நாமும் எவ்வளவு குற்றமுடையவராயினும் அக்குற் றத்தைப் புரிந்திட்ட தீதினை முறையிட்டு வேண்டின் அக்குற்றத் தின் பயனுன தீமையின் நீங்கப்பெறலாம். அன்றியும், துன்பங் கள் இருப்பினும் ஒழிக்கப்பெறலாம். ஆனுல், குற்றம்செய்தவர், சிவனறியமாட்டான் என ஒரு சிறிதும் மறைத்தல் ஒண்ணுது. தீவினையைச் சுட்டெரிக்கும் ஆற்றல் சிவனுக்கே உளதாம்.

சிவன் சர்வசங்காரகாலத்தே மணம் கமழும் பொழில்கள் எனப்படும் ஏழுலகையும் அழித்து இடுகாடாக்குபவன் ஆவன். ஆதலால், குற்றத்தைக் கொளுத்தி அழித்துதவல் சிவற்கு அரிய தொரு செயலாகாது. இதனை, இது பதி (இதனை உறுதியாகக் கொள்) ஏலம் கமழ் பொழில் ஏழும் முதுபதி செய்தவன் என்ப தால் அறியலாம். இதனுல், ஏழ்நரகங்கட்கும் ஏதுவாம் குற்றம் புரியினும் சிவனை வேண்டிப் போக்கலாமென்பது பெறப்பட் டது. சிவன் இயல்பாகிய முற்றுணர்வினன். ஆதலால் அவன் அறியாதது இல்லை. எனவே, நாம் அவனறியாதபடி எதனையும் மறைக்க இயலாது என்பது தெளிவாம். இது மூதறிவாளன் என்ற தொடரால் விளங்கும்.

முன்னம், சந்திரன் தான்புரிந்த குற்றத்தினை உணர்ந்தானுகிச் சிவனடியில் சரணம்புக்கு வேண்டினுன். ஆகையால், பரமன் அவன்பால் இரக்கங்காட்டி அவனுக்கு வாழ்வளித்துத் தன் முடி மீது அணியாக்கிக்கொண்டு ஆதரிப்பானுயினுன். "பிறை நுதல்

வண்ணமாகின்று; அப்பிறை பதினெண்கணனும் ஏத்தவும் பெறுமே" என்பது புறநானூறு. இதனுல், நாம் அவனடியே தஞ்சமாகக் கொண்டால் எக்குற்றமும் அறப்பெற்று உய்தி எய்தி வாழலாகும் எனத் தெரியலாம். இச்செய்தியே விதுபதி செய்த வன்மெய்த்தவம் நோக்கி அதுபதியாக அமருகின்ருனே என்பதால் உணர்த்தப்படுவதாம். வலியமெய்த்தவமாவது சிவனடியே பற்றிக்கிடத்தலாம். "வால் அறிவன் நற்ருள் தொழார் எனின் கற்றதனுல் ஆய பயன் என்கொல்?" என்னும் குறளுரை இங்குச் சிந்தித்துப்பார்த்தல் சிறப்பளிக்க வல்லதாம். இதனுல் சிவனடியே புகலிடமாம் என அறிக!

20. சிவனுருவுகள்

பரந்த சிவத்தினை நுண்ணிய உள்ளீடாகக் கொள்ளாத எப் பொருளும் எங்கும் இல்லை. தோற்றம் இல்லாத காலத்தும் எல்லாம் சிவநிறைவினுள்ளே நுண்ணிதாக ஒடுங்கித் தங்கி உள்ளனவாம். பழமும், காயும், பிஞ்சும், பூவும், அரும்பும், இலையும், கிளையும், தண்டும், வேரும், மரமுமாகியுள்ள பொருள் முழுதும் நுண்மைப்பட்டு வித்துக்குள்ளே அங்குரமாகி அடங்கிக் கிடப்பதுபோன்றே எல்லா உயிர்களும் ஏனை உலகுகளும் பிறவும் தத்தம் காரணங்களில் ஒடுங்கிச்செல்ல, முடிவில் யாவும் தனக்கொரு முதல் இல்லாத சங்காரகருத்தனுகிய சிவனுக்குள் அடங்கிவிடுகின்றன. ஆதலால் முடிவு நிலையில் எவராலும் காணப்படாத உள்பொருளாக இருப்போன் சிவனெருவனே ஆகும்.

பின்னர், வித்தினின்று எல்லா உறுப்புக்களுடனும் மரம் வெளிப்படுவதுபோலவே சிவத்தினின்று எல்லா உலகும் உயிர்களும் வெளிப்படுகின்றன. எனவே ஒடுங்கிய சங்காரமும் உற்பத்தியுமாகியுள்ளான் சிவனே என்பது போதரும். சிவனுக்கு அந்நியமாய் எப்போதும் எப்பொருளும் இருப்பதில்லை. ஆதலால், பிரமன் படைப்புக்கு முந்தியதாகவும், உருத்திரன் அழிப்புக்குப் பிந்தியதாகவுமிருக்கும் ஒப்பற்றமூலப்பொருள் சிவமே. இங்ஙனம் மூலமாக விளங்கும் நிலையில், சத்தியையும் தன்னுட் கரந்து நிற்றலால், சத்திக்கும் அடிப்படையாகியுள்ளான் சிவன் என்பது தெரிதல் கூடும். இஃது எல்லாங்கடந்த நிலை ஆகும். இதனை, முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த அடிகள் என்பதனுல் அறியலாம்.

அவ்வாருயின், இத்தகையோனைப் பிறப்பின் பின்னர் நாம் அறியவருதல் எவ்வாறு என்ற ஐயம் எழுமன்றே! இங்ஙனம், தான் முதல்வனுகவும் பிறவாகவும் உள்ள செய்திகளை உயிர்கள் அறிந்து நன்னெறிப் படரவேண்டும் என்பது பற்றியே இறைவன் ஒலியும் வரியுமாகிய வடிவுகொண்ட வேதமாக வெளியிட்டுள்ளானுவன். இங்ஙனம், வேதரூபியாக நின்று சிவன் வெளியிடாதிருப்பின், அவனை உணருமார்க்கமே தெரிந்து நடக்க ஏதுவின்றிப்போம். வேதத்தில் இறைவனியல்பே பல்வேறு வகையாக யாவர்க்கும் ஏற்ற பொதுமுறையில் கூறப்படுகிறது. ஆதலால், வேதமுரைக்கும் நெறிகள்யாவும் இறைவன் உகப்புக்குரியனவேயாகும். ஆனதுபற்றியே வேதாகமங்கள் இறைவன் உருவின என்பர். இதனை, அடிகள் உறையும் அறன் நெறி நாடில் என்பதால் உணரலாம். இங்ஙனமாய வேதரூபியாக இறைவன் நிற்பது அவனது அந்தண்மையாலாவதே. ஆதலால்தான் "அற வாழி அந்தணன்" என்ருர் வள்ளுவனுரும்.

இனி, வேதத்தில் இறைவனுருவாகப் பலப்பல கூறப்படு கின்றதே எனின், எப்பொருளும் இறைவனுகிய சிவசூரிய னுடைய ஞானக்கதிர் மாயையின்மீது பொருந்துவதால் விளைவ தாதலால், சிவப்புணர்ப்பு இல்லாத எதுவும் இல்லை என்பதை நாம் அறிதரற்பொருட்டாக இங்ஙனம் கூறப்பட்டுள்ளது என்ன லாம். அது, மக்களின் பக்குவ அபக்குவ நிலைகளை நன்கு சீர்தூக்கி அவரவருக்கும் ஏற்றபடி தெய்வதத்துவங்களை விளக்க வந்த சிறப்புடையது. ஒரே வீட்டில் குடியிருப்பவர்களாயி னும் அவ்வீட்டிலுள்ளோருடைய குழந்தைத்தன்மை, வயதுத் தன்மை, ஆரோக்கியத்தன்மை, நோய்த்தன்மை, வறுமைத் தன்மை, செல்வத்தன்மை, ஆண்மை பெண்மைத்தன்மைகள், சூழ்நிலைத்தன்மை முதலிய பல்வேறு நிலைமை உடையவர்களா யிருத்தலால் அவர்கள் உண்ணும் உணவு 'ஆகாரம்' என்னும் பெயரால் ஒன்றுபோலிருப்பினும் பொருளால் பல்வேறு வகைப் பட்டே உள்ளது காணலாம். ஆனுலும், அப்பொருட் பன்மை கள் முடிவில் அவரவர் தகுதிக்கு ஏற்ப ஒரேவித சத்துத்தன் மையை அளித்து உதவுவதும் காணலாம். இதுபோலத்தான் உள்ளது வேதம் கூறும் நெறிகள்.

கடவுளை ஞானவடிவாகக் காண இயலாதவர்கள், கடவுள் என்ற ஒருபொருளே கிடையாதென்று எண்ணிக் கெட்டுவிடா மைக்காக அவர்கள் கண்ணுல் பார்க்கும் குன்றுகள், அவற்றின்

பெரிய மலைகள், மலர்கள், அவற்றினின்று கமழும் நறுமணம், வானத்தே உள்ள மின்னல், இடி ஆகிய யாவும் கடவுட் புணர்ப் புடையன என்று மந்திரவகையாலும் செய்கை முறையாலும் வேத வாசகங்கள் கூறிக்காட்டுகின்றன. இதனால், கடவுளரே பலர் என்று தவறுபடக் கருதிவிடலாகாது. எல்லாம் சிவனுருவே என்று நாம் கொள்ளவேண்டும். "கண்டன எல்லாம் மோன உரு வெளியதாகவும் கருதி அஞ்சலி செய்குவாம்" என்ற தாயுமானவர் வாக்கும் இங்கு நோக்கற்பாலதாம். இந்த நிலை ஒருவனைப் படிப்படியாக உணர்வில் உயர்த்தி அகண்டாகார சிவாகாரநிலை இன்னதென்பதை நாளடைவில் அறியச்செய்து விடும். ஆதலால், அறன்நெறி நாடிடில் இடியும் முழக்கமும் ஈசர் உருவம்; (ஈசர் உருவம்) கடிமலர்க்குன்றம் மலையதுதானே என்று இங்கு மந்திர ஆசிரியர் கூறியுள்ளார் ஆவர். வேதவாசகங்கள் கேட்போர்க்கு ஒலியாயும், உணர்வோர்க்கு ஒளியாயும் பயன் செய்தல் அநுபவசித்தமாம் என்க.

21. சிவனைப் புகழ்ந்தணைதல்

கண்ணால் காணப்படும் மலையை நெருங்கி நடந்துசென்று அடைகிறோம். அதிலும் குன்றை ஏறினனைக் காட்டிலும் மலைமீ தேறினன் தூரக்காட்சியைப் பெரும்பங்கு அடைய வல்லவன் ஆகிறான். அப்பால், கண்ணால் மாத்திரம் காணப்படுவதும், காதால்மாத்திரம் கேட்கப்படுவதுமான மின்னலையும் இடியை யும் கூறியதனால் இவை, புலன்களைத் தம்பால் நெருங்கச்செய்யும் இயல்புடையன எனத் தெரியலாம். இவ்வகை உணர்வு கைவரப் பெற்ற பின்னர் இம்மாயாகாரியப் பொருள்களெல்லாம் தாமாகத் தோன்றமாட்டா; ஆதலால், இவற்றிற்குக் காரணமெது எனக் கருதநேரும். அப்போது மாயையாகிய சடசத்தி தானாக இயங் காதது; நாம் உயிரும் அறிவுமுடைய சித்துப்பொருளேயாயி னும் இவற்றைப் படைக்கும் ஆற்றல் பெற்றிலேம்; ஆதலால் பேரறிவும், பெருங்கருணையும், பேராற்றலும் கொண்டதொரு பொருளே இவற்றை வெளிப்படுத்தி நடத்தவேண்டும் என்ற முடிவுக்குத் தானே வரல் நிகழும். அதன் பிறகு அத்தகைய தொரு பெரும்பொருட்கு நம்மால் ஏதும் நன்றிபுரிய இயலா தாகையால் அதனின் ஆற்றலைப் புகழ்வதே செய்கை எனத் தோன்றும். இந்த முறைமையினை இம்மந்திரப் பாடலில்

உணர்த்தியுரைக்கிருர் ஆசிரியர். "மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை" என்பது நீதிநூல். ஒழுக்கத்துக்கும் அதுவே அடிக் களன் ஆகி உதவுகின்றது.

இத்தகைய மழையைத் தருவது கொண்டல், அது நீரை நம்பால் கொண்டுவந்து பொழிகின்றது. இது நம்செயலால், ஆணையால் நிகழ்வதன்று. மேகத்துக்கும் அறிவுயிர்கள் இல. ஆதலால், இதனை இங்ஙனம் பொழிதர இயக்கும் ஆற்றல் ஒன்று இருத்தல்வேண்டும். அது கொண்டற்கு உதவும் கொண்டலாக இருக்கவேண்டும். வானின் மேலாம் பெருவானில் இருந்து பெருங்கொண்டலாகி உதவவேண்டும். ஆதலால், இஃது இறை செயலாம். மேலும், மழை எல்லா நிலப்பரப்பின்மீதும் நீர்ப் பரப்பின்மீதும் வேறுபாடின்றி வரையாது ஒப்பப் பெய்கின்றது. அவ்வாறேதான் இறைவன் திருவருளும் நிகழ்கின்றதென்னலாம். பாலைப்பெருவெளி நீரைச் சுவறச்செய்து மழையாலாய பயன் தருவதில்லை. கடல்வெளியோ மழை உதவும் நன்னீரை உவர் நீராக்கி விடுகிறது, நல்ல நிலமே பயிரை விளைத்துப் பயனளிக் கிறது. இப்படித்தான் இறைவனுடைய ஒத்த அருளினை உயிர் கள் தத்தம் தகைமைக்கேற்ப ஆக்கிக்கொள்கின்றன. "மாரி தான் சிலரை வரைந்து பெய்யுமோ" என்ற கபிலருரை இத்தன்மை செப்புவதாம். ஆதலால், மழைக்கருளும் பெருங் கொண்டலாகி அதன்முகமாக நமக்கருளும் இறைவனை - அவன் இயல்பின் தகைமையை வானப்பெருங்கொண்டல் என்றுரைத்து நம்மைத் தெருட்டுகின்ருர் ஆசிரியர் என்னலாம்.

நமக்கு இவ்வாறு ஒப்பத் திருவருள் புரிவதை உணர்த்திய ஆசிரியர், நம்மினும் மேலான நிலையினராகிய போகம் புணர்த் தொழுகும் வானவர்க்கும், அதிகாரமும் அதனேடு பெற்றெழு கும் மால் அயன் முதலானவர்க்கும் இங்ஙனமே தடுத்தாட் கொண்டு பேரருள் புரிகின்ருன் ஈசன் என்பதையும் கூறி அறிவு கொளுத்தியுள்ளார். நம்மின் மேலோர்க்கே இறையருள் தேவை ஆயின், நமக்கும் அதுதேவையாவதே என்பது கூருமலே தெளி யப்படவேண்டுவதாம். தேவர்கள் இறைவனைத் தங்களியல்புக் கேற்பப் புகழ்ந்து வழிபாடியற்றுவராயின் அவர்கட்கும் பிறப் பறுத்தடையும் வீடுபேற்றினைப் பெருமான் நல்கியுதவுகின்ருன். ஆதலால், மால் அயன் வானவர் ஊனப்பிறவி ஒழிக்கும் ஒருவனை என்றுள்ளார் ஆசிரியர். 'ஒருவன்' என்றமையால் மற்ருரும் பற்றில்லாப் பெருமை புலப்படுத்தப்பட்டது என்னலாம்.

இவ்வாறன்றி, பிறப்பு, அறிவு, தவம், ஆற்றல், கன்மபலம் என்னும் இவற்றையே பெரிதெனமதித்து, இறைவனை மதியா தொழுகுவது ஆணவம் எனப்படும் ஒன்றின் காரியமாம். மதங் கொண்ட யானையும், மலங்கொண்ட மனிதனும் ஒருநிகராம். பெரியோரை மதியாத்தன்மை மலத்துக்குண்டு. வளர்ப்போனை யும் மதியாத்தன்மை மதத்தின் காரியமாம். இவ்வழியில் தாருக வனத்து முனிவர்கள் செருக்குடையராகித் தம்மானை அறியாத வராய்ச் சிவத்தினை ஒழித்திட எண்ணிக் கொலைக்கரும வேள்வி ஆற்றிக் காட்டானை ஒன்றைத் தோற்றிப் பெருமான்மீது அறியா மையால் ஏவினர். பெருமான் அக்கரியின் தோலை உரித்து விரித் துத் தரித்திட்டார். இதனால் கன்மயாகமே பெரிதென மதித்திருந் தோர் முரிவுற்றனர். இதனால் ஞானயாகமே சீரிதென்பது தெளி யப்பட வேண்டுவதாம். நாமும் இவ்வுண்மையறிந்து கன்மமே முக்கியமென்றும் அதுவே வீடருளும் வன்மையுடைத்து என்றும் எண்ணித் தருக்கி ஏமாறிவிடக்கூடாது. இதற்காகவே, **கானக்களிறு கதறப் பிளந்த எம் கோனை** என்று எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

இவ்வாறு, அண்டிப் புகழ்ந்தோரை அருள்வயப்படுத்தலும், அறியாமைமிண்டி இகழ்ந்தோரை அடக்கியருளலும் இறைவன் பெருந்தன்மையாம் என்பதையும், அம்முழுமுதலோன் யாவர்க் கும் ஒரு நிகராக அருள் சுரப்பவன் என்பதையும் நமக்குக் கூறியருளிய ஆசிரியர், அம் முழுமுதலை அணையும் நெறியாக நமக்கு ஒன்று கூறலுறுவாராகி "அருச்சனை பாட்டேயாகும்" என்பது போன்று ஆணையிடலுற்றுப் புகழுமின் என்கிறார். இங்ஙனம் புகழப்புகழ நாம் புகழுடையானை அடையப்பெறு வோம் என்பதுபற்றிக் கூடலும் ஆமே என்றுள்ளார். ஆகவே நாம் வாடலும் ஊடலும் இன்றிக் கூடல் பெற்றுய்யவேண்டும் என்பது கருத்தாம். ஆதலால், திருவருள் காட்டிய நெறியிலும் அளவிலும் இறைவனைப் புகழ்தல் நம் கடமையாகும். "ஏத்த வல்லார் வினை தேய்வது திண்ணமே" என்பது திராவிட சுருதித் துணிபுரை.

22. இறைவனை நினைத்தலேனும்செய்தல்

இறைவனிருப்பை அறிதலும் அவனைப் புகழ்தலும் வேண்டு மென்று கூறிய ஆசிரியர், புகழ்தற்கு இயலாதாரை நீங்கள்

இறைவனை - அவன் பெருமையை - அவனிருப்பை அன்பினால் நினைத்தலேனும் புரியுங்கள் என்றுகூறித் தெருட்டுகின்றார் இம் மந்திரத்தில்.

இறைவன் மாயைகட்கு அப்பாற்பட்டவன். நாம் மாயைக் குட்பட்டுழல்கின்றோம். வெள்ளத்தில் வீழ்ந்தவன் கரையிலிருப் போனையே தான் பிழைக்க வேண்டில் நினைப்பானே யல்லால் தன்னோடு சுழன்றோடும் துரும்பை உள்ளத்தாலும் கையாலும் பற்றமாட்டான். பற்றினும் பயனில்லையாம். அரசன் ஆணைக்கு நாடு முழுவதும் கட்டுப்பட்டு நடப்பது போலவே நமதிருப்பிட மாகிய மாயை, மாயையாக்கங்கள் முழுதும் அதற்கப்பாற்பட்ட இறைவன்வழி ஒழுகும். நாமோ நீர்வழி ஓடும் தெப்பம் போல மாயை வழி இயங்குகின்றோம். ஆதலால், இறைவனை மாய நன்னுடன் என்றார். ஒரு குடிமகனுக்கு அந்நாட்டை ஆளும் அரசன் தயவு கிட்டினால் நன்மையுண்டாம். அவ்வாறே, நமக்கு இறைவன் அருள் கிட்டினாலன்றி நன்மை இலதாம். நம்பால் திரிகரணங்கள் உள. அவை, மனம், வாக்கு, காயம் என்பன வாம். இவற்றுள் நினைப்பாற்றலுடையது மனம். அந்த மனத் துள் இறைவன், கரித்துணியுள் ஒளிமணி இருத்தல் போல் மறைந்து விளங்குகின்றானுவான். ஆதலால், மனம் எண்ணும் எதுவும் அவனறிவான். எண்ணுதிருப்பதும் அவற்குத் தெரியும். ஆதலினாலே, நாம் நினைத்தால் இறைவற்கு எப்படித் தெரியும் என்கிற ஐயம் எழ இடமில்லை.

ஒருபொருளை, அதன்பாலுள்ள அன்பு தூண்டப்பெறுதலின் காரியமாக மனம் நினைத்தலுறும். அன்பில்லையேல் நினையாது. நல்லமுறையில் நினையாது. இதனால், நாம் உயிர்ப்பண்பாகிய அன்பினால் தூண்டப்பெற்று இறைவனை எண்ணவேனும் வேண் டும். நாம் மனத்தில் என்ன நினைப்பினும் அதனை ஆங்குறையு மவன் அறிவன். பூதவான வெளியெங்கும் பூதஒலிகள் நிறைந்தே இருக்கும். பூதவானமறியாத பூதஒலி இராது. நீரினுள்ளும் நிழல்வெளி உண்டு. ஏனெனில் ஆங்கும் வெளியே உள்ள வான வெளி உளது. இவ்வாறே நெஞ்சகத்து நீங்காதுறைகின்றான் நிமலன். ஆகையால், மனத்தில் எழுகின்ற நினைத்தது அறிவன் இறைவன் என்றனர் ஆசிரியர். இவ்வாறு, தெரிவிக்கத் தெரிந்து கொள்ளாமல் இயல்பாகவே தெரிந்துகொள்ளும் தன்மைவாய்ந்த பெருமானை ஏனை மக்களாவார் தம்முடைய உய்தி கருதியேனும்

நினையாதிருக்கின்றனர் என்று ஆசிரியர் நமக்காக அங்கலாய்க்கின்ருர். அது, எனில் தான் நினைக்கிலர் என்ற தொடரால் தெரிய வருவதாம்.

மேற்கூறியவாறு ஒருசிலர் இறைவனை எண்ணுதவராக இருக்கவும், வேறு சிலர் இறைவன் தங்களிடம் அன்பற்றவனுக உள்ளான் எனத் தூற்றுதலும் செய்கின்றனர். இது இறைவனிடம் அன்பில்லார் கூற்ரும். இவ்வாறு இவர்கள் கூறுவது தாங்கள் துயருற்று வருந்துவதால் ஆகும். இங்ஙனம் இவர்கள் வருத்தம் எய்துவது அவர்தம் வினைவயத்தால் ஆம். இத்துயர்க் கொடுமை தாங்கமாட்டாமையால் இறைவனை இரக்கமற்றவன் என்கின்றனர். ஆனுல், அன்போடு அவனையே நம்பி நினைக்கும் தமது கடமையில் இவர்கள் தவறியிருத்தலைக் கருதிப்பார்க்கின்றிலர். தங்கள் பிழையையும் இறைவன்மீதே சுமத்திப்பழிக்கு ஆளாகின்றனர். ஆதலால் இங்ஙனம் குறைகூறலாக நினைத்தல் அடாது என நமக்கு உணர்த்தவேண்டியே ஆசிரியர், எனக்கு இறை அன்பிலன் என்பர் என்று சொல்லிக்காட்டுகின்ருர். இதனுல் நாம் வினையை நோதல் அல்லது இறைவனை நோதல் நெறியன்ரும் எனத்தெரிதல் நேரிதாம்.

இறைவன், வைதாரையும் வாழவைப்பவன். அங்ஙனம் இருப்பவும், உய்தியை வேண்டி வாழ்த்தி நிற்பாரை அவன் கைவிடான் என்பது திண்ணமாம். ஆகவே, தன்னை உருகியுள்கு வாரைக் காத்தலைத் தலைக்கடனுகக் கொண்டு இறைவன் காத்திடுவானுவன். "சார்ந்தாரைக் காத்தல் தலைவர்கடன்" என்பது ஞானநூல். ஆகவே, தன்னை உள்ளம் கசிந்து நினைவாருடைய ஆகாமியவினையை இல்லாதவாறு செய்வன்; பிராரத்துவவினையை அநுபவியாதவாறு தணிப்பன். ஆதலால், நம் ஆசிரியர், இறைவன் பிழைக்கநின்ருர்பக்கம் பேணி நின்ருனே என்றுரைத்துள்ளார். தப்பநின்ருரையும் அநுபவநெறியில் திருப்பிப் பேணுவானேயன்றி ஆதரியாமல் விடுதலில்லை இறைவன் என்பதும் இதனுல் உணர்த்தப்பட்டதென்னலாம். அன்றியும் பிரபஞ்சத் தாக்குதலினின்று தப்பி இறைபணி ஏற்று நிற்போரைத் தலைச்சுமையாகத் தானே தாங்கி உய்விக்கின்ருன் பரமன் என்பதும் ஆம். வண்டியுள் அமர்ந்தபிறகு, வண்டியின் பொறுப்பே தன்னுள் உட்கார்ந்திருப்போரைக் கொண்டுசேர்த்தல் ஆகும். இதனுல் எவ்வாற்ருனும் இறைவனை நினைந்திருப்போர் உய்வு அடையப் பெறுவர்

என்பது கருத்தாம். "நினைப்பவர்மனம் கோயிலாக் கொள்பவன்" ஈசன் என்க.

23. இறைவன் அருட்செயல்வல்லமை

இறைவன் நமக்கு எப்போதும் எவ்வழியாலும் அருளே புரிந்துவருகிறான் என்பதே உண்மை. இரவும் பகலும் நாம் உண்டாக்கிக்கொள்ளவில்லை. எனவே, காலத்தையும் நமக்குத் துணையாக ஆக்கி, எக்காலமும் நமக்குத் திருவருளே புரிகின்றானவன். இறைவன் வல்லமை பெரிதுடையவன். வலியார் நட்பே எவர்க்கும் தேவையாவது. அதுதான் எப்போதும் உதவுவது. அவனது வல்லமை நமக்கு நல்லதெல்லாம் செய்யவல்லதாதலால் இதுகுறித்தேனும் இறைவனுண்மை எண்ணப்படல் நீதியாம். இதனால்தான் வல்லவன்; அல்லும் பகலும் அருளுகின்றானே என்றுள்ளார்.

இனி அவன் வல்லமை நமக்கு அருள்புரியும் வழிகள் பல வற்றுள் ஒருதாரணம் காட்ட லுறுகிறார் ஆசிரியர். எந்த நீர்நிலைக்கும் அது மிக்கு ஊரை அழியாவண்ணம் கரையிட்டுத் தடுக்கின்றோம் நாம். ஆனால், கடல்நீரைப் பொங்கிவந்து அழிவுசெய்யா வண்ணம் நாம் அதனைச்சுற்றிலும் கரைபோடவில்லை. ஆயினும் கடல் தன்எல்லையைக் கடவாமலே உள்ளது. எண்ணற்ற ஆறுகள் அதனுள் போய்க்கலக்கின்றன. என்றாலும் அது அடங்கியே நிற்கிறது. இவ்வாறு அதனை இறைவன் தன்னுடைய சிறப்புடைய வல்லமையால் தடுத்துநிறுத்தியுள்ளானவன். கடலினுள் அது மிகாவண்ணம் வடவைக்கனலை வைத்துக்காத்துவருகிறான். நீர் நெருப்பினை அவிக்கும் இயல்புடையதேனும் இந்தநெருப்பை நீர் அங்ஙனம் செய்யவொண்ணாதபடித் தனக்குள்ள சிறப்பு வல்லமையாலும் உயிர்களின்மேலுள்ள அருள்மிகுதிப் பாட்டினாலுமே செய்துள்ளான். இது அவனுடைய தெய்வநீதியின் கெழுதகையினையும் காட்டுகின்ற செயலாகும்.

எவ்வுயிரையும் காத்தலே அறமாகும். அழித்தல் மறச் செயலே ஆம். அறிவற்றவரே அழித்தல் செய்வர். அறிவுடையோர் அங்ஙனம் ஒருபோதும் புரியார். அழித்தலியல்பு அருளியல்புக்கு மாறானதாகும். 'சந்திர சூரியர் உடு அந்தரமதில் எந்நாளும் தத்தம் முறை வழுவாது கொட்புறுதல்' முதலான செயல்களைப்

பெரியோர்கள் கடவுளுண்மையை நாட்டுதற்குக் காட்டாகக் காட்டுவர். அவ்வாறே நம் ஆசிரியரும் இங்கு, வன்னிக்கிறை இடை வாரணம் நில் என நிற்பித்த நீதிஉள் ஈசன் என்று கூறிக் கடவுளுண்மையைக் கருதச்செய்கின்ருர். "அக்கடலின்மீது வட வனல் நிற்கவிலேயோ" என வினவித்தெருட்டுவர் தாயுமானுரும்.

மற்றும், இறைவர், எல்லாத் தேவர்கட்கும் முதன்மை யானவர். எத்தேவரின் எச்செயலும் சிவத்தினது ஆணையால் - அதிட்டித்தலால் அன்றி நிகழாது. ஆதலின் ஏனை இறையோர் களை எண்ணிச் சிறு நலன்களைத் துய்ப்பதினும் மேலோனும் முதலோனுமாகிய சிவனை உண்டெனக்கொண்டு ஒழிவற எண் ணுதல் நலமாம். "தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேனுண் ணுதே" என்னும் திருவாசகப்பாடல் இங்கு எண்ணிப்பார்த்தல் நன்ரும். மேற்கூறிய இக்கருத்தை வெளியிடுவதே இறையவர் தம்முதல் என்பது.

ஆதலின், வல்லமையும், அருளுடைமையும், அறமும், முதன்மையும் உள்ளவனுகிய கடவுளை இல்லை என்று சொல்லு தல் முழுப் பொய்யாம் என்க. "இல் என்னும் மடவோர்" என்பர் நீதியோர். "உலகத்தார் உண்டென்பது இல் என்பான் வையத்து அலகையா வைக்கப்படும்" என்பர் வள்ளுவனுரும். இத்தகையோர் தாமே தமக்குத் துன்பிழைத்துக்கொள்ளும் அறியாமை உடையவராவர் என்பதைப் "பெருமிறை தானே தனக்கு" என்னும் குறள் கூறும். இவையெல்லாம் கருதுமாறு ஆசிரியர் ஈசனை இல் என வேண்டா என்று கற்பிக்கின்ருர் என்னலாம். இதனுல், கடவுளை உண்டெனக்கொண்டு ஓதுதலே உயர்வு அளிப்பதாகும் என்க.

24. சிவன் மன்னிநிற்கப்பெறுதல்

இறைவன் எல்லா உயிர்களின் உள்ளத்தும் வீற்றிருக்கிருன். என்ருலும், எல்லா உயிர்களும் அவன் அங்ஙனம் வீற்றிருத்தலை அறிவதில்லை. உள்ளே ஒளி இருப்பினும் கரி ஏறிய கண்ணுடியுள் அங்ஙனம் ஒளி உள்ளே அடர்ந்துகொண்டிருத்தல் தெரிவதில்லை. ஆனுல், கரி எந்த அளவுக்குக் குறைபடுகிறதோ அந்த அளவுக்கு உள்ளொளி புலப்படும். அவ்வாறே நம் உள்ளத்தொளியாய் விளங்கும் கடவுளை நாம் உணர்தற்கு நம்மிடம் புனிதம் அமைய வேண்டும். புனிதத்தன்மையின் துணையினுல்தான் புனிதனை

அடையமுடியும். அப்படியானல் புனிதத்தன்மை உள்ளத்துக்கு ஏற்படுவது எப்படி என்று நாம் வினவலாம். அதற்கான உபாயத்தினைத் திருமூலர் இம்மந்திரத்தே மொழிந்துள்ளாராவர்.

முதலில், மனத்தின் தன்மையை நாம் அறிதல்வேண்டும். அதன் ஓரியல்பு எப்போதும் ஒன்றைப்பற்றியே கிடப்பதாகும். உலகமுகமாக அஃது ஓடும்போது யாவற்றினும் அது பற்றிப் படர்ந்தாலும், செல்வத்தையே பெரிதெனமயங்கி எண்ணி அதன் பாலே பற்றுக்கொள்ளுகிறது. அதையே எண்ணுகிறது; அதைப் பற்றியே பேசச்செய்கிறது; அதற்காகவே அல்லும் பகலும் உழைக்கச்செய்கிறது. அப்படியெல்லாம் விரும்பியும் அச்செல் வம் வேண்டுமளவு வாய்ப்பதுமில்லை; வேண்டும் நன்மைகள் தருவதுமில்லை; இறப்பின்பின் தொடர்ந்து வருவதுமில்லை. இவ்வாறு தொடராத ஒன்றை மன்னிய பொருள் என்று கூறுதற்கு இல்லை. மன்னுதலாவது, கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று நிலைகளிலும் தொடர்ந்து தங்கியிருத்தலாம். செல்வம் அங்ஙனமிருக்கும் இயல்புடையதன்றென்பது யாவர்க்கும் தெரிந்ததே. ஆகையினால் நாம் நம் நெஞ்சத்தையே பக்குவஞ்செய்ய வேண்டியுள்ளது. இதனைப் பக்குவம் செய்துவிட்டால் சத்தியப் பொருளாம் சிவம் மன்னியிருத்தலை உணரப்பெறலாகும்.

அங்ஙனம், மனத்தைப் பக்குவப்படுத்துவதற்கு நாம் என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் ஆசிரியர் படிப்படியாகத் தருகின்றார் இப்பாடலில். முதலில் இறைவன் எவ்வகை மலமும் இயல்பிலே இல்லாத புனிதன் என்று நாம் கருதவேண்டும். இங்ஙனம் கருதுவது நாம் மலத்தோடு கூடியுள்ள குற்றத்தை உணரப்பெற்றதாகும். அடுத்து நமக்கு இறைவனுடைய திருவருளே தேவை என்ற எண்ணம் திண்ணப் படவேண்டும். இவ்விரண்டு எண்ணங்களினின்றும் எப்போதும் எக்காரணம் குறித்தும் வழுவுதல் கூடாது. இதனைப் புனிதன் அடி தேற்றுமின் என்றுள்ளமையால் அறியலாம். மனம் இங்ஙனம் கருதும் உறைப்புற்ற பின்னர் இறைவனை வாயாற் புகழவேண்டும். மன்னாத மனிதரைப் புகழ்வதைவிட்டு மன்னிய சிவத்தைப் புகழவேண்டும். அங்ஙனம் புகழும்போது உரையாலேனும் இசையாலேனும் புகலலாம். மற்றும் தலை முதலாம் உறுப்புக்கள் வணக்கமும் மேற்கொள்ளவேண்டும். இவை, போற்றி இசைத்தும் புகழ்ந்தும் என்பதனால் அறியப்படும்.

இப்படித் திரிகரணங்களாலும் சிவனைத் தலைவன் என்று ஏற்றுக்கொண்ட பின்னர், நமது உடல், பொருள். ஆவிகளை அவனுடைமை என்ற கருதி ஒழுகவேண்டும். செல்வம் நமது உடைமை என்றிருந்த எண்ணத்தை மாற்றி நாமே அவனுடைமை என்று மயக்கமற மனத்தைத் திருப்பவேண்டும். இச்செய்தியை, என்றும் சிவனடிக்கே செல்வம் ஆற்றியதென்று மயலுற்ற சிந்தையை மாற்றி என்பதாலறியலாம். இங்ஙனம் செய்தபின் உள்ளம் சிவனடியே சிந்தித்தடங்கும். அப்போது புகைநீங்கின இடத்து நெருப்புத் தெரிவதுபோலப் பாசம் அகலப் பெற்ற இதயத்தே இறைவன் மன்னியிருத்தல் உணரப்படும். இதுவே மாற்றிநின்றார்வழி மன்னிநின்றானே என்பதால் தெரிவதாகும். 'நின்றானே' என்பதால் அப்போது புதிதாகவந்து புகுந்துகொள்ளாமல் எப்போதுமே உள்ளான் என்பது கருத்தாகக் கொள்ளப்படும். அதன் பின்னர் இறைவழியே, இத்தகையார் வழியும் ஆம். அதாவது இத்தகையார் வழியெல்லாம் இறைவன் தன்வழியாகவே கருதியேற்கும் என்பதாம். 'நின்றார்' என்பதால் நாம் சிலசமயம் மாற்றி நிற்பதும் சிலசமயம் விட்டு நிற்பதுமாக நிலையற்றிராமல் எப்போதும் சோர்வின்றி மாற்றிய நிலையிலேயே நிற்றல் வேண்டுமென்பது பெறப்படும். நாமும் நின்றால் அவனும் நின்றானவன் என்பதொரு நயம்.

25. மாயாநீக்கநெறி

மாயைக்குட்பட்டவர்கள் பிறப்புடையவ்ராவர். பிறப்பு ஞானக்குறைவால் வருவது. இந்த ஞானம் இறையருளால் வருவது. அருள்களுள் இறையருளே பெரிது. இவ்வருளால் வருவது பேரின்பம். பேரின்பம், வந்தபின் நீங்காத இயல்புடையது. இதனை அடைதற்கு நாம் இறைவனைத் தொழுதல்வேண்டும். நாம் அவனைத் தொழுதசெயலை அவன் மறவாமல் இருப்பவன். அவ் இறைவனது மறவாமையே நமக்கு மாயைக்கு மாறுபாடான ஞானத்தை விளைக்கும். இவ்வாறு படிப்படியாக நாம் ஞானம் அடையலாம். இதைவிட்டு மாயைக்குட்பட்டுள்ளவரான பிறப்புள்ள தேவர்களைத் தொழுவதால் பயனில்லை. நமக்கு வேண்டுவது ஞானத்தாலாம் வீடுபேறு. இதனைத் தாமே பிறப்புவழிப்பட்டவர் தர இயலாது. ஆதலால், நாம் பிறவாப் பெருந்தகையைத் தொழுவதால்தான் அடையலாகும். பசிநோயை அதற்கு மாறுபட்டதான சோறுதான்நீக்கும். சோறுடையவனே

பசிப்பிணி மருத்துவன் ஆவான். அவ்வாறே பிறப்பறுக்க லுற்றார்க்குப் பிறப்பிலியே தஞ்சமாவன் என்க.

குழந்தையின் வருத்தம் தாயே அறிவள். தந்தையும் தாயும் ஒருமித்திருக்கையில் அவரை நாடியே குழந்தை நலமடையும். அங்ஙனமே, இறைவன் சிற்சத்தியோடு விளங்கும் நிலையில் உயிர்கள் நலமடையத்தொடங்கும். சிற்சத்தியும் ஒடுங்கியிருக்கு நிலையில் உயிர்கள் முயற்சியின்றி முடங்கிக்கிடக்கும். ஆதலால். சத்தனாகிய நிலையுடைய சிவத்தைத் தொழுதல் நலமெய்த வழி செய்வதாகும். ஆதலால், பிஞ்ஞகன் தொழுமின் என்றார். அளித் தல், ஓம்பல் முதலிய அறச்செய்கைகள் பெற்றோரருளால் குழ விக்கு நிகழும். நமக்கு வேண்டுவது திருவருளேயாகும். குருட னுக்குக் கோலைக்காட்டிலும் விழியே வேண்டுவதாம். ஆதலால் நாம், விழியையே தரவல்லானைக் குருடன் அடைவது போலப் பேரருள் புரியவல்லானையே அடைந்து நிற்கவேண்டும். சிவத்தி னும் பேரருளாளர் யாரும் இலர். ஆகையால், பேரருளாளன் தொழுமின் என்றார்.

நமக்கு அருள்செய்பவர் நமக்குமுன்பும் நம்மோடும் நமக்குப் பின்பும் இருப்பவராயின் அவர்புரியும் அருட்செயல் நிலைத்திருக் கும். ஆதலால், இறப்பிலி தொழுமின் என்றார். அருள்புரிவோர், நடுவுநிலைமை இல்லாதாராயின் அருள்பெறுவதில் ஏற்றத்தாழ்வு ஏற்படும், அதனால் பெறும் இன்பம் ஒருநிகராயிராது. ஒருவர்க்கு அதிகமாகவும் இன்னொருவர்க்குக் குறைவாகவும் ஏற்பட்டு உள்ளத்தை வருந்தச்செய்யும்; இன்புறச் செய்யாது. சிவபிரான் அங்ஙனம் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமான நீதி வழங்கு பவனல்லன். யாவர்க்கும் இன்பம் அருளும். ஒருகாலத்து அருள் புரிந்துவிட்டுப் பின்னர் நம்மை அலையவிடுபவன் அல்லன் பெருமான். நம்மைவிட்டு எப்போதும் நீங்கா இயல்பினன். நம்மை நீக்கவும் அவனால் ஆகாது. ஆதலால் நிரந்தரமாக நம்பத் தக்கவனாக உள்ளான் பரமன் என்பார் துறப்பிலி என்றார். இத் தகையோன் பக்கல் நாம் இன்பம் பெறுதற்காக என்னசெய்ய வேண்டும் என்பதை அவனொருவனையே தொழுதால் போதும் என்று தெரிவித்தற்காகத் தன்னைத் தொழுமின் என்றார். " நற்றாள் தொழாஅர் எனின் பயன் என்கொல்" என்றார் வள்ளுவனாரும். தொழுதலாவது இறைவனடியில் நம் முடிபட வீழ்தலாம். அவனது தாள், பிறவிப் பிணிக்கு மருந்தாதலின் இச்செயல் வேண்டப்படுவதாயிற்று.

தாயாயிருப்பினும் குழந்தையை மறந்திருப்பவளாயின் பயனில்லை. நமக்கெல்லாம் தாயாகவும் தந்தையாகவும் உள்ள சிவபெருமான் ஒருபோதும் நம்மை மறத்தல் இலன். நாமே அவனைப் பல்வேறு அறியாமையால் மறந்தொழுகுகிறோம், இதனைப் புலப்படுத்துவது மறப்பிலி என்ற சொல். ஆதலால் நாம் தொழுதுகிடப்பதை அவன் மறவான் என்பதாயிற்று.

இத்தகையோனை நாம் இடையருது தொழுவதனால் சூரியனை எதிர்ப்பட்டதொருபொருள் இருளின் நீங்கப்பெறுதல் போன்று ஞானத்துக்கு மாறுபாடாக நம்மிடம் உள்ள மாயை நீங்கப் பெறுவோம். எது தோற்றமும் ஒடுக்கமும் கொண்டதோ அது மாயை ஆம். அதனை அடைந்தால் நாம் பிறப்பும் இறப்பும் அடைந்துழல வேண்டியிருக்கும். எது விரிதலும் கூம்புதலும் இல்லாததோ அதுவே உண்மையறிவு. அதனை அடையப் பெற்றோர்க்கு இன்பமும் துன்பமும் மாறிமாறி அடைதல் இல்லையாம். இங்ஙனம் மாறுபாடின்றி இருப்பதே இன்பமாகும். ஆதலால், மாயா விருத்தமும் ஆமே என்றுள்ளார் ஆசிரியர். விருத்தம் ஞானம் எனவும் கூறப்படும். அங்ஙனமாயின் அழியாத ஞானம் அடையப்பெறலாகும் என்பது பொருளாம்.

26. சிவபுண்ணியம்

அரசனை அறிந்து அடையப்பெற்றவன் மேலான எல்லா நலமும் அடையலாம். அன்றி அவ்வரசனிடமான அரண்மனை வாயில்காவலனை அறிந்து அடையப்பெறுதலால் பெருத்தநலம் அடைய முடியாது. அவ்வாறே நாம் சிவனை அடையப்பெறுவதால் பெருத்த லாபம் அடையலாம். ஏனையோரை அடைந்து தொழுவதனால் அற்பப்பலன்களையே அடைவோம். இவ்வாறே சிவத்தைத் தொழுவதனால் சிவபுண்ணியம் ஏற்படும். அதுவே வீடுபேற்றின் வாயிலாகும். ஏனைய யாவும் பசுபுண்ணியங்களாகிச் சிறுசிறு இன்பங்கட்கே வழியாகும், பசியாதிருக்கும் வரம் பெறுதல் பசிக்குச் சோறு பெறுவதினும் சிறந்ததாகும். இத்தகையதே சிவபுண்ணியம் எனப்படுவது. இச்சிவபுண்ணியமே பிறப்பறுத்தற்குரிய முதல்நிலையாகும். இதனை நாம் சிவனைப் பணிவதாலன்றி வேறுவழியால் அடைதல் நியதி ஆகாது. ஏனெனில், சிவனே நம் உள்ளும் புறம்பும் ஒன்றாய் வேறாய் உடனாய்த் தொடர்ந்திருந்தருளும் இறைவனாவான்.

உலகம் நம்மைத் தாங்குகிறது. இவ்வாறு தாங்கும் உலகங்களின் உள்ளும் புறம்பும் படர்ந்தும் கடந்தும் உள்ளான் இறைவன். உலகங்கள் அவனுள் ஏகதேசம் வியாப்பியமாம். ஆருயிர்களின் நெஞ்சத்தாமரையில் ஒன்றுய் இருப்பவன் இறைவன். தாமரையைச் சூரியன் அது நீரில் இருக்கையிலும், பறிக்கப்பட்டிருக்கையிலும் அலர்த்துதல்போல எஞ்ஞான்றும் உடங்கியிருந்து உயிருக்கு உதவுகின்ருன். இத்தகையோனை நாம் தொழுதல் அமைவுடைத்தாம். அங்ஙனம் தொழுதால் நமக்குப் பயனுக உடன்கிடைப்பது சிவபுண்ணியமாம். இதுவே, பிறவியறுத்தற்கு அடிப்படையாவது. இவற்றை முறையே தொடர்ந்து நின்ருனை ... ... அடிப்புண்ணியம் ஆமே என்ற பாடல்தொடர்கள் குறிப்பனவாகும்.

27. அருள்நாட்டம்

ஏழைக்கு வேண்டுவது பொருள், பசிக்கு வேண்டுவது உணவு, நோய்க்கு வேண்டுவது மருந்து. நமக்கு வேண்டுவது ஈசனருள். இவ்வருளைப்பெறுதற்கு அவ்வருளுடையானையே நாம் வணங்கவேண்டும். உள்ளியினிடத்தே நறுமணம்பெற இயலாது. சீலமிலாரிடத்தே உறுபயன் அடைய இயலாது. கடுத்தமுகமுடையாரிடத்தே அருட்செயலை நாம் எதிர்பார்க்க இயலாது. அழிவுடையாரிடத்திருந்து அழியாமை பெறமுடியாது. நமக்குத் தேவை இன்னதென அறியப்பெருதாரிடத்திருந்து நமக்குத் தேவையாயுள்ளதை எய்த முடியாது. மலர்ந்த முகமுடையான் பரமன். அந்தமில்லாதவன் அவன். குறை ஒன்ருனும் இல்லாதவன் அவன். நம் புத்தியுள்ளும் புகுந்து நமக்கு ஆவன அறிவிப்பவன் அவன். ஆதலால், நாம் இத்தகையோனை நினைந்து அவனருளொன்றையே நாடி வணங்குதல் முறையாம். இங்ஙனம் செய்தலால் அவனருளை அடையலாம். இதுவே அவன் ஒப்பிலா அருளை நாடும் முறையாகும். அவனருள் அடைவு இன்றி நமக்கு நற்கதி இல்லையாம். ஆதலால், அந்திவானம் போலும் செந்நிறமும், தாமரை போன்று மலர்ந்த ஒளிமுகமும் உடைய அழிவில்லா இறைவனை - சகல ஐச்வரியங்களும் உடையவனை - நமக்கே அவன் அருள் நண்ணுவதென்று - குறையொன்றும் இல்லானை - நாம் நாளும் வணங்குவோமாயின் அவன் நமக்கருள் புரியும் கருத்துடையனுகி நம் புந்தியுள் இருந்து நன்னெறி அறிவித்து அந்நெறியே நடத்தியருளுவன். இச்செய்தியை இம்முறையே

இயம்புவது சந்தி எனத்தக்க ... ... புகுந்து நின்ருனே என்னும் மந்திரம் ஆகும்.

28. செல்கதித்துணை

நாம் ஓர் ஊருக்குச்செல்ல வழித்துணை நாடினுல் நம்மோடு இணக்கம் உள்ளானையே கேட்டு நிற்போம். சிவத்தையே நம்பிச் சிவநெறியே செல்லவேண்டி நிற்பார்க்குச் சிவத்தைக்காட்டிலும் இணக்கமுடையார் இல்லை. அவன் பழத்தின் இரசம்போலச் சிவபோதங்கொண்டார்க்கு இணங்கி நிற்பவன். ஆதலால் அவனையே வணங்கி நின்ருல் நம்மைக் கைசோரவிடாமலும், இடையே ஏதமொன்றும் வாராவண்ணம் காத்தும் செந்நெறிக்கே செல்விக்கும் துணை ஆவான் என்பது உறுதியாம். இதனைக்காட்டுவது இணங்கி நின்ருன் வணங்கி நின்ருர்க்கு வழித்துணை ஆமே என்ற இடம். "வழித்துணையாம் மழபாடி வயிரத்தூணே" என்பர் அப்பரும். நாம் ஐம்புலன்களுடனும் கூடியுள்ளோம். இந்த ஐம்புலக்காட்டுநெறியில், பல்வகை அபாயங்கள் உண்டு. அவ்வபாயங்கள் ஒன்றிலும் அகப்பட்டுக் கெட்டொழியாமல், தலைவியைத் தலைவன் உடன்கொண்டு போதல் போல, சிவநெறிப்படர்வாரை ஆண்மையுடன் இணங்கிநின்று நடத்திச்செல்வான் பரமன் என்பது இதனுல் உணரப்பட வேண்டும்.

வழித்துணையாக வருமவர் ஒரு குறிப்பிட்ட இடம்வரையில் வந்து பின் நீத்து நிற்பரேல் அவரும் தக்கதுணையாகார். வழி முழுதும் கடத்தி எவ்விடம் அடைய விரும்பினேமோ அவ்விடம் கொண்டு சேர்ப்போரே சிறந்தோராவர். அவ்வாறே சிவமும் எங்கும் ஆகி நின்ருன் ஆதலால் நீங்காத்துணையாகி உதவுவானவன். இது பாலில் நெய் நிற்பது போன்ற நிலையதாகும் என்பர்.

கண்ணில்லாதார் சூரியனெளிப்பரப்பில் இருப்பினும் சூரியனைக் காணமாட்டார். ஆகவே. சூரியன் அவர்களுக்கு ஒளியுதவுவனே ஒழிய வழியறிந்துபோகக் கண்ணில்லாத்தன்மை காரணமாகத் துணையாகமாட்டான். இதனுல் கண்ணில்லாதானதே குற்றமாகும். இவ்வாறே. இறைவன், சிவபோதம் கைக்கொள்ளாமல் அவஞானம் பூண்டொழுகுவார்க்கு மெய்க்காட்சி தோன்றச்செய்யாமல் பிணங்கி நின்றிடுவான். ஒருவனுக்குத் தந்தை தாயார் அவன் குழந்தைப்பருவத்தின் முற்பட்டிருந்தே

உதவுவாராவர். அவன் வயோதிகனுயின் அவன் மக்கள் நின்று பிற்காலத்து உதவியாகிவிடுவர். ஆனுல். இங்ஙனம் நிகழ்தல் நிச்சய மன்று. ஆனுல், சிவபெருமான் உலகத்தோற்றத்துக்கு முன்னும், உலக ஒடுக்கத்தின் பின்னும் நின்றுதவுவோனுவன். ஆதலால், எஞ்ஞான்றும் துணையாவான் இறையாதல் தெளியலாகும். "ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே" என்பதும் இக்கருத் துடையதாகும்.

கதிரவன், கண்ணில்லார்க்கு வெளிப்பட்டிருந்தும் காணப் படாதவனுதல்போலவே, இறைவன் உயிர்க்குயிராகி இருந்தும் பதிஞானமில்லார்க்கு உணங்கிநின்றிடுவான்; அதாவது மறைந்தே நிற்பன். இத்தகைய சிவபெருமான், அமராவதிக்குத் தலைவனுன இந்திரன் (முதலிய தேவர்கள்) யாரினும் மேலானவன். அவர் களையும் இவனே நடத்துபவனுவன். ஆகவே, அமரர்க்கும் இறைவனே வழித்துணையாக நிற்கின்றுன்.

ஆதலால், நாம் அவனிடமான இத்தகைமைகளைக் கருதிப் பணிந்து பற்றற்றுப் பற்றிநின்றுல் செல்கதிக்குத் துணையாகி உதவுவான் சிவபிரான். "விழிக்குத்துணை திருமென்மலர்ப்பாதம்" என்னும் பாடற்கருத்தும் இங்குப் பொருந்துவதாம்.

29. இறைவன் கலப்புநயத்தல்

பெண்டிர் தமக்குள்ளே கூடி உறவாடினுல் ஏதும் இன்பு அநுபவிக்கமாட்டார். தக்க தலைவரைக் கூடியஞான்று முதலே இன்பம் நுகரப்பெறுவர். ஆன்மாக்களெல்லாம் பெண்டிரை நிகர்ப்பவராவர். இவர்கள் இறைவனைக் கூடிக் கலக்கப்பெற்றுல் தான் பேரின்ப நுகர்வினை எய்துவர். இவ்வாறன்றி வேறு எவ் வாறு எதனேடு கூடியிருப்பினும் இழவுத்துன்பொடுகூடிய சிறு சிறு இன்பமே துய்ப்பர். தலைவி, தலைவனைக் காணப்பெற்றபின் னரே ஆயத்தோடணைவதினும், ஆடலயர்வதினும் தலைவனேடு கூடியிருத்தல் சுகமுடையதெனத் தெரிகின்றுள். அங்ஙனமே, சிவத்தை நாம் கண்டாலல்லது அவனை அணையும் எண்ணம் உதியாது. தலைவன், தலைவி உள்ள இடம் குறுகிக் கண்ணிற்காண நிற்றல் போன்று இறைவனும் நிற்பானுயின் நன்றும். ஆதலால், காணநில்லாய் என்கின்றுர் ஆசிரியர். இது நமக்குக் காண வேண்டுமென்னும் தாகம் உண்டாதற்காம் அவசியத்தை உணர்த்துகின்றதாகும்.

தலைவனைக் கூடப்பெறும் ஆசையுற்ற தலைவிக்குப் பெற்றோர் முதலிய சுற்றத்தோரும் உறவினராகத் தோன்றப்பெறுர். அங்ஙனம், மேற்கூறிய காட்சிவிழைவு நமக்கு மிகுதற்கு ஏனைச் சுற்றத்தொடர்புபற்றிய பாசமின்மைவேண்டும். இதனை அடியேற் குறவு ஆருளர் என்பது காட்டும். காதல் கைம்மிக்கவழி நாணம் உடைபடும். "காமக்கணிச்சி உடைக்கும் நிறை என்னும் நாணுத்தாழ் வீழ்த்த கதவு" என்பது குறள். இவ்வாறே இறைவனை அணையப்பெறற்கண் தானே ஓடித்தழுவும் ஆசை மிகவேண்டும் என்பார் உன்னை நான் தழுவிக்கொள்ள நாணகில் லேன் என்று கூறிக் காட்டுகின்றுராவர்.

இருட்டில் தன்பக்கத்திலேயே ஆண்பறவையிருந்தும் அதனை அறியப்பெறுமல் அலமரும் பேடை. அவ்வாறே நாம் நம்மனத் துக்கண் அண்மியிருக்கும் இறைவனை அறியப்பெறுகிலம். ஆனுல் வெளிச்சத்தில் அவ்வலமரலுற்ற பேடை தன் ஆண் தன்பக் கத்தே இருத்தலை அறியப்பெற்றுத் துயரைவிட்டுக் கூடிக்களிக் கும். அங்ஙனமே குற்றமும் கோட்டமுமில்லா உள்ளத்தோடு குணமுமுடைய அடியார்கட்கு அவருள்ளத்திலேயே பசுமரத்திற் பிடியுண்ட ஆணிபோல இறைவன் விரும்பி அமர்ந்திருத்தல் புலப்படுவதனுல் ஆனந்தக் களிப்பெய்துவர். இனி, இப்பகுதிக்கு வேறுரைநயங்களிருத்தலை இவ்வாதீன வெளியீடு 105-ல் உள்ள 54-ஆம்பக்கம் நோக்கியறிதல் நன்றும். கோணமில்லாத குணத்து அடியார் மனத்து ஆணியனுகி அமர்ந்து நின்றுனே என்பது ஈண்டுக் குறிப்பிடும் இடமாம். இதனுல், பிரிவறநிற்கும் பெரு நிலையே நாம் நாடவேண்டும் என்பது கருத்தாம்.

30. பரிபாககாலம்

குழந்தைக்குத் தாயாயிருப்பவள் பால் கொடுக்கக் கடமைப் பட்டுள்ளாள். குழந்தை ஈனுதற்கு முந்தி இல்லா முலைப்பால் ஈன்றதும் உண்டாதலினுல் இந்தக் கடமை இயற்கையானது என்றுதெரிகின்றது. ஒரு குழந்தைக்கு அதன் தாயினிடத்தில் அது பிறத்தற்கு முந்தியே பால் உண்டாக்குதற்கான முன்னேற் பாட்டுக் கருணைகொண்ட பெருமான், அனைத்துயிர்களின் வளர்ச்சிக்கு எவ்வளவு கருணை கொண்டு உள்ளான் என்பது தானே தெரியப்படும். பால் நினைந்து ஊட்டும் பரிவு, தாயின் பால் இயற்கையாகவே இருப்பினும், குழந்தையும் தாய்க்குத்

தன் பசியுணர்ச்சியுண்மையைத் தன் அழுகையினுல் காட்டத் தான் வேண்டும். "அழுதபிள்ளை பால் குடிக்கும்" என்பது பழமொழி. அழாது கிடப்பின் பாலைப் பருகுதற்கு முந்தி இருக்கவேண்டுவதான பசி அக்குழந்தையிடம் உண்டாகவில்லை என்றே அல்லது மந்தநோயுற்றுக் கிடக்கிறதென்றே தாயானவள் கருதி அதன் அழுகையையோ, நோய் நீக்கத்தையோ எதிர் பார்த்துக்கொண்டே இருப்பாள். தன் சொத்து முழுதும், தன் பிள்ளைக்கே உரியதென்றாலும், தந்தையானவன் அப்பிள்ளைக்கு உரிய பருவம் வந்தபிறகுதான் அதனைச் சாசனம் செய்கிறான். இளமைப் போதிலேயே அங்ஙனம் செய்வதில்லை. செய்யினும் பயன்படாது.

இவ்வாறே கடவுளும், உயிர்களாகிய நம்மிடம் மிகவும் பரிவுபூண்டுள்ளான் ஆவன். உயிர்களின் பக்குவத்துக்காவன எல்லாம் ஆற்றியே வருகின்றான். வாழ்க்கையின் பற்பல நிகழ்ச்சிகளால், தான் உயிர்களின் பக்குவ அழைப்பை எதிர்பார்த்திருப்பதைக் குறிப்பிக்கிறான். அவன், இங்ஙனம் குறிப்பிப்பது, ஆகாயத்தில் திரண்ட கார்மேகம், தான் மழை பொழியப்போவதை முன் கூட்டியே தரை வாழ்வோர்க்குத் தெரிவிக்கக்கருதி மின்னலாலும் இடி முழக்கத்தாலும் தெரிவிக்கிறதுபோலாம். அம் மழைநீரைத் தேக்கஞ்செய்து செழிப்படைதற்கான முயற்சிகளை "வெள்ளம் வருதற்கு முன்னர் அணைகோலி வைப்பது" போல மக்கள் செய்து வைத்திருக்கவும் வேண்டி உள்ளது. இந்த உவமையை ஆசிரியர், **வானின்றழைக்கும் மழைபோல் இறைவனும் தானின்றழைக்குங்கொல் என்று தயங்குவார்** என்றுரைத்துக் காட்டியிருக்கிறார். இதனுல் இறைவன் கருணைபூண்டிருந்தாலும், உயிர்கள் அதனைச் சரிவர அறியப்பெறுமல் தயங்குவதும் உணர்த்தப்படுதல் காணலாம். "மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை" என்ற பழமொழிக்கிணங்க மக்கள் ஏதும் தயங்காமல் அவன் உதவிபுரிதற்கு மடிதற்று முந்தி நிற்பதை அறிந்து தாம் செய்து தீரவேண்டியதைச் செய்துகொள்ளவேண்டும்.

கன்றானது மறைவான இடத்தே கட்டுண்டு கிடப்பினும், அதற்குப் பாலூட்டக்கருதும் தாய்ப்பசு தன் கன்றைக் கதறி அழைத்துத் தன் வருகையை உணர்த்துகிறது. அப்போது, கன்றும் அதனைப் பரிவுடன் அழைத்துப் பிற எதனையும் விடுவித்துக்கொண்டு அந்தத் தாய்ப்பசுவினிடம் செல்லத் துடிக்கின்றது. அம்மாதிரியான துடிப்பு அல்லது அருள்தாகம் அல்லது

பக்குவம் நம்மிடம் அமைவது அவசியமாகும். இதனை உவமை முறையில் வைத்து ஆனின்றழைக்கும் அதுபோல் என்கிருர் ஆசிரியர். தான் அப்படியே துடித்ததாகவும் நமக்கு உணர்த்து கிருர். அதாவது, தான் அநுபவபூர்வமாக இதனைச் சொல்லுவ தாக நமக்கு உணர்த்தும் பொருட்டாகும். இப்படியெல்லாம் நாம் துடிப்பது எதைக்கருதி என்பதையும் ஆசிரியர் தெரிவித் துள்ளார். பகலுக்குச் சூரியன் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் வீடுபேற்றுக்கு ஞானம் என்பது. அதாவது பசுஞான பாசஞானங்களல்ல; பதிஞானமாம். பதிஞானம் கோதற்றது. கோதறுப்பதும் அதுவே. ஆதலால் அதனை நாம் பெறுதற்கு விரும்புவதே வேண்டுவது. இதனை, என் நந்தியை நான் இன்று அழைப்பது ஞானம் கருதியே எனச் சொல்லிக்காட்டியுள்ளார் ஆசிரியர். எனவே பதிஞானம் சிவத்தால் (குருவால்) நமக்கு உண்டாவதாகும் என்னலாம்.

31. இறைவன் அறிவிற்கு அறிவானவன்

மேற்கூறியபடி நமக்கு இறைவனுல் ஞானம் நணுகவேண்டு மாஞல் அவரவர்க்கும் தரமறிந்து தரவல்லவனை சிவபிரானை நாம் அறிவால் காதலிக்கவேண்டும். நம்முடைய காதலளவுக்கே அவன் கலந்துதவுபவன் ஆவன். மண்ணுலகத்தவர் அவனையும் ஒரு மண்ணுலகத்தானுக மதிப்பரேல் அவன் அவர்க்கு மண் ணுலக மாந்தனுகவே தோன்றியருளுவன். மானிடச் சட்டை சார்த்தியருளுவதும் இதன்பாலதே. இதனுல், நமக்குப் பக்குவ முதிர்ச்சி உண்டானுல் ஞானுசாரியனுக மானிட வடிவில் தோன்றி நம்மை ஆட்கொண்டு ஞானமருளுவன். இவ்வா றன்றி வேறுவடிவில் காட்சியளிப்பின் மருளநேரிடும். மான் காட்டி மான் பிடிப்பது என்பர் இதனை. குருவினுருவில் நிலைத்து நின்றிடுதல்கொண்டு சிவனை - குருவை - ஒரு சாமானிய மனிதனே என எண்ணி ஏமாற்றம் நாம் அடைந்திடுதல் ஒண்ணுது. ஆனது பற்றியே நமக்கு எச்சரிப்பாக மண்ணகத்தான் ஒக்கும் என் றுள்ளார். இங்ஙனமே வானகத்தோர்க்கும், விண்ணகத்தோராகிய பிரமனுதியோருக்கும் அவ்வவர் திறத்திற்கேற்ப வெளிப்பட்டு அருள்புரிவான் பரமன். சித்தர்கட்கு அத்தகையோரில் ஒருவராக வெளிப்படவும் இறைவன் வல்லன். இவற்றை வானகத்தான் ஒக்கும் விண்ணகத்தான் ஒக்கும் வேதகத்தான் ஒக்கும் என்பது

குறிக்கும். உள்ளங்கசிந்து உருகிப் பாடலுற்றானுக்கு அவன் பாடும் பண்ணின் இடமாக உள்ள இசையொத்திருந்தருளுவன். "பண்ணையும் ஓசையும் போல" என்றும் இதனை உவமித்துரைப்ப துண்டு. இதனால், எவ்வெவர் ஏது தொழில் புரியினும் அன்பு கசிந்து புரிவரேல், அவ்வவர்க்கும் அவரவர் புரிதொண்டினிட மாக நின்று நலம் புரிவன் இறைவன். இதனைப் பண்ணகத்து இன் இசை பாடலுற்றானுக்கே என்பது உணர்த்தும். திருத் தொண்டர் புராணத்து அடியார்க்கருளிய விதங்கள் இம்முறை யிலே தரப்பட்டுள்ளமைகொண்டும் நாம் தெளியலாம்.

ஞானிகள் ஞானத்துள் ஞானமாக இறைவனை நேசிப்பர். விஞ்ஞானகலருக்குச் சிவம் அறிவுக்கறிவாய்நின்று அருளுதலும் ஈண்டைக்கு நினைதல் தகும். ஆதலால், ஏதேனும் ஒன்றினிடமாக நாம் நிலைத்திருந்து பரமன்பால் கசிந்து காதலிப்பின் அவன் அம் முறையில் நமக்கும் அருளுவான். இதனை நமக்குணர்த்து முறை யில் **கண்ணகத்தே நின்று காதலித்தேனே** என்றுள்ளார் ஆசிரியர். இதனால், எவ்வகையானும் ஞானம் பெறுதற்கண் இறைவனது இன்றியமையாமை புலப்படுத்தப்பட்டதாயிற்று. அந்த ஞானத் தைப் பெறுதலில் நமக்கு இறைவனிடம் மாறாத அன்பு (காதல்) இருக்கவேண்டும் என்பதும் இதனால் புலப்படும். 'சித்தனாக நின்ற என்னை இறைவன் இடையனாக நிற்பித்தானாதலால், அந்த இடை மூலன் இடமாகவே நின்று ஞானத்தை அடையவேண்டி இறைவனைக் காதலிக்கலானேன்' என்ற பொருளும் தோன்று மாறு இவ்வுரை. ஆசிரியரால் கூறப்பட்டது என்றலும் ஆம். எவ்வாற்றானும் ஞானத்தை நயப்போர்க்கு அவர் எத்திறத்தா ராயினும் மூலமாக வேண்டுவது இறையின்மாட்டு முழுத்த அன்பே ஆம் என்பது உறுதியாம். இதனால், புறக்கோலம் கருதப் படாது; அகத்துணர்வன்பே கருதப்படும் என்பது புலனாம். "என் நெஞ்சத்தான் என்பன் யான்" என்பர் அம்மையாரும்.

32. இறைவன் பசுபாசஞானங்கட்கு அப்பாலான்

மேலே சொல்லப்பட்டவண்ணம் பசுவர்க்கத்தார்க்கு அகப் படுபவன் சிவன் என்றமையால் பசுவர்க்கத்தறிவினால் அவன் அளந்தறியப்படுபவன் என நாம் எண்ணிவிடக்கூடாது. அவனது ஞான வியாபகம் எல்லையற்றதாகும். ஆதலால் நம் அறிவுக்குட் படாத நிலைமையுடையான் இறைவன் என்பர். வியாப்பியப் பொருளாக இருப்பது, தன்னின் வியாபகப் பொருளை அறிதல்

நியதியன்று என்பது விதியாம். மேற்பாடலில் குறித்தவண்ணம் தேவர்களுக்கும் ஞானம் அருளுபவன் சிவனேயாதலால் சிவ பெருமான் தேவர்பிரான் ஆவன். மண்ணகத்தோராகிய நமக்கும் அருள்புரிபவன் அவனே யாதலால் நம்பிரானும் ஆவன். அவன் உலகில் எப்பொருளினும் விரவியிருப்போனுதலால் திசை பத்தும் மேவுபிரான் ஆவன். இதனுல் திசை பத்தும் கடந்த வியாபக முடையவன் பெருமான் என்பதும் தெரியலாம். இங்ஙனமாகக் கலப்பும் கடப்பும் உடையானுவன். பொருட்டன்மையால் கருதின் ஏழுலகுக்கும் அப்பாற்பட்டவனுவன். "ஏழண்டத்து அப்பாலான்" என்பர் திருநாவுக்கரையரும்.

விரிந்த கடல்வளைப்புள் இம்மண்ணுலகிருத்தல் கண்கூடாக நாம் காண்பதாகும். அங்ஙனமே, இறைவியாபக வளைப்புள் ஏக தேசப்பட்டதே ஏழுலகப்பரப்பும் என்னலாம். இதுபற்றியே, விரி நீர் உலகு ஏழையும் தாவு பிரான் என்றனர் மந்திரத்தார். இங்ஙனம் எதற்கும் எவர்க்கும் அப்பாற்பட்டிருத்தலால் சுட்டு உணர்வாலும் சிற்றுணர்வாலும் இறைவன் அறியப்படாத பெருமை உடையவன் ஆவன். ஆதலின், தன்மை தானறிவார் இல்லை என்றனர் ஆசிரியர். "உலகேழெனத் திசைபத்தெனத் தான்ஒருவனுமே பலவாகி" நிற்போனுகிய இறைவன் செலுத்துந் தன்மையால் எங்கும் நிறைந்துள்ளானுவன். ஆதலால் பாவு பிரான் என்றூர். ஆதலால், இத்தகையோனை நாம் நண்ணிட வேண்டில் அவன் அருளை நாடிப் பாடிடுதல் ஒன்றே அமையும். அன்றி, இத்துணை விரிவுடையோனை நாம் அருள்குறித்துப் பாடி முடித்திடுதலும் கூடுமோ என்றும் கூறலாம். எனினும் நாம் அவனை அருள்வேண்டிப் பரவுவோமாக! என்பது கருத்தாம். இதனை, அருள் பாடலும் ஆமே என்பதால் அறியலாம்.

33. உலகத்தார் இறைவழிபடுமுறை வரலாறு

உலகம் ஒருபொருளாகக் கூறப்படினும் இதனுள் பலப்பல பகுதிகளாகப் பல நாடுகள் உள. இந்த நாடுகளில் தொன்று தொட்டுப் பிறந்து வளர நேர்ந்தார் பலர். அவர்கள் யாவரும் பண்டைநாளில் தத்தம் மதிவன்மைக்கும் சொல்வன்மைக்கும் ஏற்றவாறு பலப்பல தெய்வங்களைப் படைத்துக் கூறினராவர். ஏனையோர், அவர் உரைத்தவழியே பல தெய்வ வழிபாட்டுக் கொள்கையுடையவராயினர். இதனுல் தெய்வம் பலவாம் என்ற

எண்ணம் நிலைத்தலானது. இது மெய்மை யறியமாட்டாமையால் நிகழ்ந்த விளைவாம். 'அவரவர் மதிவழி அமைந்து நின்றனரே' என இத்தகையோரைக் கூறுவர். இது உலகத்தில் மிகப்பழமையாக நேரிட்டதன்மை ஆகும். இம்முறை உண்மையாகாது. தெய்வம் ஒருவனே என்பதுதான் மெய்ம்மை. இது, **பதிபல ஆயது பண்டு இவ்வுலகம்** என்பதன் கருத்தாம்.

இப்படித் தெய்வங்கள் பலவாகப் பண்டையோரால் கொள்ளப்பட்டமையால் மதங்களும் பலவாயின. அந்த அந்த மதத்தாரும் தத்தம் தெய்வங்களே சிறப்பின என வாதுற்று அதற்காகப் பல விதிகளைத் தங்கள் இயற்கைக்கும் நாடுகளின் சூழ்நிலைக்கும் ஏற்பச் செய்துகொண்டனர். இதனோடு, அந்த அந்தத் தேவதைகளையும் திருப்திசெய்து அந்த அந்த நன்மைகளை அடையவேண்டுமெனவும் விதிக்கலுற்றனர்கள். இவைகள் யாகங்கள் என்ற பெயரால் நிகழ்த்தப்பட்டன. இவர்கள், ஒவ்வொரு பலனுக்கு ஒவ்வொரு தேவதையை ஒவ்வொருவிதமான கிரியையால் பலி, அவிசு முதலன அளித்துத் திருப்திசெய்வதே முறையெனக் கொண்டொழுகினர். இவர்கள். வேள்வியும் வேள்விப் பயனுமாய் நிற்பவன் இறைவன் ஒருவனே என்று அறிகிலராயினர். இதனால். சடங்குகள் பலவாயினவேயன்றி உண்மை விளங்கிலது. இதனையே ஆசிரியர், **விதி பல செய்து ஒன்றும் மெய்ம்மை உணரார்** எனக் குறித்துள்ளார். இக்கருத்தைச் "செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று பத்திசெய் மனப் பாறைகட்கு ஏறுமோ" எனக் கேட்டறிவுறுத்துவர் தேவார ஆசிரியர். மற்றும், "எரி பெருக்குவர்" என்னும் ஆதிபுராணத் திருக்குறுந்தொகைப் பாடலும் மேற்சொல்லப்பட்ட கருத்தை வலியுறுத்துவதாம். "ஈறிலாதவன் ஈசன் ஒருவனே" என்று உணரமாட்டாமைபற்றி **மெய்ம்மை உணரார்** என்றனர் ஆசிரியர்.

தெய்வங்களையும், கிரியைகளையும் பற்பலவாகப் படைத்துக் கொண்டதனால் துதிகளும் தோத்திரங்களும் அவ்வவற்றிற்கு ஏற்பப் பலவிதங்களாக அமையலுற்றன. இதனால், துதிகளையும் தோத்திரங்களையும்பற்றி உயர்வு தாழ்வு வாதங்கள் மலிந்தன. மொழிபற்றிய வாதங்களும் இதனுள் அடங்குவதே ஆகும். இப்படியாக வாதங்கள் பல்கினவேயன்றி, மெய்ஞ்ஞானம் விளைய இடமில்லாமற்போயிற்று. ஆதலால், இவர்களையும் நம் ஆசிரியர், **துதிபல தோத்திரம் சொல்லவல்லாரும் மதியிலர்** எனலுற்றார்.

பிற்காலத்தே இவற்றை ஒன்றுபடுத்திக் காட்டும்பொருட்டே, "இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்" எனலுற்ருர் மணிவாசகனுர்.

பலவாக மாறுபட்டு வாதங்கட்கு இடஞ்செய்துவிட்டமையால் துதிகளும், தோத்திரங்களும் தெய்வ உணர்ச்சியை எழுப்பிக் கசிவினை விளைப்பதற்கு மாருகக் காய்ச்சலை மூட்டிவிட்டனவாகும். இவ்வாறெல்லாம் பிளவுபட்டு உண்மை தெரியாமற் போனமையால் "இருட்டறையில் மலடுகறந்து எய்த்தல்" போன்று நெஞ்சில் இறைவனுட்டம் கொள்வதற்குப் பிரதியாக வாட்டம் மேலிடப்பெற்றனராவர். ஆதலால், ஆகமம் கூறும் சித்தாந்தநெறியே நெறியாய்ச் சிவனொருவனே தேவனும் என்ற கொள்கையராய் நாம் வாழவேண்டுமென்று இறுதியில் ஆசிரியர் இரங்கிக் கூறலுற்ருராவர். இதனை அறிவுறுப்பதே நெஞ்சினுள் வாடுகின்ருரே என்ற வாசகம்.

34. ஆயிரநாமமும் ஒருவனையே குறிக்கும்

இதற்குமுன் கூறியபடி உலகத்திலே தொன்றுதொட்டு அவரவர் மதிவழியும் விதிவழியும் பற்பல தெய்வப்பெயர்களையும் கன்மங்களையும் படைத்து வழங்கிவந்தாலும் அவையெல்லாம் அந்த அந்தத் தெய்வமாகவும் நின்றுதவும் எம்பெருமானும் சிவன் ஒருவனையே குறிப்பனவாகும். இறைவன், தானும் தன் ஆற்றலுமாய் நிற்பதேயன்றித் தன் ஆற்றலின் ஒவ்வொரு கூறு ஒவ்வொரு தெய்வத்துக்கும் உதவி அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு செயலைப் புரிதற்கேற்றவர்களாக ஆக்கிவிட்டுள்ளாராவர். ஒரேவித மூலச்சரக்கு, நோய்கட்கு ஏற்றவாறு பற்பலவித உபசரக்குகளினேடு கூடிநின்று அவற்றின் தன்மைமூலம் தன் மூலத்தன்மையை உதவி நோயை நீக்குதற்கண் உதவுவது போன்றே சிவம்புரிதன்மையும் உளது. சிவசத்தியரின் கலப்பிஞல் விளையும் இத்திறங்களை மெய்ந்நெறியெனக் கண்டு அமைவதே தக்கதாம். கவரிமானிடமாகப் பிறக்கும் கத்தூரியும், செஞ்சாந்திடமாகப் பிறக்கும் குழம்பும் ஒன்றுபட்டுக் கமழும்போது அந்த நறுமணத்தை ஒன்ருகவே மூக்கு முகர்வதல்லால் வேறுபடுத்துக் கொள்வதில்லை. இம்மாதிரியான பொதுமையநுபவமே நம்மிடம் தெய்வவிஷயத்திலும் இருக்கவேண்டும். இதனுலேயே, "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொருபாகனுர்தாம்" மன்னிப் பேரருள் புரிகின்ருர் என்பர்.

சந்தனம் தன் மணத்தைக் கத்தூரிக்கு நல்க, கத்தூரியும் தன் மணத்தோடு சந்தனமணத்தை ஏற்றுக்கொள்ள, இரண்டும் ஒன்றுபட்டுப் பூசிக்கொள்ளும் பலருக்கும் ஒரேவித மணமாகிப் பயன்படுகிறது. இப்படித்தான், இறைவன், தனதாற்றலின் ஒரு கூற்றினை ஒவ்வொருவித அமரர்க்குதவுகின்றான். அவ்வவ் அமரரும் அந்த ஆற்றலைத் தமவாகச் செய்துகொண்டுதான் தம்மைப் போற்றுவார்க்குத் தலையளி செய்யவல்லராகின்றனர். ஆகவே, கூர்ந்து காண்பார்க்குச் சிவமே அமரர்கள்மூலம் தமக்கு உதவுவது தெரியவரும். ஆதலால், அமரர்களை ஆட்படுத்தி நடத்தும் பேரிறைவன் சிவபெருமானே ஆகிறான். இதனையே, **சாந்து கமழும் கவரியின் கந்தம்போல் வேந்தன் அமரர்க்கருளிய மெய்ந்நெறி** என்ற வரிகள் அறிவிப்பனவாம். சிவபெருமானை ஈண்டு வேந்தன் என்றுள்ளமையால் எல்லாத் தேவரையும் இவனே ஆண்டு நடத்துபவன் என்பது கருத்தாம்.

ஆகையினால், அவ்வத் தேவர்கள் பெயராலும் கூறப்படும் நாமங்கள் எல்லாம் சிவபெருமானையே உண்மையில் சேர்வனவாம். கணக்கற்ற கிரணங்களும், அவை பல்வேறு திசைகளில் விளக்கஞ் செய்வனவாயினும், பற்பல பொருள்களின்மூலம் விளக்கம் செய்வனவாயினும், பற்பலருக்கும் விளக்கம் செய்வன ஆயினும் எல்லாம் ஒரேசூரியனுடையவாக இருத்தல் போலத் தன் ஆயிரக்கணக்கான திருப்பெயர்களும் உபசாரமுகத்தால் பற்பல தேவர்கட்கும் உரியனபோலக் காணப்படினும் - கேட்கப்படினும் - தம் ஒருவருக்கே உண்மையில் உரியவையாதல் உள்ளது. இதனைக் காட்டுவதே, **ஆர்ந்த சுடர் அன்ன ஆயிரம் நாமமும்** என்ற இடம். "ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்ற பாடலடிகளும் இங்கு ஒப்புக் காணத்தக்கனவாம். ஆதலால், இம்முறையில் நாம் தெளிவுடையவர்களாகிச் சரிப்பினும் அன்றி இருப்பினும் அந்நாமங்களால் சிவனொருவனையே புகழக் கடமைப்பட்டுள்ளோம். ஓரிடத்தே இருந்து போற்றினும், அவ்வத்தலந்தோறும் போந்து போற்றினும் எல்லாம் அரன் ஒருவனை உவப்பிப்பதாம் பயனுடையனவாகும். இது, **போந்தும் இருந்தும் புகழுகின்றேனே** என்பதால் புலப்படும். போதலாலும், இருத்தலாலும் செயலில் மாறுபாடு காணப்படுவதேயல்லால், செய்வோனில் மாறுபாடு ஏதும் இன்றாம். செய்வோன் யாண்டும் ஒருவனேயாயிருத்தல்கொண்டும் இது தெளியப்படும் என்க.

35. புகழ்ச்சிப்பயன்

சிறுதேவர்கள், தத்தம் ஆற்றலெல்லேக்கு உட்பட்ட நலங்களையே தம்மடியடைந்து துதிப்பார்க்கு ஆற்றும் வல்லமை உடையவர். வீடுபேறெனப்படும் சீரிய இன்பம் ஆற்றும் திறம் அத்தேவர்கட்கு ஒருபோதும் இல்லை. மற்றும் யாதொரு பயனை வேண்டி ஒரு தேவதையைப் போற்றியும் அப்பயன் கிட்டவில்லையாயின் அத்தேவதையைப் போற்றியும் புகழ்ந்தும் பயனில்லை. நாற்றம் ஒன்றில்லாத பூவொடு சாந்தினை நாற்றம்வேண்டி யாரும் தலைக்கொள்ளார். பூசிக்கொள்ளவும் மாட்டார். அதுபோல, வேண்டியதொரு பயனையோ அல்லது வீடுபேற்றினையோ இதர தேவதைகள் ஆற்றகில்லாவிடத்துப் பயனை அடையமுடியாது என எண்ணி நாம் விட்டுவிடக்கூடாது. அவற்றை மிக எளிதில் ஆற்றவல்ல ஆற்றலுடையானாகிய சிவத்தைப்பேணி அடைதல் கூடும். அன்றியும் சிவோகம்பாவனையால் நிற்கமாட்டாதாரும் சிவனைப் போற்றிப் புகழினும் அமையும். சிவம், சிவயோகமும் யோகப்பயனுமாயவன். ஆதலால், நாம் சிவயோக நெறியினை ஆற்ற இயலாவிடின் அவனைப் போற்றினும் அது தரும் பயனைத் தட்டாமல் எய்தலாம். ஏனெனின் இரண்டின் முதல்வனும் ஒருவனேயாக உள்ளான். இதர தேவதைகள் விஷயம் இவ்வாறுனது அன்று. ஆதலால், ஆசிரியர், ஆற்றுகிலாவழி ஆகும் இறைவனைப் போற்றுமின் போற்றிப் புகழ்மின் எனலுற்றார். துறவறநெறியால் மேற்கொள்ளும் பயனை இல்லறநெறியை ஒழுங்குற மேற்கொண்டு நடத்தலாலும் அடையப்பெறுவர் என்பது நீதிநூல். அவ்வாறே சிவயோக நெறியால் அடையும் பயனைப் போற்றிப் புகழும் பத்திநெறியாலும் அடையலாகும் என நாம் தெரிதல் தக்கது. சன்மார்க்கம் எனப்படும் செந்நெறிக்கு இவ்விரண்டும் உடன்பாடே. நாயன்மார்களில் சிவயோகத்தால் முத்தி அடைந்தாரைப்போன்றே பத்தியால் முத்தி அடைந்தோரும் உளர் ஆவர்.

போற்றிப்புகழும் பத்திநெறியை மேற்கொள்ளின் புகழ்ச்சி விருப்பன் ஆகிய சிவபெருமான் இந்த நெறியைச் சிவயோக நெறியாக மாற்றியமைத்துப் பயன்தருவன். "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்பதற்கிணங்க ஏற்போனும் ஏற்றமுடையோனுமாகிய இறைவன் அங்ஙனம்புரியின் அதனை அவற்கு மேற்பட்டவராக நின்று மறுப்போர் யாருமிலர். இதனைப் புகழ்ந்திடில்

மேற்றிசைக்கும் கிழக்குத்திசை எட்டொடும் மாற்றுவன் என்றார் ஆசிரியர். அவனே எத்திசைக்கும் உரியவன். ஆதலின் திசை மாற்றங்குறித்து அவனொடு மலைவார் எவருமிலர். ஒவ்வொரு திசை ஒவ்வொருவருக்கே உரியதாக இருப்பின் அவர்தம்முள் மாறுபாடு நிகழும். இங்குச் சிவபெருமான்மட்டில் அங்ஙனம் நிகழ்தற்கு மார்க்கம் எதுவும் இன்றாம். நாம், அவன்வழியே நிற்பதால் அவன் ஆட்டிவைத்தவழியே சென்று ஆட்டுவோனையே அடையப்பெறுவோம். எனவே, போற்றிப் புகழ்நெறியினரும் சிவத்தையே அங்ஙனம் புரிவாராயின், ஏகதேச அறிவின் நீங்கி முற்றுணர்வு பெறுமவர் ஆவர். இது, அப்படி ஆட்டவும் ஆமே என்பதால் பெறப்படும். "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே" என்னுமிடம் ஈண்டுக் கருதிப் பார்த்தல் நன்றாம். ராஜபாட்டையொன்றில் இடப்புறம் போனாலும் வலப்புறம் போனாலும் போய்ச்சேருமிடம் அரண்மனையே ஆதல் தெளிவாம். அவ்வாறே செந்நெறிப் படர்வோர் சிவத்தையே உள்ளிச் சிவயோகநெறியில் படரினும் அல்லது பத்தி நெறியில் படரினும் சிவத்தையே எய்தப்பெறுவர் என்பது ஒருதலையாம்.

36. அருள்நெறிப் பொதுமை

எல்லா உயிர்களுக்கும், கன்மத்தால் அமைந்த பெற்றோரும், முதன்மையால் அமைந்த பெற்றோரும் என இரண்டுவகைப் பெற்றோர்கள் உண்டு. தற்போது உறவுமுறை பாராட்டி நாம் அழைக்கின்ற பெற்றோர் நமக்கு எப்போதும் உதவும் பேரருள் உடையர் ஆகார். "எமக்குத் தாயாகியார் தமக்குத் தாய்நாடியே சென்றார்" என்பது நாலடியார் கூறுவது. இப்பெற்றோர்கள் தத்தம் விதிவழிச் செல்பவராதலால், 'சந்தைக்குச் செல்பவர் வழித்துணை ஆகார்' என்பது போல் நமக்குத் துணையாகி நிற்க வல்லார் அல்லர். ஆதலால் இவர்களருளை நாடிப் பயனில்லை என்பது தேற்றமாம். நமக்குத் தமக்குத் தாய் இல்லாத - தந்தை இல்லாத - பெற்றோராக இருப்பவரும் நடுவுநிலை தவறாத பேரருளாளருமானவர் இறைவியும் இறைவனுந்தான். இவர்களுள் பேரூழியின்போது இறைவியும் இறைவனுள் கரந்திடுவள். ஆகவே இறைவனே ஆருயிர்கட்கு முதற்கருணை காட்டுபவனும் நற்றந்தையுறவுடையனும் ஆவன். ஆகையினால், இந்தத் துணிவு கொண்டு நாம் இறைவனருளை நாடவேண்டுமென்பார் அப்பனை என்றார்.

உலகத்துத் தந்தையர் யாவருமே ஆஸ்தி உடையவராகார். ஏழையராகவும் உளர். செல்வீகத்தந்தையரும், தம்வினைப்பயனால் பெற்றுள்ள சொத்தினை இழத்தலும் கூடுவர். ஆதலால், இத் தகைக் குறைபாடுடையர் நம்தந்தையாக வாய்ப்பதனுல் பயன் இல்லை. சிவபெருமானும் தந்தையர் அத்தகையரல்லர். எல்லாச் செல்வமும் - முத்திச்செல்வமும் - உயிர்க்குவழங்கும் பேரருள் உடையராய்க் குறைபாடேதும் எக்காரணத்தாலும் இல்லாதவர். ஆதலின், அவரை நாம் தந்தையாகக்கொண்டு நாடி நடப்பின் குறைவற்ற செல்வத்தை நமக்கு அளித்தருளுவர். இதுபற்றியே நந்தியை என்றார்.

உண்ணத் தெவிட்டாதது அமுதம். மரணத்தையும் தவிர்க்கும் தன்மை இதற்குண்டு என்பர். இது தேவர்களின் உணவாம் என்ப. நரை, திரையின்றி என்றும் ஒரே நிலையில் இம்மருந்து அருந்துவோரை வைத்திடும் என்கின்றனர். இவ்வள வெல்லாம் இதற்குப் பெருமை கூறப்படினும், இதனை உண்ட தேவர்களுடைய மரணம் தவிர்க்கப்படவில்லை என்பது வரலாறு. தவிர, இவ்வமுதத்தையும் நம் தந்தையாம் சிவபெருமானுடைய அருளாலேதான் இவர்கள் அடையப்பெற்றனர். குருடராயிருப் போர், எதிர்ப்பட்ட சித்தரிடமிருந்து ஒரு கோலை நாடிப்பெறு வதைவிட, அச்சித்தரின் மகிமை தெரிந்து விழியையே வேண்டிப் பெறுதல் நல்லதாகும். அப்படியே, தேவர்கள் செய்திருக்கலாம். அங்ஙனம் செய்யாமையின்பயனே அமுதம் கொண்டும், உண்டும் அடையலாயினர் அமரர். ஆகையால், நாமும் அவ்வாறு ஏமாற்றம் அடையாமைப்பொருட்டு இறைவனையே அமுத மாகக் கருதி அடைய வேண்டும் என்பார் ஆரா அமுதினை என்றுள்ளார். தேவர்களாவார் புண்ணியம் உள்ளவரையே அமுது அருந்தி வாழ்வர். ஆனல், இறையாகிய பேரமுதத்தை அருந்தலுறுவார்க்குக் கால அவதி என்பதே இல்லையாதலால் ஆரா என்றார்,

அமுதத்தை நேரேவழங்கியவன் திருமாலாயிற்றே; ஆதலால், திருமால், சிவனினும் ஏற்றமுடையோன்போலுமென்று ஐயுறு தல் நிகழக்கூடும். சிவன், நஞ்சுண்டு காவாவிடில், திருமாலும் அமுதம் வழங்கியிருக்கமாட்டான். அன்றியும் சிவனது ஏவலால் எடுத்து வழங்கும் பணியினையே செய்தானவன். ஆனதுபற்றி எக்காரணத்தாலும் சிவனை ஒப்பார் உளரோ என நாம் நினைக்க

ஒண்ணுதபடி ஒப்பிலி என்றூர். கேட்டதெல்லாம் நல்கவல்லானே உண்மையாக வள்ளல் ஆவன். எத்தேவும், பேரின்ப வீட்டினை நல்கும் திறனுடையன அல்ல ஆதலால், அதனை நல்கும் திறனுடைய சிவபெருமானையே ஈண்டு வள்ளல் என்றூர். தேவர்கட்கு நஞ்சுண்டு பாதுகாப்பளித்த செயலை வேறெவரும் செய்தாரிலர் என்பது தெரிந்த செய்தியே ஆகும். உலகெல்லாம் மகாசங்காரத்தே ஒடுங்கிய பின்னரும் இருப்போன் இறைவன் ஒருவனே ஆதலாலும், மற்றெல்லாத் தேவரும் அதுபோழ்து ஒடுங்கிப் போதலாலும் இறைவனை என்றும் நின்று அருள்பவன் எனத்தெரிவித்தல் குறித்து ஊழிமுதல்வனை என்றூர். திரும்பவும் எதனையும் எவரையும் அவனே அருளுதலின் முதல்வனை என்று உரைத்துக்காட்டியுள்ளார்.

எவ்வுயிரையும், இறைவன், அவ்வவைபுரியும் வினைக்கேற்ப நடத்தி இறுதியில் பேரின்பத்தே கூட்டுவிக்கிறூன். ஆதலால், உயிர்களாவார், தம்மை எவ்வெவ்வாறு முழுமுதல்வன் நடத்துகின்றூனே அந்நெறியே செல்வதால் முடிவில் முடிவில்லா நிலையினை அடையமுடியும். ஆகவே, இறைவன் அருள் செலுத்துமுறையில் ஆருயிர்கள் அடங்கி நடப்பதே நன்றும். அதனை நீத்துத் தத்தம் ஆணவத்தால் அவமதித்து நடக்குமாயின் துன்பமுற்றுத் தளரநேரிடும். இறைவனே இல்லை என்று மொழிபவர், உண்டு என்னும் நிலைக்கு வருமளவும் வருந்தியே தீர்வர். ஆதலால், ஏதாவது ஒருவிதத்தில் இறைவனைத் தத்தம் மனம் இடங்கொடுக்கும் வகையில் நின்று ஏத்தினல், அப்போற்றுதலானது, எந்த நதியும் முடிவில் கடலிலேபோய்க் கலத்தல்போல எம்பிரானையே சென்றடையும். அதனல் நன்மைக்கான நிலைமை விரைந்து கைகூடும். ஆகையினல், ஆசிரியர், எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினல் அப்பரிசு ஈசன் அருள்பெறல் ஆமே என்றூர். " இறைஞ்சுமின் மனப்பட்டதொன்றே " என்பார் ஆழ்வாரும். ஆகவே, பன்மை நெறியும் ஒருமைக்கு வழிகாட்டும் என இதனல் துணிந்து தெய்வம்பற்றியேனும் - சமயம்பற்றியேனும் - வழிபாட்டு முறைபற்றியேனும் - உண்டு இல்லைக் கொள்கை பற்றியேனும் - யோக முதலாம் நெறிகளின் பன்மைபற்றியேனும் ஒருவரோடு ஒருவர் தர்க்கித்து மற்கட்டி நிற்காமல் தத்தம் விதிவழி நின்று ஏத்துதல்செய்து ஈசனருளுக்குப் பாத்திரராகுமாறு இம்மந்திரத்தால் உபதேசிக்கின்றூர். எக்காலத்திலும் எந்நிலத்திலும் இவ்வறிவுரை பயனளிப்பதாம் பெருமையுடையது

என்னலாம். "எவ்வெவர் தம்மையேனும்" என்னும் கந்த புராணப் பாடலும் இக்கருத்துத் தருவதே ஆகும். மற்றும் பெரியபுராணத்து நாயன்மார்கள் வழிபட்டு முத்தி எய்திய முறைமைகளின் வேறுபாடுகளும் இவ்வுண்மை புலப்படுத்தும் தகையன.

37. கடவுள் அருளும்முறை

ஞானமுற்றோராகிய பெரியோர்களும் கடவுளை ஏத்துதல் வேண்டுமோ என்பதும் தோன்றக்கூடிய ஐயங்களுள் ஒன்றும். மெய்கண்ட சிவனார், சாத்திரத்துவக்கத்திலேயே சம்பிரதாய நெறி எத்தகையோராலும் மேற்கொள்ளப்படவேண்டும் என்று தெருட்டுதற்பொருட்டாக "நல்லார் புனைவரே" என்று கூறும் முகத்தால் 'நானும் புனைவனே', 'நீங்களும் புனையுங்கள்' என்று தொனிக்கக்கூறி நம்மனோர் ஆணவத்தேய்வுக்கு வழிகாட்டி யுள்ளார். இந்தமுறை நன்கு விளங்குமாறே, திருமூலரும், நானும் நின்றேத்துவன் நாள்தொறும் நந்தியை என்றுள்ளார்.

நானும் என்பதால் தனக்கு முன்பே பெரியோர்கள் அங்ஙனம் செய்துகாட்டுதலை உணர்த்தியுள்ளார். இது மரபு தவறாமைப் பொருட்டாம். இலக்கண நூல்களும் 'மரபியல்' என்று ஓரியல்கொண்டு உணர்த்துதல் கற்றோரறிவர். நின்று என்பதால், இதர எண்ணங்களை நீக்கி உள்ளத்தை இறையடியில் நிற்கச் செய்து ஏத்தவேண்டும் என்கிறார். நெருப்பென்று வாயினால் சொல்லுவதனால் சோறு வேகாது. நெருப்பினிடம் சோருக்கும் கலம் தொடர்புகொள்ளல் வேண்டும். அவ்வாறே, நம் உள்ளமும் ஏத்தும் நேரத்திலேனும் பிறதொடர்புகளை நீத்து இறையடியே பற்றிநிற்றல் வேண்டுமென்பதனை இஃதுணர்த்துவதாம். ஒழிந்த நாளில் ஏத்துவது போதாது. வயிற்றுக்கு வேளைக்கு வேளை உணவளித்தால்தான் பசித்துன்பம் விலகும். அவ்வாறே நாளும் ஏத்தினால்தான் அறியாமை என்னும் வல்லிருள் நம்மிட மிருந்து நீங்கும். மிக்க பக்குவியான திருக்கண்ணப்பதேவருக்கும் ஆறுநாளளவு தேவைப்பட்டிருந்த செய்தி தெரிந்த ஒன்றே. ஆனதுபற்றியே நாள்தொறும் என்றார். மூக்கைச் சுற்றிப்பிடிப் பதைவிட நேரில் பிடிப்பதே நாற்றம் விரைய நீக்குமுறையாம். அவ்வாறே பற்பல தேவர்களையும் பற்பல முறைகளால் வழி பட்டு இறுதியில் அவர்கள்வழி இறைவனை அறிதலினும், நேரே இறைவனை வழிபடுதல் மலவாசனை ஒழித்து உவப்பூட்டும்

என்பதைத் தெரிவித்தற்பொருட்டு இங்கு நந்தியை என்றூர். மார்க்கண்டதேவர் இங்ஙனம் நேரே சிவலிங்கத்தைப்பற்றி உய்தி பெற்றமையும் அறிந்த வரலாருகும்.

குளிருடையான் குருடனுயிருப்பினும் அவனுக்குத் தன் வெய்யிலை உதவி அவனது குளிரைக் கதிரவன் நீக்குகின்றுன். தழல் விஷயத்திலும் இம்முறையேதான் நிகழ்கின்றது. குளிர் நீங்கப்பெற்றவன், தான் குருடனேயாக இருப்பினும், கேட்டுத் தெளிந்து தழலை, கதிரோனை விரும்புதல்வேண்டும். இது குருடன் கடமை. இவன் தன் கடமையில் தவறினும் தழல் - கதிரோன் - குருடற்குதவும் கடமையில் தவருன். தன்னைக் கண்ணுல் காண்போர்க்கே பனித்தல் நீங்கச்செய்வதென்ற குறைபாட்டுள்ளம் தழலிடம் - கதிரோனிடம் - இலது. அங்ஙனமே இறைவனும், உயிர்களின் மலவலி நடுக்கத்தை - இருளை - நீக்கி உதவும் கொள்கை உடையனுகவே யாண்டும் உளன். இச் செய்தி, தானும் நின்றுன் **தழல் தான் ஒக்கும் மேனியன்** என்பதனுல் புலப்படும். சுத்தவீரன் பகைக்கு அஞ்சுதலின்றி அதனை வெல்லுதற்பொருட்டுப் போருக்குக் கிளம்பினுல், அவனுக்கு வாகையளித்தற்பொருட்டு அவனுக்கு முந்தியே கொற்றவை செல்லும் என்பர். அங்ஙனம் முந்திக்கொண்டிருக்கும் இயல்பினன் இறைவன். தழலின்பால் ஒளியும் உண்டு; ஒலியும் உண்டு. நமக்கு மல இருள் நீக்கமும் வேண்டும்; ஞானத்தெருள் ஆக்கமும் வேண்டும். ஒளி இருளை ஓட்டும். ஒலி ஞானமூட்டும். ஆனதுபற்றியும் செம்மேனியம்மான் ஆதல் பற்றியும் **தான் தழல் ஒக்கும் மேனியன்** என்றுள்ளார். தழல், பசுமமும் பக்குவமும் செய்யவல்லது என்பது தெளிவாம்.

நம் உடம்பு நமக்கு மூச்சு இருக்குமளவும் இயங்குகிறது. மூச்சற்றுல் பேச்சற்றுப்போம். ஆகவே உயிர், உயிர்ப்பின் துணைகொண்டு வாழ்தல் தெரிவதாம். உயிர்ப்பு இருப்பதால் உடலும் இருப்பதாகிறது. உயிர்ப்பு அற்றுல் உடல் கெடும். இவ்வுயிர்ப்பு நாமே ஆக்கி ஆக்கி உட்கொள்வதன்று. இயல்பாகவே உள்ளது. இதன் துணைகொண்டுதான் உடல்மூலம் எல்லா உலக இன்பும் துய்க்கிறேம். ஆகவே, இயற்கைக்கும் இயற்கையாகவுள்ளான் உயிர்ப்புக்கும் உயிர்ப்பாகி நம் ஊனுள்நின்று அதனை நடத்திவருகின்றுன். உயிர்ப்பு முறையில் வெளிவளி உடலுள் செல்லுகிறது. நம் கண்ணிற்படாதே செல்லுகிறது. சிக்குதலும்,

தடையும், சிரமமும் இன்றிச் செல்லுகிறது. ஆகவே, இறைவன் உயிர்ப்பின் உயிர்ப்பாய் உடலுள் உவந்துசென்று அங்கு நின்று தயிர்கடைவார் கைகள்போல உயிர்ப்பினை ஒட்டிக்கொண்டே உயிர்க்கு அருள் புரிகின்றான். இறந்த பிணத்துக்கு வெறுங் காற்று உட்புகுத்துவதால் அது உயிர்த்தெழுந்து வாழ்தலில்லை. ஆகவே, உயிர்ப்புக்குள் உயிர்ப்பாம் ஒன்றின் துணைவேண்டி யிருத்தலை இதனால் நாம் உணரலாம். இங்ஙனம் அவன் புரியாக் கால் உடல் நிலைப்புறுதுமையும். பிறகு நம் எண்ணம் கைகூடாது. ஆதலால், நம் உடலிடங்கொண்டும் இறைவன் உதவுகிறான் என்பதை நாம் தெளியலாகும். இதனை அப்பர்சுவாமிகள் கூறும், "என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு என் உளே நிற்கும் இன்னம்பர் ஈசனே" என்ற இடமும் தெரிவிப்பதாகும். இதனையே காட்டுவது, உடல் உள்வந்து ஊனில் நின்று ஆங்கே உயிர்க்கின்றவாறே என்னும் மந்திரத்தொடர்.

மேற்சொல்லியவாறு உடலொன்றையே நிலைக்கச்செய்து உலவுவதோடு இறைவன் நின்றுவிடுவதில்லை. இதனினும் முக்கிய மானது உயிருக்குள்ள ஆணவவல்லிருளைத் தேய்த்துமாய்த்தலாம். இருள் நீங்குவதும் தெருள் ஓங்குவதும் இறையருளால்தான் நிகழ்கின்றது. திடீரென ஒரேகாலத்து ஒருங்கு நிகழ்வதன்று. சிறிது சிறிதாக நடைபெறுவது. வளர்பிறை வளர வளர இருட்டுச் சிறிது சிறிதாக நாளும் தேய்ந்து நிலவொளி வானில் வளர்கிறது. பிறை முற்றாக வளர்ந்துவிட்டால் ஒளியும் பூரணமாகும். நம்மிடமுள்ள வல்லிருள் ஆணவம். அதனை ஓட்டும் உள்ளொளி இறையருள். இந்த ஒளி அனுபவரீதியில் படிப்படியாக ஒளிர்ந்து அறியாமையிருளைப்போக்குகிறது. அது நம் உயிரின் பக்குவ வளர்ச்சிப் படிமுறையினைச் சார்ந்துள்ளது. நல்லநட்பின் முதிர்ச்சியைக் கூறவந்த வள்ளுவரும் 'நிறை நீர நீரவர் கேண்மை' என்கிறார். இதனால் அருள்நீரராம் இறைவனொளி பையப்பைய வளர்ந்தொளிர்தல் தெரியலாம். இந்த ஒளி வளர வளரத்தான் உயிரானது, தன்னையும், தலைவனருள்வழியால் உணர்த்தப்பட்டு உணருகிறது. இதனை, " அந்த இருள் உனக்கிங்கு ஆதாரமாய் " என்னும் துகளறுபோதச்செய்யுள் விரிவாய்ச் செப்புகின்றது. ஆகவே, இறைவன் தனதருளால் உயிருக்குப் படிப்படியாய்ச் செவ்விவரச்செய்து அறிவை அலர்த்தி உதவுகின்றானவன். ஆதலால் முற்றுணர்வு விளக்கம் உயிர்கட்கு இறைவனால் உதவப் படுதல் தெரியலாம்.

இருளோடு பொருந்திய உயிர்க்குள் இங்ஙனம் ஒளியோனும் இறைவன் தங்கி உதவுவதால் விகாரமொன்றும் அடையான். படித்து அறிவடைதற்கு முந்தி இருந்த அதே உடம்பினுள்தான் படித்து அறிவடைந்த பின்னும் இருக்கிறேம். இதனுல் அடையப்பெற்ற அறிவானது அதே உடம்புள் இருத்தலால் தான் அறியாமையுடையதாகாது. அறிவுக்கு விகாரப்பாடு நிகழாமை போன்றே இறைவற்கும் விகாரம் ஏற்படாது. நிலவொளி இருளினைச் சிறிது சிறிதாகப்போக்கி மகிழ்ச்சியூட்டுவதுபோலவே உயிரினிடமாக உள்ள மலத்தினைச் சிறிது சிறிதாகச் செவ்வியின் வழியே போக்கிப்போக்கி இறையருள்புரிகின்ருன். இதனையே. வானில் நின்று ஆர்மதி போல் என்பது உணர்த்தும். "மன்னும் இருளை மதி துரந்தவாறு அன்பின் மன்னும் அரனே - மலந்துரந்து" என்னும் திருவெண்பாவும் இங்குக் காண்டல் நலம். இச்செய்யுள், இறைவனை ஏத்துவார்க்கு எங்ஙனம் ஊனும் உயிரும் உறுதி பெறுகின்றதென்பதை விளக்கிக் காட்டுகின்றது என்னலாம். மற்றும் வானில் என்பதால், சந்திரன் ஆகாயத்தே ஓரிடப்பட்டு நின்றே இருள் துடைத்து மகிழ்வூட்டுதல் போல், இறையருளும் உடலுள் இதயத்தாமரையினிடமுள்ள சிதாகாசத்தே நின்று உள்ளும் புறம்பும் அருள்நோக்கால் மருள் போக்கும் என்பதும் தெரியக்கூடும்.

38. தெருளுற்ருர் பிதற்றுமுறை

இறைவன் ஒருவன் உளன் எனக்கொண்டு அவனையே தனக்கு முதலாளியாக நினைக்கப்பெறுதல் எல்லா உயிர்கட்கும் நேரிடாது. முயற்சி அளவுக்குச் செல்வம் கிடைப்பதில்லை. முயல்வோனுடைய தவத்தின் அளவுக்கே அது வாய்க்கிறது. "தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்" என்பது முதுமையுரையாகும்.

இந்த முறையிலேதான் இறைவன் செம்பொற்கழற் செல்வம் நமக்கு வாய்க்கின்றது. சிறப்புப்புண்ணியமே இங்ஙனம் ஒருவர்க்குக் கிடைக்கச்செய்யும். இறைவன் என்னும் செல்வம் இத்தகைய தவத்தால் கிடைக்கப் பெறுதலினுலும், அத்தகைய வாய்ப்பு தனக்குக் குறைவற நேரிட்டுள்ளதனுலும், அத்தகைய வாய்ப்பு குறையறக் கிடைக்கப்பெற்ற மகிழ்ச்சி தன் நெஞ்சத்தே வரம்பற்றுப் பொங்கிடுதலாலும், திருமூலர் தன்னை ஒரு

பாக்கியவானெனத் தானே மதித்துத் தன்னைத்தானே பெருமைத் தவன் நானே எனக் கூறிக்கொள்ளலானார். சிறுமைத் தவங் களும் அவை தரும் அற்பப் போகங்களும் உள. அவை ஒன்று மின்றி, அழிவில் போகத்தை அளிக்கும் தவமே தனக்குள்ளது எனக் காண்டலால் பெருமைத்தவன் எனலுற்றார் ஆயினர். இங்ஙனம் தன்னைத்தானே மதித்திடும் நிலை தன்னை மறந்த நிலையா மாதலால் களிப்பு மிகுதிப்பட்டுப் பிதற்றுகின்றாராயினர் என்க.

இம்மாதிரி பிதற்றும் நிலையானது விருப்பு வெறுப்பற்றுத் தொழில்புரியும் நிலையாம். இத்தகையார்க்குக் கன்மமல விளைவே இலதாகும் என்பர். இவர்கள் பாடுவர்; ஆடுவர். இந்நிலை இல்லாதாரை இரும்பின் பாவைபோன்றார் என்பர் மணிவாசகப் பெம்மான். "பாடேன் நின்றாடேன் அந்தோ அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன்"; "தவமே புரிந்திலன் ... திருவடிக் காம் பவமே அருளுகண்டாய்" என்றெல்லாம் இவரும் பத்தி வைராக்கிய நிலையினைப் பாடுதல்கொண்டும் மேல் சொல்லப் பட்ட நிலை பெருமைத்தவநிலை எனக்கொள்ளல் ஒல்லும்.

ஒரு தொழிற்சாலையை நடத்துவோர் தமது சாலைக்கண் வேலைக்குள்ளார் நலமெல்லாந் தாமே தமவாகக்கொண்டு நடத்தி வருவர். அவ்வாறே இறைவன், தனது ஐந்தொழில் அருட்கூத் துள் அகப்படுத்து ஆருயிரனைத்தையும் நடத்தும் பெருமை உடையவன். ஆதலால், அவனை நாம் ஒரு தொழிலாளியின் நிலைமையில் இருந்துபோற்றி வழிபடவேண்டும் கடமையுடை யோம். இதனைத் தாதமார்க்கத்தில் நின்று வழிபடுதல் என்பர். ஞானம் எய்தப் பெறுதற்கான உண்மைத் தவநெறியில் இது முதலாம்படிநிலையாகும். இதுவும், பயன் கருதாது புரிதலாதலால் பிதற்றொழியேன் பெரியான் என்றார். ஒழியாப் பிதற்று என்பது பயனைக் கருதாது இடையறாத் தொண்டாற்றுதலாம். திருநாவுக்கரையரின் உழவாரத் திருப்பணியானது கூலிக்காகச் செய்யப்பட்டதன்றென்பது தேற்றம்.

மகனுவான், தந்தை புரி நன்றிகளை என்றும் மறவாது மனத்துக்கொண்டு அகக்கரணங்களாலும் புறக்கரணங்களாலும் வழிபாடு செய்தல் வேண்டும். சிவபெருமான், சாலோகமுதல் சாயுச்சியம் ஈறுகவுள்ள தனது எல்லாச் சொத்துக்களையும் ஆன்மாக்கட்கு மகன்மை கருதி அளிக்கின்றான். ஆதலால், நாம்

அத்தகைய அருமையான செல்வங்களை நமக்கு நல்கும் அருமைப் பாடு உடையானை இடையறுது அகத்தே நினைந்தும், புறத்தே தொண்டாற்றியும் வழிபடுதலே முறையாகும். இதனை இங்கு ஆசிரியர், அரியானைப் பிதற்றெழியேன் என்று கூறித் தெரிவித் துள்ளார். சிறிது பொழுதும் இறைபணியன்றி அவமே செல்ல விடாமையே ஒழியாமைத் தன்மையாகும். மகன்மை நிலை இது எனப்படும்.

இதுகாறும் வெளியிலே இறையுருப்பிறப்பித்துப் பூசித்துப் போற்றுதல் சொல்லப்பட்டது. இனி உள்ளத்தே யோகநிலையில் இறைவனை எண்ணிப் போற்றுதலும் வேண்டும். இதனுல் இறைவற்கும், தனக்கும் நீங்காத தொடர்புண்மை தெரியவரும். இவ்வுண்மையறியப்பெற்ற மகிழ்வால் பிதற்றுதல்நிலை தியான சமாதியின்போது நிகழும். இதனைக்காட்டுவது, பிறவா உருவானைப் பிதற்றெழியேன் என்பது. நண்பனேடு கூடி இன்புறுவது போன்ற நிலை இதுவாம். தோழன்மை நிலை எனவும் இது கூறப்படும்.

மேற்கூறப்பட்ட மூன்றுவகை நிலைமைகளாலும் ஞான நிலை கைவரப்பெறும். அது சிவத்தொடு அறிவால் கலந்து அபேதமாய் நிற்கும் நிலையாகும். இது ஜீவன்முத்தநிலையாகும். இவர்கள் சிவத்தை ஞானசாரியநிலையில் கண்டருளிய தவம் உடையவராவர். தலைவி யொருத்தி தான் காதலித்த தலைவனெடு கூடியின்புறுவது போலும் காணப்படுவது இந்நிலை. இதனைக் காதன்மை நிலை என்பர். ஆதலால், எங்கள் பேர் நந்தி தன்னைப் பிதற்றெழியேன் என்ருர் ஆசிரியர். அயற்கண் எட்டுணையும் காதல் செல்லாமையைப் பேர் நந்தி தன்னை என்பது காட்டும். எல்லா ஆன்மாக்கட்கும் இறைவனெருவனே தலைவனுவான். ஆதலின் எங்கள் எனப்பட்டது. இவ்வாறு புறத்தொழில் நிலை அகத்தொழில்நிலை கடந்து அறிவுத்தொழில்நிலை எய்தப் பெற் ருேர் ஞானப்பெருமையுடையோர் ஆவர். இஃது உண்மைத் தவநெறியாதலால் பெருமைத் தவம் எனப் பேசப்பட்டதென்க.

மற்றும் சிவபெருமான் மகத்துக்கு மகத்தானவனுதலாலும், அணு ஓர் அண்டம் எனும்வண்ணம் நுண்ணியனுமாவனுத லாலும், கன்மத்திருமேனியின்றிச் சத்தித்திருமேனி உடையனுத லாலும் அநாதியே தலைமைபூண்டுள்ளவனுதலாலும், முறையே பெரியானை எனவும், அரியானை எனவும், பிறவா உருவானை

எனவும், பேர் நந்தி தன்னை எனவும் ஆசிரியர் குறிப்பிட்டார் எனலும் ஆம். இவற்றால், சரியையாதி நால்நெறியில் நின்று உன்மத்தர்நிலை அடைவது சிறப்பு ஆம் என்க. இறப்பில்தவமுடைமை இதுவாம். "பசித்துண்டு" என்னும் திருவெண்பாவுரை ஈண்டைக்குப் பெருந்தவ இலக்கணமறிதற்கண் காண்டற்குரித்தாம். "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்னும் இரண்டாம் திருமுறைப்பாடலும் இங்கு ஒப்புக்காணலாகும்.

39. அருளுக்கு இலக்காம்முறை

புண்ணியப்பேறு திருவடிப் பேற்றுக்குத் துணைசெய்வதாம். உண்மைப் புண்ணியம் ஒருநாளில் ஒருபோதில் அமைவதன்று. முற்பிறப்புக்களில் செய்து செய்து வருகின்ற நீர்மையுடையது. இதனை மாதவம், செயிர்தீர்தவம் என்றெல்லாம் சிறப்பிப்பர். யாகம் முதலியவை உபாயத்தவமெனப்படும். இவைகள் செய்த பொழுதே அதற்காம் பயனைத்தரும்; சுவர்க்க முதலாம் அழியும் அற்பப்பயனையே தரும். உண்மைத்தவம் அப்படி அன்று. அறிவைப் பக்குவப்படுத்தி, மலத்தைப் பரிபாகப்படுத்தி, திருவருளைப் பதிவித்து, ஞானக்காட்சியை நல்கும். அதிதீவிரதர பக்குவிகட்கு எல்லாம் ஒரு பிறப்பின்கண்ணே விரைந்து நிகழ்தலும் உண்டு. இறைவனை ஏத்துதலே அருட்பேற்றிற்கு முதன்மையாம் மார்க்கமாகும். மனத்துள் அன்புபூண்டு வாழ்த்துவரேல், இறைவன், உள்ளத்தே உள்ள இருளை அகலச் செய்வன். இதனால் மால் அகலும், இதுவே சீலநெறி ஆகும். இந்நிலையில் இறைவன் சோதியாய் அகத்திருந்து துணைபுரிவன். ஆதலின், வாழ்த்தவல்லார் மனத்துள்ளூறு சோதியை என்றார். இதனால் ஆன்மாவின் அறிவு மருளகன்று பக்குவப்படலுறும், இருளொழிக்கும் ஒளிபோன்று உதவுதலின் சிவத்தை ஈண்டுச் சோதியை என்றார்.

உள்ளத்தே அன்புற்றநிலை பெருகலுற்றுக் கிரியையினால் வழிபாடு செய்தலும் வேண்டும். இங்ஙனம் செய்தலால் வழிவாய்க்கும். அதாவது மலபக்குவம் விளைதலுறும் என்பதாம். இந்நிலையில் மலநீக்கத் துணையாகச் சிவம் இருத்தலின் தீர்த்தனை என்றார். அப்பால், மனத்துள்ளன்பால் ஆதாரபீடங்களின் தேவதாத் தியானமுறை புரிவர். இந்நிலையில் சிவம் அங்கங்கும் அவ்வத் தேவாக நின்று மகிழ்வூட்டுவன். இது செறிவுநிலையாம். இந்நிலை

திருவருட் பதிவுக்குத் துணையாவதாம். ஒன்றின் ஒன்ருக ஆதார நிலைகளில் உயர்த்தியும், பின்னர் நிராதாரத்தே சேர்த்தியும் இறைவன் இந்நிலைக்கண் துணைபுரிதலின் அங்கே திளைக்கின்ற தேவனை ஏத்தியும் என்ருர் ஆசிரியர். முடிவாக அறிவால் இறைஞ்சுதல் நிகழும். இது ஞானசாரியப் பேற்று நிலையாம். இந்நிலையில் குருசீடத்தொடர்பு நிலை நிகழும். அப்பால் ஜீவன் முத்த நிலை உறும். இதன் பின்னர் நிகழ இருப்பது பரமுத்திநிலை ஒன்றே ஆகும். இந்நிலையில் சிவத்தினது திருவருளிலே அழுந்திக் கிடத்தல் அநுபவமாம். இந்த முறைமைகளை வரிசையாக எம்பெருமான் என்று இறைஞ்சியும் எனவும், ஆத்தம் (சாயா அன்பு) செய்து எனவும், ஈசன் அருள் பெறலாமே எனவும் கூறிக் காட்டியுள்ளார் ஆசிரியர். ஆண்டான் அடிமை எனப் படும் அருள்நெறிமுறைமை இதுவாகும். "மாலுங்காட்டி வழி காட்டி வாரா உலகநெறி ஏறக் கோலங்காட்டி ஆண்டானை" என்னும் எட்டாம் திருமுறைப்பாடல் பார்த்தல் தகும். சிவப் பேற்றின் வேறு பேறு இன்மையின் "ஈசன் அருள்" என்ருர் ஆசிரியர்.

40. அடைக்கலநெறி

நாமே சுமந்து செல்லுமளவும் மூட்டை பளுவால் நம்மைத் துன்புறுத்துகிறது. ஒரு வண்டியில் அதனையும் வைத்து நாமும் ஏறி உட்கார்ந்துவிட்டால், சுமைத்துன்பம், நடைத்துன்பம் இரண்டும் ஒழிந்து சுகம் பிறக்கின்றது. வண்டிக்காரன் பொறுப் பில் நமதுயிரும் பொருளும் அப்போதுள்ளன. அவன் நம்பால் பரிவும், பெருந்திறமையும் உடையான் ஆதலால், நாம் செல்ல விரும்பும் அவனூர்க்கு நம்மைக் கொண்டுசேர்க்கின்ருன். அவ னும் நம்மோடே தொடர்வதேயல்லாமல் நடத்தியும் செல் கின்ருன். பொறுப்பு, வண்டிக்காரனுடையதாயிற்று ஆதலால், வண்டியில் செல்லும்போது நாம் என்ன பேசிப் போனுலும், செய்துபோனுலும், உறங்கிப்போனுலும், விழித்துப்போனுலும் அதனுல் வண்டியின்போக்கில் தடை ஏதும் ஏற்படாது. இவ்வாறே நாம், நம் உடம்பையும், உள்ளே உள்ள தத்துவங் களையும் நாமே என எண்ணிச் சுமந்து திரியுமளவும் துன்புற்றே தீரவேண்டியுள்ளது. இவ்வாறு துன்புறுவது நாம் ஆணவத்தின் சார்பையே மெய்ச்சார்பெனக் கொண்டுழல்வதால் விளைவதாம். ஆணவம் நீக்கத்தக்கது என அறிந்து அதனை நீக்கவல்லான்

சிவனே எனத் தெளிந்து, அவன் தந்த மாயா இயந்திரதனுவை அவனதேயென ஒப்படைத்து, அரனடியே தஞ்சமெனக்கொண்டு அடைக்கலம் புகின் அரனே நம்மைத் தன்னடிக்கீழ் வைத்துத் தண்ணிழல் செய்வான். இதனுல் பிறப்பறும்.

இந்த நெறியிலே செல்லற்கு நாம் எப்போதும் அஞ்செழுத்திலே நெஞ்சழுத்திப் போற்றவேண்டும் இந்நிலையினின்று ஒரு போதும் பின்னடையக் கூடாது. பிறப்பு நேரினும் அரனடிக்கே தொண்டுசெய்யும் உறுதி பிறக்கவேண்டும். அரனே சினந்து நம்மைத் துரந்தாலும் அகலாத மனத்தன்பு கொள்ளவேண்டும். தொழுது வணங்கித் தூநீறணிந்து அரனடிக்கண் அடைக்கலமாகப் புகவேண்டும். இதனை, ''படைக்கலமாக உன் நாமத்தெழுத்து அஞ்சும்'' என்னும் நாவரையர்பாடலால் அறியலாம். நாம் முதலில் நமக்குள்ள குறைபாட்டினை உணர்ந்து அதனை நீக்கவல்லானை அடைந்து அவனடி அடையவேண்டும். இது தெரிவிப்பது, **குறைந்து அடைந்து** ஈசன் குரைகழல் நாடும் என்ற பகுதி. **குரை கழல்** என்றமையால் நமக்குள்ள எல்லாப் பகையையும் போக்கியுதவுவான் என்பது கருத்தாகக் கொள்ளப் படும். தனக்கொரு குறையுள்ளதென உணராதவன் பிறனை மதித்து அடையமாட்டானுதலால் **குறைந்தடைந்து** என்றுர்.

அப்படி அடைந்தாரை அரனுவான் உடனே இருளகற்றி ஒளிபுகுத்தி விளக்கஞ்செய்தருளுவன். பொன், தன்னை உடையாற்குப் பெருமைதரும். தன்னை அணிந்தார்க்கு அணிசெய்யும். மெருகூட்டிய உலோகமே இங்ஙனம் செய்யுமேல் அசல் பொன் செய்தலில் ஐயமே எழ வழி இல்லை. ஆதலால், **நிறைந்தடை செம்பொன்னின் நேரொளி ஒக்கும்** என்றுர். மாற்று மிகவும் நிறைந்தடைந்த செம்பொன்னே மதிப்புடையது. ஆதலால் **நிறைந்தடை** செம்பொன் எனப்பட்டது. மாற்றினைச் சுடப் படுதல் முதலிய செய்கைகளால் அடையப்பெற்ற பொன் அன்று என்பதற்காக **அடைந்து நிறை** என்னுமல் **நிறைந்து அடை** என்றுர். இதனுல் ஈசனது பெருமையும், அவன்புரி அருமையும் ஒருங்குணர்த்தப்பட்டன.

ஆன்மாக்கள் இங்ஙனமாய ஈசனை எண்ணி அடைவதில்லை. ஆணவத்தால் மறைப்புண்டு மதிமயங்கி நிலையிலாத் தத்துவங்களையும் உடம்பையும் மெய் எனக்கொண்டு வஞ்சத்தொழில்

புரிகின்றன. அதனுல் இறைவனெருவனை எண்ணுவதுமில்லை; வாழ்த்துவதுமில்லை. ஆகையால் ஜடப்பொருட் கூட்டுள்ளே கிடந்து ஆவிகள் அல்லலுறுகின்றன. இவ்வாறு ஒழுகுதல் சரியன்று. ஆதலால், ஆசிரியர், மறைந்து அடஞ்செய்யாது வாழ்த்த வல்லார்க்கு ஜடம் புறம் செய்யான் (அல்லது) ஜடம் புறம் செய்வான் என்றனர். ஜடத்துக்குள் உயிரைப் புகுதவிடமாட்டான் என்பதும் ஜடதத்துவங்களை நீக்கியுதவுவான் என்பதும்முறையே பாட பேதங்களின் பொருளாகும். தன்னுள் ஆன்மாவினைப் புகுதச்செய்யும்பொருட்டுத் தான் ஆன்மாவினுள் புகுந்து நிற்பான் இறைவன்; ஆதலால் புகுந்துநின்முன் என்றுரைத்தார். இதுகாறும் ஜீவன் முன்னுகத் தான் பின்னுகி நின்ற இறைவன் இனித் தான் முன்னுகி ஆன்மாவினைத் தன்வழி தொடரச்செய்வான் என்பது குறிப்பாகலும் கூடும். போர்க்களத்திலும் இங்ஙனம் சரண்புகுந்தோர் எதிரிகளேயாயினும் ஆதரிக்கப்படுதல் அறிந்த செய்தியாகும். மறத்துறையில் இங்ஙனம் நிகழ்தலுண்டெனில் அறத்துறையில் நிகழ்தல் வியப்பன்ரும், ஐயமுமின்ரும்.

41. ஐயம் அறுத்தல்

மேற்கூறியவண்ணம் அடைக்கலம் பற்றினுரை இறைவன் தவருமலும், தவறு கருதாமலும் ஆதரித்தருள்வனே என்கிற ஐயம் எவர்க்கும் எழுதல் இயல்பே. ஆதலால், அத்தகை ஆதரவு நிகழ்ந்ததொரு சந்தர்ப்பத்தை இப்பாடலில் எடுத்துக்காட்டி வலியுறுத்துகின்ருர். இன்றேல், முழு நம்பிக்கை பிறவாமற் போம். காரண காரியவாதங்கட்கு அப்பாற்பட்டதே முழு நம்பிக்கை எனப்படுவது. "Beyond reason is belief" என்பர் இதனை. இஃதுண்டாதல் கற்ருர்மாட்டும் அரிதாதலின் கதை காட்டிக் கூறலுற்ருர் ஆசிரியர். இதனுல் சம்பூரண சரணுகதியின் திறமும் உணர்த்தப்பட்டதென்னலாம். "Entire surrender" எனப்படுவது இஃதாம்.

தேவர்கள், சிவனை மதியாதே மால்கொண்டு பாற்கடல் கடையலுற்றனர். எழுந்தது நஞ்சு. யாவரும் ஓடினர். நாடினர் சிவனடி. முறையிட்டு அபயம் வேண்டினர். அடைக்கலம் புக்கனர். இந்நிலையில் பரம கருணுமூர்த்தியாகிய பகவன், அவர்கள் தவற்றினைப் பொருட்படுத்தாமல் மன்னித்து, நஞ்சத்தை நெஞ்சத்தில் கொண்டருளும் அருஞ்செய்கை செய்துகாட்டித்

தமது தலைமையையும் அவர்கட்கு அறிவித்து, அடைக்கலம் புக்க அவர்கட்கு அமுது கிடைக்குமாறு அருள்புரிந்தனன். இத்தகையவன் இறைவன் என்பதற்காக, சினம் செய்த நஞ்சு உண்ட தேவர்பிரானை என்றனர். நஞ்சு அமரர் யாவரையும் காய்ந்தது. எம்பிரானிடம் தன்வலி மாய்ந்தது. அமரர் உய்வு எய்தினர். "நஞ்சுண்டவன் சாவான்" என்பதே வழக்கு. ஆயினும் சிவன், தான் சாகாமல் "நஞ்சுண்டவன் சாவான்" என்பதாக மாற்றிக் காட்டினன் தன் வலிமையால். சிவனது முதன்மைக்கு இதுவும் ஓர் ஏதுவாம் என்க.

இத்தகைய சிவபெருமானை, ஆணவமாகிய காட்டினுள் ஆன்மா அகப்பட்டுக்கிடப்பினும் போற்றிப் புகுமாயின் சுகமுறும். "காமம் என்கின்ற கதுவு வெம்புலியும்" என்னும் பாட்டினால் நாமிருக்கும் காட்டின் இயல்புணரலாம். "நெஞ்சப் புனத்து வஞ்சக்கட்டையை" எனக்கூறி உருவகித்தும் காட்டுவர் பட்டினத்தார். வெளியே கண்டு வழிபட இயலாவிடினும் நெஞ்சுட்கொண்டு போற்றுக என உபாயமும் கூறிக் காட்டியுள்ளார் ஆசிரியர். அங்ஙனம் ஆணவக் கபாடம் திறந்து வெளிப்பட்டுப் போற்றுதல் எளியதொரு செயலன்று என்றும் கூறுகின்றார். இவை எல்லாம், புனம் செய்த நெஞ்சிடை போற்ற வல்லார்க்கு என்பதால் அறியலாம்.

இனிக் 'கனஞ்செய்த' எனவும், '(உற்) பனம்செய்த' எனவும் இப்பாட்டிற்கண் பாடபேதங்கள் உள. கனம்செய்த என்ற பாடத்தில் மோனை காண்கிலார் பனஞ்செய்த என்று பாடம் கொண்டிருத்தல் கூடும். உற்பனம் செய்த என்றால் அகிலமெல்லாம் படைத்த என்பது பொருளாம். கனம்செய்த என்றால் மேகம் வெளிப்படுத்திய (மின்னல்போன்ற)என்பது பொருளாம்.

மேற்கூறியவண்ணம் அடைக்கலம் புகுந்து போற்றினால், அப்போற்றுதலுக்கு உடனே மனம் இரங்குபவள் தாயாகிய சத்தியே ஆவாள். அவளுடன் பிரிவின்றி நிற்பவன் ஈசன். பள்ளம் உள்ள வழியே செம்புனல் பாய்வதுபோல அருட்பிராட்டியாகிய சிற்சத்தியோடும் இறைவன், அடைக்கலம் புக்க ஆன்மாவினை ஆதரிக்க எண்ணி, அந்த ஆன்மா உள்ள இடத்தே பெண்மான் மேயுமிடத்தே கலைமான் வந்து அடைவதுபோல நெருங்கிவந்து ஞானக்கண்ணால் ஆட்கொள்வன். கூட்டமான

பெண்மான்கள் உள்ள இடத்தே ஆண்மான் அணுகினாற்போல எனவும் உவமை கொள்ளலாம். அருட்பேறு சிவப்பேறே யாக்குவிக்கும். ஆதலால் வாள் நுதல் பாகன் என்றார். "சிறந்த ஆண் துணையொடும் வருவாய்" என்றழைப்பர் பெரியநாயகி யைச் சிவப்பிரகாசர். இக்கருத்துக்களை எல்லாம், கனம் (பனம்) செய்த வாள் நுதல் பாகனும் அங்கே இனம் செய்த மான்போல் இணங்கி நின்றானே என்று இவ்வாசிரியர் கூறியுள்ளமை கொண்டுணரலாம். எனவே, அடைக்கலம் புகுவோர் சிவத்தி னது இணக்கம் பெறுதல் ஒருதலையாம் என்க. "மான்" பார்வை மான் எனினும் ஆம். ஞானசாரியனாக வெளிப்படும் உண்மை இங்குப் புலப்படுத்தப்பட்டது என்க.

42. புகழ்வார் பெறுவது

விஞ்ஞானிகள், கவனசித்தர்கள் முதலியோர் எத்தனையோ அரும் பெருஞ்செயல்களைச் செய்கின்றனர். தற்போது செயற் கைச் சந்திரன் பறக்கிறது. வானமண்டலத்து அண்டங்களுக் குப்போக முயற்சி நடக்கிறது. இவைகட்கெல்லாம் கடவுளின் தயவுபெறக் காணோமே. அதுபோலவே, பேரின்பமும், மானிடர் தம்முயற்சியால் ஆக்கிக்கொள்ளக்கூடியதே; இதற்குக் கடவுளெதற்கு? அவரைப் போற்றுவது எதற்கு? என்றெல்லாம் வினாக்கள் பிறக்கின்றன. முக்காலமும் தெரிந்த திருமூலர் இதற் கெல்லாம் சுருக்கமாக விடைதருகின்றார் இப்பாடலில்.

ஒரு மோட்டார்வண்டி வெகுவேகமாகத் தரைமேல் ஓடு கிறது. நொடியளவில் வெகுதூரம் போகிறது. இதற்காக, அந்த மோட்டார், தரையை அலக்ஷியம் செய்கிறதென்று வைத்துக் கொள்வோம். அப்படி அதுசெய்வது பொருந்தாது. ஏனெனில் அது ஓடுவது தரைமேலேதான். தரையின் ஆதாரம் அதன் ஓட்டத்திற்குத் தேவையாக உள்ளது. மற்றும், அந்த மோட் டாரை அமைத்தவன் பூமியிலிருந்து எடுத்த இரும்பைக் கொண்டு தான் அதனுடம்பைப் படைக்கிறான். ஆகையால், மோட்டார், இரும்பின் மூலமாகத் தரையிடம் நன்றிபாராட்டக் கடமைப் பட்டதுதான். அன்றியும், அந்த மோட்டாரில் அதுஓடுவதற்கான வேகத்தை உண்டாக்கவல்ல 'பெட்ரோல்' எண்ணெய், தண்ணீர் முதலியவையெல்லாம் தரையால் தரப்பட்ட பொருளேயாகும். கூர்ந்துபார்த்தால் மோட்டார், தரையின் முழுத் தயவினால்தான்

ஓடுகிறதென்று சொல்லவேண்டும். இதனோடு, அதனை ஓட்டுபவனுடைய தயவும் அதற்குத் தேவையாக உள்ளது. அப்படியிருக்கையில் மோட்டார் எப்படிப் பெருமை பாராட்டிக் கொள்ளமுடியும்? தரை, தான் உதவியவற்றையெல்லாம் தன்னிடம் வாங்கிக்கொள்ளுமானால் அப்புறம் மோட்டாரே இராதல்லவா? இப்படிப் பட்டதுதான் விஞ்ஞானிகளுடையவும், கவனசித்தர்களுடையவுமான செயல்கள் ஆகும்.

மோட்டாருக்கு எப்படித் தரையின் கருணை ஆதாரமாக உள்ளதோ அப்படித்தான் ஆராய்ந்து பார்ப்பின், கடவுளும், அவனது ஆற்றலும், அவன் படைப்புப் பொருட்களும் விஞ்ஞானிகளாதியோர்க்குப் பயன்படுமுறை உளது. மோட்டார், தான் போகும்போது, தன்னைத் தாங்கும் பாலத்தை மதியாமல் மோதுமானால் தான் வீழ்ந்து நொறுங்குகிறது. இப்படிப்பட்ட முடிவுதான் இறைவனுதவியை எண்ணுது இகழும் செருக்கினர் செயல் ஆகும். ஆதலால், **நான்முடி நாயகன் செய்ததுவே நல்கும் மாயகம் சூழ்ந்து வரவல்லராகிலும்** போற்றித்தானுக வேண்டும் என்கிறுர் ஆசிரியர். (Sputnik உலகினைச் சுற்றி வருதல் இங்குநினைவுகூரத்தகும்) ஆகையால், இறைவனை அடைக்கலமாக அடைந்து போற்றுவார், மூங்கிலையொத்த தோளினை உடைய சத்திக்குத் தலைவனுக இருப்பவனைத்தான் பெறுவர். ஆகவே இத்தலைவனிடமாகச் சத்தி பிரிவின்றி இருந்தே அவர் அவர்க்குத் தகுதிப்படி வேண்டுவன அளிக்கின்றுளாவள். இதனைக் காட்டுவது **போய் அரன்தன்னைப் புகழ்வார் பெறுவது வேய் அன்ன தோளிக்கு வேந்து ஒன்றும் தானே** என்ற இடமாகும். ஆராய்வார்க்கு எஞ்சிய முடிவான ஆதாரமாக இருப்பது அரனடியே என்பது புலப்பட்டே தீருமென்பது இதன் கருத்தாம். இதன் மெய்ம்மையை, "சாந்தம் வெண்ணீறெனப்பூசி வெள்ளம் சடை வைத்தவர் - காந்தளாரும் விரல் ஏழையோடாடிய காரணம் - ஆய்ந்துகொண் டாங்கறி யந்நிறைந்தாரவர் ஆர் கொலோ - வேந்தன் மூக்கீச்சரத்தடிகள் செய்கின்றதோர் மெய்ம்மையே" என்னும் இரண்டாந்திருமுறைப் பாடலாலும் அறியலாம்.

இனி, **போய் அரன்தன்னைப் புகழ்வார் பெறுவது நாயகனுன் முடிசெய்ததுவே** எனக்கொண்டு, உரையிறந்த திருமுடி எனப்படும் சுகநிலையே எனப் பொருள்கோடலும் ஒன்றும். எவ்வாருயினும், இறையருள் இன்றிப் பெறுவதொன்றில்லை என்பது

தெளிவாம். 'உரையிறந்த சுகமதுவே முடியாகும் என்றிவ் வுண்மையினை ... சிவனுண்மைத் தரிசனமாம்' என்னும் உண்மை நெறி விளக்கச் செய்யுளடிகள் ஈண்டுக்கருதுதலும் தக்கதாம்.

43. ஆன்மபூரணம்

குறையுள்ளது குறையற்றதோடு கூடினுல் பூரணத்தன்மை பெறும். "ஊரங்கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால், பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்" என்பது நாலடியார். இவ்வாறே, குறைபாடு ஆணவச் சேர்க்கையால் அடைந்து வெதும்புகின்ற ஆன்மா, இறைவனடியைச் சொல்லி அரற்றி அழுது ஒதுங்கினுலும், பரன் அடியை நாடிப்பார்த்து எப்பொருளும் அவனே எனப் பாவித்து ஒதுங்கினுலும் அந்தப் பரமனுடைய திருவடிநிழற்பேற்றினை எய்தும். சிவஞானத்தைக் கால்கொண்டு இத்தகையவர் சிவனடியை மருவுவதனுல் சிவநிறைவைப் பெற்றுப் பூரணத் தன்மை எய்துவர். இதுவே ஆன்மபூரணமாம். எதனை அறிவதால் அறிவு பூர்த்தியாகிறதோ அதனை அறிவதே பூரணம் எனப்படுவது. இறைவற்கு மேற்பட்டதாக எப்பொருளையும் ஆன்மா அறியவேண்டியதில்லை. அதனை அறியும்வரையில் ஆன்மா ஆராய்ச்சி வெள்ளத்தில் ஓடிக்கொண்டுதான் இருக்கும். நிலையுதல் பெருது. இதனையெல்லாம், அரனடி சொல்லி அரற்றி ...... நிறைந்து நின்ருனே என்னும் இம்மந்திரம் கூறும். மென்னிழல் தருவின் அடி அடைந்தவர்கட்கு அவர்களை விடாது தொடர்ந்து வந்த அவருடலின்நிழல் விட்டுப்போவதுபோலவே, இறையடி நிழலை அரற்றியழுதேனும் (பத்தியாலேனும்) பாவித்தேனும் (ஞானத்தாலேனும்) அடையப் பெற்ருரது மலம் அறும். அதாவது பிறப்பறும் என்பதாம்.

44. போற்றுவோர் பேறுகள்

ஓர் அரசனை, அவன் வாழும் அரண்மனையைக் காவல்புரியும் காவலனும் போற்றுகிருன். அதனுல் அவன் பெறுவது சிறிது பொருளேயாகும். அதே அரசனை அவனுடைய சேனைத்தலைவன் போற்றுகிருன். அவன் அரசன் மகிழ்வால் ஏராளமான கொலைக் கருவிகள் பெறுவான். அதே அரசனை அவனுடைய அமைச்சன் தொழுகிருன். இதற்கு அவன் பெறுவது பட்டம் பதவி உயர்வாகும். அதே அரசனை அந்தப்புரத்து மனைவி தொழுகிருள். அதற்கு அவள் பெறுவது இன்பநுகர்வாம்.

இந்த முறையில்தான், சுவர்க்க சுகத்தை வேண்டும் அமரர் புனிதனுடைய அடியைப் போற்றுகின்றனர். இதனுல் அவர்கள் பெறுவது புனிதத்தன்மையன்று; புன்மையான நிலையிலதாம் சுவர்க்கபோகமே ஆகும். அசுரர்களும் அரனடியைப் 'போற்றி' என்கின்றனர். அவர்கள் உள்ளக்கருத்தின் வண்ணம் புனிதன் அவர்களுக்கு வரபலங்களை அருளுகிருன். மானிடர் புனிதன் அடியைப் போற்றுகிருர்கள். அதற்குப் பயனுகப் புதல்வர்ப் பேறு முதலாம் இம்மையின்பங்களை எய்துகின்றனர். ஆகவே, இவர்களெல்லாரும், கற்பகத்தைச் சார்ந்திருந்தும் காஞ்சிரங்கா யினை வேண்டிப் பெற்ருரை நிகர்ப்பவர் ஆவர். இறைவனே புனிதன். அவனிடம் வேண்டிப் பெறவேண்டியது புனிதத் தன்மையொன்றுதான். அதுவே **புனிதாத்துவிதம்** எனப்படுவது. இதற்கு நாம் அவனைப் போற்றி விடைபெற்றுவிடாமல், அவ னடியை மனத்துள்ளே விளங்க நிறுத்தி அணைவதாகும். இதுவே சிறப்புடையதாம். ஆதலால், **போற்றி என் அன்புள் பொலிய வைத்தேனே** என ஏனையவர்கள் போற்றிச் செயல்களைக் கூறிய முடிவில் ஆசிரியர் இச்செய்யுளில் அமைத்துள்ளார். ஆதலால், இறவாத இன்ப அன்பு எனப்படும் பத்தி வலையுள் அவனைப் பிடித்து முயல்வதே அறச்செயலாம் என்க. அவனும் இத்தகை யாளர்க்கு அவர் வேண்டப்பெருமலே வேண்டத்தக்கதையளித் தருளுதவுவன், நாம் அவன்பால் வேண்ட இருப்பது அவன்பால் நீங்காத விருப்பு அமையப்பெறுவதொன்றே ஆம். "வேண்டத் தக்கது அறிவோய் நீ" என்னும் திருவாசகப்பாடல் இங்குப் பொருத்திக் காண்டல் தக்கதாம்.

45. விதிவழியும் பதிவழியும்

உயிர்கள் செல்லும் வழிகள் இரண்டாகும். அவைகளில் ஒன்று பிறப்புக்களைப் பெருக்குவது. மற்ருென்று பிறப்பறச் செய்வது. இவற்றில் பிறப்பை நீக்கிக்கொள்வது என்பது பதியை அடைவதாகும். பிறப்பினை உண்டாக்கிக்கொள்வது என்பது விதியைப் பெருக்கி நரகிலும் சுவர்க்கத்திலும் இவ் வுலகிலுமாக மாறி மாறிப் பிறந்துழல்வதாகும். இஃது ஊஞ்சல் ஆட்டம்போல் நிகழ்வது. இதனுல் உயிர்க்கு இன்பநிலை ஏற் படாது. இந்த விதிவழியை அடைப்பதற்காகவே சன்மார்க்கம் உபாயம் சொல்லுகிறது. இந்த விதிவழியிலும் விதியை நாம் விளைப்பினும், அதனை அளந்து அதற்கு ஏற்றவாறு பிறப்பும்,

புவனமும், காலமும், போகமும், நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ளும் வன்மையும் அறிவும் நம்மிடம் இல்லை. ஆதலால், குடிமக்கள் இயல்புக்கேற்ப அரசன் நடத்துவதுபோல, ஆன்மாக் களின் விதிப்பயன்களுக்கேற்ப இறைவனே வகுத்து அமைத்து உதவுகின்றான். இதனால் விதிவழியிலும் அவன் துணை நிகழ்வதை நாம் உணரலாம். "உலகுடல் கரணமெல்லாம்" என்னும் சித்தியார்ப்பாடல் இச்செய்தி உரைப்பதாகும்.

தானம் செய்தவனும் சாகிறான். தானம் வாங்கினவனும் மறை கிறான். தானமாகத் தந்தபொருளும் மாறிவிடுகிறது. இவை மூன்றும் மறைந்து போகின்றமையால், தானத்துக்கு ஏற்ற புண்ணியத்தை அளவிட்டளிப்பதற்கு யாருளர்? ஆதலால், வினைப்பயனை அளந்தளித்தற்குப் பதியின் துணை தேவையே ஆம். முதல்வன், நாம் வினைப்பயனைத் துய்ப்பதற்கான ஏவல்செய்கிறான். ஆனால், நாம் அவ் ஏவுதலை அறியாமல், நாமே நம்மை ஏவுதல் செய்து கொண்டதாக எண்ணி முனைப்புறுகிறோம். அம்முனைப்புத் தீருதற்பொருட்டே முயற்சியினைக் கூட்டுவித்த இறைவன் பலன் தருதலை அறிந்து ஏவுதல் கடமையாகக் கொள்கின்றானவன். மேலும், வினையைப்புரியும் உயிர் சிற்றறிவுடையது. வினைநிகழ் தற்குத் துணைகளான ஏழும் சடமாக உள்ளன. ஆதலாலும், வினைப்பயனைக் கூட்டுவித்தற்கு இறைவன் கடமை தேவையா கின்றது. ஆகையால் உலகின்போக்கு விதிவழிப்போக்கே ஆம். அதற்கு அது மாறுபட நடவாது. இதனையே, **விதிவழி அல்லது இல் வேலை உலகம்; விதிவழி இன்பம்; விருத்தமும் இல்லை** எனக் கட்டுரைக்கின்றாராசிரியர். 'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' என்னும் குறளும் இங்குப் பார்த்தறிதல் பயனுடைத்தாம்.

இவ்வாறு வினையைப் பெருக்கிக்கொண்டேபோய்ப் பிறவிப் பெருங்கடலில் உயிர்கள் விழாமல் உய்தி பெறுதற்கும் இறை வனே உதவுகின்றான். நல்லபாதையை வெளிச்சம் கண்வழியாகக் காட்டுவது போலவே, சோதிமயனாகிய சிவபிரான், முத்திநெறி யினைக் காட்டுகின்றான். சூரியன், வெளிச்சத்தைத் தந்தாலும் கண்ணை மூடிக்கொண்டு நடந்தால் வழிதெரியாது. அதுபோல நாம் முதல்வனைத் துதிவழியால் வேண்டி அப்பதியை அறிய வேண்டியுள்ளோம். ஆதலால், இறைவனை எப்பரிசினாலேனும் இடையறாது துதிவழியாற் பற்றிநிற்பின் அவன் பதிவழியை

நமக்குக் காட்டிச்செலுத்துவன். இதனையே, ஆசிரியர், துதிவழி நித்தலும் சோதிப்பிரானும் பதிவழி காட்டும் பகலவன் ஆமே என்றுள்ளார். சோதிப்பிரான் என்றமையால் அவற்கு வழி காட்டுவார் தேவை இல்லையாயிற்று என்க.

46. துதிவழி முறைகள்

எந்த வகையாலும் முதல்வனைத் துதித்தே நற்கதி பெற வேண்டும் என்ற ஆசிரியர், இங்குத் துதிக்கும் வழிகளையும் கூறுகின்றார். இறைவனை உருவப்பொருளாகவும், அருவுருவப் பொருளாகவும், அருவப்பொருளாகவும் கொண்டு துதிக்கலாம். இங்ஙனம் கொண்டு துதித்தல் அவரவர் இயல்புக்கு ஏற்றமுறை ஆகும். உருவமாகக்கொள்பவர்கள், அந்திக்காலம் போலும் பொன்மேனியனே! எனவும், யாவற்றையும் அழிக்கும் திறல் உடைய மகா உருத்திரனே! எனவும், யாவர்க்கும் நன்மையைச் செய்யும் சிவந்த திருமேனியனே! எனவும் அவனது படைத்தல், அழித்தல், காத்தல் என்னும் முத்தொழிற்கேற்ற உருவுடைய வராக மனத்திலே சிந்தித்துக்கொண்டே அவனடியில் துதிகூறிப் பணிய வேண்டும்.

இனி யோகியரும் ஞானியரும் அப்பரமனைத் தங்கள் முறைமைக்கு ஏற்ப, முந்திவண்ணா! என்றும், முதல்வா! பரனே! என்றும் போற்றவேண்டும். மூவர்கோவாய் நின்ற முதல்வன் என்பதை முந்திவண்ணா! என்பது குறிக்கும். இதனைப் படிகம் போன்ற தூய வெண்ணிறவடிவம் என்பர். பஞ்சவன்னங்களும் இதனில் அடக்கமுறுவன என்பர். வண்ணம் கூறப்படுதலின் இஃது அருவுருவநிலையாக யோகியராற்கொண்டு துதிக்கப்படுவ தாம்; அதாவது தியானிக்கப்படுவதாகும். ஞானிகள், சிவ யோகிகளாதலால் அவர்கள் எல்லாம் சிவமயமாகக் காண்பவர் களாவர். அவர்கள் இறைவனை உலகமயமாகவும் காண்பர்; உலக அதீதனாகவும் காண்பர். ஆதலால், ஆசிரியர் முந்திவண்ணா! முதல்வா! பரனே! என்று எனக் கூறியுள்ளார். திருமூலரும் இம்முறையே இறைவனை வழுத்தி ஞானசொரூபனாகிய அவனைத் தன் நெஞ்சத்தாமரையிலே எழுந்தளியிருக்கப்பண்ணிக் கொண் டாராவர். ஆகவே, எவ்வாற்றானும் நாம் இறைவனை நம் மனம் புகச்செய்து கொள்ளவேண்டும் என்பது குறிப்பிடப்பட்டது என்க. புந்திவண்ணன் (ஞானமயன்) என்மனம் புகுந்தான்

ஆதலின் நீயிரும் அங்ஙனம் புகப்பெறுவீர் என நமக்கு வழி யறிந்து உரைப்பாராயினர் இம் மந்திரத்தில் எனக் கொள்ளல் பொருந்துவதாம்.

47. நினைப்பின் வன்மை

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் - திண் ணியர் ஆகப் பெறின்" என்பது குறள் உபதேசம். இந்த மனோ வன்மை மக்களாவார் யாவர்க்கும் வேண்டுவதே. மக்கள் யாவ ருடைய வாழ்க்கையையும் இரண்டே பிரிவில் அடக்கிவிடலாம். ஒன்று இல்லறவாழ்க்கை; மற்றது துறவறவாழ்க்கை. இவ் விருவகைப்பட்ட வாழ்க்கைகளில் எது கடவுளை அடைதற்கு உரியவழி என்ற ஐயம் எழும். அதனை நீக்குவது இம்மந்திரம்.

எந்த அறத்தை மேற்கொண்டு ஒழுகுபவராயினும், இறைவ னையே நினைத்து அவன் நடத்த நாம் கருவியாக இருந்து நடக் கிறோம் என்கிற எண்ணம் நிலைக்கப்பெறவேண்டும். இல்லறத்தே வாழ்பவராயினும், குடும்ப தருமங்களை மேற்கொண்டு நெறிப்பட ஒழுகுவதோடு இறைபணியும் மேற்கொள்வாராயின், அவர்கள் சிறந்த தவத்தைச் செய்பவர்க்கு நிகராவர். இல்லறத்தோர்கள் ஐம்புல இன்பங்களையும் ஆரத்துய்த்து, அதனிலே அழுந்தி விடாமல் உவர்த்து, இறையின்பத்தின் பெருமையை அறிந்து, அதற்கென்றுள்ள நெறியிலே வாழ்வாங்கு வாழ்பவராதலால் மாதவத்தோர்க்கு ஒப்பெனப்பட்டாராவர். மாதவத்தோர் சிற் றின்பினை அறிவுரனால் அடிப்பட வெறுத்து ஐம்புலன்களையும் அடக்கி இறைநினைவு புரிபவர் ஆதலால் மாதவர் எனப்பட்டார். இதுபற்றியே "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத் தாற்றின் போஒய்ப் பெறுவதெவன்" என்றார் வள்ளுவனார். இதனால் இருவர் பெறுபயனும் ஒரு நிகராதல் வெளிப்படையாம். இதனைத் தருவதே, மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர் என்ற இடம்.

மாதவர்கள், இடையறுது தைலதாரை போன்று இறை யடியே தியானித்து நிற்பவராதலால் இவர்கள் இறைவனுடைய நேசத்தினைத் தியானநெறியால் அடையப்பெறுபவராவர். ஆலால சுந்தரர் இந்நெறிக்கு எடுத்துக்காட்டாக இயம்பப்படுவர். இந்த நிலையினை அவருடைய முதல் திருப்பாட்டாகிய "பித்தா பிறை சூடி" யிலே, "எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை"

என்ற இடம் காட்டும் தகையது. இதனை ஆசிரியர், நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர் என்றுரைப்பது காட்டும்.

பருந்து என்னும் பறவை பனைமரத்தில் கூடு கட்டி வாழ் வதைக் கொள்வோம். அது உணவின்பொருட்டும், குஞ்சுகளின் போஷணை கருதியும், உல்லாசப்போக்குக் கருதியும் எங்கெங்கே பறந்து திரிந்தாலும் முடிவில் தனக்கு ஆதாரமான பனைமரத்தி னிடமே வந்து இரவெல்லாம் தங்குகின்றது. அது வெளியே பறக்கலுற்றதும் தனக்கு வாழிடமளிக்கும் பனைமரத்தை மறந்து விடுவதில்லை. அவ்வாறே இல்லறநெறியில் வாழ்பவர் நினைவும், "தாதி மனம் நீர்க்குடத்தே" இயைவுபட்டுக்கிடத்தலை ஒப்ப இறையடியிலே ஒடுங்கவேண்டும் என்று அறியலாம்.

மற்றும், அந்தப்பருந்தானது தான் வாழுமிடத்தேயுள்ள அப்பனையின் பழத்தையே அருந்தி அங்கேயே பறத்தலின்றிக் கிடக்கலாம். இந்த வசதியை அது பயன்படுத்திக்கொள்ளாமல் சுற்றிலும் பறக்கிறது. இவ்வாறின்றித் தவத்தோர் தமக்காதாரம் இறையடி எனத் தெரிந்து பற்றியவராதலால் அந்தத்தியானத்தை விட்டு வேறு புலன்வழியிற் படரலாகாது என்பது தெரியலாம். இருதிறத்து வாழ்க்கையினர்க்கும் ஏற்ற விதமாக இவ்வுவமை பொருந்தி உண்மை காட்டவல்லதாக உள்ளது. இவ்வுவமை, பனையுள் இருந்த பருந்தது போல என்பதாம். "பாற்கலன் மேல் பூனை" என்னும் திருவருட்பயனுவமையும் கருதற்பாலது ஈங்கு. ஆகவே, முடித்துக் கூறினல், எத்திறத்தவருக்கும் இறை நினைப்பே உறுதி பயப்பதென்பதும், அந்த நினைப்பின்றி எத்திறத் திருப்பினும் பயனில்லை - இன்பமில்லை - என்பதும் கொள்ளப் படும். இதுபற்றியே, நினையாதவர்க்கு இல்லை நின் இன்பம் எனக் கூறினர் ஆசிரியர். இதில் நின் என்ற பதத்தைத் தருவதனல் இதனை உரைக்குங்காலத்தும் இறைநினைப்பிலிருந்தே ஆசிரியர் கூறலுற்றரென அறியலாகும்.

48. அவியாவிளக்கு

சூரியனே இரவில் மறைகிருன். சந்திரனே தேய்ந்து மறை கிருன். நட்சத்திரங்களோ பகலில் மறைகின்றன. நாமே எரிய விடும் விளக்கங்கள் காற்றினலும் மின்சாரக் கோளாறினலும் மறைகின்றன. ஆகவே, நிலையான பூதவிளக்கத்தையும் இவை செய்வதற்கு ஏற்றனவாக இல்லை. நம் உடம்புக்குள் இருப்பது

உயிர். ஆகையால், இவ்விளக்கங்களால் அது நன்மை பெற முடிவதில்லை. ஏனெனில் அதற்கு வேண்டுவது அறிவு விளக்கம். அவ்வறிவு விளக்கமானது, இடையீடுபடும் எந்த விளக்கத்தாலும் உண்டாக்க இயலாது. அறிவினைப் பூரண விளக்கப்படுத்தும் பொருட்கு இரண்டு விதமான ஆற்றல்கள் வேண்டியுள்ளன. முதலாவது அது அனைத்துயிரினுள்ளும் இருந்து விளக்குவது. இரண்டாவது தொடர்ந்து நின்று விளக்குவது. இத்தகைய விளக்கம் எது என்று ஆய்ந்தால் அது, "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி" ஒன்றே ஆகும். அதுதான் அவியா விளக்கம். அதுவே அருட்பெருஞ்சோதி. அதுவே கடவுள் எனப்படுவது என்க. இதனை, விடியா விளக்கு என்றும் கூறலாம். ஏனை விளக்கங்கள் விடிந்தால் ஒளி குன்றுகின்றன. ஏதொன்று ஆத்மா என்கிற சிறு ஜோதிக்குச் சோபையில் குன்றுததோ ! அவ்வாத்ம ஜோதியைப் பிரகாசிப்பிக்கின்றதோ ! அவ்விதம் பிரகாசமெய்திய ஆத்மஜோதியைத் தன்னுள் லயப் படுத்துக்கொள்ளுகின்றதோ ! அதுதான் அருட்பெருஞ்சோதி ஆகும். ஆதலால், இறைவனை இவ்வாசிரியர் **விடியாவிளக்கு என்று மேவி நின்றேனே** என்கிறார். இவ்விளக்கின் துணைதான் எவர்க்கும் வேண்டுவது என்பது இதனால் பெறப்படும்.

இவ்விளக்குக்கும் நமக்கும் என்ன தொடர்பு உள்ளது என்றால் தந்தைக்கும் மகனுக்குமுள்ள தொடர்புதான். தந்தை, தன் ஆஸ்தியை மைந்தனுக்கருளுங் கருணையுடைமைபோன்றே இறைவன் நமக்குத் தனது உதவியைப் புரிகின்றான் ஆவன். ஆதலால் **எந்தை** என்றார். இப்பரமன் நமக்குமட்டில் அன்றி எந்தப் புவனத்தவர்க்கும் பேரருள்புரியும் பெருந்தகையவன். ஆதலால் **படியார் அருளும் பரம்பரன்** என்றார். அடியார்கள் இவ்வுண்மையை அறிந்தவராதலால், அவனை அமரர்பிரான் எனச் சொல்லியும் எண்ணியும் முடியால் வணங்கியும் போற்றி வாழ் கின்றனர். இச்செய்தி **அடியார் பரவும் அமரர்பிரானை முடியால் வணங்கி** என்பதாலறியலாம். இத்தகைய முதல்வனையே நாமும் பரம்பரன் எனவும், எந்தை எனவும், விடியாவிளக்கு எனவும் எண்ணியும் சொல்லியும் இறைஞ்சியும் விரும்பிநிற்க வேண்டி யவராவோம். இதனால், இறைவன் எல்லாங்கடந்தவனாக இருப் பினும் ஆருயிர்பால் தந்தையொப்ப நலம்புரிதற் கருத்துடைய னாய் இருந்து (தீபம்போன்று) அறிவு விளக்கம் புரிந்தருளுவன் என்பது கருத்தாகக்கொள்க.

49. பாசக்கடல் கடத்தல்

முற்கூறியவண்ணம் அவியாவிளக்காகிய இறைவனுல் உயிர்கள் என்ன விளக்கம் எவ்வாறுனமுறையில் அடையப்பெறுகின்றன என்று நாம் கேட்கலாம். ஞானம் மூன்று வகையாகக் கூறப்படும். அவை பதிஞானம், பசுஞானம், பாசஞானம் எனப்படுவன. இருவகை மாயையில் உண்டாவதான எல்லாவித ஞானமும் பாசஞானம் எனப்படும். தற்போதம் அல்லது ஜீவபோதச் செருக்கு உள்ளளவும் பசுஞானம் எனப்படும். இந்த இரண்டையும் ஒருசேரக்கூறினுல் அஞ்ஞானம் என்னலாம். இவை இருட்டே. தற்போதம் ஜீவிக்கப்பெருமல் ஆன்மா, தன்னைச் சுதந்தரவீனனுகக்கருதி, மேற்கூறிய அஞ்ஞானம் தலையெடாவண்ணம் நீங்கி, அருளினுல் ஈசனடிகூடப்பெறுதற்காம் ஞானமே பதிஞானம் எனப்படும். இதனுல் நமக்கு உய்வளிப்பது அவியாவிளக்கின் ஒளியாகிய திருவருள்ஞானமேயாம்.

இறைவன் நம்மேல் கருணைகொண்டு நடத்துகிருன். நாமோ கட்டுப்பட்ட பசுப்போல்வம். நம்மைப் பந்தித்திருப்பது பாசம். இவற்றை உயிர்களின் உய்திக்கேற்ப முக்காலத்தும் நடத்துபவன் இறைவன். அவனையே நாம் இடைவிடாது கருதவேண்டும். இது, **பரை, பசு, பாசத்து நாதனை உள்ளி** என்பதால் பெறப்படுவது. இந்தமுறையில் பசுஞானத்தையும், பாசஞானத்தையும் நாம் நீங்கப்பெறவேண்டும். இது எளியதொரு செயலன்று. என்றுலும் இறையருள் நினைவால் சாதிக்கப்படும். இதனை, **உரை பசு பாசத்து ஒருங்கவல்லார்க்கு** என்பது புலப்படுத்தும். இதனுல் திருவடிக்கீழ் ஒரு தலைமறைவினை நாம் எய்தலாகும். இத்தகைய ஒதுக்கம்பெற்றுல் மலைபோல அலைமோதிவரும் பசு பாச ஞானங்களால் வரும் பெருங்கடலை நீந்தலாம். இது, **திரை பசு பாவச் செழுங்கடல் நீந்தி** என்பதால் அறியப்படும்.

இவ்வகையாக நாம் பசு பாசக் கடல்களைக் கடந்து திருவடிப்பேறு எனப்படும் கரையினை அடையலாம். **கரை பசு பாசம் கடந்து எய்தலாமே** என்பதனுல் பெறப்படுவது இப்பொருளாம். இதுவே பிறவிப்பெருங்கடல் நீந்தும் உபாயமாம். இதனை ஒழிய வேறு உபாயம் இலதாம். ஆகவே இறையடி எனப்படும் பதிஞானமே துன்பக்கடல் கடத்துகின்ற தோணியாகும்.

''ஐயாறன் அடித்தலமே'' என்பர் அப்பரடிகள். ஆகவே, ஆதி பகவனருளால் பதிஞானப்பேறெய்திப் பிறவிப் பெருங்கடல் நீந்துவதே நல்லமுறை எனப்பட்டது.

50. ஆனந்தப்பேறு

இறைவனருளால் பதிஞானம் எய்தப்பெற்று இறைவன் திருவடிக்கீழே புகப்பெற்றோர் ஆனந்தமேலீடு எய்துவர். அந்த ஆனந்தமேலீட்டால் தன்னறிவு இறையறிவில் ஒடுங்கப் பெறுவர். அப்போது அவர்கள் அநுபவிப்பது பேரின்பம் ஆம். அந்த நிலையுற்றோர் இறைவன் திருவடித்தாமரையைத் தலையிற்சூடுவர்; நெஞ்சிடை அணைப்பர்; என் தலைவனது எனப்பாடுவர்; கொல்லாமை முதலான அருள் பொதிந்த எட்டுவித மலர்களோடும் அதனைப் புனைவர்; புனைந்து நின்று ஆடுவர்; ஆடி ஆடி அமரர் பிரான் என்று அலறுவர். அவனையேயன்றிப் பிறரெவரையும் விரும்பிலர். இவ்வாறாக அவர்கள் அநுபவமிருக்கும் இவ்வுலகிடை. இதனை, சூடுவன் ... அறிவதுதானே என்ற மந்திரம் உணர்த்துகின்றது. இந்தநிலை அநுபவநிலையானதால் பார்த்துக் களிக்கும் ஆட்டம்போல்வதன்று என்பதற்காக நான் இன்று அறிவது என்றார். இந்த ஆனந்தம் முன்னடைந்த பாச பசு ஞானங்களால்வந்த ஆனந்தத்தினும் மேலாவதாதலால் இதற்கு முன் அநுபவப்பட்டதன்று என்பதற்காக இன்று என்றார். இஃது அவரவரே அநுபவித்து அறியப்படுமது ஆதலின் நான் அறிவது என்றார்.

முடிப்பு

இதுகாறும் ஒன்றவன்தானே முதல் அறிவதுதானே இறுதியாக ஐம்பது மந்திரங்களால் திருமூலர், கடவுளுண்மையையும், அவனது ஆற்றல் விரிவையும், அவன் துணையுண்மையையும், அவனை நாம் வழிபடு முறைமைகளையும், வழிபடுவதால் வரும் பேரின்ப அநுபவநிலையினையும் தொகுத்துக்கூறிக்காட்டியுள்ளார். அநுபூதிமானாகிய இவருரையில் நம்பிக்கை வைத்து நாமும் இந்நெறியே கடைப்பிடிப்போமானால் நாம் எந்நிலையினராயினும் பிறப்பறுத்துப் பேரின்பினை இம்மைதொட்டே எய்தப்பெறுவோம். அதாவது ஜீவன்முத்தராக வாழலாம் என்பது கருத்தாம்.

II. வேதச்சிறப்பு

[பாடல் 51 முதல் 56 வரை]

இறைவனை அறியவும், அவனைப் பற்றுமாற்றைத் தெரியவும், அவனடிக்கீழ்த் தலைவைத்துக் கிடக்கவும் நமக்கு வழிதெரிய வேண்டும். வழிதுறை தெரியாமல் இறங்குவது தவருகும். தான் ஒரு பொருள் உண்டு என்பது முதலாக, மக்களுக்கு உணர்த்த வேண்டுவன யாவற்றையும் இறைவனையல்லால் வேறெவரும் அறிந்துரைக்க இயலாது. ஆதலால், இறைவனே வேதம் எனப் படும் அறநூலை எல்லா மக்களுக்கும் பொது நூலாக அருளிச் செய்தனன். ஆதலால், இதனில் உயர்வு தாழ்வு காண்பதோ, அன்றி இதனை ஒருசில மக்கட்கே உரிமையாக்குவதோ அறநெறி யன்றும். இதன் மொழி எதுவாயினும் ஆகுக! இறைவனருளுங் காலத்து அருகிருந்து கேட்டார்க்கன்றே அம்மொழி தெரிய வல்லது. ஆதலால், வேதம்பற்றி மொழிச்சச்சரவில் இறங்கு வதும் அறனன்றும். வேதம் எம்மொழியிலிருப்பினும் சரிதான். இறையருளிய கருத்துக்களே பொதுளுவதாக அஃது இருத்தற் பாலதாம்.

வேதம் உலகியல் அறத்தையும் வீட்டியல் அறத்தையும் பொதுவகையாக விளம்பும் திறனுடையது. இதனை முதன்மை யாகக்கொண்டு உலகியலறனைமட்டில் ஓதும் அறநூல்களும் செய்யப்படுவதுண்டு. வீட்டியலறனைமட்டில் எடுத்தோதும் அற நூல்களும் உண்டு. எவ்வாருயினும், ஒருவனே ஆகிய இறை வன் அருளிய திருமறையும் ஒன்ருகவோ - பொதுவாகவோ - அமைந்ததாகும். ஆதலால், எல்லாவிதமான அறம் உரைக்கும் நூல்களினும் வேதமே சிறப்புடையதாகும். வேதத்தை விட்ட அறம் இல்லை. இதனில் உலகியல் வீட்டியல் இரண்டும் அடங்கு மாதலால் **வேதத்தின் ஓதத்தகும் அறம் எல்லாம் உள** என்பர்.

வேதம் இத்தகைய விழுப்பமுடையது ஆதலால், அறிஞு ராவார் வேதம்பற்றிய தருக்கவாதங்களை ஏற்காமலும், அதனில் பொழுதைப்போக்காமலும், எடுத்துள்ள பிறப்பின் நோக்கமான முத்திப்பேற்றிலேயே நாட்டமுடையவராகி, வேதத்தையேஓதிக் குதர்க்கஞ்செய்யாமல் நேர்ப்பொருளே கண்டு, வீடுபேற்றினை

எய்தப்பெறுவர். அங்ஙனம் பெற்றோர்கள் பலராவர். ஆதலால், தர்க்கவாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற வேதத்தை ஓதியே வீடுபெற்றோர்களே எனப்பட்டது என்க.

அப்படியானல் ஓதுவதெப்படி என்கிற வினா எழும். யார் ஓதிய முறைப்படி ஓதுவது என்றும் நினைப்பெழும். வேதம் உரைத்தவன் சிவபெருமானே ஆவன். வேதம் உரைத்தவன் பிரமனல்லன். பிரமன் தெரிதற்காக அவற்குச் சிவபெருமானால் வேதம் உரைக்கப்பட்டது. வேதவழியில் நிற்கக் கருதுவோர் உலகியல்நெறியில் எவ்வாறு ஒழுகவேண்டும் என்பது விளங் கவே சிவபெருமான் வேதம் உரைத்தருளினன். முடிவாக நோக்கினுல், எல்லா உயிர்களும் வீட்டியலுக்கான இறை-உயிர்-தளை எனப்படும் மூன்று உண்மையாம் பொருளியல்புகளை அறிந்து தேர்ந்துகொள்ளுதற்பொருட்டே அப்பெருமானால் திருமறை அருளிச்செய்யப்பட்டது என்னலாம். எனவே ஓதி - உணர்ந்து - ஒழுகி உய்திபெறுதற்பொருட்டாம் நோக்கமுடனே தான் இறைவனுல் வேதம் உரைக்கப்பட்டது என்னலாம். **வேதம் உரைத்தானும்** என்னும் திருமந்திரம் இவற்றை உணர்த்துவதாகும். "ஆலின்கீழ் அறங்களெல்லாம்" என்னும் நான்காம் திருமுறைப்பாடலும், "வேதமுதல்வன் முதலாக விளங்கி" என்னும் மூன்றும் திருமுறைப்பாடலும் இங்கு நோக்கல்தகும்.

வேதம், மந்திரம் என்றும் பிராமணம் என்றும் இருபகுப் புடையது. மந்திரவடிவே உபசாரவகையாற்கூறின் இறைவன் வடிவாம். இதனில் அக்ஷரம் தேவதை முதலான விஷயங்கள் கூறப்படும். பிறகு வருவது செயல்முறை. இவ்வேதத்தினை ஓதினுல் அது ஓதுவார் உணர்வினை உருக்கி ஓங்குவிக்கும். ஓதும் போது கானமும் பொருளுங்கூடி இவ்வாறு உருகவைக்கும். அமைதியாக வேதியரால் ஓதப்படும் வேதமந்திரங்கள் உயிர்க் குயிராகிய முக்கண்ணனையே உணர்த்துவனவாம். கண்ணனும் இங்ஙனமுணர்ந்தே - உருகியே - கருக்குருவாய்நின்று போற்றப் பட்டானுயினுன். இறைவனை அவனுரை முறைமறைப்படியே போற்றிக் கண்ணன் என்ற பெயரடைந்தானுயினன்.

திருநெறி என்றும் வேதமார்க்கம் கூறப்படும். அதாவது, அறிவிக்க அறியும் சித்தும், அறியமாட்டாத அசித்தும் ஆகிய

இரண்டும் இல்லாத பெருமானுகிய சதசித்தாம் பொருளை நினை வுறுத்துவதாகும். இது குருவா லுணர்த்தப்படும் பெருநெறியாம். இதனைச் சிவநெறி என்றும் கூறுவர். இந்த நெறிப்பொருளையே வேதாந்தம் மாறுபாடின்றிக் கூறுகின்றது. எனவே வேதாந்தம் ஒன்றெ‌ன ஓதுவதெல்லாம் திருநெறி - பெருநெறி - குருநெறி - சிவநெறி யாவும் ஒன்றெனப்படும் நெறியாம் என்பதாம்.

இவ்வாறு ஒரே நெறியாக வேதம் - வேதாந்தம் - எடுத்து உரைப்பினும் அவ்வேதத்தினைத் தெளிய அறியும்பொருட்டும் ஓதும்பொருட்டும் சிட்சை, கற்பம், வியாகரணம், சந்தோ பிசிதம், சோதிடம், நிருத்தம் என்னும் ஆறங்கங்கள் ஆராய்ச்சி முறையால் அமைந்தன. இவைகளை, வேதத்தின் கூறுபாடுகளை உணர்த்தும் கருவிகளாகக் கொண்டு ஒரேநெறி இன்னதெனத் தெரிந்து சிவநெறித் தன்மையோடு பழகுவாரில்லை ஆயினர். இவைகளைக்கொண்டு வேறுவேறு கூறுபாடுகளாக்கிப் பொருள் விளைவிற் பேதங்கள்செய்து. மக்கள் அடையவேண்டிய உறுதிப் பொருட்களையும் பல்வேறு வகையாகப் பெருகச்செய்துவிட்ட னர். இவற்ருல் பயனில்லை. ஆதலால், ஒருநெறியாகக் கொண்டு ஒருபொருளே பேணி ஓரேபயனை எய்துதலே சிறந்ததாம். இப் பயனுவது உயர்நிலை ஆகும்.

உயர்ந்த நிலையை விரும்புவோர் உயர்நெறியையும், உயர் பொருளையுமே பற்றவேண்டும். வேதாங்கங்களுள் சந்தோ பிசிதமும் நிருத்தமும், பாடலும் ஆடலும் குறித்துரைக்கும். இப் பாடலும் ஆடலும் தெய்வ இச்சை உண்டு பண்ணுவனவும், காம இச்சை உண்டு பண்ணுவனவும் ஆக இருதரப்பட்டன வாம். வேதம்கூறும் ஆடல் பாடல் நெறிகள் தெய்வ இச்சையை விளைக்கும் திறத்தனவாகும். அங்ஙனம். அந்நெறியே பற்றிப் பாடலும் ஒலியும் பரக்குமாறு பண்டு தொண்டாற்றினர் கணிகையர். அவர், தம் ஆடலாலும் அந்நெறியே காட்டினர். இங்ஙனம் பாமரராவாரும் மெய்ந்நெறி உணர்தற்பொருட்டு வேதம் இடஞ்செய்தது. உலகில் இதனை உணரமாட்டாதார், உயர்ந்த நெறிக்கே உரியவர் என்றும், உலகியல் இன்ப நெறிக்கே உரியவர் என்றும் தம்முள் மாறுபாடுற்று, ஒருநெறி உணர்தற்காம் இடம் சென்றும் அப்பயனை இழந்தோராயினர். ஆதலின், எல்லாக் கிளைநெறிகளும் வேதங்கூறும் ஒரேநெறிக் கேற்ற கொள்கைகளே கொண்டன என நாம் கருதவேண்டும்.

அப்போதுதான், நாம் சிவபெருமான் திருவுள்ளத்துக்கு மாறுபட்டவர் ஆகமாட்டோம். அவ்வாறன்றி மக்கள் தத்தம் மனமுரைத்தவழிப் பலபடப் பொருள் கொள்ளுவரேல் சிவத்தின் கருத்துக்கு மாறுபட்டவர் ஆவர். ஆகலின் வேத வேதாந்தங்களையும் அதன் அங்கங்களையும் ஒரு நெறியாகவே பொருள் கொள்ளச் செய்தல் நன்றும் என்க.

III. ஆகமச்சிறப்பு

[பாடல் 57 முதல் 66 வரை]

வேதங்களை இறைவன் ஒருநெறி காட்டற்கு அருளிச் செய்தும், அது பன்னெறியாகப் பரத்தல் கண்டு சிவபெருமானுடைய நோக்கம் தெளிய விளங்கும் முறையாக அறுபத்தறுவர் ஆகிய பிரணவர் முதல் மகாகாளர் இறுதியானோர் சிவபெருமானைக் கைகூப்பி வேண்டிக்கொண்டனர். மக்கள்மீதுள்ள கருணையினாலே வேதத்தை அருளிச்செய்தவண்ணமே அவர்கட்குக் காமிகம் முதல் இருபத்தெட்டு ஆகமங்களை அருளிச்செய்தனன் இறைவன். இவன் நீலமேனி வாலிழையாளைப் பாகங் கொண்டவன். ஆதலால் பேரிரக்கமுடைமையால் உரைக்கலுற்றான் என்க. அஞ்சாமுகம் உச்சிமுகம் என்பர்; ஈசானம் என்மரும் உளர். இப்படி இறைவன் அருளிச்செய்தமையால் வேதத்தால் உணரமுடியாத அரும்பொருள் உணர்த்தப்பட்டதென்னலாம். ஏனைய விரிவுகளை ஆகம தந்திரங்களால் அறியலாகும். ஈண்டு உரைப்பின் பெருகும். அறுபத்தறுவரையும் இருபத்தெட்டு ஆகமங்களையும் இவ்வாதீனத்து 105-ஆம் வெளியீட்டில் 89-ஆம் பக்கமுதல் காணலாம்.

அத்தகைய ஆகமங்களையெல்லாம் சிவபெருமான், வேதம் போலத் தொகுத்துக் கூறினால் பலபடப்பொருள்படுத்தப்படுமாறறிந்து, தானே விரிவாகக் கூறியருளினன். ஆதலால், விரிவான ஆதாரநூல் ஆகமமாயிற்று. இவ்வளவு விரிவாக அவன் கூறியருளியதும் பெருங்கருணையினால்தான். இதன் விரிவான கிரந்தங்களை 58-ஆம் மந்திரம் இருப்பத்தெட்டுக் கோடி நூறாயிரம் என்கின்றது. இவற்றை எல்லாம் அறியப்பெற்ற பின்னர் தேவர்கள் மயக்கமற்றுச் சிவபெருமானை முழுமுதல்வனென உணர்ந்து அவனது விழுப்பங்களைக் கூறிப் போற்றிக்காட்டினர். ஆதலால், அவ்வளவு ஆகமங்களாலும் அளவற்ற கிரந்தங்களாலும் அத்தேவர்களாலும் ஒருமுகமாகத் துணிந்து உரைக்கப்பட்ட பொருள் சிவமே என யானும் அறிந்து அவர்கருத்தின் வழியே ஏத்துகின்றேன்; நீங்களும் ஐயமற்றுப் போற்றுங்கள் என்கிறார் திருமூலர் 58-ஆம் மந்திரத்தில் என்க.

திருமூலர்காலத்திலே உலகமுழுதும் ஒரேமொழி வழங்கவில்லை. பதினெட்டு மொழிகள் வழங்கிவந்தன. இம்மொழிகள் வேதக்கருத்து உரைக்கும் ஆற்றல் பெற்றவை. ஏனெனில், இப்பதினெட்டு மொழிகளும் ஒரேவிதமான சத்தப்பிரபஞ்சத்தினின்றும் தோன்றியவையாகும். சத்தப்பிரபஞ்சம் சுத்தமாயையின் தோற்றமுடையது. பரசிவமே இவற்றின் காரணன். அர்த்தப்பிரபஞ்சத்திற்கும் இவ்வாருயதே காரணம். ஆதலின், தோற்றமுதல் ஒன்ருகவே இருத்தலால் அம்மொழிகள் இறைவன் கருத்தை எடுத்துரைக்கும் ஆற்றலுடையன ஆயின. "அகர முதல எழுத்தெல்லாம்" என்பதிலும் இக்கருத்துக் கிடக்கின்றதாகும். கண்டங்கள்தோறும் மொழிகள் அவ்வக் கண்டத்தியல்புக்கேற்ப வேறுபடலுற்றன. எனினும் கருத்தில் முரணின்றியே உள்ளன. ஆயினும், ஒருமொழியே கற்றவர் அந்த மொழியிலேதான் அக்கருத்துள்ளதெனக் கொண்டனர். இப்படி ஒவ்வொருவரும் தனித்தனி கருதத் தொடங்கியபோது கருத்துக்களுள்ளும் வேறுபாடு நுழையலுற்றது. ஆனுல், இந்த வேறுபாட்டினை எல்லா மொழிகளும் வல்ல புலவர்கள்வாயிலாக ஒழித்து ஒன்றுபடுத்த அருளினன் பெருமான். அவர்கள், மருள்நீங்கிய காட்சியராதலின் ஒருமை உணர்தற்கண் வல்லுநராயினர். எனவே சிவபெருமான் அருளிச்செய்த வேதாகமக் கருத்துக்களை ஒருமைப் படுத்தி உதவியவர்கள் பண்டிதராயினர். இவ்வாறு பரமன் தக்கவர் வாயிலாகவும் எம்மொழியினும் ஆகமக் கருத்துக்கள் மாறுபாடின்றி ஒழுகுதலையும் தாபித்தருளினனுவன். பண்டிதராவார் பதினெட்டு மொழிகளையும் அறியப்பெற்றவர் ஆவர். அவர்கள் அரன் சொன்ன கருத்துக்களையே உள்ளவாறு உலகத்து மக்கட்கு அவரவர் மொழியில் கருத்து மாருதிருக்கக் கூறியவர்களாவர். இதுகாறும் கூறியதனுல், மொழியால் மாறுபாடுபற்றி நாம் சர்ச்சைகொள்ளத் தேவையில்லை எனவும், கருத்தால் மாறுபாடிருப்பின் அறிஞராவார் ஒருமைப்படுத்துங் கடப்பாடுடையர் எனவும் தெளியலாம்.

அறிவில்லாமல் வியாபாரம் செய்தால் பயனளியாது. அதுபோலே குருவருளில்லாமல் ஒருநூலைக் கற்றுணர்வதும் ஆம். ஆகவே, சிவபெருமான், வேதக்கருத்துக்கள் மாறுபடாமைப் பொருட்டாக ஆகமங்களை விரிவுற ஆக்கி, அவற்றை வினவிய சிறப்புடையார்மூலம் பண்டிதரளவும் பரம்பரையாக அக்கருத்துக்களைச் செல்லவைத்து, பிறகு சாமானியர்க்குக் குருமுகமாக

அவைகளை எட்டச்செய்யும் ஏற்பாட்டினை ஆக்கியுள்ளான். இதுவே சிவனருளின் துணைகொண்டு சிவனருளிச்செய்த வேதாகமங்கட்கு விளக்கங்காணும் முறையாகும். இவ்வாறன்றித் தத்தம் சித்தம் கூறும்வழியெல்லாம் பொருள் காண்பாராயின் உண்மைப்பொருள் புலப்படாமற் போம். ஆதலால், **விண்ணில் அமரர் தமக்கும் அருளால் ஆகமம் விளங்கரிது** எனலுற்ருர். முனைந்து ஒருவன் காணப்புகினும் அவை மிக்க விரிவுடையன ஆகுமாதலால் முற்றப்போதல் அரிதாம். அவை எண்ணில் எழுபதுகோடி நூருயிரம் கிரந்தங்களாம். அவற்றின் எழுத்துக்கள் வெள்ளம் என்னும் அளவின. ஆதலால் முற்றக்கற்றல் எளிதன்ரும். அன்றியும், சிவனருளியவழிநின்று அறியாவிடில் அவ்வளவும் கற்ருலும் நீர்மேலெழுத்தினை நிகர்ப்பதாகிவிடும் என்க. இதனுல் ஆகமங்கள் தெய்வீகமானவை எனத் தெரிதல் தக்கதாம். நம் இஷ்டப்படி அவற்றைத் திரித்தல் பயனளியாதென்னலாம்.

ஆகமத்துக்கு ஏன் இத்துணைச் சிறப்பென்ருல், இது எத்தேவரினும் உயர்ந்தோனுல் அருளப்பட்டது. ஆதலின் இதனின் உயர்ந்ததொன்று இருக்கமுடியாது. அன்றியும், யாவர்க்கும் பக்குவமுறையிலே வேண்டியிருக்கும் கலைஞானமும் சிவஞானமும் என்ற இரண்டையும் இது முறையே அருளிச்செய்கின்றது. சிவஞானத்தின் மேற்பட்டதொரு நூலிலது. ஆதலாலும் ஆகமம் மேலானதாயிற்று. இவ்வாகமங்கள் உணர்த்தும் சிவதன்மங்களைத் தாமே சொல்லியகாலத்தே அவற்றைப் பிறர் அறியச்செய்துமுணர்த்தினுன் பெருமான். இது தானே தன்னை வழிபட்டுக்காட்டும் செய்கை ஆகும். இதனுல் செயல்முறையிலும் ஆகமத்தில் ஐயம் ஏற்பட வழியில்லை. ஆதலாலும் மேலானதாயிற்று என்னலாம். பிறகு தான் செய்துகாட்டிய வண்ணமே அமரர்கள் தன்னை அருச்சிக்க அவர்க்கருள்புரிந்தான். ஆதலால், அநுபவத்திலும் ஆகமநூல் முரணின்றி மேம்பட்டதாயிற்றென்னலாம். ஆகமமே, இறைவன் வடிவம் ஆகமம் என்கின்றது. இதன்விரிவு மகுடாகமத்துக்காணப்படும் என்ப. மணிவாசகரும் "ஆகமமாகிநின்று அண்ணிப்பான்தாள் வாழ்க" என்றுரைத்தருளியுள்ளார். இறைவன்வடிவாகவேயும் ஆகமம் பேசப்படுதலால் அது விழுமியநூல் என்னத் தடையின்ரும். ஒருவனைப் படிப்படியாக ஞானுனுபவத்துக்குக்கொணரக்கூடிய நூல் ஆகமத்தினும் பிறிதொன்றில்லை என்பது தெளியப்பட

வேண்டுவதாம். பராசத்தி முதலாம் யாவரும் ஆகம நெறியே இறைவனைப் பூசித்துப் பேறெய்தினர் என்பது வரலாறு.

மேலும், ஆகம வடிவினனாகிய சிவபெருமானிடமிருந்தே எல்லா ஆகமங்களும் வெளிப்போந்தனவாதலால் அவை எப்படி உபதேசமுறையில் வந்த சிறப்புடையன என்பதும் தெரிவது நன்றாகும். ஆகமமேயாயவன் சிவமாம் பரமன். அவனிடம் இருந்து சத்தி அடையப்பெற்றாள். அதன்பின் சதாசிவம் அடையப்பெற்றார். அதன்பின் உமாமகேசர் பெற்றனர். அப்பால் சீகண்டருத்திரன் பெற்றார். அதன்பின்னர் திருமால், பிரமன், உருத்திரர் முறையே அடையப்பெற்றனர். இவ்வாறு வந்த ஒன்பது வழிமுறையுடைய ஆகமங்களைத் திருமூலரது குருநாதர் பெற்றார். அப்பால் திருமூலராதியோர்வழிச் செல்லலுற்றது. ஆதலாலும், தற்போதுள்ள ஆகமங்கள் சிவத்தொடர்பே உடையனவன்றி வேறு எவராலும் கருதிச்செய்யப்பட்டன அல்லவாம். அவரவரும் தாம் கேட்டபெற்றியே பொருள்வழுவா வண்ணம் ஒன்றுபட வழிவழியாகத் தந்தருளியமையாலும் ஆகமம் சிறப்புடையதாயிற்று. பரம்பரைத் தன்மையும் பழமையும் கொண்டபொருள் யாண்டும் பெருமையுடையதாம் என்பர்.

இங்ஙனம் வழிமுறையாகவரலுற்ற ஆகமங்கள் முறையே **காரணம் - காமிகம் - வீரம் - சிந்தியம் - வாதுளம் - ருத்ரயாமளம் - காலோத்ரம் - சுப்ரம் - மகுடம்** எனப்பெயர் பெறும். ஆகமங்கள் சிவபேதமும் ருத்திரபேதமும் என இருதிறப்படும். சிவபேதத்தன ஒன்பதாகும். ருத்திரபேதத்தன பத்தொன்பதாகும். ஆகச் சிவாகமங்கள் இருபத்தெட்டாம். மேலே கூறப்பட்டுள்ள ஆகமங்களுள் காரணம், காமிகம், சிந்தியம், சுப்பிரம் என்பன சிவபேதத்துள்ளவை. ருத்திரபேதத்தில் அடங்கியன வீரம், வாதுளம், காலோத்ரம், மகுடம் என்பனவாம். ருத்ரயாமளமே யாமளம் எனப்படுவது. எனவே நம் திருமூலர் மூலாகமங்களையும், தந்திரசாரத்தையும் தழுவி நம்மனோர்க்குத் திருமந்திரங்களாகத் தந்துள்ளாராவர். ஆதலால், திருமந்திர நூலின் சிறப்பும், வேதாகம தந்திராதிகளின் சிறப்பினதே என்க. இஃதொன்று கற்றுணர்தலால், வேதாகமாந்தம் கற்றுணர்ந்த பயனெய்தத் தடையில்லை என்க.

ஆகையினாலே, திருமந்திரப்பாடல்களை ஆகமங்கட்கு மாறுபடப் பொருள்கொண்டு ஓதுவதால் பயனில்லை. ஏனெனில்,

அவ்வாறு முரண்படப் பொருள்கொண்டோதின் அது சிவபரத்தின் மூலக்கருத்துக்கு மாறுபட்டுப் பயன் அளியாமற்போம் என்க.

மேலும், தமிழினுல் திருமந்திரம் அமைவுற்றதும், அதனை ஓதுமதனுலே முழுப்பயனும் எய்தலாமென்பதும்பற்றி ஐயம் வேண்டாம். சிவபெருமானே ஊழிக்காலத்திலே தமது சத்தியார்க்கு ஆரியத்தாலும் தமிழாலுமே ஆகமங்களையும் பொருளையும் உணர்த்தியுள்ளான். ஆதலால், திருமந்திரம் தமிழால் சமைவுற்றதில் ஏதும் தாழ்வில்லை என்க. மற்றும் இம்மொழிகள் இரண்டும் சொற்குறை பொருட்குறையின்றி ஓதவும் உணரவும்பட்டுப் பயனளித்தலும் ஒருநிகரனவேயாம் எனவும் நாம் தெளிவுறல் தக்கது. கரும, உபாசனை - ஞானமுறைகளை உணர்த்துதலில் இருமொழியும் சமமேயாம் என்ப.

உயிர்கள் கட்டுள்படுதலும், அவை பந்தம் நீங்கப்பெறுதலும், பிறப்பினின்றும் உயிர் நீங்கிச்செல்லும் விதமும் ஆகிய இவைகளைப்பற்றியே நாம், நம் நன்மைக்காகத் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது பசு, பதி, பாசம் இம் முப்பொருள்களைப் பற்றியும் அறியப்பெறுதலாம். இதனைத் தெளிவுறத் தமிழ்மொழியும், வடமொழியும் உணர்த்தும் திறத்தன. ஆதலால், வடமொழி ஆகமங்களைப் போன்றே இத்தமிழான் இயன்ற திருமந்திரமும் இம் முத்திறப்பொருள்களையும் உணர்த்தும் என்பதாயிற்று. இவற்றை உணர்வதால், இறையருள் வழிப்பட்டு அவனருளால், அவனை உணரப்பெறுதலும் கைகூடும். அதாவது அருள்வயத்தில் அழுந்தி அவன்வழிப்பட்டு ஆருயிர் இம்மைக்கண்ணும், உடல் நீங்கியபின் மறுமையில் இன்பத்திலும் கலப்புறும் என்பதாம். இதனுல் திருமந்திரம், வேதாகம நெறியினைத் தமிழால் தெளிவுபடக் கூறும் நூலென நாம் தெரியவேண்டுவதாயிற்று.

IV. குருபாரம்பரியம் கூறுதல்

[பாடல் 67 முதல் 72 வரை]

இத்துணைச்சிறப்புடைய திருமந்திர நூலைத் திருமூலர், யாரிட மிருந்துபெற்ற உபதேசத்தால் செய்தனர்? ஒருவேளை தாமே இட்டுக்கட்டிச் செய்தளித்தனரா? என்கிற எண்ணம் நமக்கு எழுதல் இயல்பே. அந்த ஐயத்தினை அறுப்பதற்கே தமது குரு பரம்பரையினை எடுத்தோதலுறுகின்றார். குருபரம்பரையின் பிரபாவத்தைப் பொறுத்தே நூலுக்குச் சிறப்பு ஏற்படுவது வழக்கம். ஆதலால் இப்பாரம்பரியம் ஈங்கு உரைக்கலுற்றார் திருமந்திர ஆசிரியர். தற்சிறப்புப்பாயிர முறையது இதுவாம். இப்பகுதிச் செய்தியால் திருமூலதேவருடைய முன்னும், பின்னு மாகிய ஞானபரம்பரையினை நாம் தெரிந்துகொள்ளக்கூடும். உயிர்கள் ஒருகாலத்தே தோன்றி ஒரேகாலத்து மறைவனவல்ல. சந்தானமாக ஒழுகுதலால், அவ்வக்காலத்தும் இடையருதிருந்து உறுதி உணர்த்தி உயிர்கட்கு உய்திபயத்தற்பொருட்டு ஞான பரம்பரை என்றும் இன்றியமையாததாம். ஆகமவரலாறு கூறு மிடத்தே திருநந்திதேவர்வரையில் ஒரு பரம்பரை கூறப்பட்டது. இங்குத் தொடர்ந்ததொரு பரம்பரை கூறப்படுவது காணலாம்.

சித்தாந்த நெறியினைச் செவ்வனே உணரப்பெற்று, அதனை மேற்கொண்டொழுகி, அந்நெறிக்குத் தலைமை பூணத்தக்காரை நாதர் என்பர். அங்ஙனம் நந்தியெம்பெருமானிடம் திருவருளுப தேசம் பெற்றுச் சிறந்தார் நால்வராவர். இவர்கள் நாதர் எனப் படும் ஆசாரியராவார். இவராவார் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்போர். இவர்கள் மெய்கண்ட பெருமை பெற்றவராவர். மற்று மூவர் முனிவரும் இவ்வாறு உபதேசம் பெற்றவர் ஆவர். அவர்கள், சிவயோகமாமுனிவர் - மன்று தொழுத பதஞ்சலிமுனிவர் (பாம்புக்கால் முனிவர்) - வியாக்ர பாதர் (புலிக்கால் முனிவர்) எனப்படுவர். இவர்களுடன் உப தேசம் பெற்றவரே திருமூலர் ஆவர். ஆகத் திருநந்திதேவர்வழி நின்றோராகிய சித்தாந்தச் செந்நெறிச்செல்வர்கள் எட்டுப்பேர்க ளாவர். இவர்கள் யோகசித்தியும் பெற்றவராவர். இவர்கள் எண்மரும் முழுமுதலுக்குத் தம்மை அடிமையாக ஒப்புவித்து நாதன் என்ற சிறப்புப்பெயரைத் தனித்தனிப் பெற்றவராவர்.

இவர்களுள் திருமூலர் எனப்பட்டவர், பூவுலகிலே மூலன் என்னும் ஆயன் உடம்பைச் சிவனருளால் அடைய நேரிட்டார். சிவனருள் பெருது இப்படித் திருமூலருக்கு நேரிட்டிருந்தால் அவரால் ஏதும்புரிய இயன்றிராது. நந்தியருள்பெற்று இங்ஙனம் மூலனுனமையால் அவரருளே வழிகாட்ட (சித்தாந்தநெறி காட்டிட)த் திருமூலராகிய அவ்வுடலிலேயே தங்கிச் சிவானந்த நிட்டை புரியலாயினர். இவர் தாம் கண்ட உண்மையைத் திருமந்திரமாக்கி மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், காலாங்கி, கஞ்சமலையர் ஆகிய ஏழு முனிவர்கட்கும் குருவாயிருந்து உபதேசம் வைத்தருளினர். இவர்கள் ஏழுபேர்களும் திருவாவடுதுறையில் திருமூலரிடம் தவமுயற்சியோடு நின்று மந்திர உபதேசமும் பெற்றவராவர். இதனுல், திருமூலரின் பின் பரம்பரையாக ஏழு முனிவர்கள் விளங்கலானுர்கள் எனத் தெரியலாம்.

இவ்வெழுவருள் இந்திரன் - சோமன் - பிரமன் - உருத்திரன் என்ற முதன்மையுற்ற நான்கு முனிவர்களும் உலகின் நான்கு திசைக்கும் நாதர்களாகச் சென்றனர். தத்தமக்கான அநுபவ நெறியில் நின்றனர். பின்னர் தத்தம் பரிபாக விசேடத்திற்கு ஏற்பத் தேவர்களாய்த் தலைவர்களாகவும் ஆயினர். இப்படி இவர்கள் ஏழுபேர்களும் தலைவர்களாக ஆனது திருமூலரால் என்று எண்ணிவிடாதீர்கள். சிவபெருமானுலே என்று எண்ணுங்கள், அதாவது, சிவபெருமான் திருமூலர் மூலமாக அவர்கட்கு உபதேசித்தான் என்பதாகும். சிவபெருமான் அன்னவர்கட்கு எதனை உபதேசித்தான் என்ருல் பிறப்பும் இறப்பும் இல்லாததாகிய பெருநிலை ஆகும். சூரியன் என்கிற செழுஞ்சுடர்க்கு வற்ருச்சுடரளிக்கும் அரும்பெருஞ்சோதியன் வேறு அற்பமான நிலைகளை அவர்கட்குக் காட்டிடானுவன். ஆதலால், திருமூலராலும், இவர்களாலும் காட்டப்படுவது சித்தாந்தமெனப்படும் பிறவாப் பெருநிலைச் சன்மார்க்கமேயாகும். ஏனெனில், இவர்கள் யாவரும் இதனை நேரே சிவபரம்பொருள் வழியாகவே எய்தப் பெற்றனராவர்.

[இனி, இவ்வாறன்றிச் சிவபெருமான், சனகாதியர் நால்வருக்கும் சிவயோகமாமுனியோராகிய மூவர்க்கும் இங்ஙனம் ஒளி நெறி காட்டினன் என்பதும் உண்டு.]

முற்கூறப்பட்ட சனகாதியர் நால்வர்க்கும் சிவபெருமான், எட்டுத்திசையும் பெருமழை பொழியினும், செழுமை தரும் நியமங்களைத் தவறுமல் செய்யுங்கள் என ஆணையிட்டருளினன். அவர்கள் சிவபெருமானுடைய திருவடியின்பிலே ஆழங்காற் பட்டவராயினர். இவர்களை நால்வர் நந்திகள் என வழங்குவர்.

இவையெல்லாம் திருமூலர் தாமே சொல்லும் முறையில் அமைக்கப்பெற்றுள நூலின்கண் என்பது காணலாம். இங்குக் கட்டுரைக்காகப் படர்க்கைமுறையில் பகரப்படலானது என்க.

V. திருமூலர் வரலாறு

[பாடல் 73 முதல் 94 வரை]

திருமூலர், தம் அடியிற்பற்றிய மாணவர்களுக்குத் தாம் தமிழிலே கூறவந்த நூல் ஆகமமே என்கிருர். அப்படிச் சொல லப்புகுகையில் குருவும் தெய்வமுமாவாரை வழிபட்டுச் சொல் லுதல் முறையாதலால் அங்ஙனமே கூறலுற்ருர். குருநாதரின் இரு திருவடிகளையும் சிரமேற்கொண்டு, அத்திருவடிகளை இதயத்தி னிடமும் தியானித்து நிறுத்திக்கொண்டு, இதயத்தினிடமாக அறிவிஞல் போற்றி செய்துவிட்டு, பிறகு, அடிபணிந்த பிறைச் சந்திரனைத் தன் முடியேற்றி வளரச்செய்து முழுமதியாக்கியுதவிய சிவபரம் பொருளின் திருவடிகளை மறவாமல் என்றும் உட் கொண்டு, உலகினர்யாவர்க்கும் பயன்படுமாறு கருதித் தமிழாகம மாகத் திருமந்திர நூலினைச் சொல்லலுற்ருர். ஆகமம் உயிருக்கு அறிவினை வளரச்செய்யும் நூலாதலின் அந்தி மதி புனை அரன் என்ருர். சிவபிரான், நேரே நமக்கு அருளுவது குருமுகமாகவே யாதலால் குருவணக்கம் முந்தி வேண்டுவதாயிற்று.

இங்ஙனம் ஆகமத்தை அருளிச்செய்தற்கு முன்னர், சிவாக மங்கள் யாவற்றையும் சிந்தையுட்கொண்டனர். அவற்றைத் தமக்கு அருளிச்செய்த திருநந்திதேவர் திருவடிவழியே தாம் கேட்டுக்கொண்ட பொருள்களையும் உள்ளத்துக்கொண்டனர். பின்னர் இறைவனுகந்த தமிழால் செப்பப்புகுமுன்னர், தாம் சிவவழிப்படும் பொருட்டாகக் குறைபாடில்லாத சிற்சபையில் ஒப்பிலாது நிகழும் ஆனந்தக் கூத்தினைத் தரிசனம் செய்து கொண்டு பல ஆண்டுகளளவும் சிவயோகத்திருந்தனர். சேக் கிழார் பெருமானும் இந்த முறையிலேயே ஆகமவழிச்சென்ற அடியார்கள் வரலாற்றினை விரித்துச் செப்புமுன்னர்ச் சித்சபைக் கண் தரிசனம் செய்த தன்மை யாவரும் அறிந்த செய்தியாம். எவ்வளவு காலம் திருமூலர் இத்தகைய சிவயோகத்தமர்ந்திருந் தனரென்பது அறிய இயலா ஒன்ரும். கோடியுகம் இருந்தேன் என இதனைக் கூறுகின்ருர்.

பிறகு, இந்திரமுனி என்னும் தமது மாணவரிடம் தாம் புவனேசுவரியிடம் பத்திகொண்டே இங்ஙனம் இருக்கப்பெற்ற தாகக் கூறுகிருர். செய்யப்புகுவது நூலாதலின் இறைவியின்

துணை இன்றியமையாததாயிற்று என்க. சர்வ வித்யா ரூபிணி இறைவி என்பர். பிறகு இதன் பயனாகி இறைவனது அருவுருவத் திருமேனியையும், மற்றுமுள்ள எல்லாத் தத்துவங்களையும், மொழி மூலங்களையும், முத்தமிழினையும், வேதாகமங்களையும் அளவற வாரிவாரி விழுங்கினார். உடலை மறந்திருந்தனர். இதனால், மனம் என்பது அறப்பெற்றனர். ஆகவே, நுகர்பவனையும், நுகர்ச்சிப்பொருளையும் வேறாகக்கொள்ளும் விகற்பநிலை கெட்டதாயிற்று. இங்ஙனம், ஏகனாகி நின்றநிலை எய்திய பிறகு சர்வாகமப் பொருள்களும் உணரப்பட்டன ஆயின.

பின்னர், தமது நூல் வேதப்பொருளை உரைப்பதே ஆகும் என்பதை மாலாங்கர் என்னும் தமது சீடரைநோக்கித் தெரிவித்திடலுற்றார். நீலமேனி வாலிழையாளிடத்து, அன்னவளைத் தன் இடக்கூற்றின் உடைய சிவபெருமானார், சர்வ ஆகமங்களுக்கும் அடிப்படையாக உள்ளதும், ஐந்தொழிற்கும் ஆதாரமாவதும் ஆகிய நாதாந்தத் திருக்கூத்தினை முன்னம் தெரிவித்திடலானார். அந்த மூல அங்கத்திலே, உலகின் யாவருடைய நெறிகளும் அடங்கும். அத்தகைய விழுமியதும், பொதுவானதுமாகிய வேதத்தையே, தமிழ்மறையாகத் தெரிவித்தற்குத் திருமூலர் தென்னாடு போந்தருளினார். இங்ஙனம், தாம் தென்பால்மேவியதன் காரணத்தைத் தாமே விளம்பியுள்ளார் ஆசிரியர்.

இங்ஙனம், தென்னாடு போதருகையில் பராசத்தியான பெருவியப்பூட்டும் ஆனந்தவல்லி, திருவாவடுதுறைப் பதியினிடத்தே சிவபெருமானைப் பிரியாதிருக்கப் பெற்றவள், திருவருள் வண்ணத்தள், சுந்தரநாதராம் பிறப்பினை நீக்கியருளினாள். அதனால், மூலனுடம்பிலே புகப்பெற்று அவள் திருவடியை இடையறாது தியானித்திருக்கலாயினர். இதனால் திருமூலர் நெஞ்சம் கோமுத்தி நாதர் தியானத்தே அழுந்தியது. இங்ஙனம் திருமூலர் தெளிவுற்ற இடம் மாசிலாமணியீச்சுரர் எழுந்தருளியுள்ள திருவாவடுதுறைத் தலமே யாகும். இந்தத்தலத்தே மேல்பாலுள்ள அரசமரத்தின் நிழலிலே நிட்டையுற்றிருத்தலாயினர். இதுவே சிவபோதி எனப்படுவதாகும். இவ்விடம், ஒருவன் இருதாள்நிழலை யொக்குமிடமாகும். இங்கே இருந்தே சிவபிரானுடைய திருநாமங்களை ஓதுமுறையிலே ஓதிக்கொண்டிருக்கலாயினர். இதன் பயனாகவே மூலனும் ஆயனுடம்புள் கோடிக்கணக்கான காலம் இருக்கலுற்றார். மேலும் தமதுநிலை நினைப்பும் மறப்பும் அற்றதாயினர்.

தேவர்கள் யாவரும் நலம்பெறுதற்காக ஏத்தும் இறையடியிலே ஒடுங்கியிருத்தலுற்றூர். இங்ஙனமாகவே நந்தியங்கடவுளால் ஆட்கொள்ளப்பட்டிருக்கலாயினர். அதாவது அத்திருவடியே புகலாகக் கொண்டிருக்கப்பெற்றனர் என்பதாம்.

இந்த நிலையினைத் திருமூலர் தமது முற்செய் தவப்பயனுகப் பெற்றனராவர். " தவமும் தவமுடையார்க்கு ஆகும் " என்பது குறள்மொழியாகும். இங்ஙனம் தவத்துறைநாடி நலம்பெற முயலாது உலகிடை வாழ்பவர் அவமே காலம் கழிப்பவ ராவர். இவர்கள், இச்சிறந்த பிறப்பினை அடைந்ததனுல் யாது பயன் காண்பர்? இவ்வாறு திருமூலர் தவப்பிறப்பினை அடை யப்பெற்றது, இறைவன் தன்னை நல்ல முறையிலே தமிழ் மொழியிலே வேதாகமாந்தம் விளங்குமாறு செய்விக்கவேண்டும் என்கிற திருவருளினுலே ஏற்பட்டதுதான் என்கிருர். என்னை நன்ருக இறைவன் படைத்தனன் தன்னை நன்ருகத் தமிழ் செய்யு மாறே என்ற 81ஆம் மந்திரப்பாடலடிகள் இதனை விளக்குவன வாகும். இந்த முறையில்தான் தேவார ஆசிரியர்களான மூவரையும் இறைவனே படைத்தருளித் தமிழ்த்துறை விளங்கச் செய்தனராவர் என நாம் ஈங்கறிதல் தகும்.

இவ்விதம், நன்ருகத் தமிழ் செய்யும்பொருட்டுத் திருமூலர் படைக்கப்பட்டதனுல் ஞானபூரணமெய்தும்வண்ணம் ஞானத் தலைவி இறைவனை வழிபட்ட நந்திவிசேடத்தலத்தினை அடைய லுற்றூராயினர். அங்கே ஒருவித இடையூறுமின்றி ஒன்பது கோடி ஆண்டுகள் இருக்கலுற்றூர். அந்நாளளவும் சிவபோதி யின் நிழலிலே நிட்டாபரராக விளங்கலுற்றூர். அப்போது சிவ பெருமானை ஞானப்பாலால் திருமஞ்சனம் நிகழ்த்தியிருந்தார். இறைவி கோவடியில் செய்தருளிய செயல்போலே தாமும் செய்து ஞானம் எய்தப்பெற்ற தன்மையை இதனில் அருளியுள் ளார் ஆவர். அது, ஞானப்பாலாட்டி நாதனை அருச்சித்து நானும் இருந்தேன் என்ற இடமாகும். இதனுல், தற்போதம் சற்றுமில் லாது திருமூலர் இருக்கப்பெற்றமை தெரியப்படும்.

இவ்வாறு அறிவால் சிவமேயாகி ஒளிரும்பொருட்டே திருமூலர் திருவாவடுதுறைக்குத் திருக்கயிலையினின்று எழுந் தருளினூராவர். சிவமேயன்றி வேறு நினைப்பற்ற நிலையினில், மன்மதனை வெல்லலுற்றூர். ஞானம் மிகப்பெற்ற சிவமுனிவர்

ஆயினர். பெருகிவாழும் தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் ஆகியவர்களை உடைய இடத்தே நுணுகிய வானவழியே அருள் துணையால் எய்தினர். இதன்பின்னர், மனத்துள் சிறந்து விளங்கும் நூல்கள் யாவற்றினும் மேலானதான வேதத்தின் உடலையொத்த சொற்களையும், அதனுள் தோற்றமாய் நிற்கும் பொருளையும் இறைவனருளால் தெளியப்பெற்றனர் திருமூலர் பிரான். நூல்களில் மேலானதும், யாவகைப் பொருளையும் தன்னகத்தே கொண்டுள்ளதும் ஆகியது வேதமே ஆகும் என்பார் நூல்களில் உத்தமமாகவே ஓதிய வேதம் என்றுள்ளார் ஆசிரியர்.

ஞானமயமாயிருப்பவன் சிவபெருமான். இவன் இருப்பினை இம்முறையில் ஞானகாயம் என்பர். கடலிலிருந்தே மழை முழுதும் தோன்றுவதுபோல, இந்த ஞானகாயத்தின் இடத்தி லிருந்துதான் மறைமுழுதும் தோன்றப்பெறும். இந்த மறை யினுள் இதயம்போல விளங்கும் ஞானப்பொருளின் வண்ணமே ஸ்ரீ பஞ்சாக்கரம். இப்பஞ்சாக்கரமே, பிறப்புற்றிருக்கும் உயிர் கட்குள் உள்ள நீங்காத் தொடர்புகொண்ட உணர்வினுள் ஓங்கும் மந்திரமாகும். இந்த மந்திர மொழியையும் நெறியையும் ஓது முறையில் ஓதியும், நிற்கு முறையில் நிறுத்தி நின்றொழுகியும் நீடுனல் ஆனந்தம் தலைப்படும். இவ்வகையான சிவானந்தப் பேற்றுக்கு இணை கிடையாது. இந்த ஒப்பில்லா ஆனந்தத்தைத் திருமூலர் அநுபவிக்கப்பெற்றுராவர். இவர் பரம கருணையாள ராதலால், தான் அடைந்த இந்த இன்பத்தினை எல்லா உயிர்களும் பெறவேண்டும் என்று ஆசைப்படுகிருர். அதன்பொருட்டே - திருமறைச் சாரமாகிய திருவைந்தெழுத்தின் ஓதுமுறை நிற்கு முறை உணர்த்துதற்பொருட்டே - திருமந்திர நூலை அருளிச் செய்யலுற்றுராவர் ஆசிரியர் என்க. நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதே திருமூலர் உயிர்களிடம் காட்டும் குறிக் கோளாம். ஊன் பற்றிநின்ற உணர்வுறு மந்திரமே ஸ்ரீ பஞ்சாக்கர மாகும். இதனை விவரிப்பதே திருமந்திரத்தின் விஷயம் ஆகும் என்னலாம். இதனுல் நாம் அறிவது, தூலம் சூக்குமம் முதலான திருவைந்தெழுத்தின் பொருள்களை இம் மந்திர நூலால் யாவரும் அறிந்து அவ்வழி ஒழுகி இன்பம் துய்க்கக்கூடும் என்பதாம்.

யாமெல்லாம் பிறவிப்பிணி உடையோம். அதை நீக்க வல்லவன் பிறவா யாக்கைப் பெரியோனுகிய சிவபெருமானே ஆவன். அவன் எல்லாத் தேவர்கட்கும் தலைவன். நந்தி என்னும்

திருப்பெயர் உடையவன். அவனைச் சிறப்பான சாதனங்களோடு சென்று கைகூப்பி வணங்குவர். மற்றும் அவனை எப்போதும் மறவாமல் நினைவர். அத்தகைய பெருமானை அடைவதைக் குறித்ததே திருமந்திரமாலை என்பது. ஆதலால், மனத்திலே ஆர்வங் கொண்டு உறுதியோடும் திருவருளில் துதைந்து நின்று இவ்வுலகிடை நாம் ஓதிடின் சிவபிரான் உள்ளத்தினுள்ளே வெளிப்பட்டு இன்பருத்துவன்.

நாம் தமிழ்ச் சாத்திரத்தை ஓதி உணர்ந்து ஒழுகி உய்வதற்காகப் பெருமான் பல அரிய உதவிகளை ஆற்றியருளியுள்ளானுவன். உலகங்களை இறுதியில் ஊழித்தீயால் இறைவன் அழியச் செய்வான் எனினும், உயிர்கள் ஞானமடைந்தொழுகி உய்ய வேண்டி உலகுகளை அழிக்கவல்ல தீயினை அங்ஙனம் மிகுத்து எரித்துவிடாவண்ணம் அடங்கியிருக்கச்செய்துள்ளான் ஆவன். உலகங்கள் பல உள. இவைகள் யாவும், வானவெளியிலே தத்தம் ஒழுங்கின்படியே செல்கின்றன. இவ்வாறு தத்தம் முறை வழுவாமல் அவைகளை யாரும் செலுத்திக் காக்கவில்லை. இறைவனுணேயே இங்ஙனம் நடத்துகின்றது. இல்லாவிடில் ஒன்றோடொன்று மோதுண்டு முடிந்துபோம். அப்படியாகுமாயின் நமக்கு உய்திபெற வழியில்லாமற்போம். ஆதலால், இதுவும் ஓர் உதவியாகும்.

உயிர்கள், மலபந்தமுடையன. அவைகள் மலநீக்கம் பெறுதற்குச் சில காரியங்களை மேற்கொள்ளவேண்டும். அக்காரியங்களைச் செய்தற்காக அந்த உயிர்கட்கு ஏற்றவிதமாக உடம்புகளை இறைவனளித்துதவியுள்ளான். இவ்வாறு தகுதிக்கேற்ப உடல் அமைத்துதவியமையும் ஒருபேருதவியாம். உடலோடு உயிர்கள் தங்குவதெல்லாம், உண்டு உடுத்து உறங்கிச் சுசிப்பதற்கன்று. ஞானம் எய்தி உய்திபெறற்பொருட்டேயாகும். அங்ஙனம், சரியை முதலான உண்மை ஞானசாதனங்களை வேதமுதலான சாத்திரங்களால் இறைவன் நியமித்தருளியுள்ளான். இவற்றைப் பரம்பரை பரம்பரையாகத் தங்கியிருக்குமாறும், அழிந்து விடாமலிருக்குமாறும் செய்தருளியுள்ளான். நம்மனோருக்கு விளங்கும் வண்ணம் தமிழிலே சமையும்படிக்கும் திருவுள்ளங்கொண்டுதவியுள்ளான். ஆதலின் இதுவும் மிகப்பெரியதோர் உதவியாம். சாத்திரங்கள் பலவாருக மல்கினும், பாண்டங்கள் பலவாயினும் மண்ஒன்றேயாக இருப்பது போலவே, ஒரே பொருளை

உடையனவாகும்படி அநுபவிக்கவைத்து உதவியுள்ளான். எனவே, எவர் எந்தச்சாத்திர நெறியில் செல்லலுற்ருலும் முடிவான அநுபவத்திலே புனித அத்துவிதப்பொருளே கொள்ளுமாறு செய்துள்ளமையால், அனைவர்க்கும் பேரின்பநிலையப் ஒன்றேயாமாறுணர்த்தப்பட்ட தென்னலாம். தமிழிலே சாத்திரங்களை ஓதினுலும், அன்றி வேறு எம்மொழிவாயிலாக ஓதினுலும் முடிபு ஒன்றே என்பதை வலியுறுத்துமாறு, தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச்சாத்திரம் - பொங்கி மிகாமை வைத்தான் பொருள்தானுமே என்ருர் ஆசிரியர். இதனுல் பண்டிருந்த தமிழ்ச் சாத்திரங்கள் வேண்டாவகையாலோ வேறு எவ்வகையாலோ, அழிந்துபோனமாதிரி இச்சாத்திரம் அழிவிலது என்பது உறுதியாக்கப்பட்டதென்க. இதுவும் பலமுறை அஞ்ஞாதவாசம் செய்யநேரிட்டாலும், மீண்டும் மீண்டும் பொங்கிவருதல் நாம் அறிந்தசெய்தியாகும். எனவே, திருமந்திரத்தைத் தமிழ்ச்சாத்திரம் என்னத் தடையில்லையாயிற்று.

இங்ஙனம், பற்பல உதவிகளை இறைவன் படிப்படியாகச் செய்துவைத்தும் அவற்றைச் சிற்சிலர் அறிகிலர். தற்போதம் மிக்குத்திரிவர். இதற்குச் சான்ருகத் திருமால், சிவபிரான் திருவடி தேடமுயன்றதையும், பிரமன், திருமுடிதேடமுயன்றதையும் புராணங்களாலறியலாம். இருவரும் தத்தம் தற்போதத்தால், தேவப்பிறப்பினை விட்டு மிருகமும் பறவையுமானுர்களேயன்றி உண்மை கண்டிலர். இவர்களுள் திருமால் தனது வலியின்மை ஒப்புக்கொண்டனன். இதனுல் தற்போதம் தணியப்பெற்ருன். ஆனுல், பிரமன், வேதமுரைப்போனுக இருந்தும் முடியினைக் கண்டதாக முழுப்பொய் புகன்ருன். இதனுல் தற்போதம் மிக்கது. ஆகவே, அதன்பயனுகப் பின்னே சிரம் துணியப் பெறுதல் முதலாம் தண்டனைகளுக்கு இடம் செய்பவனுயினுன். ஆதலால், சாத்திரப்பொருளை அறிய விரும்புவோர்க்கும் அநுபவிக்க நயப்போர்க்கும் தற்போதச்சீவிப்பும் பொய்ப்பேச்சுடைமையும் இன்னோரன்ன தீய இயல்புகள் ஒரு சிறிதும் இருத்தலாகா என நாம் தெரியவேண்டும். அயன் பொய் மொழிந்தானே என்பதனுல் இவ்விஷயம் உணரப்படும். இதனுல், திருமூலர், சாத்திர ஞானநெறியில் ஒழுகின் சிவனருளால் அவனைக்காணவும் பெறலாகும் என்கின்ருர் ஆவர். இச்செயற்கு அவர்தாமே சான்ருளராவர் என்க.

அரிபிரமர்கட்கு இங்ஙனம் அரியனுகிய சிவபெருமான், சிவ ஞானச் செந்நெறியே மேற்கொண்டு நிட்டை மேவியிருந்த தனக்கு எங்ஙனம் எளிமையாக உதவியருளினுன் என்பதையும் சொல்லிக் காட்டுகின்ருர். சிவன் அறமாகிய இடபத்தை நடத்தி யூர்வோன். வலிமையற்ற மானினைத் தாங்கிடுபவன். யாவரையும் ஆணையிடுதற்கறிகுறியான சூலப்படையினைப் பிடித்திருப்பவன். ஆதலால், தற்பரனுவன். இவன் தனது சங்கற்பத்தான் இயங்கு திணையும் நிலைத்திணையும் ஆகிய உலகத்தைப் படைத்து அதில் திருமூலதேவர்க்கு இருப்பிடமும் நல்கினன். அதாவது சிறந்த இடமும் நிறைந்த காலமும் தந்தருளினன் என்பதாம். இவற்றிற் கெல்லாம் மேலாகத் திருமூலர் சிரத்தினிலே நனைந்தனைய திருவடி யைப் பதியவைத்தருளிக் குருநாதனுகவும் இருந்துதவினுன். இதனுல், இறைவன் திருவடிஞானமே மாயைகெடுத்து முத்தி நல்கவல்லது என்பது துணிபாம்.

இவ்வாறு சிவபெருமானுல் திருவடி தீக்ஷைபெற்ற பின்னரே பரம்பரைத்தன்மை பெற்றவராயினர் திருமூலதேவர். இப்பால் இந்தச் சிவநெறியார்கள் அறிதற்குரியவையான செய்திகளையெல் லாம் யாவரும் தெரிந்து உய்தற்பொருட்டுத் திருமந்திர நூலாம் பெயரிட்டுச் செய்தளித்தாராவர். இந்நூலிலே, அறியப்படு பொருளும் - அறிவும் - அறிபவனும் - மாயைகளும் - தூமாயைக் கண் கூடியிருந்து தொழில் ஆற்றும் பரையாதிய சத்திகளும் - யாவரையும் ஆண்டருளும் சிவமும் - ஐம்புலன்கொண்டு அறியப் படாததன்மை உடைய வித்தெழுத்து எனப்படும் பீஜங்களும் ஆசிரியர் விளங்கக் கூறியுள்ளாராவர். இவற்றின் விவரங்களை ஈண்டுரைப்பின் பெருகும். நூலில் ஆங்காங்கு இவை கூறப்படு மிடத்து விவரங்காணலாகும்.

மேலே கூறப்பட்டவைகளையெல்லாம் திருமூலர் தாமாகச் சொல்லிவிடவில்லை. "எனதுரை தனதுரையாக" என்பதற்கு ஏற்பச் சிவபரம்பொருளே விளக்கியவன் ஆவன். அவனே மேலான பொருளாவன். உண்மை அறிவு ஒளிப்பிழம்பன். ஆயினும் எல்லை இல்லாத பெருமையன். ஆனந்த நிலயன். இடையருது ஆனந்தக்கூத்தாடுபவன். இத்தகையவன் சொற் களே திருமந்திரத்தின் போக்காகும். இவற்றைக் கருவியாக நின்று வகுத்தற்பொருட்டே வளப்பமுடைய திருக்கயிலையி னின்றும் நந்திமரபினராகப் போந்தருளினர் ஆசிரியர்.

தொகுத்துரைப்போமாயின் திருமூலதேவநாயனுர், சிவபிரா னருளாலேயே சாத்தனூர்ப் பசு மேய்த்தோனுகிய ஆயன் மூலனுடலுள் புகலுற்றனர். அதன்பிறகு அந்தச் சிவனருளி னுலேயே சதா சிவசிந்தனையிலிருக்கலானுர். அதன் பயனுகச் சிவத்தருளினுல் மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்ருர். பிறகு உலகோர்க்கு உதவுதற்பொருட்டாகவே திருஆவடுதுறைப்பதி யிலே சிவபோதிநிழலிலே சிவனருளால் வாழ்ந்திருக்கலானுர்.

இப்படி நீண்டகாலம் நரை திரை மூப்பு இன்றி இருக்க முடியுமோ என்று நாம் ஐயுறக்கூடுமாதலால், அந்த நரையாதிகளை நீக்கி வாழமுடியுமென்பதையும் உணர்த்துகின்ருர் ஆசிரியர். உடம்பு சரியாமல் நிலைத்திருத்தற்கான இருக்கை (ஆசனம்) வகைகள் பல இருக்கின்றன. இவைகளில் ஏற்ற ஒன்றை மேற் கொள்ளலாம். இதனுல் உடம்பின் தளர்ச்சி நீங்கப்பெறும். அப்பால் மூலாதார முதலாகப் பிரமப்புழைவரையில் இடைகலை பிங்கலை எனப்படும் சுவாச ஒழுங்கினுல் மூலக்கனலை எழுப்பி முகிழ்க்கச்செய்யலாம். அப்போது ஆயிர இதழ்க்கமலத்தினின்று உருகி வழியும் அமுத தாரையினுல் உரோமங்களெல்லாம் ஒளி பெற்று விளங்கும். உரோமமே இவ்வாருவதால் உடலில் தோலும் திரைதலின்றி விளங்கும் என்னத்தடையில்லை. அன்றி யும், நினைப்பவரைக் காப்பாற்றும் தகையது மந்திரம் எனப்படும். மந்திரங்கள் எத்தனையோ உள்ளன வேதங்களில். வேதமந்திரங் கள் யாவற்றிற்கும் மூலமனுவாக இருப்பது பிரணவம் எனப் படும் ஓங்காரம். ஓங்காரமே ஒலியும் ஒளியுமாகி அறிவை வளப்படுத்துவது. இவ்வோங்காரம் அகர உகர இணைப்புடைய தென்ப. அதாவது சிவமும் சத்தியுமாய புணர்ப்பாம். இந்த ஓங்காரத்தை உயிர் கருதலுறுவதால் இறைவனும் இறைவியும் உயிருள் இருந்து ஞானமய ஒளியைச் செய்கின்றனராவர். இதனுல் உயிர் மலநீக்கம்பெற்று அருளொளி உரோமத்துவாரங் களாலும் வெளிப்படத் தேசுமயமாகத் திகழ்ந்துறைதல்கூடும் என்பர். இவ்வழியிலே நின்றனர் நம் திருமூலராதலால் நரை முதலன இல்லாது நீண்டகாலம் வாழப்பெற்றிருப்பவர் என்பது உண்மையாகும் என்க.

இறைவன் இயல்பாகவே சோதிமயமாய் விளங்குபவனுவன். ஆதலால் அவன்பேர் நந்தி எனத் திருமூலர் ஓயாது பிதற்றி உரைத்தனர் வாயால். அவனுறைவை மனத்திலே இரவும்

பகலும் சிந்திக்கப்பெற்று ஆக்கிக்கொண்டனர். ஓங்காரத்துள் ளொளி வண்ணனுகிய பெருமானை இப்படியே முயன்று முயன்று தாமும் ஒளிமயமாக விளங்கும் பேறுபெற்றமர்ந்தனர் திருமூலர்.

இதுகாறும், இப்பகுதியில் கூறப்பட்டவை எல்லாம் திருமூல தேவர் தம்மைக்குறித்துத் தாமே சொல்லிவைத்தன ஆகும். படிப்போர்க்கு ஒருமுறையாக இருத்தல்வேண்டித் திருமூலர் பேச்சாக உரைக்காமல் திருமூலரைப்பற்றிய பேச்சாக வரையப் பெற்றனவாம் எனக் கொள்க.

VI. அவையடக்கம்

[பாடல் 95 முதல் 98 வரை]

திருமூலர், தம்மைப்பற்றித் தாமே கூறிவந்த பாடலில் இறுதியில் பிதற்றுகின்றேன் என்று சொல்லியுள்ளார். சிவபெருமான் தன்னைப் பித்தர்நிலையினருக்குப் பேசவைக்கின்றார் என்று சொல்லி, மேலே இப்பகுதியில் சொல்லவந்த அவையடக்கத்துக்குத் தோற்றுவாய் செய்துகொண்டாராவர். ஏகனாகி இறைபணியராகி நிற்கும் நிலையினராகிய திருமூலதேவரே தாமுரைக்கப் புக்க அரியதான திருமந்திர நூலுக்குப் பின்கூறியுள்ளவண்ணம் அவையடக்கம் கூறுவாராயின் நாமனைவரும் தற்போதம் கெட்டு ஒழுகவேண்டும் என்பதில் என்ன தடை உள்ளது?

திருமந்திரநூலானது ஏனைய சில நூல்களைப்போல ஏதோ ஒரு பொருளைப்பற்றிச் சொல்லவந்தது அன்று. இறைவனையே பொருளாகக்கொண்டு சொல்ல எழுந்த விழுப்பம் உடைய ஒருநூலாகும். நூலுக்குச் சிறப்பென்பது அந்தநூல் நுவலும் பொருளுக்குள்ள சிறப்பைப்பற்றியது ஆகும். இது, தருமத்தின் பெருமை என்பது அதனை வாங்கிக்கொண்டவனுடைய பெருமையைச் சார்ந்துள்ளமை போல்வதாகும், இதனால் நூலின் சிறப்பை நாம் ஒருவாறு தெரியலாகும்.

நூல் கூறவந்த பொருள் சிவமே ஆகும். அந்தச் சிவமாம் பொருளை எவர்தாம் அறியவல்லார்? அப்பொருளின் பெருமை அளப்பரிதாகும். எல்லா உலகிற்கும் எல்லா உயிர்க்கும் அச் சிவனே முழுமுதலாம் அண்ணல் எனப்படுவான். ஒரு சமுத்திரத்தை முழுதும் மொண்டுவைத்து அளக்கமுடியாது. அப்படி அளக்கவல்ல பாத்திரமும் இல்லை. அப்படியே குணக்கடலாகிய பெருமானை அளத்தல் இயலாது. அதாவது, கடலின் அகலம் நீளம் ஆழம் உயரம் முதலியவற்றை அளவிட முடியாமைபோலவே இறைவனை எவற்றானும் அளவிட இயலாது. உலகில், எவ்விடத்தின் உயரத்தையும் குறிப்பிடுகையில் கடல்மட்டத்தை அடிப்படையாகக்கொண்டே கூறுவர். அப்படியே, எவருடைய பெருமைக்கும் முழுமுதற்சிவனது பெருமையின் பகுதியே

அடிப்படையாக உளது. இதுபற்றியே, "மறையினுல், அயனுல், மாலால், மனத்தினுல், வாக்கால், மற்றும் குறைவிலா அளவினுலும் கூறவொண்ணுத" பொருள் என்ருர் சிவஞானசித்தியாரிலும். இன்ன ஒளி எனப்பெயர்கூறிக் குறிக்கமாட்டாத பெருஞ்சுடராவது சிவம். எல்லாவித ஒளிக்கும் இது மின்ஒளி, இது சந்திரஞெளி, இது கதிரோஞெளி எனப்பகுத்துப் பெயரிடலாம். ஆனுல் இப்பெருஞ்சுடர்க்கு அங்ஙனம் ஏதும் பெயரிட்டு உரைத்தல் இயலாது. ஆனதுபற்றியே, "ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி" என்ருர் மணிவாசகரும். இப்படிப்பட்டபொருள்கள் பல அல்ல. ஒன்றேதான் உளது. ஆதலால் "**ஒன்று அதின் வேர் அறியாமை**" எனலுற்ருர் ஆசிரியர்.

எப்பொருளும் அவன்மாட்டு அடங்குதலும், அவனிடம் இருந்தே தோன்றுதலும் உடைமையால் சிவமாம் பொருட்கு மூலமாம் பொருள் எதுவுமிலது. இருந்தபோதிலும் "நான் உயிர்கள் உய்திபெறும்பொருட்டாக அவன்வழிநின்று கூறுகிறேன்" என்கிருர் ஆசிரியர். "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும்" என்னும் மூன்ரும் திருமுறைப்பாடல் ஈண்டுக் கருதத்தக்கதாகும். அன்றியும், இங்ஙனமளவிட முடியாதவனேனும், உலகத்தார்க்கு அளவிட்டறிதற்கு உரியதோருபாயம் வகுப்பதற்கே இந்நூல் கூறப்படலாயிற்று என்கிருர் ஆசிரியர். "அருளினுல் ஆகமத்தே அறியலாம்" என்னும் சித்தியார்ப்பாடல் இவ்விடம் கருதுதல் பயன்படும். இதனுல் இறைவனுடைய வரம்பற்ற பெருமை கூறப்பட்டது என்க.

இத்தகைய பெருமையை உடைய பெருமானை அநுபவிக்க விரும்புபவர்கள் பாடல், ஆடல், நாடல், தேடல் என்ற நான்கு முறை கொள்வர். இவை முறையே சரியை முதலிய நான்கு நெறியினையும் குறிப்பிடும். இங்ஙனம் பயின்ருல் இறைவனருளால் அவன் எண்குணக்கடலில் குளித்தல் கூடும் என்று நமக்கு அறிவுறுத்தற்பொருட்டே பாடவல்லார் நெறி பாட அறிகிலேன் முதலவாகக் கூறுகின்ருர் ஆசிரியர். இதுவும் தமது அறியாமை விளம்பியவாருயிற்று என்க.

இறைவன் நிலைபெற்ற அவனுரையாகிய வேதமந்திரங்களால் அறியத்தகுவன். சிவயோக சீலர்களின் உள்ளத்திடம் இசையொலியாக எழுதலால் உணரத்தகுவன். மற்றும், வேதத்தை

ஓதுபவனும் உலகம் படைக்கும் தொழிலும் ஒருங்குடையானுகிய பிரமனும், அவன் முன்னேனுகிய யோகநித்திரை புரியும் திருமாலும் அவனை உணர்தல் அரிதாம். எனவே, சிவம், அவனருளால் அழுந்தி அனுபவிக்கப்படும் பொருளாம் என்றறிதல் வேண்டும்.

இத்தகைய இறைவன், திருக்கயிலைத் தாழ்வரையின்கண் இருந்து தத்துவ ஞானத்தை உரைத்து அருளியதனல் அது வேதாகம சாத்திரங்களாகப் பரிணமிக்கலாயிற்று. இந்த முறையிலே முனிவர்களும் தேவர்களும் ஒத்திருந்தும் வேருயிருந்தும் பத்திமை செய்து பயனடையக் கருதியும் வேதநூற்பொருளை இன்னதெனத் தெரிந்து பயனெய்தமாட்டாதார் ஆயினர். இதனுலும் இறைவனை முற்றுமுணர்தல் முனிவராலும் தேவர்களாலும் இயலாதென்பதாயிற்று. "சிரிப்பார் களிப்பார்" என்னும் எட்டாம் திருமுறைப்பாடல் இங்கு ஒப்பிடற்பாலதாகும்.

VII. திருமந்திரத்தொகைச்சிறப்பு

[பாடல் 99, 100]

திருமூலதேவர் மேலே கூறப்பட்டவிதமாக அவையடக்கம் கூறிக்கொண்டு இறைவனுர் திருவுள்ளப்பாங்கின்வண்ணமே திருமந்திரம் என்னும் நூலினை இயற்றி அளித்துள்ளாராவர். ஆதலினுல் இத்தகைய நூல் எவ்வாறு ஓதத்தக்கது? எத்தனை பாடல்களைக்கொண்டது என்பதை இத்தலைப்பிலுள்ள இரண்டு பாடல்கள் கூறுகின்றன. இங்ஙனம் கூறியது அப்பியசிப்பார்க்கு முறை தெரியவும், மலைவு ஏற்படாமைப்பொருட்டுமேயாம் என்க! இதனில் ஒருவாறு நூற்பயனும் கூறியவாருயிற்று.

திருமந்திரநூல், திருமூலர் உரைத்தருளிய நூலாகும். இது மூவாயிரம் தமிழ்மந்திரங்களைக்கொண்டது. இது குறிப்பிட்ட ஒரு சமயத்தார்கே உரியதெனக் கருதப்படாது. ஞாலமுழுதும் அறிந்துய்யவேண்டுமென்று கருதியே அருளிச்செய்யப்பட்டது. செய்தவர் திருமூலர் எனக் கூறப்படினும், அவரை வழியாகக் கொண்டு சிவபெருமானே அருளியநூலாகும் இது. ஆதலாலும் இது பொதுநூலாயிற்று என்னத் தடையில்லை. இந்த நூலை ஒவ்வொருநாளும் காலையில் எழுந்து தூய்மைசெய்துகொண்டு ஓதவேண்டும். ஓதும்போது ஒவ்வொரு மந்திரத்தின் கருத்தையும் அறிந்து ஓதவேண்டும். வேதம் போல வாளா ஓதுதல் பயனளியாது. "சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வார் சிவபுரத்து" என்பர் இக்கருத்தே பற்றி மணிவாசகனுரும். அங்ஙனம் ஓதிடின் அனைத்துலகங்கட்கும் தலைவனை முதற்பொருளை அடையப்பெறுவார்கள். இவ்விடத்தும் உலகமக்கள் யாவர்க்கும் பொதுப்படப் பொருந்தும்வண்ணமாக ஞாலத் தலைவனை என்று குறித்துள்ளமை அறிதல் தக்கதாம். இந்நூலை ஓதுவோர் மேற்கொள்ளவேண்டிய நியமமும் நூலை ஓதினேர் அடையக்கூடும் பயனும் இப்பாடல் குறிக்கின்றதாகும்.

இந்த நூல் வைக்கப்பட்டுள்ளவகை பொதுவும் சிறப்பும் என இரண்டு பகுப்புக்களைக் கொண்டது. இந்நூல் மொத்தம் மூவாயிரம் பாடல்களைக்கொண்டது. இதனை ஓதியுணர்ந்தொழுகுவோர் புனித அத்துவித முத்தியினைத் தட்டாமல் எய்தப்பெறுவர்.

முத்திகளிற் பலவகை முத்திகள் கூறப்படினும் இதுவே முடிந்த முத்திப்பேறு ஆகும். முத்தி முடிவு இது. இந்நூலின்கண் உள்ள பாடல்களை ஓதுங்கால் பொதுப்பகுதியை முன்னும், சிறப்புப் பகுதியைப் பின்னும் ஆராய்ந்து ஓதுக. அங்ஙனம் ஓதலுறின் ஞானமும் முத்தியுமாம் இரண்டு பேறுகளையும் இம்மையிலேயே அடையப்பெறலாகும். சிறப்பு என்பது முத்திப்பேறும். இஃது மேலான அறநூலாதலால், "சிறப்பு ஈனும், செல்வமும் ஈனும் அறத்தின் ஊஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு" என்னும் குறள் கருத்திற்குத்தக பொது - சிறப்பு இவை தரும் என்றுரைத்துப் போதலுற்றது எனத்தெரியலாம். வைத்தசிறப்பு என்பதனால் சிறப்புப் பகுதியே சிறந்த பகுதியாம் என்க.

VIII. குருமடவரலாறு

[பாடல் 101, 102]

நூல்கள் இருந்து பயனில்லை. அதிலும் ஞான நூல்களைப் படித்துணர்வோர் அரியர். ஆதலால், ஞான நூல்களை, மாணுக்கர் களுக்கு ஐயமற உணர்த்துவோர் வேண்டும். அவர்கள் நூலை உணர்த்துவது மட்டுமல்லாமல், தாமே அந்த நூல் சொல்லும் மார்க்க அநுட்டிதர்களாகவும் இருக்கவேண்டும். கற்பிப்ப வற்றைக் கேட்டு அதன்படி நடப்பது துர்லபம். ஆனுல், ஒருவர் நடப்பதை அடிக்கடி பழகிப் பார்ப்பதால் அப்பழக்கம் பழகு வோரிடம் எளிதில் அமைந்துவிடும். ஆதலால், பண்டை நாட் களில் சாதாரண நூல்களைக் கற்பித்தற்கும் ஒழுகிக் காட்டுதற்கும் குருகுலங்களும், ஞான நூல்களை உபதேசித்தற்கும், உபதேச வழியொழுகிக் காட்டுதற்கும் ஆசாரியர்களைக்கொண்ட குரு மடங்களும் நம் நாட்டில் இருந்து பயன்பட்டு வந்தன. சிறப் பாக ஞான நூல்களை உபதேசித்து நடந்துகாட்டும் குரு மார்கள் ஆங்காங்குத் திருமடங்கள் அமைத்துக் கொடுக்கப் பட்டுப் பரம்பரை பரம்பரையாக ஞான சந்ததியை விளங்கச் செய்து எல்லா மக்களையும் நல்வழிப்படுத்தி வந்தனர். அந்த முறையில் திருமந்திர நூலுக்கும் அமைவுண்டதில் வியப்பு ஏதும் இல்லை. திருமூலரே இத்தகை மடத்திற்குத் தலைவராக விளங் கினர். இவரால் கூறப்பட்ட ஞானசாரம் சன்மார்க்கம் எனப் படும். இத்தகைய விழுமிய சன்மார்க்கநெறியினைப் போதித் தற்கும் அநுட்டித்துக் காட்டற்கும் திருமூலர்காலத்தே அவர் மடத்தையும் உள்ளிட்டு ஏழு மடங்கள் ஏற்பட்டு விளங்கின. இந்த ஏழு மடங்களும் ஞானமார்க்கம் எனப்படும் சித்தாந்த நெறியினைப் பரப்பிவந்தன. திருமூலர் திருமடம் இவ்வகைப் பணியில் முந்தியது. இத்திருமடத்திருந்துகொண்டுதான் திருமூலர் ஆகமநெறியாகத் தமிழில் ஒன்பது தந்திரப்பிரிவுகளும் மூவா யிரம் பாடல்கள் கொண்டதுமான திருமந்திரம் என்னும் சுந்தர ஆகமத்தைச் சொல்லியருளினர்.

எனவே, பண்டு இத்தமிழாகம நெறிமுறையினை ஏழு திரு மடங்கள் ஏன்று நடத்திவந்தன. அம்மடங்களின் தலைவர்கள், காலாங்கர் - அகோரர் - திருமாளிகைத்தேவர் - நாதாந்தர் -

பரமானந்தர் - போகதேவர் - திருமூலர் என்பவர்களாவர். இவர்களில் ஒருசிலர்க்கு அடைமொழிகள்புணர்த்து உரைக்கப்பட்டிருத்தல் சிந்திக்கத்தக்கதாம். கலந்தருள் காலாங்கர் - தம்பால் அகோரர் - நலந்தருமாளிகைத்தேவர் - புலங்கொள் பரமானந்தர் - நிலந்திகழ் மூலர் என்பன அவை ஆம். இவர்கள் எழுவருமே பிறவிநோயறப்பெற்ற சித்தர்களாவர். திருமூலர் திருமடமும், திருமாளிகைத்தேவர் திருமடமும் திருவாவடுதுறையிலே இருக்கலுற்றவை. பின்னே, ஸ்ரீ பஞ்சாக்கரதேசிகர் திருமடம் எனப்படுவதும் இச்சூழலிலேயே தாபிதமுண்டு விளங்கிவருகின்ற சீர்மை உடையதாகும். எனவே, திருவாவடுதுறை ஆதீனத்துக்கு இத்தகைய தெய்விகச் சூழ்நிலை அமைவு இயல்பின் இருத்தல் சாலச்சிறப்பளிப்பதாகும். இங்ஙனம் மூன்று குருமூர்த்தங்கட்கு இத்தலம் இடமளித்தமைபற்றி இதனை ஞானபூமி எனவும் சித்தர் புரம் எனவும் சிறப்பித்து மக்கள் அழைப்பாராயினர். இவ்விதத் தெய்விகநிலையத்தைத் தரிசித்தல் மக்களாவார் மாண்புறுகடனும் என்னலாம்.

IX. மும்மூர்த்திகளின்முறைமை

[பாடல் 103 முதல் 112 வரை]

வேதாகமங்கள் சன்மார்க்க முறையிலே ஒரு முழுமுதலே கூறியிருந்தும் ஒருமைவழி நிலைபெருமல் பன்முகச் சமயநெறி யாக உலகமானது படரலுற்று வருகின்றது. இங்ஙனம், பல வகையாகப் பிரிவுபட்டதனுல் பிணக்கம் வலுத்து ஒருமை குலைவுற்றது. வேண்டுவது ஒருமைதான். ஒன்றேதான் பலவாக விரிகின்றதன்றித் தனித்தனியாகப் பன்மைகள் ஏற்பட்டில; ஏற்படவும் இயலாது. ஆதலால், இப்பன்மையினை ஒருமையாகக் காண்டலே வேண்டுவது. இதுவே உண்மையும் ஆம். இதனை "Unity among diversity" என்பர். இதனை உணர்வதில் உள்ள குழப்பத்தை இந்தத் தலைப்புள்ள பத்துப்பாடல்கள் நீக்க வழி காட்டுகின்றன ஆகும். இதனுலும் சித்தாந்த நெறி எந்த நெறி யினையும் தழுவிச்செல்வது என்பதை அறியலாம். பலவகை நெறிகளோடு சித்தாந்த நெறியும் ஒன்றெனநாம் கருதிக் கணக் கிடுதலும் பிணக்கிடுதலும் பொருத்தமன்ரும். "ஒன்ருய் முளைத் தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு" என்னும் திருவாசகப் பாடல் இங்குக் கருதுதல் தகும். "வணங்கும் துறைகள் பல பல ஆக்கி" என்னும் திருவிருத்தப் பாடலும் இங்கு ஒப்பிட்டுக் காணல் தகும். இந்த ஒருமை நெறிகாணும் முறைமையினைத் திருமூலர் எங்ஙனம் கூறிச் செல்லுகின்ருர் என்பதை இனிக் காண்போம்.

முதன்மைப் பொருளுக்கு, அளவற்ற இளமை நிலவ வேண்டும்; அழகும் இருக்க வேண்டும். "என்றும் இளையாய் அழகியாய்" என்பர் நக்கீரரும். மற்றும், முடிவு என்பதும் இருத்த லாகாது. இதனை "உளையாய்" என்பர். அளவு அளவாக நடைபெறும் கால அவதியும் இருத்தல் கூடாது. "காலாதீதம்" என இது புகலப்படும். இந்த நான்குவித இலக்கணங்களும் கொண்டதே முழுமுதற் பொருளெனப்படத் தகுதி உடையது. இந்த நான்கு இலக்கணங்களையும் வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்தால் சங்கரன் ஒருவனே தளர்விலாதவன் என ஏற்படும். எனவே சர்வசங்காரகர்த்தா எவனே அவனேதான் இவ்வகை இலக்கணங்களைப் பெற்றிருத்தல் வல்லானுவன். அவனது அடியார்களாகவே ஏனையோர் எவரும் இருத்தற்குரியவராவர்.

இவர்களாலும் அவன் பெருமை அளவிட இயலாது. இதனால் சிவபரத்துவமே முதன்மையும் முழுமையும் உடையது என்னலாம்.

இப்படியிருந்தும் சிலர் உருத்திரனே ஆதியாவான் எனவும், அழகிய திருமாலே முதன்மையானவன் எனவும், ஆதிக் கமலத் துதித்த பிரமனே முதலாவான் எனவும் இம்மூவரையும் தனித் தனித் தெய்வமாக எண்ணலுற்று மாறுபாடு கொள்ளலானார்கள். அது சரியன்று. ஆராய்ந்து பார்த்தால் இம்மூவரும் ஒருவரே எனல் விளங்கும். இதனைச் **சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்று** என்று கூறிக்காட்டுகிறார் ஆசிரியர். இம்மூவரும் தத்தம் பதவிகளில் இருந்து சிவபரத்தின் ஆணையின்படித் தொழிலாற்று பவராவர். ஆகவே அவர்களை ஆணையிடுபவரும் அவர்களுள் இருந்து இயக்குபவரும் யாரோ அவரே முதல்வர் என நாம் கொள்ளல் நேரிதாம். உடம்புக்கு அதிக மதிப்பு இல்லை; அதனை உள்ளிருந்து நடத்தும் உயிருக்கே அதிக மதிப்புள்ளதென்பது தெரிந்த விஷயமே.

வினைகட்கு இருப்பிடமாவது மாயை. ஆதலால், மாயைக்கு உட்பட்டோர் வினைவயப்பட்டவரேயாவர். ஈசன் அங்ஙன மாவான் அல்லன். ஈசன் **இருக்கும் இருவினைக்கு அப்புறம்** என்பது ஆசிரியர் கூற்றும். இத்தகையானிடம் யாவும் ஒடுங்கிப் பின் அவன் குறிப்பால் வெளிப்படுதலால் அவனே வித்துப் போன்று ஆதாரமானவன். இந்த நிலையனைச் சதாசிவம் என்பர். ஆதலால், உண்மையான மூலம் இன்னதுதான் என்றறிந்தவரே உண்மை உணர்ந்தவராவர். அவ்வாறின்றி அது என்றும் இது என்றும் வேறுபடுத்துவதும், அதுவே இது என்று ஒன்றுபடுத் துவதும், அதுவாகிய இதுவே என்று இருமையுங்கொள்வது மாக மயங்காமல் இவற்றின் பொதுமையாவது மேலானதென்று தெளியவேண்டும். இங்கு 'அது இது என்றது அது அல்லான்' என்னும் சிவஞானபோத வெண்பாவுரை பார்ப்பது பயன்படும். ஆதலால் பேதம் முதலாம் வாதம்புரிபவர் நினைப்பில்லாதவர் ஆவர். உண்மை உணர்வு கொண்டவர்கள் பிறவியின் வித்தினை இன்னதெனக் கண்டவராவர், ஆகையால், ஈசனே எல்லாம் ஆயவன் என்பதே உண்மையாம்.

மேற்குறித்த முழுமுதற்பொருளே பரசிவன் முதலாம் மூவராவன். பரசிவன் முதலாம் ஐவரும் ஆவன். அருவம் -

அருவுருவம் – உருவம் எனப்படும் நவந்தருபேதங்களுமாவன். இவ்வாறெல்லாம் ஆகிறவன் அவைகட்கெல்லாம் முதலாமவன். அவன் பத்து நிலைகளும் உடையன். அந்த நிலையே விந்து ஓங்கச் சிவமாகும். நாதம் ஓங்க மகேச்சுரன் ஆகும். எல்லாம் முதலாகிய சங்கரனே ஆவன். மற்றும் இதன் விரிவுகளை இவ்வாதீனத்து 105 ஆம் வெளியீட்டின் 128, 129 ஆம் பக்கங்களில் காண்க. ஈண்டு மீண்டும் விரித்தல் வேண்டாதாகும்.

மற்றும், வேறொரு நியாயமாகப் பார்த்தாலும், பிரமனும், மாலும் அந்நியமானவரல்வர். அவர்கள் இறையாணைவழி நின்று புரியும் தொழில்கள் நமக்கே பயனளிப்பன. அவர்கள் பரிபாக விசேடத்தால் இவ்வாறு நமக்குப் பயனளிக்கும் படைத்தல், காத்தல் தொழில்களை ஆற்றுகின்றனர். அவர்கள் சிவனடியார் களாவர். ஆதலால், அவர்களால் நாம் அடையும் நன்மையை எண்ணிப்பார்த்தால் அவர்கள் மாறுபட்டவரல்லர் என்பது புலனும். இதனுல், எந்தத்தேவரையும், அவரால் நாம் அடையும் நன்மையைநாடி நேசிக்க வேண்டுமல்லால், புறம்பாகக்கொண்டு தூஷித்தலாகாதெனத் தெரியலாம். அன்றித் தூஷிப்பின் அது சிவனையும் அவனடியாரையும் தூஷித்ததாகவே கருதப்படும் என்க.

இந்த வேறுபாடின்மையாகக் கருதப்படவேண்டிய செய்தியைச் சிவபிரான் ஆணையினுலும் திருமூலர் நேரிலறியப் பெற்ருராவர். திருமூலர் திருக்கயிலையிலே தேவர்சூழ இருந்து போற்றும் அத்தாணி மண்டபத்திலே சுவாமியைக் கண்டு போற்றினபோது, அத்தேவர்பிரான், 'நீ திருமாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்பாவாய்; ஆனுல், அவர்கள் தத்தம் பக்குவ விசேடத்துக்கு ஏற்ப அதிகாரங்களை வகித்தவர்கள்; ஆகையால், பூவுலகில் சென்று அவர்களால் படைக்கவும் காக்கவும் பட்டுள்ள மக்கட்கு வீடுபேற்று நெறியினை விளக்கிடுவாய்' என்று உத்தரவிடப்பெற்ருர் திருமூலர். இந்தச் சிறப்பு, தனக்குக் கிடைத்ததைக் கொண்டும் அவனுணை எவரையும் நடத்துகிறது என்ற உண்மையை அறிந்து நமக்கு உணர்த்தலுற்ருர் ஆவர். இந்தச் செய்தியை **ஓலக்கம் சூழ்ந்த** என்ற பாடல் உணர்த்து கின்றதாகும்.

மேலும் தேவர்கள் என்றும், மக்கள் என்றும் வேறுபடுத்துச் சொல்வதெல்லாம் அவரவர் பெற்றுள்ள யாதனு சரீரத்துக்கும்

பூதசரீரத்துக்கும் தக்கவாறு ஏற்பட்ட பேதமேயாகும். ஆன்ம வேறுபாடு கருதாமல் யாவரும் 'அவர் தேவர், இவர் தேவர்' என்று பிணங்காமல், யாவர்க்கும் மேலான சிவனுடைய திருவருளேயே ஒன்ருக வேண்டிநிற்பது நெறியாகும். இவ் வாறன்றிப் பேதமாகப் பேசப்படும் ஆதர்கள்பேச்சுப் பிதற்றல் எனப்படும். ஒரே பேரொளிப் பொருள்தான் உள்ளது. அதுவே சிவம், சத்தி, விந்து என மூன்ருகவும்; சதாசிவன், மகேசுவரன், அரன், அரி, பிரமன் என ஐந்தாகவும் ஆகிறது. இவ்வேறுபாடுகள் யாவும் நிலேவேறுபாடுகளேயன்றிப் பொருள் வேறுபாடல்ல. இவ்வுண்மை அறியார் மூடரே. மூன்ருக வேறுபடுத்துக் கருதாதிருப்பதே அறிவுடைமை யாகும். வேறுபடுத்துவது உண்மைக்கு மாருனதாகும். ஆகையால், சிவபரமாம் ஒருபொருளே நமக்கு அந்த அந்த நிலேயிலிருந்து உதவிபுரிந்து நம்மைப் பக்குவப்படுத்தி உதவுகின்றதெனத் தெளிதலே அறமாகும்.

சிவம் என்னும் முழுமுதற் பொருள் ஒன்றே ஆக உள்ளது. அது பற்றற்ற தற்சொரூபநிலேயது. அதுவே ஒன்ருய் வேருய் உடனுய் இருந்து நடத்துவது. அதுவே நமக்கு நலமருளும் பொருட்டுப் படைத்தலேயும், காத்தலேயும், அழித்தலேயும் புரிகின்றது. இவ்வாறெல்லாம் அவ்வொருபொருள் நம் வினேக் கழிவுக்காகவே ஆற்றியுதவுவதனுல் எல்லாம் ஒன்றே என நாம் கோடல் சிறப்புடையது. ஒன்றவன்தானே என இவ்வாசிரியர் தொடக்கத்திற் கூறிவைத்தமை ஈண்டுக் கருதற்பாலதாம். அதே கருத்தைத்தான் ஈண்டு வலியுறுத்துகின்ருரர்வர்.

எல்லாம்சிவமே

உயிர்கட்கெல்லாம் வேண்டுவது பிறவாமை. அது இறைவ னருளாலன்றி வாய்க்கப்பெருது. இறைவனும் அதனைத் தாராமல் எவ்வுயிரையும் கெடுப்பவன் அல்லன். அந்த உயிரின் தரத்துக்கு ஏற்பத் தானே துணேயாயிருந்து நடத்துகிருன். இப்படி அவன் நடத்துவதற்காக அருளே குடியிருப்பாகக் கொள்ளுகிருன். இந்தத் திருவருள்தான் எல்லார்க்கும் நலம் செய்வது. ஆதலால், எம் இறை தான் ஒருகூறு சதாசிவன் என்ருர். இவ்வகைத் திரு வருள் அடையப்பெற்ருர்க்கெல்லாம் சிவமே முழுமுதல் என்பது

விளங்குதலால் எம் இறை என்றூர். சதாசிவன் சத்திகலே உடைய வன். சத்தியோடு கூடியவன். அருளோன் எனவும் கூறுவர். எனவே இறைவன் திருவருளே ஆதாரமானது. இனி, அவ் வருளால் உயிர்கட்கு நிகழும் துணைமைகள் எவை என்பதையும் ஆசிரியர் சொல்லிக்காட்டுகின்றூராவர். எல்லாப்புவனங்களும் தங்கியிருக்கும் வியாப்பியப் பொருளாகத் தனது வியாபகத்திலே ஒருகூற்றில் வானம் (வெளி) இருக்குமாறும் செய்கின்றூன். எனவே, அண்டம் பிண்டம் என்கிற இரண்டிடத்தும் இறை வனே வானுகி இடமளித்து உதவுகின்றூனுவன். வானத்தைப் போலவே உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதது பிராணன் என்னும் வாயு. இது உயிர்த்தற்கண் வேண்டுவது: இவ்வாயு வாகவும் இறைவன் இருந்து உயிர்ப்புக்கு உயிர்ப்பளித்துக் காக்கின்றூனுவன். இதனுல் நமது உடலுள்ளும் புறத்தும் சஞ்சரிக்கின்றவனுகவும் இறைவன் உளன் ஆவன். இவை எல் லாம் வான்ஒருகூறு மருவியும் அங்குளான்; கோன் ஒருகூறு உடல் உள்நின்று உயிர்க்கின்றதான் என்பதனுல் கொள்ளப்படும். மற்றும் தன் ஒருகூற்றில் சலமயனுகவும் உள்ளான். இவை யெல்லாம் உயிர்களின் பொருட்டாக முழுமுதல் தனது அருளால் புரி உதவிகளாம். இவ்வாறெல்லாம், வேறெவரும் செய்தல் ஒண்ணுது. ஆதலாலும், முழுமுதல் ஒன்றே எனவும், அவனே இறை எனவும், சிவபரம் எனவும் நாம் கொண்டு ஒன்றுபடல் நன்றுகும்.

முடிபு

இவ்வாறு முதற்கண் கடவுள்வாழ்த்துக் கூறிக் காட்டிய திருமூலர், அவனுரையே வேதம் ஆகும் என்கிறூர். அது யாவர்க்கும் பொது நூல் என்கிறூர். அதனே விரிப்பதே ஆகமம் என்கிறூர். அது உயிர்கட்கு ஞானமுண்டாவதற்கென அருளிச் செய்யப்பட்டது என்கிறூர். இவ்வாகம விஷயங்களெல்லாம் குருபரம்பரையில் பெறலான செய்தியையும் கூறிக்காட்டுகிறூர். அங்ஙனம் உபதேசம் பெற்றவர்களுள் தாமும் ஒருவரெனவும், தாம் தமிழிலே ஆகமசாரமான திருமந்திர நூலே அருளிச்செய்யு முன்னர் ஏகனுகிய தன்மையெல்லாம் எடுத்துக் கூறித் தமது நூலும் இறைவனுரையே ஆகும் என்கிறூர். அப்பால் ஞானத்துக் குரிய அடக்கமும் கூறிக் காட்டியிருக்கிறூர். பிறகு தமது நூலின் விவரம் தருகிறூர். அதன் பின்னர் சன்மார்க்கங்களே உபதேசிக்கவல்ல குருமடங்களின் வரலாறும் சொல்லி அவற்றின்

துணைபெற்று உய்யலாமென்கிறார். உபதேசம் பெற்ற பிறகும் தெய்வங்கள் பல என்று ஐயமேற்படுவதை அடியோடு அகற்ற வேண்டிச் சிவனே முழுமுதல் என்பதற்கான நியாயங்களைச் சொல்லி, எல்லாத்தேவரும் நமக்கு உதவுபவர்களேயாதலால் வெறுத்து நடவாமல் தழுவியிருந்து யாவரையும் உள்ளும் புறம்புமாக நின்றியக்கும் பரம்பொருள் ஒன்றெனவும் அது சிவபரம் எனவும் தெளிவூட்டித் தமது பாயிரத்தினை முடித்திடுகின்றாராவர் திருமூலர். இப்பாயிர அறிவே ஒருவற்கு உண்மை அறிதற்குப் போதுமானதெனவும். இதன் விரிவே பின்னர் நூலாக விரிகின்றதெனவும் நாம் தெரிதல் நல்லது. திருவள்ளுவனாரும் இங்ஙனம் பாயிரமுரைத்துப் பின் நூலில் விரித்தல் யாவரும் தெரியும் செய்தியாகும். ஆதலின், இப்பாயிரச் செய்திகளை நாம் ஓதுதல் நலம் பயக்கும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றே துணிக உலகம்.

திருமந்திரக்கட்டுரை - பாயிரப்பகுதி முற்றும்.

உ
சிவமயம்

திருமூலதேவநாயனர்
அருளிச்செய்த
திருமந்திரம்

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்து இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

பாயிரம்

1. கடவுள்வாழ்த்து

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே. 1

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனும்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. 2

ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
நக்கனென் றேத்திடு நாதனை நாடொறும்
பக்கநின் றார்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே. 3

அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தென்றனைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே. 4

சிவனொடொக் கும்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே. 5

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே. 6

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்
தன்னை அப் பாஎனில் அப்பனு மாய்உளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே. 7

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள்அறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் லன்பர்க்குத்
தாயினும் நல்லன்பின் தாழ்சடை யோனே. 8

பொன்னால் புரிந்திட்ட பொற்சடை என்னப்
பின்னால் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வார்இல்லை தானே. 9

தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடும்அங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழைபொழி தையலு மாய்நிற்கும்
தானே தடவரைத் தண்கடல் ஆமே. 10

அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை
முயலும் முயலில் முடிவுமற் றாங்கே
பெயலும் மழைமுகில் பேர்நந்தி தானே. 11

கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்
மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ணல் இவன்என்(று) அறியகி லார்களே. 12

மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்னம் நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தான்தன்னை மேலளந் தாரில்லை
கண்ணளந் தெங்கும் கடந்துநின் றானே. 13

கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணன்எம் மாயன்
கடந்துநின் றான்அவர்க் கப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே. 14

ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தான்அருட்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே. 15

கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரரும் தேவரும்
கோது குலாவிக் குணம்பயில் வாரே. 16

காயம் இரண்டும் கலந்து கொதிக்கினும்
ஆயம் கத்தூரி அதுமிகும் அவ்வழி
தேசம் கலந்தொரு தேவனென்(று) எண்ணினும்
ஈசன் உறவுக்(கு) எதிரில்லை தானே. 17

அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
யதுபதி யாதரித் தாக்கம தாக்கென
இதுபதி கொள்என்ற எம்பெரு மானே. 18

இதுபதி ஏலம் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறி வாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றானே. 19

முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறனெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவம்
கடிமலர்க் குன்றம் மலையது தானே. 20

வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தஎம்
கோனைப் புகழுமின் கூடலும் ஆமே. 21

மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
நினைத்த தறிவன் எனில்தான் நினைக்கிலர்
எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே. 22

வல்லவன் வன்னிக் கிறைஇடை வாரணம்
நில்என நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்என வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே. 23

போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமின் என்றும் சிவனடிக் கேசெல்வம்
ஆற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே. 24

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே. 25

தொடர்ந்துநின் றானைத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் றான்பரி பாரகம் முற்றும்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
உடந்திருந் தானடிப் புண்ணியம் ஆமே. 26

சந்தி எனத்தக்க தாமரை வாண்முகத்(து)
அந்தமில் ஈசன் அருள்நமக் கேஎன்று
நந்தியை நாளும் வணங்கப் படும்அவர்
புந்தியின் உள்ளே புகுந்துநின் றானே. 27

இணங்கிநின் றான்எங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானும்
உணங்கிநின் றான்அம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே. 28

காணகில் லாய்அடி யேற்குற வாருளர்
நாணகில் லேன்உன்னை நான்தழு விக்கொளக்
கோணகில் லாத குணத்தடி யார்மனத்(து)
ஆணியன் ஆகி அமர்ந்துநின் றானே. 29

வானின் றழைக்கும் மழைபோல் இறைவனும்
தானின் றழைக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின் றழைக்கும் அதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானம் கருதியே. 30

மண்ணகத் தான்ஒக்கும் வானகத் தான்ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே. 31

தேவர் பிரான்நம் பிரான்திசை பத்தையும்
மேவு பிரான்விரி நீர்உல கேழையும்
தாவு பிரான்தன்மை தானறி வார்இல்லை
பாவு பிரான்அருள் பாடலும் ஆமே. 32

பதிபல ஆயது பண்டிவ் வுலகம்
விதிபல செய்தொன்று மெய்ம்மை உணரார்
துதிபல தோத்திரம் சொல்லவல் லாரும்
மதியிலர் நெஞ்சுள் வாடுகின் றாரே. 33

சாந்து கமழும் கவரியின் கந்தம்போல்
வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன ஆயிரம் நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே. 34

ஆற்றுகி லாவழி யாகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் கும்கிழக் குத்திசை எட்டொடு
மாற்றுவன் அப்படி ஆட்டவும் ஆமே. 35

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி(சு) ஈசன் அருள்பெற லாமே. 36

நானும்நின் றேத்துவன் நாடொறும் நந்தியைத்
தானும்நின் ருன்தழல் தானொக்கும் மேனியன்
வானில்நின் ருர்மதி போல்உடல் உள்உவந்(து)
ஊனில்நின் ருங்கே உயிர்க்கின்ற வாறே. 37

பிதற்ருெழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்ருெழி யேன்பிற வாஉரு வானைப்
பிதற்ருெழி யேன்எங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்ருெழி யேன்பெரு மைத்தவன் நானே. 38

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தம்செய்(து) ஈசன் அருள்பெற லாமே. 39

குறைந்தடைந்(து) ஈசன் குரைகழல் நாடும்
நிறைஞ்சடை செம்பொனின் நேரொளி ஒக்கும்
மறைஞ்சடம் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறஞ்சடம் செய்வான் புகுந்துநின் ருனே. 40

சினம்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனம்செய்த நெஞ்சிடைப் போற்றவல் லார்க்குக்
கனம்செய்த வாள்நுதல் பாகனும் அங்கே
இனம்செய்த மான்போல் இணங்கிநின் ருனே. 41

போயரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயகன் நான்முடி செய்தது வேநல்கு
மாயகம் சூழ்ந்து வரவல்ல ராகிலும்
வேயன தோளிக்கு வேந்தொன் றும் தானே. 42

அரனடி சொல்லி அரற்றி அழுது
பரனடி நாடியே பாவிப்ப நாளும்
உரனடி செய்தங் கொதுங்கவல் லார்க்கு
நிரனடி செய்து நிறைந்துநின் ருனே. 43

போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே. 44

விதிவழி அல்ல(து)இல் வேலே உலகம்
விதிவழி இன்பம் விருத்தமும் இல்லே
துதிவழி நித்தலும் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவன் ஆமே. 45

அந்திவண் ணுஅர னேசிவ னேஎன்று
சிந்தைசெய் வண்ணம் திருந்தடி யார்தொழ
முந்திவண் ணுமுதல் வாபர னேஎன்று
புந்தி வண்ணன்எம் மனம்புகுந் தானே. 46

மனேயுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினேவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனேயுள் இருந்த பருந்தது போல
நினேயாத வர்க்கில்லே நின்இன்பம் தானே. 47

அடியார் பரவும் அமரர் பிரானே
முடியால் வணங்கி முதல்வனே முன்னிப்
படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கென்று மேவிநின் றேனே. 48

பரைபசு பாசத்து நாதனே உள்ளி
உரைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத்
திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரைபசு பாசம் கடந்தெய்த லாமே. 49

சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்(று)
ஆடுவன் ஆடி அமரர்பி ரான்என்று
நாடுவன் நான்இன்(று) அறிவது தானே. 50

2. வேதச்சிறப்பு

வேதத்தை விட்ட அறம்இல்லே வேதத்தின்
ஓதத் தகும்அறம் எல்லாம் உள தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றூர்களே. 51

வேதம் உரைத்தானும் வேதியன் ஆகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே. 52

இருக்குரு வாம்எழில் வேதத்தின் உள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி
வெருக்குரு வாகிய வேதியர் சொல்லும்
கருக்குரு வாய்நின்ற கண்ணனும் ஆமே. 53

திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாம்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே. 54

ஆறங்க மாய்வரு மாமறை ஓதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வார்இல்லை
வேறங்க மாக விளைவுசெய்(து) அப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே. 55

பாட்டும் ஒலியும் பரக்கும் கணிகையர்
ஆட்டும் அறாத அவனியில் மாட்டாதார்
மேட்டு விருப்பார் விரதம்இல் லாதவர்
ஈட்டும் இடம்சென்(று) இகலலுற் றாரே. 56

3. ஆகமச்சிறப்பு

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொா டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே. 57

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின்(று) அப்பொருள் ஏத்துவன் நானே. 58

பண்டிதர் ஆவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்(து)அறிவார் என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அரன்சொன்ன வாறே. 59

அண்ணல் அருளால் அருளும்திவ் யாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரி (து)
எண்ணில் எழுபது கோடிநூ றுயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே. 60

பரனுய்ப் பராபரம் காட்டி உலகில்
தரனுய்ச் சிவதன்மம் தானேசொல் காலத்(து)
அரனுய் அமரர்கள் அர்ச்சிக்கு நந்தி
உரனுகி ஆகமம் ஓங்கிநின் றுனே. 61

சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் றுனே. 62

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே. 63

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே. 64

மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்(று)
ஏரியும் நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய மும்தமி ழும்உட னேசொல்லிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே. 65

அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணர்தலும் ஆமே. 66

4. குருபாரம்பரியம்

நந்தி அருள்பெற்ற நாதரை நாடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்(று)இவர் என்னோ(டு) எண்மரும் ஆமே. 67

நந்தி அருளாலே நாதனும் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவ(து) என்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நான்இருந் தேனே. 68

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ(டு)
இந்த எழுவரும் என்வழி யாமே. 69

நால்வரும் நாலு திசைக்கொன்று நாதர்கள்
நால்வரும் நானு விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் நான்பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வரும் தேவராய் நாதரா னார்களே. 70

மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்
செழுஞ்சுடர் முன்னொளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டகி லானே. 71

எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையும்
செழுந்தண் நியமங்கள் செய்மின் என் (று) அண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க்(கு) அருள்புரிந் தானே. 72

5. திருமூலர்வரலாறு

நந்தி இணையடி நான் தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்(து)
அந்தி மதிபுனை அரனடி நாடொறும்
சிந்தைசெய்(து) ஆகமம் செப்பலுற் றேனே. 73

செப்பும் சிவாகமம் என்னும்அப் பேர்பெற் றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பிலி கோடி யுகம்இருந் தேனே. 74

இருந்தஅக் காரணம் கேள்இந் திரனே
பொருந்திய செல்வப் புவனா பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித்(து) அடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே. 75

சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேனின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மனம் நீங்கி
உதாசனி யாதுட னேஉணர்ந் தோமால். 76

மாலாங்க னேஇங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே. 77

நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்
பேருடை யாள்என் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவன் ஆவடு தண்டுறை
சீருடை யாள்பதம் சேர்ந்திருந் தேனே. 78

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. 79

இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே. 80

பின்னைநின்(று) என்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே. 81

ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பால் ஆட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன்நற் போதியின் கீழே. 82

செல்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராய்ப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர்தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே. 83

சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்(கு) இங்(கு) அருளால் அளித்ததே. 84

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே. 85

பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடும் கூடிநின்(று) ஓதலும் ஆமே. 86

அங்கிமி காமைவைத் தான்உல கேழையும்
எங்குமி காமைவைத் தான்உடல் வைத்தான்
தங்கிமி காமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்
பொங்கிமி காமைவைத் தான்பொருள் தானுமே. 87

அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண் டிலேன்என்(று) அச்சுதன் சொல்ல
முடிகண்டன் என்(று)அயன் பொய்மொழிந் தானே. 88

பெற்றமும் மானும் மழுவும் பிறிவற்ற
தற்பரன் கற்பனை யாகும் சராசரத்(து)
அற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்
நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே. 89

ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை அச்சிவன் தன்னை யகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே. 90

விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கறும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பின் கயிலை வழியில்வந் தேனே. 91

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நான்இருந் தேனே. 92

இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் வீச
உருக்கிய ரோமம் ஒளிவிடும் தானே. 93

பிதற்றுகின் றேன்என்றும் பேர்நந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத்(து) இரவும் பகலும்
முயற்றுவன் ஓங்கொளி வண்ணன்எம் மானை
இயற்றிகழ் சோதி இறைவனும் ஆமே. 94

6. அவையடக்கம்

ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறி வார்இந்த அகலமும் நீளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்(று)அதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே. 95

பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்
ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்
நாடவல் லார்நெறி நாட அறிகிலேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே. 96

மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்
இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
முன்னும் அவனை உணரலும் ஆமே. 97

தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை
முத்திக் கிருந்த முனிவரும் தேவரும்
ஒத்துடன் வேறாய் இருந்து துதிசெயும்
பத்திமை யால்இப் பயன்அறி யாரே. 98

7. திருமந்திரத்தொகைச்சிறப்பு

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்(து) ஓதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே. 99

வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவா யிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்புத் தரும்இவை தானே. 100

8. குருமடவரலாறு

வந்த மடமேழும் மன்னும்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்
சுந்தர ஆகமச் சொல்மொழிந் தானே. 101

கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே. 102

9. மும்மூர்த்திகளின் முறைமை

அளவில் இளமையும் அந்தமும் ஈறும்
அளவியல் காலமும் நாலும் உணரில்
தளர்விலன் சங்கரன் தன்னடி யார்சொல்
அளவில் பெருமை அறியயற் காமே. 103

ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனர்
பேதித் துலகம் பிணங்குகின் றூர்களே. 104

ஈசன் இருக்கும் இருவினைக்(கு) அப்புறம்
பீசம் உலகில் பெருந்தெய்வ மானது
ஈசன் அதுஇது என்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூரறிந் தார்களே. 105

சிவன்முதல் மூவரோ(டு) ஐவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றுகும்
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதற் சங்கரன் தன்பெயர் தானே. 106

பயன்அறிந்(து) அவ்வழி எண்ணும் அளவில்
அயனொடு மால்நமக்(கு) அன்னியம் இல்லை
நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்
வயனம் பெறுவீர்அவ் வானவ ராலே. 107

ஓலக்கம் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்(து)அடி யேன்தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடென் றுனே. 108

வானவர் என்றும் மனிதர்இவர் என்றும்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோரும் தனித்தெய்வம் மற்றில்லை
ஊனமர்ந் தோரை உணர்வது தானே. 109

சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ(து) அறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித் தவரைப் பிதற்றுகின் றாரே. 110

பரத்திலே ஒன்றாய்உள் ளாய்ப்புற மாகி
வரத்தினுள் மாயவ னாய்அயன் ஆகித்
தரத்தினுள் தான்பல தன்மையன் ஆகிக்
கரத்தினுள் நின்று கழிவுசெய் தானே. 111

தானொரு கூறு சதாசிவன் எம்இறை
வானொரு கூறு மருவியும் அங்குளன்
கோனொரு கூறுடல் உள்நின்(று) உயிர்க்கின்ற
தானொரு கூறு சலமயன் ஆமே. 112

திருமந்திரம் - பாயிரம்

முற்றும்.